540

540/151

# மூன்றாம் நந்திவர்மன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1958
MADRAS

V2:11PL'D847
N58
108183

சீனி. வேங்கடசாமி

# மூன்றாம் நந்திவர்மன்

ஆசிரியர் :

சீனி. வேங்கடசாமி

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : ஜனவரி 1958
உரிமை ஆசிரியர்க்கு

V211PL D847
N55

விலை ரூ. 4.00

108183

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

# முன்னுரை

தமிழர் வரலாறு மிக மிகப் பழமையானது. ஆனால், முற்காலத்தில் வரலாற்று நூல் எழுதப்படவில்லை. பரத கண்டத்தில், தமிழ்மொழி உட்பட, எந்த மொழியிலும் வரலாற்று நூல்கள் பண்டைக்காலத்தில் எழுதப்படவில்லை; இப்போதுதான் எழுதப்படுகிறது. வரலாறு எழுதும் வழக்கம் முற்காலத்தில் இல்லாதபடியால், தமிழர் வரலாறு மறைந்து விட்டது.

ஒவ்வொரு நாட்டாருக்கும் வரலாற்று நூல் தேவையாக இருப்பது போலவே, தமிழருக்கும் பழைய வரலாறு தேவைப்படுகிறது. ஆனால், மறைந்துபோன வரலாறு எப்படிக் கிடைக்கும்? மறைந்தவை மறைந்தவை தான். போனதுபோக, கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு நமது வரலாற்றினை எழுதவேண்டியிருக்கிறது. இதற்குத் துணையாக இருப்பவை கல்வெட்டுச் செப்பேட்டுச் சாசனங்களும், பழைய கட்டிடச் சிற்ப ஓவியங்களும், பண்டைக் காலத்து நாணயங்களும், காவியங்களும் இலக்கியங்களும், பரம்பரைச் செய்திகள் முதலியவைகளுமாம். இவற்றில் நமக்குக் கிடைத்தவற்றை வைத்துக்கொண்டு, சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்துச் சரித்திரத்தை எழுதவேண்டியிருக்கிறது.

சரித்திர ஆராய்ச்சி முறையை நமக்குக் கற்பித்தவர்கள் ஆங்கிலேயரே. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் எபிகிராபி, ஆர்கியாலஜி இலாகாக்களை அமைத்தும் மியூசியம் என்னும் பொருட்காட்சிச் சாலைகளை உண்டாக்கியும், கல்லூரிகளில்

சரித்திரப் பாடங்களை ஏற்படுத்தியும் நமது நாட்டுப் பழைய வரலாற்றை ஆராய்ந்து எழுத அடிகோலினார்கள். அவர்கள் வகுத்துத்தந்த முறைகளைப் பின்பற்றி நமது நாட்டு அறிஞர்கள், சான்றுகளை ஆராய்ந்து சரித்திரங்களை எழுதினார்கள், எழுதுகிறார்கள்.

தமிழ்நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்து எழுதியவர்கள் எல்லோரும், அவற்றை ஆங்கில மொழியில் எழுதினார்கள். அவர்களில் பலர் தமிழ் நாட்டவராக இருந்தும், தமிழ் மொழியை அறியாதவர்கள். தமிழ் இலக்கியங்களைப் படியாத அவர்கள் எழுதிய சரித்திர நூல்களில் பல பிழைகளும் தவறுகளும் காணப்படுகின்றன. அந் நூல்களை ஆங்கில மொழியில் எழுதியபடியால், அதிலுள்ள பிழைகளையும் தவறுகளையும் அறிய ஆங்கிலம் அறியாதவர்களுக்கு வாய்ப்பு இல்லை. அதுபோலவே, ஆங்கிலம் பயின்றவர்களுக்குத் தமிழ் இலக்கியப் பயிற்சி இல்லாதபடியினால், அந்நூலில் காணப் படும் பிழைகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை.

இப்போது காலம் மாறிவருகிறது. ஆங்கிலமும் தமிழும் அறிந்தவர்கள், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தமிழ் நாட்டு வரலாறுகளைப் படிக்கும்போது, அவற்றில் காணப்படும் பிழையான செய்திகளையும் தவறான கருத்துக்களையும் காண்கிறார்கள். கண்டு, உண்மையான சரித்திரம் எழுதப்பட வேண்டியதை உணர்கிறார்கள்.

ஆர்க்கியாலஜி, எபிகிருபி என்னும் சாத்திரங்களையும் தாய்மொழியையும் நன்கு பயின்றவர்கள் சரித்திர, நூல்களை எழுத முன்வரவேண்டும். அன்றியும், காய்தல் உவத்தல் இல்லாமல் நடுநிலையில் நின்று உண்மையை உள்ளவாறே கூறுகிற செம்மையான மனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இந்தத் தன்மையுள்ளவர் இப்போது மிக மிகக் குறைவான வர்களே உள்ளனர்.

இப்போது உள்ள தமிழ்நாட்டு வரலாறுகளில் தவறு களும் பிழைகளும் காணப்படுகின்றன. ஆர்க்கியாலஜி, எபிகிருபி இலாகா உத்தியோகஸ்தர்கள், பல்கலைக்கழகச் சரித் திரப் பேராசிரியர்கள் போன்ற பொறுப்புள்ளவர்களும் கூட, தமிழ் நாட்டுச் சரித்திரம் சம்பந்தப்பட்ட வரையில், தவறான செய்திகளை எழுதி வருவதோடு, சொல்லவேண்டியவற்றைச் சொல்லாமலும் விடுகிறார்கள். இதனால், தமிழ் நாட்டின் உண்மையான வரலாறு மறைந்து விடுகிறது. பேராசிரியர் திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தார் போன்றவர்கள், நடு நிலையிலிருந்து எழுதுகிற சரித்திர நூல்கள் இப்போது வெளி வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

பிழையற்ற உண்மையான வரலாற்று நூல்கள் எழுதப் படவேண்டும் என்னும் கருத்துடன் மகேந்திரவர்மன், மாமல்லன் நரசிம்மவர்மன் என்னும் இரண்டு நூல்களை எழுதி னேன். மூன்றாம் நந்திவர்மன் (தெள்ளாற்றெறிந்த நந்தி வர்மன்) என்னும் இந் நூல் இப்போது வெளிவருகிறது. தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனைப் பற்றித் தமிழில் எழுதப் பட்ட முதல் நூல் இதுவே. தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்த சேர சோழ பாண்டியர் வரலாறுகளும் கிடைத்த வரையில் எழுதப்பட்டுள்ளன. அக்காலத்து இலங்கை, வடஇந்தியா தேசங்களின் வரலாறும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இந்நூல் ஆராய்ச்சிக்கு ஆதாரமாகவுள்ள சான்றுகளையும் மேற்கோள்களையும் ஆங்காங்கே காட்டி யுள்ளேன்.

அக்காலத்துச் சாசனங்களையும், நந்திவர்மன்மேல் பாடப்பட்ட நந்திக்கலம்பகத்தையும் இந்நூலில் சேர்த்

துள்ளேன். ஆகவே, தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனைப்பற்றிய சான்றுகள் முழுவதையும் இதனில் காணலாம்.

இந்நூலில் என்னை யறியாமலே குற்றங்கள் புகுந்திருக்கலாம். அக்குற்றங்களை அறிஞர் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவில்லை. அவற்றை எடுத்துக் காட்டவேண்டும் என்று வேண்டுகிறேன். அப்படிச் செய்வது ஆக்கவேலைக்கு உதவுவதாகும். நமது நாட்டுச் சரித்திரம் நல்ல முறையில் உருவாக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இதில் காணும் குற்றங் குறைகளைக் காட்டுவார்களாக.

என்னை யறியாமலே சில பிழைகள் நுழைந்திருப்பதையும் காண்கிறேன். உதாரணமாக தேள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று சில இடங்களில் எழுதியுள்ளேன். அது தேள்ளாற் றெறிந்த நந்திவர்மன் என்று இருக்கவேண்டும்.

இதைத் தொடர்ந்து மற்றும் பல சரித்திர நூல்களை எழுதுவதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்குமாறு வாசகர்களை வேண்டிக்கொள்கிறேன்.

இந்நூலினை அச்சிட்டு வெளியிட்ட பாரி நிலையம் உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பா அவர்கட்கு எனது நன்றி யுரியதாகும்.

மயிலாப்பூர்
சென்னை, 20-1-58

சீனி. வேங்கடசாமி

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | ... iii |
| 1. | நந்திவர்மன் வரலாறு | ... 1 |
| 2. | வேறு அரசர்கள் | ... 22 |
| 3. | சமய நிலை | ... 49 |
| 4. | கட்டடக்கலை | ... 81 |
| 5. | இசைக்கலை | ... 86 |
| 6. | இலக்கியம் | ... 94 |
| 7. | தேவார ஆராய்ச்சி | ... 130 |
| 8. | நந்திவர்மன் காலத்துச் சாசனங்கள் | ... 143 |
| 9. | பின் இணைப்பு | ... 186 |
| | வெள்ளிப்பாடல் | ... 186 |
| | மாணிக்கவாசகர் காலம் | ... 189 |
| | சுந்தரர் கால ஆராய்ச்சி | ... 200 |
| | நந்திக் கலம்பகம் | ... 205 |
| | கோக்கருநந்தடக்கன் | ... 232 |
| | பொருளகராதி | ... 241 |
| | எடுத்தாண்ட நூல்கள் | ... 245 |
| | Bibliography | ... 247 |
| | Abbreviations | ... 248 |


**படங்கள்**


| | | |
|---|---|---|
| 1. | நின்றருளிய பெருமாள் | ... 1 |
| 2. | சாத்தம் பழியிலியின் சாசன எழுத்து | ... 27 |
| 3. | மூன்றும் நந்திவர்மன் காலத்தில் தென் இந்தியா | ... 28 |
| 4. | வரகுண பாண்டியன் காலத்து எழுத்து | ... 32 |
| 5. | இலங்கை தேசப்படம் | ... 46 |
| 6. | சயாம் தேசத்துச் சாசன எழுத்து | ... 174 |
| 7. | வேலூர் பாளையச் செப்பேட்டெழுத்து (பல்லவத் தமிழ் எழுத்து) | ... 184 |
| 8. | வரகுண பாண்டியன் சாசனஎழுத்து (வட்டெழுத்து) | ... 185 |

# மூன்றும் நந்திவர்மன்

## நந்திவர்மன் வரலாறு

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் பல்லவ இராச்சியத்தை ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டு அரசாண்டான். இவன் அரசாண்ட காலம் கி. பி. 847 முதல் 872 வரையில் என்பர். தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் புகழ்வாய்ந்த இந்த அரசன், பல்லவ அரசர் பரம்பரையில், நந்தி என்னும் பெயர்பெற்ற அரசர்களில் மூன்றுவன். ஆகவே இவனை மூன்றும் நந்திவர்மன் என்று கூறுவர்.

### பெற்றேர்

இவனுடைய தந்தையின் பெயர் தந்திவர்மன் என்பது. தந்திவர்மன் மனைவி, கடம்ப அரசர் குலத்தில் பிறந்தவளான அக்களநிம்மதி என்பவள். இவர்களுக்கு மகனாகப் பிறந்தவன் நந்திவர்மன் மூன்றுவன். இவன் அரசாட்சிக்கு வந்தவுடன்

பல போர்களைச் செய்து வெற்றி பெற்றான். இச்செய்திகளை வேலூர்ப்பாளையத்துச் செப்பேட்டுச் சாசனம் இவ்வாறு கூறுகிறது.

"வீரர்களுக்குத் தலைவனாய் உலகத்தை ஆளும் ஆற்றல் படைத்த இந்தப் பல்லவ மகாராசனுக்கு (தந்திவர்மனுக்கு), முப்புரங்களை வென்ற வீரனுக்குக் (சிவபெருமானுக்கு) கௌரி மனைவியாக வாய்த்ததுபோல, கடம்பகுல சூளாமணியான புகழ்வாய்ந்த அரசனுடைய மகளான அக்களநிம்மதி என்பவள் மனைவியாக வாய்ந்தாள்."

"ஒளியை (சூரியனை) வைகறைப்பொழுது தந்தது போலவும், வியக்கத்தக்க வேலையுடைய குமரக் கடவுளை அம்பிகை தந்ததுபோலவும், வெற்றிமிக்க சயந்தனைச் சசி தந்ததுபோலவும், புகழ்வாய்ந்த நந்திவர்மனை இவள் (அக்களநிம்மதி) தந்தாள்."

"இவன் (நந்திவர்மன்), தன் தோள்வலியினாலும் ஆற்றலினாலும், தன் வாளினால் கொன்ற யானைகளின் மருப்புக்களிலிருந்து வெளிப்பட்ட முத்துக்கள் நகைப்பது போலக் காணப்பட்ட போர்க்களத்திலே, தன் பகைவர்களைக் கொன்று, மற்றவர்களால் கைப்பற்ற முடியாத அரசாட்சியைக் கைப்பற்றினான்."*

தந்திவர்மன் அரசாண்ட காலத்தில், வரகுண பாண்டியன், பல்லவ இராச்சியத்தின் தென் பகுதியாகிய சோழ நாட்டின்மேல் படையெடுத்து வந்து, சோழநாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். ஆகவே, பல்லவ இராச்சியத்துக்குட்பட்டிருந்த சோழ நாடு பாண்டியன் வசமாயிற்று. தந்திவர்மன் காலஞ்சென்ற பிறகு, அவன் மகனான நந்திவர்மன் அரசனானான்.

---

*S. I. I. Vol. II p. 501—517

## பல்லவ அரசர் பரம்பரை

- நந்திவர்மன் I
  - சிம்ம விஷ்ணு
    - மகேந்திர வர்மன் I
      - நரசிம்ம வர்மன் I (மாமல்லன்)
        - மகேந்திர வர்மன் II
        - பரமேசுவர வர்மன் I
          - நரசிம்ம வர்மன் II (இராஜசிம்மன்)
            - மகேந்திர வர்மன் III
            - பரமேசுவர வர்மன் II
  - பீம வர்மன்
    - புத்த வர்மன்
      - ஆதித்ய வர்மன்
        - கோவிந்த வர்மன்
          - இரணிய வர்மன்
            - நந்தி வர்மன் II (பல்லவ மல்லன்)
              - தந்தி வர்மன்
                - நந்தி வர்மன் III (தெள்ளாறெறிந்தவன்)

### பகைவரும் நண்பரும்

மூன்றாம் நந்திவர்மன் அரசாட்சியை ஏற்றுக்கொண்டவுடன் பல பகையரசருடன் போர் செய்ய நேரிட்டது. மேலே கூறியபடி, பல்லவ இராச்சியத்துக்குட்பட்டிருந்த சோழநாட்டை வரகுண பாண்டியன் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக்கொண்டு, தொண்டை நாட்டையும் கைப்பற்றிக்கொள்ள முயற்சி செய்தான். பாண்டியனுக்கு உதவியாக அவன் மகன் ஸ்ரீ மாறனும், சேர அரசனும், நந்தியின்

தாயாதி முறையினரான தம்பிமார்களும் இருந்தார்கள். அதே காலத்தில், வடக்கிலிருந்து இராஷ்டிரகூட அரசனான அமோகவர்ஷன் என்பவனும் பல்லவ நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். அவனை முதலாம் அமோகவர்ஷன் என்றும் கூறுவர். அவனுக்கு சர்வன் என்னும் பெயரும் உண்டு.

நந்திவர்மன், அமோகவர்ஷனைக் குறுகோடு என்னும் இடத்தில் எதிர்த்துப் போர் செய்தான். அப்போரிலே நந்திவர்மன் வெற்றிபெற்றான். தோல்வியடைந்த அமோகவர்ஷன், நந்திவர்மனுடன் நட்புக்கொண்டான். இந்த நட்பு இருவருக்கும் நன்மையாக முடிந்தது. நந்தியின் நட்பு அமோகவர்ஷனுக்கும், அவனுடைய நட்பு நந்திவர்மனுக்கும் தேவையாக இருந்தன. ஏனென்றால், அமோகவர்ஷனைக் கீழைச்சாளுக்கிய அரசனும் மேலைக்கங்க அரசனும் எதிர்த்துப் போரிட்டார்கள். நந்திவர்மனைப் பாண்டியனும் அவனுடன் சேர்ந்தவர்களும் எதிர்த்துப் போரிட்டார்கள். இவ்வாறு பல்லவனும் இராஷ்டிரகூட அரசனும் நட்புக்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நட்பு உறவை உறுதிப்படுத்த அமோகவர்ஷன் தன் மகளான சங்கை என்பவளை நந்திவர்மனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். மேலும், தன் மகன் தேவன் என்பவனை நந்திவர்மனுக்குத் துணையாகப் பாண்டியனை எதிர்க்க அனுப்பினான்.

## குறுகோட்டை

குறுகோடு என்னும் குறுகோட்டையை நந்திவர்வன் வென்றதை, நந்திக் கலம்பகம் என்னும் நூல் கூறுகிறது. தன் யானைப் படையினால் நந்திவர்மன் குறுகோட்டைப் போரை வென்றான்.

" இனவேழம், கோமறுகிற் சீறிக்
குறுகோட்டை வென்றாடும் "

"குன்றஞ்செய் தோள்நந்தி நாட்டங்குறி
குறுக்கோட்டையின்மேல்
சென்றஞ்சப் பட்டதெல்லாம்படும்
மாற்றலர் திண்பதியே"

"குறுகோட்டை குறுகாமன்னர் போர்க்கின்ற
புகர்முகத்துக் குளித்தவாளி"

"கேளார், குஞ்சரங்கள் சாயக் குருகோட்டையத்தனையும்
மஞ்சரங்கள் ஆர்த்தான்"*

என்று நந்திக் கலம்பகம் கூறுகிறது.

குறுகோடு என்னும் பெயருள்ள ஊர்கள் சில இப்போதும் உள்ளன. அவற்றில் ஒன்று ஆந்திரநாட்டில் பல்லாரி மாவட்டத்தில் பல்லாரி தாலுகாவில் இருக்கிறது. இது, இப்போது குறுகோடே என்று பெயர் கூறப்படுகிறது. இங்குச் சாளுக்கியர் மரபுப்படி அமைக்கப்பட்ட கோயில்களும், குன்றின் மேலே ஒரு கோட்டையும் உள்ளனவாம்.

மற்றொரு குறுகோடு, மைசூரைச் சேர்ந்த கோலார் மாவட்டத்தில் இருக்கிறது. இதற்கு இப்போது தொட்ட குறுகோடே என்று பெயர் வழங்கப்படுகிறது. (தொட்ட என்றால் பெரிய என்பது பொருள்). இது கங்க அரசர்களின் தலைநகரமாக இருந்ததென்று கருதப்படுகிறது. இந்த இரண்டு குறுகோடுகளில் நந்தி வென்றது எது என்பது தெரியவில்லை. சாளுக்கியருக்குரியதா யிருந்த பல்லாரி மாவட்டத்துக் குறுகோட்டையை வென்றதாகக் கருதலாம்.

## தெள்ளாற்றுப் போர்

மேலே கூறியபடி, பல்லவ அரசரின் சோழநாட்டை வரகுணபாண்டியன் கைப்பற்றிக்கொண்டு தொண்டை

*நந்திக் கலம்பகம், 2, 16, 35, 84.

மண்டலத்துக்கு வந்து பெண்ணாற்றங்கரையின் மேலுள்ள அரைசூரில் பாசறை அமைத்தான்.* நந்திவர்மன், பாண்டியனைத் தெள்ளாறு† என்னும் ஊரில் எதிர்த்துப் போர் செய்தான். இப்போரில் நந்தி, பாண்டியனையும் அவனுக்குத் துணையாய் வந்த மற்ற அரசர்களையும் முறியடித்து வெற்றி கொண்டான். அன்றியும், தோற்றுப் பின்னடைந்த பாண்டியனைத் துரத்திச் சென்று சோழ நாட்டுப் பழையாறு, நள்ளாறு‡ என்னும் ஊர்களிலும் அவர்களுடன் போர் செய்து வென்றதோடு, பாண்டி நாட்டில் வைகைக்கரை வரையில் துரத்திச் சென்றான்.$ இந்தப் போர்களில் நந்திவர்மனுக்கு உதவியாக இருந்தவன், அவன் மாமனாகிய இராஷ்டிரகூட அரசன். இராஷ்டிரகூட அரசன் மகன் தேவன் என்பவன் (நந்தியின் மைத்துனன்), பழையாறையில் போர் வென்ற செய்தியை இராஷ்டிரகூட அரசன் சாசனம் ஒன்று கூறுகிறது §

நந்திவர்மன் செய்த போர்களிலே தெள்ளாற்றுப் போர் மிக முக்கியமானது. ஆகையினால், அப்போரை வென்ற இவனுக்குத் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. தெள்ளாற்றுப் போர், நந்திவர்மன் ஆட்சியின் 10-ஆம் ஆண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனென்றால், 10-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட அவனுடைய தில்லஸ்தானக் கல்வெட்டுச் சாசனம், தெள்ளா

*Ep. Col. No. 105 of 1905.

†தெள்ளாறு, வடஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி தாலுகாவில் இருக்கிறது. காஞ்சீபுரத்துக்குத் தெற்கே 15 மைலில் உள்ளது.

‡பழையாறு என்பது பழையாறை. இது தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்குத் தெற்கே 10 மைலில் இருக்கிறது. நள்ளாறு என்பது ஷை மாவட்டத்தில் காரைக்காலுக்கு அருகில் இருக்கிறது.

$Ind Ant. Vol. XXXVII p. 172

§E. C. X cd. 76.

றெறிந்த நந்திவர்மன் என்று கூறுகிறது.* இதற்கு முந்தி யுள்ள சாசனங்கள் இப்போரைக் குறிக்கவில்லை.

**பாண்டியன் உறவு**

தோல்வியடைந்த பாண்டியன், நந்திவர்மனிடம் நட்புக்கொண்டான். அதன் காரணமாகப் பாண்டியன் மகளை நந்திவர்மன் மணஞ் செய்துகொண்டான் எனத் தெரிகிறது. அதாவது, பாண்டியன் மகள் மாறன்பாவை என்பவளை மணஞ் செய்துகொண்டான். மாறன்பாவை, ஸ்ரீமாறன் என்னும் பாண்டியனின் மகள்போலும். வரகுணனுடைய பேர்த்தி. இராஷ்டிரகூட அரசன் மகள் சங்கை என்பவளை நந்திவர்மன் மணம் செய்திருந்ததை முன்னமே கூறினேன். அந்தச் சங்கை என்னும் மனைவிக்குப் பிறந்தவன் நிருபதுங்க வர்மன் என்பவன்.

**போர்க்களங்கள்**

நந்திவர்மன் தெள்ளாற்றுப் போர் வென்றதை அவனுடைய கலம்பகம் பலமுறை கூறுகிறது.

" குரைகழல் விறல்நந்தி, அமரிற்றெள்ளாற் றஞ்சிய நெஞ்சத்
தரசர்கள் திரள்போகும் "

" கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலய மார்த்தாண்டன் "

" தன்மீது, தெள்ளாற்று நள்ளார் முனையுமன்றேக
முனிந்த பிரான் "

" தெள்ளாற்றுக்கண் சிவந்தான் "

" தெவ்வர் தேயத், தெள்ளாற்றில் செருவென்ற
செங்கோல் நந்தி "

" தெள்ளாற்றில் வென்ற கோன் "

*Ep. Col. No. 52 of 1895.

" இகல்வேல் மன்னர், சினக்கரியும் பாய்மாவும்
தெள்ளாற்றுச் சிந்துவித்த செங்கோல்நந்தி "

" மூண்டார் தெள்ளாற்றுள்ளே மூழ்க முனிவாறி
மீண்டான் நந்தி "*

வெள்ளாறு என்னும் இடத்தில் நந்திவர்மன் போர் வென்றதை நந்திக் கலம்பகம் இவ்வாறு கூறுகிறது:

" விரவாத மன்னரெல்லாம் விண்ணேற
வெள்ளாற்று வெகுண்ட கோன் "

" அரசர் கோமான் அடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவேல் உயர்வு "

" தோள் துணையாக மாவெள் ளாற்று
மேவலர்க் கடந்த அண்ணல் நந்தி "†

மேலும், நந்திவர்மன் வெறியலூர், பழையாறை என்னும் ஊர்களில் போர் வென்றதை, " வெறியலூர்ச் செருவென்றோன் " என்றும், " படையாறு சாகப் பழையாறு வென்றான் " என்றும் நந்திக் கலம்பகம் கூறுகிறது.‡ பாண்டியனுடைய தொண்டி நகரத்தைக் கைப்பற்றியதையும் கலம்பகம் கூறுகிறது.

" தம்பியர் எண்ணமெல்லாம் பழுதாக
வென்ற தலைமான வீரதுவசன்
செம்பியர் தென்னர் சேரர் எதிர்வந்து
மாய செருவென்ற பாரி "

என்று இவன் வென்ற அரசரைக் கூறுகிறது.§

*நந்திக் கலம்பகம் 28, 29, 33, 38, 49, 52, 53, 71.
†நந்திக் கலம்பகம் 19, 23, 61.
‡நந்திக் கலம்பகம் 27, 31.
§ந. கலம்பகம் 81.

## இராச்சியத்தின் பரப்பு

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் பகைவரை வென்று தொண்டைநாட்டையும் சோழநாட்டையும் அரசாண்டான். இவனுடைய இராச்சியம், வடக்கே வேங்கடம் முதல் தெற்கே புதுக்கோட்டை வரையில் பரவியிருந்தது. வடவேங்கட நாடுடை மன்னர்பிரான் என்றும், வாழ்கின்றதோர் புகழ்நந்தி தன் வேங்கடமலை என்றும், தொண்டையர்கோன் நந்திபல்லவன் என்றும், தொண்டை நாடுடைய கோவே என்றும், காவிரி வளநாடன் என்றும், தொண்டையர் வேந்தன் கோனுடன் என்றும் நந்திக் கலம்பகம் கூறுவதிலிருந்தும் இவனுடைய சாசனங்களைக் கொண்டும் இதனை அறியலாம்.

நந்திவர்மனைக் "குமரிக் கொண்கன் கங்கை மணாளன்" என்று கலம்பகம் கூறுவது மிகைபடக் கூறல் என்று தோன்றுகிறது. இவ்வரசன் கடற்படையைக் கொண்டிருந்தபடியினாலே, குமரித்துறையையும் கங்கையாற்றையும் உடையவன் என்று கூறியதாகக் கொள்ளலாம். ஆனால், இவன் கங்கையாற்றையும் குமரித்துறையையும் வென்று கொண்டதாகச் சான்று இல்லை.

## சிற்றரசர்கள்

நந்திவர்மன் காலத்தில் சோழநாடு பல்லவ அரசுக்குட்பட்டிருந்தது. ஆதிகாலத்தில் சுதந்தரராக இருந்த சோழ அரசரைக் களபரர் என்பவர் கி. பி. 4-ஆம் நூற்றாண்டிலே வென்று சோழநாட்டை அரசாண்டனர். பின்னர், சிம்மவிஷ்ணு என்னும் பல்லவன் கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் களபரரை வென்று சோழநாட்டைத் தொண்டைநாட்டுடன் சேர்த்துக் கொண்டான். ஆகவே, சோழ அரசர்கள் முதலில் களபாருக்கும் பின்னர் பல்லவ அரசருக்கும் கீழடங்கி இருந்தார்கள். தெள்ளாறெறிந்த நந்திவர்மன்

காலத்திலும் சோழர்கள் அவனுக்குக் கீழடங்கியே யிருந்தார்கள். சோழ அரச குடும்பத்தார், உறையூர், பழையாறை, குடந்தை, திருவாரூர் முதலிய ஊர்களில் சிற்றரசர்களாக இருந்தார்கள்.

பல்லவ இராச்சியத்தின் சில பகுதிகளை நந்திவர்மனுக்குக் கீழடங்கிச் சில சிற்றரசர்கள் அரசாண்டார்கள். சிற்றரசரைச் சாமந்த அரசர் என்றும் கூறுவர். நந்திவர்மனுக்குக் கீழடங்கிய சிற்றரசர் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. ஆனால், குமாராங்குசன், சாத்தன் பழியிலி, விக்கிரமாதித்தியன், நரசிங்க முனையரையர் என்னும் நால்வர் பெயர் தெரிகின்றன.

குமாராங்குசன் என்னும் சிற்றரசன் சோழர் குலத்தைச் சேர்ந்தவன். இவன், சோழ மகாராசன் என்றும், "வீரத்தினால் விளங்குகிறவனும், ஈகையினால் கர்ணனுக்குச் சமானமானவனும் சோழ குலத்துச் சூளாமணி போன்றவனும் ஆகிய குமாராங்குசன்" என்றும் இவனைப் பற்றி வேலூர்ப் பாளையச் செப்பேட்டுச் சாசனம் கூறுகிறது. இவன், சோழ நாட்டில் எந்தப் பகுதியை அரசாண்டான் என்பது தெரியவில்லை.

சாத்தன் பழியிலி என்பவன் முத்தரையர் மரபைச் சேர்ந்தவன். சோழ நாட்டின் தென் பகுதியை அரசாண்டான். இவனுடைய தலைநகரம் தஞ்சாவூர்.

விக்கிரமாதித்தியன் என்பவன் வாண (பாண) அரசர் பரம்பரையைச் சேர்ந்தவன். "பாண வாணதிராயனான விக்கிரமாதித்தியன்" என்று இவனை இவனுடைய சாசனம் கூறுகிறது. தொண்டமண்டலத்தின் வடபகுதியிலுள்ள குடிமல்லம், திருவல்லம் முதலிய பகுதிகளை இவன் அரசாண்டான். இவன், நந்திவர்மனுடைய 17-ஆம் ஆண்டில், மூன்று கிராமங்களை ஒன்றாக இணைத்து அதற்கு விடேல் விடுகு விக்கிரமாதித்திய சதுர்வேதிமங்கலம் என்று

பெயர் இட்டான்.* விடேல் விடுகு என்பது நந்திவர்மனுடைய சிறப்புப் பெயர். நந்தியின் சிறப்புப் பெயரையும் தன்னுடைய இயற்பெயரையும் ஒன்று சேர்த்து இவ்வூருக்கு இவ்வாறு பெயரிட்டான்.

இவனுடைய இன்னொரு சாசனம், சித்தூர் மாவட்டத்து சந்திரகிரி தாலூகா அவிலால கிராமத்து கபிலேசுவரர் கோவிலில் இருக்கிறது. இது, விஜயநந்தி விக்கிரமவர்மனின் 21-வது ஆண்டில் எழுதப்பட்டது. இந்தச் சாசனத்தில் இச் சிற்றரசன் விக்கிரமாதித்திய மகாபலிவாணராயர் என்று கூறப்படுகிறான்.†

நரசிங்க முனையரையர் திருமுனைப்பாடி நாட்டை அரசாண்ட சிற்றரசர். திருநாவலூர் என்பது இவருடைய தலைநகரம். நரசிங்க முனையரையர் சைவ அடியார்களில் ஒருவர்.

"தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளுங் காவலனார் நரசிங்க முனையரையர்"

என்று இவரைப் பெரியபுராணம் கூறுகிறது.‡ இவர், தெம்முனைகள் பல கடந்து (பல போர்களில் பகைவரை வென்று) அரசாண்டார் என்று பெரிய புராணம் கூறுகிறபடியினாலே, இவர் தமது மன்னராகிய நந்திவர்மன் செய்த போர்களிலே பங்கு கொண்டார் என்று கருதலாம். இந்த நரசிங்க முனையரையர், நம்பி ஆரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வளர்ப்புத் தந்தை என்று பெரியபுராணம் கூறுகிறது.§

தென் ஆர்க்காடு மாவட்டத்து திருக்கோயிலூர் தாலுகா மணலூர்பேட்டைச் சாசனம் ஒன்று, நந்திவர்மனுடைய

---

*S. I. I. Vol. III p. 93

†Ep. Col. 188 of 1937—38

‡நரசிங்க முனையரைய நாயனார் புராணம் 1.

§தடுத்தாட்கொண்ட புராணம் 5.

சாமந்த அரசர்களில் வயிரமேகன் என்பவனைக் கூறுகிறது.* இவன், திருக்கோயிலூர் வட்டாரத்தை அரசாண்ட சிற்றரசனாகக் காணப்படுகிறான். இவன் தகப்பன் பெயர் வாணகோவடிகள் சித்தவடவன் என்பது.

**சேனைத் தலைவர்**

நந்திவர்மனுடைய சேனைத் தலைவர்களில் கோட் புலி என்பவரும் ஒருவர். இவரைக் கோட்புலிநாயனார் என்று பெரிய புராணம் கூறுகிறது. கோட்புலியார், நந்தியின் சேனைத் தலைவர் என்பதற்கு நேரான சான்றுகள் இல்லை என்றாலும், நந்திவர்மன் காலத்தில் அவனுடைய நாட்டில் வாழ்ந்திருந்த இச்சேனைத்தலைவர், நந்திவர்மனுடைய சேனைத் தலைவராகத்தான் இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

"செங்கோல் அரசன் அருளுரிமைச்
சேனுபதியாம் கோட்புலியன்"†

என்றும்,

"நலம்பெருகும் சோனாட்டு நாட்டியத்தான் குடிவேளாண்
குலம்பெருக வந்துதித்தார் கோட்புலியன் எனும்பெயரார்
தலம்பெருகும் புகழ்வளவர் தந்திரியராய் வேற்றுப் [பார்"‡
புலம்பெருகத் துயர்விளைப்பப் போர்விளைத்துப் புகழ்விளைப்

என்றும்,

"வேந்தன் ஏவலின் பகைஞர் வெம்போரில் செல்கின்றார்"§

என்றும்,

---

*Ep. Col. 469 of 1937—38.
†ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 37.
‡கோட்புலி நாயனார் புராணம் 1.
§ ,, ,, ,, 3.

"மன்னவன்தன் தெம்முனையில்
விளைவாய்த்து மற்றவன்பால்
நன்நிதியின் குவைபெற்ற
நாட்டியத்தான் குடித்தலைவர்"*

என்றும் பெரியபுராணம் கூறுகிறது.

"கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற
கொடிறன் கோட்புலி"

என்று இவருடைய நண்பராகிய சுந்தரமூர்த்தி நாயனர் இவரைத் திருநாட்டியத்தான்குடி பதிகத்தில் கூறுகிறார்.

சோழநாட்டு நாட்டியத்தான்குடி என்னும் ஊரில் இருந்த கோட்புலியாரை, வளவன் (சோழன்) சேனைபதி என்று பெரிய புராணம் கூறுகிறதுபோலும். உண்மையில் பல்லவ மன்னனுடைய சேனைபதியாகத்தான் இருந்திருக்க வேண்டும். என்னை? சோழ அரசர்கள் அக்காலத்தில் பல்லவருக்குக் கீழடங்கிக் குறுநில மன்னர்களாக இருந்தார்கள். அவர்கள் வேற்றரசருடன் சுதந்தரராகப் போர் செய்திருக்க முடியாது. பல்லவருக்குக் கீழடங்கிய அவர்கள் பல்லவ அரசர் சார்பாகத்தான் போர் செய்திருக்கமுடியும். ஆகவே, கோட்புலியார், நந்திவர்மன் கீழ் சேனைபதியாக இருந்து போர்செய்து வென்றார் என்பதே பொருத்தமாகும்.

அதே காலத்தில், சோழநாட்டுத் திருமங்கலம் என்னும் ஊரில் இருந்த, ஏயர்கோன் கலிக்காமர் என்பவரைச் சோழருடைய சேனைபதிக்குடியில் பிறந்தவர் என்று பெரிய புராணம் கூறுகிகிறது. சோழநாட்டுக் கஞ்சாறூரில் இருந்த மானக்கஞ்சாறரும், அரசரிடம் சேனைபதித் தொழில் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று பெரிய புராணம் கூறுகிறது. இவருடைய மகளை மேற்சொன்ன ஏயர்கோன்

*கோட்புலி நாயனர் புராணம் 6.

கலிக்காமர் மணஞ் செய்தார். இவர்கள், சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில், அதாவது நந்திவர்மன் காலத்தில் இருந்தவர்கள். ஆனால், இவர்கள் போர்க்களம் சென்று போர் செய்ததாகப் பெரிய புராணம் கூறவில்லை.

நந்திவர்மனுடைய முதல் அமைச்சராக இருந்தவன், அக்ரதந்த மரபில் வந்த நம்பன் என்பவன்.*

## சிறப்புப் பெயர்கள்

தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்குச் சில சிறப்புப் பெயர்கள் உண்டு. அவை: விடேல் விடுகு, அவனிநாரணன், உக்ரமகோபன், குவலய மார்த்தாண்டன், தேசபண்டாரி, மானேதயன், நயபரன், கழற்சிங்கன், பல்லவர் கோளரி முதலியன. இவ்வரசன் பேரில் இயற்றப்பட்ட நந்திக் கலம்பகம் இப்பெயர்களைக் கூறுகின்றன. பாரத வெண்பா, இவனைப் பண்டிதவத்சலன் என்று கூறுகிறது.

விடேல் விடுகு என்னும் பெயர், நந்திவர்மன் முடி சூடியபோது பெற்ற பெயர். இப்பெயர் இவனுடைய ஆணையைக் குறிக்கிறது. இப்பெயரை இவனுடைய பாட்டனான இரண்டாம் நந்திவர்மனும் கொண்டிருந்தான். பாட்டன் கொண்டிருந்த திருவாணைப் பெயராகிய விடேல்விடுகு என்னும் பெயரை இவனும் பெற்றிருந்தான் என்பதை நந்திக் கலம்பகத்தினாலும் அறியலாம்.

"வெஞ்சாயல் மறைத்த தனிக்குடையான்
விடைமண் பொறியோலை விடேல்விடுகே"

என்பது நந்திக் கலம்பகம். இதில், விடைமண் பொறி யோலை என்பது, விடை (எருது) முத்திரை பொறிக்கப்பட்ட திருமுக ஓலை என்பதாம். பல்லவ அரசரின் முத்திரை எருது. ஆகவே, அவர்களுடைய திருமுகங்களிலும் செப்

*S. I. I. Vol. II p. 509.

பேட்டுச் சாசனங்களிலும் எருது (விடை) முத்திரை பொறிக்கப்படுவது வழக்கம். விடேல் விடுகு என்பது பல்லவ அரசரின் ஆணையைக் குறிப்பது.

"வினைவார்கழல் நந்தி விடேல் விடுகின், கனைவார் முரசு" என்றும், "விண்தொடும் கிரியளவும் வீரஞ்செல்லும் விடேல் விடுகு"* என்றும் கலம்பகம் இப்பெயரைக் கூறுகிறது. விடேல் விடுகு என்னும் சிறப்புப் பெயரையுடைய ஊர்களும் ஏற்படுத்தப்பட்டன. விடேல் விடுகு விக்கிரமாதித்திய சதுர்வேதி மங்கலம் என்பதும், விடேல் விடுகு குதிரைச்சேரி† என்பதும் அவ்வாறு ஏற்பட்ட பெயர்களாம்.

அவனி நாராயணன் என்னும் பெயரையும் கலம்பகம் கூறுகிறது. "அலைகதிர் வேல்படை அவனி நாராயணன்" என்றும், "அதிர்குல மணிநெடுந்தேர் அவனிநாரணன்"‡ என்றும் கூறுவது காண்க. வட ஆர்க்காட்டு மாவட்டத்தைச் சேர்ந்த காவேரிப்பாக்கத்தின் பழைய பெயர் அவனி நாராயண சதுர்வேதிமங்கலம் என்பது. இப்பெயர் நந்தி வர்மனுடைய சிறப்புப் பெயரினால் ஏற்பட்டது.$

உக்ரமகோபன், குவலய மார்த்தாண்டன், தேசபண்டாரி, மானோதயன், நயபரன், நயபானு என்னும் பெயர்களையும் நந்திக்கலம்பகம் கூறுகிறது.§

முரசு

தெள்ளாறெறிந்த நந்திவர்மனுடைய முரசு, கடுவாய்ப் பறை என்று பெயர் பெற்றிருந்தது.

---

*நந்திக் கலம்பகம் 13, 74.

†S. I. I. Vol. III. p. 93, 12 of 1895.

‡நந்திக் கலம்பகம் 1, 14, 18, 22, 64, 66.

$S. I. I. Vol. III. Part. I. p. 95.

§நந்திக் கலம்பகம் 20, 55, 29, 2, 4, 87, 66, 80, 7, 51.

" விண்ட வேந்தர் தந்நாடும்
வீரத் திருவும் எங்கோனைக்
கண்ட வேந்தர் கொண்மின்கள்
என்னும் கன்னிக் கடுவாயே "*

" கடுவாய் இரட்ட வளைவிம்ம மன்னர்
கழல்சூட வங்கண் மறுகே "†

" கடுவாய் போல் வளையதிர நின்றெடு
மருவார்மன்னர் மனந் துடிக்கும்மே "‡

என்பன நந்திக் கலம்பகம். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் கடுவாய்ப்பறையைப் பெற்றிருந்தது போலவே இவனுடைய பாட்டனை இரண்டாம் நந்திவர்மனும் கடுவாய்ப் பறையைப் பெற்றிருந்தான். இதனைத் திருமங்கையாழ்வார் கூறுகிறார் :

" கறையுடைவாள் மறமன்னர் கெடக்
கடல்போல் முழங்கும்குரல் கடுவாய்
பறையுடைப் பல்லவர் கோன் "

என்பது அப்பாசுர வாசகம்.$

## கழற்சிங்கன்

தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்குக் கழற்சிங்கன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. போரில் வெற்றி பெற்ற வீரர்கள் தமது கால்களில் வீரக்கழல் அணிவது வழக்கம். வீரக்கழல் அணிந்த வீரர்களைப் பற்றிச் சங்க நூல்கள் கூறு

*நந்திக் கலம்பகம் 5.
† ,, 6.
‡ ,, 61.
$பெரிய திருமொழி 2-ஆம் பத்து. 9-ஆக் திருமொழி 9.

கின்றன. தெள்ளாறு, நள்ளாறு, பழையாறு, குறுகோடு முதலிய போர்களில் பகைவரை வென்ற நந்திவர்மன் காலில் வீரக்கழல் அணிந்து சிங்கன் (போரில் சிங்கம் போன்றவன்) என்று சிறப்புப் பெயர் படைத்திருந்ததில் வியப்பில்லை. நந்திக்கலம்பகம், துறைகழல் நந்தி என்றும், பொற்கழல் நந்தி என்றும், அறைகழல் முடித்தவன் என்றும் கூறுகிறது.* மேலும் பல்லவர் கோளரி என்றும் கூறுகிறது.† (கோளரி = சிங்கம்)

**கழற்சிங்கன்**

இவ்வரசன் காலத்தில் இருந்த சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில்,

"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"

என்று கூறியது தெள்ளாறெறிந்த நந்திவர்மனைத்தான் என்று சரித்திரம் ஆராய்ந்தோர் கூறுகிறார்கள். "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்" என்று நிகழ் காலத்திலே கூறுகிறபடியினாலே, சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திலே தெள்ளாறெறிந்த நந்திவர்மன் இருந்தான் என்பது தெரிகிறது. காடவர் என்பது பல்லவ அரசர்களின் குலப்பெயர். சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையால் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே"

என்று கோயில் பதிகத்தில் பாடியதும் இப்பல்லவனையே என்பர்.

---

*நந்திக் கலம்பகம் 28, 30, 60.
† ,, 59.

காடவர்கோன் கழற்சிங்கனாகிய தெள்ளாறெறிந்த நந்திவர்மனைச் சிவனடியார்களில் ஒருவனாகச் சுந்தர மூர்த்தி நாயனார் கூறியதுபோலவே, நந்திக்கலம்பகமும் இவனைச் சிறந்த சிவபக்தன் என்று கூறுகிறது.

" இலகொளி மூவிலை வேல்
இறைவா நின் இயற்கையிலைக்
குலகிரியும் அருமறையும்
குளிர்விசும்பும் வறிதாக
அலைகதிர்வேல் படைநந்தி
அவனி நாராயணன் இவ்
உலகுடையான் திருமுடியும்
உள்ளமுமே உவந்தனையே "

என்றும்,

" சிவனை முழுதும் மறவாத சிந்தையான் "

என்றும் கூறுவது காண்க.* இவ்வரசனுடைய வேலூர்ப் பாளையத்துச் செப்பேட்டுச் சாசனமும் இவனைச் சிவபக்தன் என்று கூறுகிறது. வடமொழியில் கூறப்பட்ட அந்தச் சாசனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இது :—

" எதிர்காலத்தில் உலகத்தை ஆளப்போகிறவர்களே ! அரசர்களுக்குக் கொடிபோன்ற நந்திவர்மன், சிவபெருமானுடைய மலரடிகளாகிய சூளாமணியால் விளங்கப்பெற்ற தனது தலையை வணங்கித், தாமரைபோன்ற கைகளைக்குவித்து இந்த நல்ல வேலையை (இந்த அறச்செயலை) எப்போதும் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிறான்."† ஆகவே இவன் சிறந்த சிவபக்தன் என்பதில் ஐயமில்லை.

சுந்தரமூர்த்தி நாயனார் கூறிய காடவர்கோன் கழற்சிங்கனும், பெரியபுராணம் கூறுகிற கழற்சிங்க நாயனாரும், தெள்ளா

*நந்திக்கலம்பகம் 1.

†S. I. I. Vol. II. p. 501—517.

றெறிந்த நந்திவர்மனும் ஒருவரே என்று சரித்திரம் ஆராய்ந்தோர் கூறுவது சாலவும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்" என்று இவ்வரசனைச் சுந்தரர் கூறியதற்கு ஏற்பவே, நந்திக் கலம்பகமும் இவனை, "அவனி நாராயணன்" என்று கூறுகிறது. மேலும்,

"வடவரை யளவும் தென்பொதி யளவும்
விடையுடன் மங்கல விசையமும் நடப்ப"

என்றும்,

"அலைகதிர்வேல் படை நந்தி
அவனிநாராயணன் இவ்
உலகுடையான் திருமுடியும்
உள்ளமுமே உவந்தனையே"

என்றும் கலம்பகம்* கூறுவதனால், இவன் பாரத நாட்டிலே அக்காலத்தில் பேர்பெற்ற அரசனாக விளங்கினான் என்பதை அறியலாம்.

## குறுகோடும் வாதாபியும்

குறுகோட்டைப் போரைப் பற்றித் தவறான கருத்துக்கள் கூறப்படுவதை இங்குக் காட்ட விரும்புகிறேன். நந்திக் கலம்பகம் 2, 16, 35, 84-ஆம் செய்யுள்களில் நந்திவர்மன் குறுகோட்டையை வென்றான் என்று கூறுகிறது. கொடும்பாளூர் மூவர்கோயில் சாசனம் கூறுகிற விக்கிரமகேசரியின் பாட்டனை வாதாபிஜித் என்பவனை, குறுகோட்டைப் போருடன் சில சரித்திரக்காரர்கள் இணைக்கிறார்கள். திரு. சி. மீனாட்சி, தாம் எழுதிய 'பல்லவர்காலத்து அரசாட்

*நந்திக்கலம்பகம் 1.

சியும் சமூக வாழ்க்கையும்' என்னும் ஆங்கில நூலில் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.*

அவர் எழுதுவதன் கருத்து இது :

" விக்கிரமகேசரியின் பாட்டன் வாதாபிஜித் (வாதாபியை வென்றவன்) என்று கூறப்படுகிறான். 9-ஆம் நூற்றாண்டின் இடையில் இருந்த அந்தச் சிற்றரசனுடைய சிறப்புப் பெயர், இதுவரையில் அறிஞர்களைத் திகைக்கச் செய்திருந்தது. அவர்களுக்கு இப்போது இந்த யோசனையைக் கூறுகிறேன். அது என்னவென்றால் : மூன்றும் நந்திவர்மனுக்குக் கீழ்ப்பட்டிருந்த சிற்றரசனாகிய பரதுர்க்கமர்த்தனன், நந்திவர்மனின் வடநாட்டுப் படையெடுப்பில் கலந்து கொண்டிருக்கக்கூடும். இராஷ்டிரகூட அரசனுடன் நடந்த அந்தப் போரிலே, இராஷ்டிரகூட அரசனுக்கு உதவியாக, அவனுக்குக் கீழடங்கியிருந்த சளுக்கிய சிற்றரசனும் வந்திருக்கக் கூடும். குறுகோட்டைப் போரிலே, அந்தச் சளுக்கிய சிற்றரசனைத் தென்னாட்டுக் குறுநில மன்னன் (கொடும்பாளூர் பரதுர்க்கமர்த்தனன்) வென்றதினாலோ, இராஷ்டிரகூட அரசனைக் குறுகோட்டைப் போரில் வென்ற பிறகு வாதாபி நகரத்தின்மேல் பல்லவ அரசன் நேரடியாகப் படையெடுத்துச் சென்ற போது, பரதுர்க்க மர்த்தனனும் அவ்வாதாபிப் போரிலே கலந்துகொண்டபடியினாலோ, அவன் வாதாபிஜித் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கக்கூடும். கழற்சிற்க நாயனாரைப் பற்றிப் பெரியபுராணம், அவ்வரசன் வடநாட்டுப் போரை வென்றதாகக் கூறுவதனாலும் அக்காலத்து இலக்கியங்களையும் சாசனங்களையும் ஆராய்ந்து பார்ப்பதனாலும் இது தெரியும்."

இவ்வாறு கூறிய அவர், ஷை அடிக்குறிப்பில் மேலும் கூறுகிறார் : " குறுகோட்டையை வென்றபடியினாலேயே

*A. S. L. W. P. by C. Minakshi, p. 302—303.

பரதுர்க்க மர்த்தனன் வாதாபிஜித் என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொள்ளக் காரணமாயிருந்தது" என்று கூறுகிறார்.

இவர் கூறுவதைப் பகுத்தறிவுள்ளவர் எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. வாதாபிஜித் என்னும் சிறப்புப் பெயரையுடைய பரதுர்க்கமர்த்தனன், கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவன். அவனை கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்த தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்தவனாகக் கூறுவது தவறு. மூன்றாம் நந்திவர்மன் காலத்தில், கொடும்பாளூர் சிற்றரசர், பல்லவ அரசருக்கு உதவியாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், முத்தரையர் என்னும் சிற்றரசர் பல்லவர் சார்பில் இருந்ததைச் சாசனங்கள் கூறுகின்றன. மூன்றாம் நந்திவர்மன், குறுகோட்டையை வென்றதாக நந்திக்கலம்பகம் கூறுகிறதே தவிர, வாதாபி நகரத்தை வென்றதாக எங்கும் கூறவில்லை. அவனுடைய சாசனங்களும் கூறவில்லை. நந்திவர்மன் வாதாபியை வென்றிருந்தால் கட்டாயம் அச்செய்தியை நந்திக்கலம்பகம் கூறியிருக்கும். பரதுர்க்கமர்த்தனன் குறுகோட்டையை வென்றிருந்தால், குறுகோட்டைஜித் என்று பெயர் பெறுவானேயல்லாமல், வாதாபிஜித் என்று எப்படிப் பெயர்பெறுவான்? வாதாபிஜித்தாகிய பரதுர்க்கமர்த்தனன், கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில், வாதாபிப் போரில் கலந்து கொண்டவன். அவனை நந்திவர்மன் காலத்தவனாகக் கூறுவது பொருந்தாது. அதிலும், குறுகோட்டையை வென்றபடியால் வாதாபிஜித் என்று பெயர் பெற்றான் என்பது சிறிதும் பொருந்தாது. இதுபற்றி இந்நூலாசிரியர் எழுதியுள்ள "மாமல்லன் நரசிம்மவர்மன்" என்னும் நூலில் விரிவாகக் காண்க.

# 2. வேறு அரசர்கள்

## வடநாட்டரசர்

### விஜயாதித்தியன்

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் பல்லவ நாட்டிற்கு வடக்கே இருந்த அரசர்கள் யார் என்பதைப் பார்ப்போம்.

அக்காலத்தில் கீழைச் சாளுக்கிய இராச்சியத்தை அரசாண்டவன் விஜயாதித்தியன் (இரண்டாவன்). இவன் வெங்கியைத் தலைநகரமாகக்கொண்டு அரசாண்டான். இவன், இராஷ்டிரகூட அரசர்களின் கீழடங்கி இருந்தான். கி. பி. 847-இல் காலமானான். இவனுக்குப் பிறகு இவன் மகன் விஷ்ணுவர்த்தனன் (ஐந்தாவன்) அரசனானான். இவன் நெடுங்காலம் அரசாளவில்லை. கி. பி. 848-இல் காலமானான்.

பிறகு, இவன் மகன் விஜயாதித்தியன் (மூன்றாமவன்) அரசாட்சியை ஏற்றான். இவனுடைய அமைச்சன் வினயாதி சர்மன் என்பவன். இவனுடைய சேனைத் தலைவர்கள் கடெயராசன் என்பவனும் அவன் மகனான பாண்டரங்கனும் ஆவர். இவர்களைக் கொண்டு இவன் பல போர்களை வென்றான். பல்லவ அரசருக்கு உரியதாக இருந்த நெல்லூரை (நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது) இவன் கைப்பற்றிக் கொண்டான். கங்க அரசனை வென்றான்.

இராஷ்டிரகூட அரசனான அமோகவர்ஷனுக்குப் பிறகு அரசாண்ட கிருஷ்ணன் (இரண்டாவன்) என்பவனையும் அவனுக்கு உதவியாக இருந்த காலசூரி அரசன் சங்கிலன் (சங்குகன்) என்பவனையும் கிரணபுரத்தில் வென்றான். இராஷ்டிரகூட தேசத்து அசலபுரத்தையும் சக்கரகூட நகரத்தையும் கொளுத்தி எரித்தான். இவ்வாறு இராஷ்டிரகூட அரசனை வென்று அவனுடைய தலைமையிலிருந்து விலகிச் சுதந்தரனாக அரசாண்டான் விஜயாதித்தியன்.

விஜயாதித்தியன் கி. பி. 848 முதல் 892 வரையில் நாற்பத்துநான்கு ஆண்டு அரசாண்டான். இவனுக்குப் பல சிறப்புப் பெயர்கள் உண்டு. அவை: குணகன், பரசக்கரராமன், ரணரங்க சூத்ரகன், மனுஜப் பிரகாரன், விக்ரம தவலன், நிருபதி மார்த்தாண்டன், விருதங்கபீமன், புவன கந்தர்ப்பன், அரசங்ககேசரி, திபுரமர்த்திய மகேஸ்வரன், திரிபுவனங்குசன் என்பன.

## அமோகவர்ஷன்

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இராஷ்டிரகூட இராச்சியத்தை அரசாண்டவன் சர்வன் என்பவன். சர்வனுக்கு அமோகவர்ஷன் என்னும் பெயரும் உண்டு. இவன் கி. பி. 814 முதல் 878 வரையில் அரசாண்டான். இவன் அரசாட்சிக்கு வந்தபோது இவனுக்கு வயது பதினன்கு. ஆகவே, இவனுடைய உறவினனும் குஜராத்து தேசத்தில் சாமந்த அரசனுக இருந்தவனும் ஆன கர்க்கன் என்பவன், இவன் வயது அடையும்வரையில் அரசாட்சியை நடத்தினன். இவன், ஏறக்குறைய கி.பி. 830-இல், வெங்கியிலிருந்து கீழைச்சளுக்கிய இராச்சியத்தை அரசாண்ட விஜயாதித்தியனை (இரண்டாமவன்) வென்று தன் கீழடக்கினன். ஆனல், மேலே கூறியபடி, விஜயாதித்தியன் பேரனுன மூன்ரும் விஜயாதித்தியன், தன் சேனைத் தலைவன் பாண்டுரங்கன் உதவியினல் கி. பி. 845-இல் அமோகவர்ஷனை வென்று சுதந்தரம் அடைந்தான்.

அமோகவர்ஷன் கங்க அரசர்களுடன் விடாமல் போர் செய்தான். இப்போர் ஏறக்குறைய இருபது ஆண்டு நடந்தது. கடைசியில் கி. பி. 860-இல் அமோகவர்ஷன் சேனையைக் கங்க அரசன் முறியடித்துத் துரத்தினன். பிறகு, அமோகவர்ஷன் தன் குமாரத்தி சந்த்ரோபலப்பை (சந்தோபலவ்வை) என்பவளை பூதுகன் என்னும் கங்க அரசனுக்கு

மணஞ் செய்து கொடுத்தான். இத் திருமணத்துக்குப் பிறகு கங்க ராஷ்டிரகூடப் போர் ஓய்ந்தது.

அமோகவர்ஷன் மாளவ தேசத்தைக் கைப்பற்ற அடிக்கடி படையெடுத்துச் சென்றான். அந்த மாளவ தேசத்தைக் கைப்பற்ற பிரதிஹார அரசனும் முயற்சி செய்தான். அந்தப் போர்களில் அமோகவர்ஷனுக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறிக் கிடைத்தன. கடைசியில் மாளவ தேசத்தைப் பிரதிஹார அரசன் கைப்பற்றிக்கொண்டான்.

அங்கம், வங்கம், மகதம் என்னும் தேசங்களை அமோகவர்ஷன் கைப்பற்ற முயன்றான். இந்தத் தேசங்கள் பால அரசர்களுக்குரியதாக இருந்தன. ஆகவே, இவன் பால அரசனை தேவபாலனுடன் போர் செய்தான் என்று தெரிகிறது. குஜராத்தை அரசாண்ட சாமந்த அரசனை கர்க்கன் (அமோகவர்ஷனின் உறவினன்) கி. பி. 830-இல் காலமானான். அவனுக்குப் பிறகு, அவன் மகன் துருவன் (முதலாவன்) அரசனானான். துருவனுக்கும் அமோக வர்ஷனுக்கும் எக்காரணத்தினாலோ பகை மூண்டது. 845-இல் துருவன் கொல்லப்பட்டிறந்தான். துருவன் மகன் அகாலவர்ஷன், அமோகவர்ஷனுடன் போராடினான். அகாலவர்ஷன் இறந்த பிறகு அவன் மகன் துருவன் (இரண்டாவன்) ஆட்சிக்கு வந்தான்.

அந்தச் சமயத்தில் கூர்ஜ்ஜர பிரதிஹார அரசனாகிய போஜன் என்பவன் இராஷ்டிரகூட தேசத்தின்மேல் படையெடுத்துவர முயற்சி செய்தான். இதையறிந்த துருவனும் அமோகவர்ஷனும் தம்மில் போர் செய்வதை நிறுத்திக்கொண்டு இருவரும் சேர்ந்து பிரதிஹார அரசன் போஜனை எதிர்க்க ஆயத்தமாக இருந்தனர். இவ்வாறு இவர்களுடைய போர் கி. பி. 860-இல் சமாதானமாக முடிந்தது. எதிர்பார்த்தபடி, போஜன் இவர்கள்மேல் படையெடுத்து வரவில்லை.

அமோகவர்ஷன் புலவர்களை ஆதரித்தான். கன்னட மொழிப் புலவர்களான ஆதிபுராணம் இயற்றிய ஜினசேனரும், கணித சாரார்த்த சங்கிரகம் எழுதிய மகா வீராசாரியாரும், அமோக விருத்தியை இயற்றின சாகடாயனரும் இவ்வரசன் காலத்திலிருந்த புலவர்கள். அமோகவர்ஷன், கன்னடச் செய்யுள் இலக்கண நூலாகிய கவிராஜ மார்க்கம் என்னும் நூலை இயற்றினன். அமோகவர்ஷனுக்கு நிருபதுங்கன், மகாராஜ ஷண்டன், வீரநாராயணன், அதிசயதவலன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு.

நந்திவர்மன் பல்லவ மல்லன் காலத்தில், பல்லவ இராச்சியத்தின் வடக்கிலிருந்த இராஷ்டிரகூட அரசனும் கீழைச் சாளுக்கிய அரசனும் தங்களுக்குள் போர் செய்து கொண்டிருந்தபடியினாலே அவர்களுக்கும் பல்லவனுக்கும் அடிக்கடி போர் நிகழவில்லை. ஆனால், அவன் பேரனை தெள்ளாறெறிந்த நந்திவர்மன், இராஷ்டிரகூட அரசனுடன் போர்செய்ய நேரிட்டது. அவன் குறுகோடு என்னும் இடத்தில் செய்த போரை நந்திக் கலம்பகம் கூறுகிறது. குறுகோட்டைப் போரைப் பற்றி முன்னரே கூறியுள்ளோம்.

## தென்னாட்டரசர்

### முத்தரையர்

பல்லவ இராச்சியத்துக்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் முத்தரையர் என்னும் சிற்றரசர் அரசாண்டனர். முத்தரையரை முத்தரசர் என்றும் கூறுவர். முத்தரையர் ஆண்ட நாடு, இப்போதைய தஞ்சாவூர் திருச்சி மாவட்டங்களில் அடங்கி இருந்தது. முத்தரையரின் தலைநகரம் தஞ்சாவூர்

முத்தரையரை நாலடியார் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்"*

என்றும்,

"நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்"†

என்றும் கூறுகிறது.

முத்தரையரைச் சிலர், பாண்டிய அரசரின் குலத்தவர் என்று கூறுகிறார்கள். இது தவறு என்று தோன்றுகிறது. முத்தரையர் களபர அரசரின் வழியினர் போலத் தோன்றுகின்றனர்.

முத்தரையர், பல்லவ அரசருக்குக் கீழடங்கியிருந்தனர். பாண்டியர், பல்லவ இராச்சியத்தின் மேல் படையெடுத்து வந்தால், அவரை எதிர்த்துத் தடுப்பதற்காக முத்தரையர் பல்லவருக்கு உதவியாக இருந்தார்கள். முத்தரையர் பல்லவருக்குக் கீழடங்கி யிருந்தபோதிலும், பாண்டியர் அவரை வென்ற காலத்தில், பாண்டியருக்குக் கீழடங்கி யிருந்தார்கள்.


முத்தரைய அரசர் பரம்பரையில் பேர் பெற்ற சில அரசர் இருந்தார்கள். அவர்களுடைய சாசனங்கள் சில செந்தலை, நாரத்தமலை, சிவலப்பேரி, திருமய்யம், குன்றாண்டார் கோயில் முதலிய இடங்களில் கிடைத்துள்ளன.

---

* தாளாண்மை 10.

† மானம் 6.

மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் இருந்த முத்தரையன் சாத்தன் பழியிலி என்பவன். இவன், விடேல் விடுகு முத்தரையனுடைய மகன். சாத்தன் பழியிலி, நார்த்தமலையில் பாறையைக் குடைந்து ஒரு குகைக் கோயிலை அமைத்தான். இவனுக்குச் சிறிய நங்கை என்னும் பெயருள்ள மகள் ஒருத்தியிருந்தாள். இவள், மீனவன் தமிழதிரையன் என்னும் சிறப்புப் பெயருடைய மல்லன் அநந்தன் என்பவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள்.*




சாத்தம் பழியிலியின் சாசன எழுத்து.
"விடேல் விடுகு முத்தரையன் மகன் சாத்தம் பழியிலி"
என்பது இதன் வாசகம்.

### சோழ அரசர்

அக்காலத்தில் சோழநாடு பல்லவ அரசுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. சோழ அரச குடும்பத்தார் உறையூர், திருவாரூர், பழையாறை முதலிய இடங்களில் பல்லவ அரசருக்குக் கீழடங்கிச் சிற்றரசர்களாக இருந்தார்கள். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்த சோழ அரசன் குமாராங்குசன் என்பவன். இவனைப்பற்றி நந்திவர்ம

*Narathamalai Inscriptian p. 27. The Journal of S. I. Association Vol. II. (1911—12.)


மூன்றாம் நந்திவர்மன் காலத்தில்
தென் இந்தியா
நருமதை
தபதி
கோதாவரி
இராஷ்டிரகூடர்
கல்யாணி
கிருஷ்ணை
வாதபி
கிருஷ்ணை
கீழைச் சளுக்கியர்
வெங்கி
துங்கபத்திரை
வடபெண்ணை
நெல்லூர்
பாணர்
பல்லவர்
காஞ்சி
மயிலை
பாலாறு
மாமல்லபுரம்
கங்கர்
தென்பெண்ணை
காவிரி
கொங்கு
ஆறு
அரபிக் கடல்
சேரர்
தஞ்சை
மதுரை
பாண்டியர்
இலங்கை

னுடைய வேலூர்ப்பாளைய சாசனம் இவ்வாறு கூறு கிறது.

" தன்னுடைய வீரத்தினாலே விளங்கப்பட்டவனும் தன்னுடைய ஈகையினாலே கர்ணனுக்குச் சமானமான வனும் நல்ல ஒழுக்கமுடையவனும் வீரமிக்க சோழ குலத் துக்குச் சூளாமணி போன்றவனுமான குமாராங்குசன் " என்றும், " சோழ மகாராசன் " என்றும் கூறுகிறது.

**பாண்டிய நாடு**

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலே பாண்டிய நாட்டை வரகுணமகாராசனும் அவனுக்குப் பிறகு அவன் மகனான ஸ்ரீ மாறனும் அரசாண்டார்கள். வரகுணனை வரகுண பாண்டியன் என்றும் வரகுண மகாராசன் என் றும் கூறுவர். இவனே முதலாம் வரகுணபாண்டியன் ஆவான். மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருக்கோவை யாரில் கூறுகிற வரகுண பாண்டியன் இவனே. வரகுண பாண்டியனுக்கு மாறஞ்சடையன் என்னும் பெயரும் உண்டு.

இவன் அரசாண்ட காலத்தைத் திட்டமாகக் கூற முடியவில்லை. ஆனால், கி. பி. 825 முதல் 840 வரையில் அர சாண்டான் என்று கருதலாம். சின்னமனூர் பெரிய செப் பேட்டுச் சாசனம் இவனைக் கூறுகிறது. ஆனால், அவன் செய்த போர்களைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

இவனுக்குப் பிறகு அரசாண்ட இவன் மகன் ஸ்ரீ மாற னுக்கு, ஸ்ரீ வல்லபன், ஏகவீரன், பரசக்கர கோலாகலன் என்னும் பெயர்கள் உண்டு. இவன் பல போர்களை வென் றான் என்று சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம் கூறு கிறது.

### பாண்டிய அரசர் பரம்பரை*

1. கடுங்கோன் (பாண்டியாதிராசன்)
(கி. பி. 300-க்குப் பிறகு பாண்டி
நாட்டை அரசாண்ட களபரரை
வென்று மீண்டும் பாண்டியர்
ஆட்சியை நிலைநாட்டினான்.)

|

2. மாறவர்மன் அவனி சூளாமணி

|

3. செழியன் சேந்தன்

|

4. அரிகேசரி மாறவர்மன்
(அசமசமன், வில்வேலி நெல்வேலிப்
போரை வென்றவன்.)

|

5. கோச் சடையன் (ரணதீரன்)

|

6. தேர்மாறன் (இராஜசிம்மன் I)
(அரிகேசரி பராங்குசன் மாறவர்மன்
பல்லவமல்லனை வென்றான்.)

|

7. ஜடிலன் (நெடுஞ்சடையன்)
(பராந்தகன்)

அரிகேசரி†
(பராங்குசன்)

|

ஜடிலன்

|

இராஜசிம்மன் (II)

|

வரகுண மகாராசன்
(மாறஞ் சடையன்)

|

ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன்
(ஏகவீரன்,
பரசக்கர கோலாகலன்)

---

*M. Epi. Rep. G. O. No. 574, 17th July 1908, page 62—68.

†M. Epi. Rep. G. O. No. 503, 27th June 1907, page 63—65.

**பாண்டியன் வெற்றி**

பாண்டியன் வரகுண மகாராசன், பல்லவ மன்னனை தந்திவர்மன் காலத்திலும் அவன் மகனை தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலும் பாண்டி நாட்டை அரசாண்டான். தந்திவர்மன் காலத்தில் வரகுணன், பல்லவ இராச்சியத்தின்மேல் படையெடுத்துச் சென்று, பல்லவர்க்குரியதாக இருந்த சோழநாட்டை வென்றான். முதலில் இடவை என்னும் ஊரைக் கைப்பற்றினான்.*

திண்டுக்கல்லுக்கடுத்த இராமநாதபுரத்தில் மாறஞ்சடையன் காலத்துச் சாசனம், பராந்தகப்பள்ளி வேளானை நக்கம்புள்ளன் என்பவன் ஒரு ஏரியைத் தோண்டினன் என்று கூறுகிறது. இந்த நக்கம்புள்ளன், பாண்டியனுடைய சேனைத் தலைவர்களில் ஒருவன் போலும். பாண்டியன் சோழநாட்டில் சென்று இடவை என்னும் ஊரை வென்றபோது, இந்த நக்கம்புள்ளன் பாண்டியன் சார்பாகப் போர் செய்தான். இந்தப் போர் தந்திவர்மன் காலத்தில் நடைபெற்றது.†

திருச்சிராப்பள்ளி, அம்பாசமுத்திரம் என்னும் ஊர்களில் உள்ள வரகுண பாண்டியனுடைய சாசனங்கள், வேம்பில் என்னும் ஊரைப் பிடித்து அங்கிருந்த கோட்டையை அழித்தான் என்று கூறுகின்றன.‡ வேம்பில் என்பது வேம்பத்தூர். இப்போது இது திருவிசலூர் என்று சொல்லப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி குகைக்கோயிலில் இவ்வரசனுடைய இன்னொரு சாசனம் காணப்படுகிறது.§ இன்னொரு சாசனம் சோழ தேசத்தில் மண்ணிநாட்டுத் திருவிசலூரில் இருக்

*Epi. Col. 690 of 1905.

†Epi. Col. 690 of 1905.

‡Epi. Col. 413 of 1904, 105 of 1905.

§Epi. Col. 1914 of 1904, Ep. Rep. p. 18.

கிறது.* திருச்சி குகைக்கோயில் சாசனங்கள் இப் பாண்டியனைப் பாண்டியாதிராசன் வரகுணதேவன் என்று கூறுகின்றன.



வரகுணபாண்டியன் காலத்து எழுத்து.
"ஸ்ரீ வரகுணமஹாராஜர்" என்பது இதன் வாசகம்.
இதில் வட்டெழுத்தும் கிரந்த எழுத்தும் சேர்ந்துள்ளன.

வரகுணபாண்டியன், சோழ நாட்டை வென்றான் என்பதைப் பழைய திருவிளையாடற் புராணமும் கூறுகிறது

" மற்று நேரொவ்வா வரகுணன், பெருவலி வளவன்
துற்று சேனையும் சுந்தரன் அருளினால் தொலைத்து
வெற்றி பூண்டபின் மகிழ்ந்தவன் மேதகு நாடும்
கொற்ற மேன்மையும் கொண்டனன் மண்தலம் மதிக்க."†

இதில், வரகுணபாண்டியன், பெருவலியுடைய சோழனுடைய சேனையைச் சுந்தரேசுவரர் அருளினால் வென்று சோழ நாட்டை அரசாண்டான் என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி கூறுகிறார். சோழ அரசர், அக்காலத்தில் குறுநில மன்னராய்ப் பல்லவருக்குக் கீழடங்கி இருந்தனர். ஆகவே சோழர் பெருவலியுடையவர்களாய் இருந்திருக்க முடியாது. பல்லவ சேனையுடன் போர் செய்து, வரகுண பாண்டியன் சோழ நாட்டைக் கைப்பற்றினான் என்பதே சரித்திர உண்மையாகும். சோழ நாட்டைப் பிடித்து அரசாண்டபடியால், வரகுணபாண்டியன் சோழனுடன்

*Epi. Col. 17 of 1907.

†திருவாலவாயுடையார் திருவிளையாடல் 16.

போர் செய்து வென்றான் என்று திருவிளையாடல் ஆசிரியர் கருதினர் போலும்.*

**மணிவாசகர்**

வரகுண பாண்டியனின் அமைச்சராக இருந்தவர் வாதவூராராகிய மாணிக்கவாசகர். சிவனடியாராகி மாணிக்க வாசகர் என்னும் பெயர் பெறுவதற்கு முன்பு, வாதவூரார், வரகுண பாண்டியனிடத்தில் தென்வன்பிரமராயன் என்னும் சிறப்புப் பெயருடன் அமைச்சராக இருந்தார் என்று கருதப்படுகிறார். வரகுணபாண்டியன், சோழ நாட்டிலும், பல்லவர் நாட்டிலும், இலங்கைத் தீவிலும் படையெடுத்துச் சென்று போர் செய்தான். அதற்காக அவனுக்குக் குதிரைப் படை தேவைப்பட்டது. ஆகவே, பாண்டியன் வாதவூரரிடம் பெரும் பொருள் கொடுத்துக் குதிரை வாங்கி வர அனுப்பினன். அவர், பக்தியில் ஈடுபட்டு அப்பொருளைத் திருப்பணிக்குச் செலவு செய்தார். அதற்காகப் பாண்டியன் அவரை ஒறுத்தான் என்று வரலாறு கூறுகிறது. மாணிக்க வாசகர் கால ஆராய்ச்சியை இந்நூலில் வேறு இடத்தில் காண்க.

**பாண்டியன் தோல்வி**

பல்லவருக்குரியதாக இருந்த சோழ நாட்டை வரகுண பாண்டியன் வென்று கொண்டது, தந்திவர்மன் காலத்தி லாகும். தந்திவர்மன் இறந்த பிறகு, அவன் மகன் நந்தி வர்மன் பல்லவ இராச்சியத்திற்கு அரசனானன். நந்திவர்மன் காலத்தில் வரகுணபாண்டியன், சோழ நாட்டைக் கடந்து

---

*திருவிளையாடல் புராண ஆசிரியர் காலத்திலும் பல்லவ அரசர் வரலாறு மறைந்திருந்தது போலும். மறைந்து கிடந்த பல்லவர் வரலாறு, சுமார் முப்பது ஆண்டுகளாகத்தான் சாசன ஆராய்ச்சி கொண்டு எழுதப்படுகிறது. அதற்கு முன்பு பல்லவர் வரலாறும், மற்ற அரசர் வரலாறும் பெரிதும் மறைந்து கிடந்தன.

தொண்டை நாட்டிற்கு வந்து, பெண்ணாற்றங்கரையிலிருக்கும் அரைசூரில் பாசறை அமைத்துத் தங்கினான் என்று அம்பாசமுத்திர சாசனம் கூறுகிறது.* இதனால், இவன் பல்லவ அரசனின் தொண்டை நாட்டையும் கைப்பற்ற முயற்சி செய்தான் என்பது தெரிகிறது. வரகுண பாண்டியன் காஞ்சீபுரத்தின்மேல் படையெடுத்து வந்தான். நந்திவர்மன், வரகுண பாண்டியனைக் காஞ்சீபுரத்துக்குத் தெற்கே 35 மைல் தூரத்தில் உள்ள தெள்ளாறு என்னும் ஊரில் எதிர்த்துப் போர் செய்தான்.† போர் செய்து வென்றான். போரில் பின்னடைந்து சென்ற பாண்டியனைத் தொடர்ந்து சென்று வெள்ளாறு நள்ளாறு முதலிய இடங்களில் போர் செய்து வென்று, முன்பு பாண்டியன் பிடித்துக்கொண்ட சோழ நாட்டை மீட்டுக் கொண்டான். தெள்ளாற்றுப் போர் மிக முக்கியமானது. அதை வென்றபடியால், நந்திவர்மனுக்குத் "தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்" என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது. தெள்ளாற்றுப் போர், நந்திவர்மனுடைய பத்தாவது ஆண்டில், அதாவது கி. பி. 840 நடந்ததென்று கருதப்படுகிறது.

நந்திவர்மன் பாண்டியனை வென்ற பிறகு, பாண்டியன் மகளைத் திருமணம் செய்துகொண்டதாகத் தெரிகிறது. அடிகள் மாறன் பாவை என்பது அவ்வரச குமாரியின் பெயர். 'பல்லவர் குல திலக நந்திவர்மன் மனைவி அடிகள் மாறன் பாவையார்' என்று சாசனம் கூறுகிறது.‡ இந்த மாறன் பாவையார், ஸ்ரீ மாறனுடைய மகளும், வரகுண பாண்டியனின் பேர்த்தியுமாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

---

*Epi. Col. 105 of 1905.

†தெள்ளாறு, வடஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசி தாலூகாவில் இருக்கிறது.

‡Epi. Col. 503 of 1901.

## இலங்கைப் போர்

வரகுண பாண்டியன் இலங்கைத் தீவையும் வென்றான். இந்தச் செய்தியை, மகாவம்சம் என்னும் நூலின் பிற்பகுதியாகிய சூல வம்சத்தில் 50-வது அத்தியாயத்தில் காணலாம். அது கூறும் செய்தியின் சுருக்கம் இது :

இலங்கையைச் சேனன் (முதலாம் சேனன்) என்னும் அரசன் ஆட்சி செய்த காலத்தில், பாண்டிய அரசன் இலங்கைமேல் படையெடுத்துச் சென்று அதன் வடபகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு, மகாதாளித கிராமம் என்னும் ஊரில் பாசறை தங்கினான். இலங்கையரசன், தன் சேனாபதியான பத்தன் என்பவன் தலைமையில் சேனையை அனுப்பிப் போர் செய்தான். பாண்டியன் சிங்களச் சேனையைச் சிதறவடித்தான். ஆகவே, இலங்கை மன்னனாகிய சேனன், தலைநகரத்தைவிட்டுத் தெற்கே மலையநாட்டிற்குப் போய்விட்டான்.

பிறகு, சேனனுடைய தம்பியும் யுவராசனுமான மகிந்தன் என்பவன், பாண்டியனுடன் போர் செய்து இறந்தான். அதன் பிறகு, சேனனுடைய இளைய தம்பியான கஸ்ஸபன் என்பவனும் பாண்டியனுடன் போர் செய்து இறந்தான். கடைசியில், பாண்டியன் இலங்கையின் இராசதானியைக் கைப்பற்றிக்கொண்டு, அரண்மனையிலும் அபயகிரி விகாரை தூபாராம விகாரை முதலிய பௌத்தப் பள்ளிகளிலும் இருந்த பொன்னையும் பொருளையும் கவர்ந்து கொண்டான்.

தோல்வியுற்ற இலங்கை மன்னனாகிய சேனன், யானைகளையும் பொன்னையும் பொருளையும் பாண்டியனுக்குக் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான். இவற்றைப் பெற்றுக்கொண்டு பாண்டியன் தன் நாடு திரும்பினான்.

இந்தச் செய்தியைக் கூறுகிற சூல வம்சம் என்னும் நூல், இலங்கையின்மேல் படையெடுத்துச் சென்ற பாண்டி-

யன் பெயரைக் கூறவில்லை. அப்பாண்டியன் வரகுண மகாராசன் என்பதை ஆராய்ச்சியினால் அறிகிறோம். வரகுண பாண்டியன், தானே நேரில் சென்று இலங்கையில் போர் செய்யவில்லை. இளவரசனாகிய தன் மகன் ஸ்ரீ மாறனை அனுப்பி அவன் மூலமாக இலங்கையை வென்றான். இதனால்தான், சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம், வரகுண மகாராசன் இலங்கையை வென்றதாகக் கூறாமல், அவன் மகன் ஸ்ரீ மாறன் இலங்கையை வென்றதாகக் கூறுகிறது.*

### ஸ்ரீ மாறன்

வரகுண பாண்டியனுக்குப் பிறகு அவன் மகனான ஸ்ரீ மாறன் பாண்டிய நாட்டின் அரசனானான். ஸ்ரீ மாறனுக்கு ஏகவீரன், ஸ்ரீ வல்லபன், பரசக்கர கோலாகலன், பல்லவ பாஞ்சனன், அவனிப சேகரன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு. இவன் அரசாண்ட காலம் ஏறக்குறைய கி. பி. 840 முதல் 861 வரையில் ஆகும். இவன் குன்னூர், சிங்களம் (இலங்கை), விழிஞம் என்னும் ஊர்களில் பகைவர்களுடன் போர் செய்து வென்றான் என்றும், குடமூக்கில் (கும்பகோணத்தில்) வந்து இவனை எதிர்த்த கங்கர், பல்லவர், சோழர், காலிங்கர், மாகதர் முதலியவர்களின் கூட்டுச் சேனையை வென்றான் என்றும் சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம் கூறுகிறது.† இப் போர்களில், சிங்களப் போரை,

---

*ஸ்ரீமாறன் அரசாட்சிக் காலத்தில், இலங்கைமேல் படையெடுத்து இலங்கையை வென்றதாகச் சிலர் கருதுகிறார்கள். இது ஆராய்ச்சிக்குப் பொருந்தவில்லை. ஸ்ரீ மாறன் இளவரசனாக இருந்த காலத்தில், அவனுடைய தந்தையாகிய வரகுண பாண்டியன் ஆட்சியில் இலங்கைப் போர் நிகழ்ந்தது என்பதுதான் ஆராய்ச்சிக்குப் பொருந்துகிறது.

†No. 206, S. I. I. Vol. III.

இவன் இளவரசனாக இருந்தபோது செய்தான் என்று முன்னமே கூறினோம்.

வரகுண பாண்டியனுடைய மகன் அரசாண்ட காலத்தில், சோழ அரசன் கருநாடகருடன் சேர்ந்து பாண்டியனுடன் போர் செய்ய வந்தான் என்றும், சொக்கப் பெருமான் அட்டாலைச் சேவகனாக வந்து பாண்டியன் சேனையுடன் சேர்ந்து, விடைக் குறியம்பு எய்து பகைவரை வென்று பாண்டியனுக்கு வெற்றியுண்டாக்கினார் என்றும் பழைய திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

" வரகுண மன்னவற்கு மனமகிழ் மைந்தன் வென்றிப்
பொருவிலா அறிவினானோர் பூழியன் மதுரை தன்னுள் "

என்றும்,

" வரகுணன் மைந்தன் என்று வந்தித்தான் அன்றுமுன்னப்
பரவு பாண்டியர்கள் எல்லாம் வந்தித்தார் பகைகள்தீர "

என்றும் ஷை புராணம் கூறுவது காண்க.*

இதில், வரகுணன் மைந்தன் என்று கூறப்படுபவன் ஸ்ரீ மாறன் ஆவான். இவன்மேல் படையெடுத்துச் சென்ற சோழன், பல்லவ அரசன் சார்பாகச் சென்றிருக்க வேண்டும்; அக்காலத்தில் சோழன் பல்லவ அரசருக்குக் கீழடங்கியிருந்தவனாகலின்.

[ஸ்ரீ மாறன், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்துக்குப் பிறகு, அவன் மகன் நிருபதுங்கவர்மன் காலத்திலும் இருந்தான். இவனுடைய ஆட்சியின் பிற்காலத்தில், மாயா பாண்டியன் என்பவன் இவனுடன் அரசு உரிமைக்காகக் கலகஞ் செய்தான். மாயா பண்டியனுக்கு இலங்கையரசன் சேனன் என்பவன் உதவி செய்தான். பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மனும் மாயா பாண்டியனுக்கு மறைமுக

---

*விடைக்குறி யம்பெய்த திருவிளையாடல் 1, 23.

மாக உதவி செய்தான் என்று தெரிகிறது. இந்தப் போரில் ஸ்ரீ மாறன் புண்பட்டுத் தோற்றுப் போனன். இப்போர், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் நிகழவில்லை. அவன் மகனை நிருபதுங்க வர்மன் காலத்தில் நிகழ்ந்தது. ஆகவே, அப்போரைப் பற்றி இங்கு நாம் கருதவேண்டியதில்லை.]

**சின்னமனூர் செப்பேடு**

வரகுண மகாராசனைப் பற்றியும் அவன் மகனை ஸ்ரீ மாறனைப் பற்றியும் சின்னமனூர் பெரிய செப்பேட்டுச் சாசனம் இவ்வாறு கூறுகிறது.

வடமொழிப் பகுதி : "..........அவன் மகன், புகழ் பெற்றவனும் ஒழுக்கத்தில் சிறந்தவனுமான இராஜசிம்மன். அவன் மகன் பெரிய வீரனை வரகுணன். அவன் மகன், கேட்பதற்கு மகிழ்ச்சியைத் தரும் புகழுடையவனும் திருமகள் மணுளனுமான (ஸ்ரீ வல்லபனை) ஸ்ரீ மாறன். இவன் இணையற்ற வீரன் ; குடிமக்களால் நேசிக்கப்பட்டவன். மாயா பாண்டியனையும் கேரளனையும் சிம்மளனையும் பல்லவனையும் வல்லபனையும் வென்று ஒற்றைக் குடைக்கீழ் உலகத்தை அரசாண்டான்."

தமிழ்ப் பகுதி : " கொற்றவர்கள்தொழு கழற்கால் கோவரகுண மஹாராஜனும் ஆங்கவற் காத்மஜனுகி* அவனிதலம் பொறைதாங்கித் தேங்கமழ் பொழிற் குண்ணூரிலுஞ் சிங்களத்தும் விழிஞத்தும் வாடாத வாகை சூடிக் கோடாத செங்கோல் நடாவிக் கொங்கலர் பொழிற் குடமூக்கிற் போர் குறித்து வந்தெதிர்ந்த கங்க பல்லவ சோள காலிங்க மாகதாதிகள் குருதிப் பெரும்புனல் குளிப்பக் கூர்வெங்கணை தொடை ஞெகிழ்த்துப் பருதி ஆற்றலொடு விளங்கின பரசக்கிர கோலாகலனும்."†

---

*ஆத்மஜனுகி = மகனுகி.

†No. 206, S.I.I. Vol. III.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலே பாண்டி நாட்டை வரகுண மகாராசன் என்னும் மாறஞ்சடையனும் அவனுக்குப் பிறகு அவன் மகன் பரசக்கர கோலாகலன் ஆகிய ஸ்ரீ மாறனும் அரசாண்டார்கள்.

**நெடுமாறன் யார்?**

இக்காலத்திலிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவதிகைத் திருவீரட்டானப் பதிகத்தில் நெடுமாறன் என்று குறிப்பிடுவது வரகுண மகாராசனைத்தான் என்று தோன்றுகிறது. பாண்டியன் வரகுண மகாராசனுக்கு மாறன் சடையன் என்னும் பெயரும் உண்டு. இந்த மாறனைத்தான் நெடுமாறன் என்று சுந்தரர் கூறுகிறார் போலும்.

"பொன்னனை மயிலூர்தி முருகவேள்தாதை
பொடியாடுந் திருமேனி நெடுமாறன் முடிமேற்
றென்னனைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர் வானந்தி.*

என்று அவர் கூறுவது காண்க.

வரகுண பாண்டியனாகிய நெடுமாறன் சோழ நாட்டையும் இலங்கைத் தீவையும் வென்று அரசாண்டபடியாலும் சிறந்த சிவபக்தன் ஆனமையினாலும் அவனைச் சுந்தரர் "பொடியாடுந் திருமேனி நெடுமாறன்" என்று கூறினார் என்று கருதலாம்.

## சேரநாடு

**சேரமான் பெருமாள்**

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் சேரநாட்டையாண்ட அரசர் யார் என்பது சாசனங்கள் மூலமாகத்

* திருவதிகைத் திருவீரட்டானம் 8.

தெரியவில்லை. ஆனால், இக்காலத்திலிருந்த சுந்தரமூர்த்தி நாயனாருடன் சேரமான் பெருமாள் என்னும் சேர அரசன் நண்பராக இருந்தார் என்று தெரிகிறபடியால், அந்தச் சேரமான் பெருமாள் சேர நாட்டை யரசாண்டார் என்று கொள்ளலாம். இந்தச் சேரமான் பெருமாளுக்குப் பெருமாக் கோதையார் என்றும் கழறிற்றறிவார் என்றும் பெயர்கள் உண்டு.* திருவஞ்சைக்களம் என்னும் கொடுங்கோளூரைத் தலைநகரமாகக்கொண்டு இவர் அரசாண்டார்.†

சேர அரசன் குடியில் பிறந்த இவர் திருவஞ்சைக்களத்தில் இருந்த சிவன் கோயிலில் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தார். மிகுந்த சிவபக்தர். சைவ நாயன்மார் அறுபத்துமூவரில் இவரும் ஒருவர். சேரநாட்டை யாண்ட செங்கோற் பொறையன் என்னும் சேர அரசன், அரசாட்சியைத் துறந்து சென்ற பிறகு, அமைச்சர்கள், அரசாட்சிக்கு உரியவராகிய பெருமாக் கோதையாரையே அரசராகத் தேர்ந்தெடுத்தனர்.‡

அக்காலத்தில் சேரநாடு தமிழ்நாடாகவே இருந்தது. மலையாள மொழி அக்காலத்தில் ஏற்படவில்லை. ஆனால் மலையாள நாடு என்று மட்டும் பெயர் பெற்றிருந்தது.

சேரமான் பெருமாள் (பெருமாக் கோதையார்) சிவபக்தர் மட்டுமல்லர்; சிறந்த புலவரும் ஆவர். இவர் இயற்றிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, ஆதியுலா (திருக்கயிலாய ஞான உலா) என்னும் நூல்கள் சைவ சமயத்தாருக்குரிய பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

பாணபத்திரன் என்னும் இசைப் புலவனுக்குப் பொருள் கொடுத்தனுப்பும்படி சொக்கப் பெருமானாகிய

*சேரமான் பெருமாள் நாயனார் புராணம் - 6, 14, 16.
† ஷை ஷை 1.
‡ ஷை ஷை 5, 7, 10, 11, 16.

ஆலவாய்க் கடவுள், இந்தச் சேரமான் பெருமாளுக்குத் திருமுகப் பாசுரம் அனுப்பினர் என்றும் அதன்படியே இச் சேர அரசன் பாணபத்திரருக்குப் பெரும் பொருளை நன் கொடையாகக் கொடுத்தனுப்பினர் என்றும் ஒரு வரலாறு கூறப்படுகிறது. இவ்வரலாறு பெரும்பற்ற நம்பி திருவிளையாடற் புராணத்திலும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்திலும்* பெரிய புராணத்திலும்† கூறப்படுகிறது.

பாணபத்திரர், வரகுணபாண்டியன் அவையில் இசைப் புலவராக இருந்தார் என்று பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் கூறுகிறது.‡ இதனால், வரகுண மகாராசன் என்னும் பாண்டிய அரசன் காலத்திலே சேரமான் பெருமாள் இருந்தார் என்பது தெரிகிறது. வரகுணபாண்டியன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்தவன் என்று முன்னமே அறிந்தோம்.

## சுந்தரரும் சேரமானும்

சிவபக்தராகிய சேரமான் பெருமாள், சைவ சமயாசாரியாராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடன் நட்புடையவராக இருந்தார். இருவரும் சேர்ந்து தல யாத்திரை செய்தார்கள். இவர்கள் பாண்டி நாட்டில் தல யாத்திரை செய்த போது, பாண்டிய அரசனுடனும் அவன் மகளை மணஞ் செய்துகொண்டு அங்குத் தங்கியிருந்த சோழ அரசனுடனும் சில நாட்கள் தங்கியிருந்தனர் என்று பெரியபுராணம் கூறுகிறது.$

---

*திருமுகங் கொடுத்த படலம்.

†கழறிற்றறிவார் புராணம், 26 முதல் 39ஆம் செய்யுள் வரையில்.

‡விறகு விற்ற படலம் – 2.

$கழறிற்றறிவார் புராணம் – 92, 95.

" தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார்
அன்னவர்கள் உடன்கூட அணையஅவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார் "

" செம்பியனா ருடன்செழியர் தாம்பணிந்து சேரருடன்
நம்பியுமுன் புறத்தணைய நண்ணியபே ருவகையால்
உம்பர்பிரான் கோயிலினின் றுடன்கொடுபோய் இருவர்க்கும்
பைம்பொன் மணிமாளிகையில் குறைவறுத்தார் பஞ்சவனார் "

சுந்தரரையும் சேரமானையும் வரவேற்ற பாண்டியன், வரகுணபாண்டியன் மகனான ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபனாக இருத்தல்வேண்டும்.

சேரமான், சுந்தரருடன் பாண்டி நாட்டில் தல யாத்திரை செய்த பிறகு சுந்தரரைத் தமது ஊருக்கு அழைத்துச் சென்றார். சிலநாள் கழித்து இருவரும் திருக்கயிலாயம் சென்றார்கள் என்று வரலாறு கூறுகிறது.

## இலங்கைத் தீவு

### சிலாமேகன்

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் சேனன் என்னும் பெயருள்ள இரண்டு அரசர்கள் இலங்கைத் தீவை அரசாண்டார்கள். முதலாம் சேனன் ஏறக்குறைய கி. பி. 821 முதல் 841 வரையிலும், இரண்டாம் சேனன் கி. பி. 841 முதல் 876 வரையிலும் அரசாண்டார்கள். இவர்களுடைய வரலாறு மகாவம்சம் என்னும் நூலின் பிற்பகுதியாகிய சூலவம்சத்தில் 50, 51-வது அத்தியாயங்களில் கூறப்படுகிறது. அதன் சுருக்கம் இது :

ஒன்பதாம் அக்கபோதிக்குப் பிறகு, முதலாம் சேனன் இலங்கைக்கு அரசனானான். இவனுக்குச் சிலாமேகன் என்னும் பெயரும் உண்டு. இவனுக்குத் தலைநகரம் புலத்தி

நகரம். இந்தச் சேனனுக்கு உறவினனும் அரசுரிமை யுடையவனுமான மகிந்தன் என்பவன் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்திருந்தான். (தமிழ்நாட்டில் எங்கே யாரிடத்தில் அடைக்கலம் புகுந்திருந்தான் என்பது தெரிய வில்லை.) சேனன், தன்னுடைய ஆட்களை அனுப்பி மகிந்த னைக் கொன்றுபோட்டு, தன் அரசாட்சிக்குப் போட்டி இல்லாதபடி செய்துகொண்டான். சேனனுக்குத் தம்பியர் மூவர் இருந்தனர். அவர்கள் பெயர் மகிந்தன், கஸ்ஸபன், உதயன் என்பன. சேனன், மூத்த தம்பியாகிய மகிந்தனை யுவராசனாக்கினான்.

## பாண்டியன் போர்

இவன் காலத்தில் பாண்டி நாட்டிலிருந்து பாண்டியன் படையெடுத்து வந்து இலங்கையின் வடபகுதியைக் கைப் பற்றிக்கொண்டு, மகாதாளிதகாமம் என்னும் ஊரில் சேனை யுடன் தங்கியிருந்தான். அப்போது, இலங்கையிலே அநு ராதபுரம் முதலிய ஊர்களில் தங்கி வாழ்ந்திருந்த தமிழர்கள், பாண்டியனுடன் சேர்ந்து கொண்டார்கள்.

சேனன், பாண்டியனை எதிர்க்கும்படி தனது சேனாபதி யான பத்தன் என்பவன் தலைமையில் சிங்களச் சேனையை அனுப்பினான். பாண்டியன் சேனையுடன் சிங்களச் சேனை போர் செய்து சிதறி ஓடிற்று. தன்னுடைய சேனை தோற் றுப் போனதைக் கண்ட சேனன், பொன்னையும் பொருளை யும்எடுத்துக்கொண்டு புலத்தி நகரத்தை விட்டுத் தெற்கே மலைய நாட்டிற்குப் போய்விட்டான். யுவராசனாகிய மகிந் தன், சேனையுடன் வந்து பாண்டியனுடன் போர் செய் தான். போரில், பாண்டியனை வெல்ல முடியாமல் தற்கொலை செய்துகொண்டிறந்தான். பிறகு, அவன் தம்பியாகிய கஸ்ஸபன் போருக்கு வந்து போரிட்டுத் தோல்வி யடைந்து கொண்டிவாதம் என்னும் ஊருக்குத் தப்பி ஓடினான்.

ஆனால், பாண்டிய வீரர்கள் அவனைக் கண்டுபிடித்துக் கொன்றுவிட்டார்கள். பாண்டியன் இலங்கையின் தலை நகரமாகிய புலத்தி நகரத்தைப் பிடித்துக்கொண்டான்.

தலைநகரத்தைக் கைப்பற்றிய பாண்டியன், அரண்மனையிலும் நகரத்திலும் இருந்த பொன்னையும் பொருளையும் கவர்ந்துகொண்டான். அபயகிரி விகாரையைச் சேர்ந்த அரதனப்பாசாதத்துப் பொன் புத்த உருவத்தையும், வேறு விகாரங்களிலிருந்த பொன் உருவச் சிலைகளையும் கவர்ந்து கொண்டான். மேலும், தூபாராம விகாரையின் மேற் கூரையில் வேயப்பட்டிருந்த பொற்றகடுகளையும் வெள்ளித் தகடுகளையும் கவர்ந்துகொண்டான். இலங்கை மன்னனுடைய வீரமுரசையும் இரத்தினக் கிண்ணம் முதலியவற்றையும் கைப்பற்றினான்.

மலைய நாட்டிலே ஓடி ஒளிந்த சேனன், பாண்டியனுடன் சமாதானம் செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டான். யானைகளையும் பொன்னையும் பொருளையும் பாண்டியனுக்குக் கொடுத்து அவனுடன் சமாதானம் செய்துகொண்டான். ஆகவே, பாண்டியன் இலங்கையை விட்டுத் தன் ஊருக்குத் திரும்பிப் போய் விட்டான்.

சேனன், தலைநகரமாகிய புலத்தி நகரத்துக்குத் திரும்பி வந்து அரசாண்டான். தன் கடைசி தம்பியாகிய உதயனை யுவராசனாக்கினான். சிறிது காலத்தில் உதயன் இறந்து விடவே, தன் மூத்த தம்பியாகிய கஸ்ஸபன் மகன் சேனன் என்பவனை யுவராசனாக்கினான். இவனுடைய அமைச்சர்கள் உத்தரன், வஜ்ரன், ரக்கஸன் என்பவர். சேனன் இருபது ஆண்டு அரசாண்டான்.

[சேனன் மேல் போர் செய்த பாண்டியன் பெயரைச் சூலவம்சம் என்னும் நூல் கூறவில்லை. பாண்டியன் வரகுண மகாராசன் இப்போரை நடத்தியிருக்க வேண்டும்

வரகுண மகாராசன், நேரில் இலங்கைப் போரை நடத்த வில்லை. அவனுடைய மகனும் இளவரசனுமான ஸ்ரீ மாற னுடைய தலைமையில் இலங்கைப் போர் நடந்திருக்கவேண் டும் என்று தெரிகிறது.]


## ஸ்ரீசங்க போதி

சேனன் இறந்த பிறகு, யுவராசனாக இருந்த சேனன் அரசனானான். இந்தச் சேனன், முதலாம் சேனனுடைய மூத்த தம்பியாகிய கஸ்ஸபனின் மகன். இந்தச் சேனனை இரண்டாம் சேனன் என்பர். இவனுக்கு ஸ்ரீ சங்க போதி என்னும் பெயரும் உண்டு. இவன் கி. பி. 841 முதல் 876 வரையில் அரசாண்டான் என்று முன்னமே கூறி னோம். இவனுடைய சேனாபதி குட்டகன் என்பவன். இவன் அரசாட்சிக்கு வந்தபோது, முன்பு பாண்டியன் இலங்கையிலிருந்து கொண்டுபோன பொருள்களை எல்லாம் மீட்டுக்கொள்ளவேண்டும் என்று எண்ணினான். அதற்காக அவன் பாண்டி நாட்டின்மேல் படையெடுத்து வரச் சமயம் பார்த்திருந்தான். அப்போது, அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

பாண்டி நாட்டிலே பாண்டியன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன், (மாயா பாண்டியன் என்பவன்) பாண்டி நாட்டின் அரசுரிமைக்காகக் கலகம் செய்தான்.* பாண்டி யன் அவனை விரட்டித் துரத்திவிட்டான். துரத்தப்பட்டவன் இலங்கைக்கு வந்து சேனனுடைய உதவியை வேண்டி னான். பாண்டி நாட்டின்மேல் படையெடுத்துச் செல்ல எண்ணியிருந்த சேனனுக்கு, இது ஓர் நல்ல வாய்ப்பாக இருந்தது. ஆகவே, சேனன் தன் சேனாபதியான குட்ட

---

*வரகுண பாண்டியன் இறந்தபின் அவன் மகன் ஸ்ரீ மாறன் அரசாட்சி செய்த காலத்தில் இக்கலகம் ஏற்பட்டது.


இலங்கை
யாழ்ப்பாணம்
மன்னார்
நாகநாடு
மாதோட்டம்
கடம்பநதி
அநுரை
புலத்தி
மாவலிகங்கை
மலையம்
கல்யாணி
கொளும்பு
சமனொளி
மாணிக்கங்கை
கதிரகாமம்
உரோஹணம்

கன் தலைமையில் பெருஞ் சேனையைப் பாண்டி நாட்டிற்கு அனுப்பினான்.

சிங்களச் சேனாபதி குட்டகன், சேனையுடன் மதுரைக்குச் சென்று பாண்டியனுடன் போர் செய்து வென்று, முன்பு இலங்கையிலிருந்து பாண்டியன் கொண்டுபோன பொருள்களையெல்லாம் மீட்டுக்கொண்டு இலங்கைக்குச் சென்றான். செல்வதற்கு முன்பு, இலங்கை மன்னனிடம் அடைக்கலம் புகுந்த பாண்டியன் உறவினனுக்கு (மாயா பாண்டியனுக்கு) முடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்து அவனை அரசனாக்கினான்.*

இந்தச் சேனன் பல தான தருமங்களைச் செய்தான். மாவலி கங்கையாற்றில் மணிமேகலை என்னும் அணையைக் கட்டினான். மணிஹீர ஏரிக்குக் கலிங்கு கட்டினான். கட்டந்த நகரத்துக்கருகிலிருந்த பழைய ஏரியைப் புதுப்பித்தான். சேதியமலையின்மேல் நோயாளிகளுக்கு மருத்துவச் சாலை கட்டினான். இவன் 35 ஆண்டு அரசாண்டான்.

[இவன், தன்னிடம் அடைக்கலம் புகுந்த மாயா பாண்டியனுக்கு முடிசூட்டினான் என்றும் அவனுக்கு எதிராக இருந்த பாண்டியனைப் போரில் கொன்றான் என்றும் சூலவம்சம் கூறுகிறது. ஆனால், சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம், பாண்டியன் ஸ்ரீ மாறன் (வரகுண பாண்டியன் மகன்) மாயா பாண்டியனை வென்றதாகக் கூறுகிறது. "அவன் (வரகுணன்) மகன், கேட்பதற்கு மகிழ்ச்சியைத் தரும் புகழுடையவனாகிய ஸ்ரீ வல்லபனான ஸ்ரீ மாறன். இவன் இணையற்ற வீரன், குடிமக்களால் நேசிக்கப்பட்ட

---

*சேனனுடைய பாண்டி நாட்டுப் படையெடுப்புப் பற்றி இவன் காலத்துச் சாசனங்களும் கூறுகின்றன. இந்தச் சாசனங்களில், சேனன், ஸ்ரீ சங்கபோ என்று கூறப்படுகிறான். ஸ்ரீ சங்கபோ என்பது ஸ்ரீ சங்கபோதி ஆகும். E. Z. Vol. II, 39, 44 ff, E. Z. Vol. I. p. 164, 176.

வன். மாயா பண்டியனையும் கேரளனையும் சிம்மளனையும் பல்லவனையும் வல்லபனையும் வென்று ஒற்றைக் குடைக்கீழ் உலகத்தை அரசாண்டான்" என்று சின்னமனூர் பெரிய செப்பேட்டுச் சாசனத்தின் வடமொழிப் பகுதி கூறுகிறது. ஆகவே, இலங்கை நூலாகிய சூலவம்சம், பாண்டியனைச் சிங்கள சேனபதி கொன்றுவிட்டான் என்று கூறுவது நம்பத்தகுந்ததல்ல.]

# 3. சமயநிலை

## 1. பௌத்த சமண சமயங்கள்

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் சாக்கிய மதம் என்னும் பௌத்த மதமும் சமண சமயம் எனப்படும் ஜைன சமயமும் தமிழ்நாட்டிலே இருந்தன. ஆனால், அச் சமயங்கள் சிறப்புப் பெற்றிருக்கவில்லை. சைவ வைணவ மதங்களினால் தாக்குண்டு வலிவிழந்து வீழ்ச்சியடையும் நிலையில் இருந்தன. பழைய பெருமை இழந்து வலிமை குன்றியிருந்தபோதிலும் பௌத்த சமண சமயத்தவரும் அவருடைய பௌத்த சமணக் கோயில்களும் ஆங்காங்கே தமிழ்நாட்டில் இருந்தன.

நந்திவர்மனுடைய 19-ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகா, பெருமாண்டூரில் உள்ள ரிஷபநாதர் கோயில் என்னும் ஜைனக் கோயிலுக்குத் தானம் செய்ததை ஒரு சாசனம் கூறுகிறது.*

அக்காலத்தில் இருந்த சைவ சமயாசாரியாராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகள், தமது தேவாரப் பதிகங்களின் இடை யிடையே பௌத்த சமண சமயங்களைக் குறிப்பிடுகிறார். அவை :

"குண்டாடிச் சமண் சாக்கியப் பேய்கள்
கொண்டா ராகிலும் கொள்ளக்
கண்டாலுங் கருதேன் எருதேறுங் கண்ணா
நின்னல தறியேன்"†

"வெற்றரைக்கற் றமணும் விரையாது
விண்டால முணுந்
துற்றரைத் துற்றறுப்பான்
துன்னவாடைத் தொழிலுடையீர்"‡

*No. 847 S. I. I. Vol. VII.
†நாட்டியத்தான்குடி 9. ‡பழமண்ணிப் படிக்கரை 9.

மூ. ந. 4

"குண்டாடுஞ் சமணரும் சாக்கியரும் புறங்கூறுங்
கொகுடிக் கோயில்"*

"நமண நந்தியும் கருமவீரனும்
தருமசேனனும் மென்றிவர்
குமணமாமலைக் குன்றுபோல் நின்று
தங்கள்கூரை ஒன்றின்றியே
ஞமண ஞாஞண ஞாண ஞோண
மென்றோதி யாரையும் நாணிலா
அமணராற் பழிப்புடையரோ
நமக்கடிகளாகிய அடிகளே"†

இதில், நந்திகணம் சேனகணம் முதலிய பிரிவுகளைச் சேர்ந்த சமண சமயத் துறவிகள் பிராகிருத மொழியில் மந்திரங்களைக் கூறியதைக் குறிப்பிடுகிறார். பிராகிருத மொழியில் ங, ஞ, ண, ந, ம, ன என்னும் மெல்லோசைச் சொற்கள் அதிகமாக வழங்கப்படுகின்றன. அதைக் குறிக்கவே "ஞமண ஞாஞண ஞாண ஞோணம்" என்று கூறினார்.

"கரியமனச் சமண் காடியாடு கழுக்களால்
எரிய வசனவுந் தன்மையோ........"‡

"இருந்துண்தேரரும் நின்றுண்சமணரும்
ஏச நின்றவன்"§

"பொய்ச் சமண் பொருளாகி ஈண்டுநம்பி"$

"நன்மையொன் றிலாத்தேரர் புன்சமணும்
சமயம மாகிய தவத்தினா ரவத்தத் தன்மைவிட்டு"¶

*கருப்பறியலூர் 10. †நமக்கடிகளாகிய அடிகள் 9.
‡முடிப்பது கங்கை 9. §திருவாழ்கொளிபுத்தூர் 10.
$நம்பி என்ற திருப்பதிகம் 9. ¶திருத்தினை நகர் 9.

"நமையெலாம் பலர் இகழ்ந் துரைப் பதன் முன்
நன்மை யொன்றிலாத் தேரர் புன்சமணுஞ்
சமயமாகிய தவத்தினர் அவத்தத் தன்மை
விட்டுழி நன்மையை வேண்டில்"*

"குண்டாடியும் சமணாடியும் குற்றுடுக்கையர்தாமும்
கண்டார்கண்ட காரணம்மவை கருதாது கைதொழுமின்"†

"குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடியவது செய்தது வானால் வருவிதியே"‡

"குண்டரைக் கூறையின்றித் திரியும் சமண்சாக்கியப்பேய்
மிண்டரைக் கண்டதன்மை விரவாகிய தென்னைகொலோ"§

"மோடுடைய சமணர்க்கும் உடையுடைய சாக்கியர்க்கும்
மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே"$

சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஜைனர்களைப் பற்றியும் பௌத்தர்களைப் பற்றியும் இவ்வாறு பல முறைகளில் கூறியிருக்க, ஜைனர்களைப்பற்றி ஒரு இடத்திலும் கூறவில்லை என்று திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறுவது வியப்பாக இருக்கிறது! "ஜைனர்களினால் சைவ சமயத்துக்கு உண்டாயிருந்த அபாயம் மறைந்துவிட்டது. சுந்தரருடைய பதிகங்களில் ஜைனர்களைப்பற்றி ஒரு குறிப்பாவது காணப்படவில்லை" என்று திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் எழுதுகிறார்.¶ சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருந்த பிள்ளையவர்கள்

---

*திணைநகர் 9. †மறைக்காடு 9. ‡திருச்சுழியல் 9.
§திருநாகேச்சரம் 10. $கோயில் 9.
¶P. 110, History of Tamil Language and Literature, 1959.

பொறுப்பற்ற முறையில் இவ்வாறு கூறுவது வருந்தத் தக்கது. அதிலும், தமிழ் இலக்கிய வரலாற்றில் இவ்வாறு மாறுபட எழுதுவது கண்டிக்கத்தக்கது. இது உண்மைக்கு மாறுபட்ட தவறான கருத்து என்பது, மேலே சுந்தரர் தேவாரத்திலிருந்து காட்டப்பட்ட மேற்கோள்களினால் நன்கு விளங்குகிறது.

ஜைன பௌத்த மதங்கள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலே வலிமை குன்றியபோதிலும் உடனே அவை அழிந்துவிட வில்லை. பையப்பையத் தளர்ச்சியடைந்துகொண்டே அச் சமயங்கள் 12, 13-ஆம் நூற்றாண்டுகளிலும் நிலைநின்றிருந் தன. பௌத்த மதம் பின்னர் அடியோடு மறைந்துவிட்டது. ஆனால், சமண சமயம், குன்றிப்போன நிலையிலாயினும் இன்னும் நிலைபெற்றிருக்கிறது.

## 2. வைணவ சமயம்

அக்காலத்தில் வைணவ சமயமும் சிறப்படைந்திருந் தது. சைவ சமயத்தைப் போலவே வைணவ சமயமும் பக்தி இயக்கத்தில் ஈடுபட்டுச் சமண பௌத்த மதங்களைத் தாக்கிற்று. தெள்ளாற்றுப் போர் வென்ற நந்தியின் பாட்டனை பல்லவ மல்லன் நந்திவர்மன் காலத்தில் திரு மங்கையாழ்வார் வாழ்ந்திருந்தார். அவர் சமண பௌத்த சமயங்களைத் தாக்கி வைணவ சமயத்தை நிலைநிறுத்தினர். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்த வைணவ அடியார்கள் யார் என்பது தெரியவில்லை.

## 3. சைவ சமயம்

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் சைவ சமயம் உயர்ந்த நிலையில் இருந்தது. சைவ சமய ஆர்வம் நாடெங் கும் பரவியிருந்தது. அப்பர் சம்பந்தர் காலத்தில் இருந்த காபாலிகம், பாசுபதம், பைரவம் முதலிய சைவ சமய உட் பிரிவுகள் இக்காலத்திலும் இருந்தன. இந்த உட்சமயங்கள்,

பௌத்த சமண சமயங்கள் மறைகிற வரையில் தமிழ்நாட்டில் இருந்து பிறகு பையப் பைய மறைந்துவிட்டன. இந்த மதங்கள் பௌத்த சமண சமயங்களை அழிப்பதில் முனைந்து நின்றதாகத் தெரிகின்றன. மூன்றும் நந்திவர்மன் காலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் முதலியோர் சைவ சமயத்திற்குப் பெரிதும் உழைத்தனர். அவர்களைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

**சுந்தரமூர்த்தி நாயனர்**

திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரில் சடையனர் என்னும் ஆதிசைவப் பிராமணர், இசைஞானியார் என்னும் மனைவியாருடன் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு நம்பி ஆரூரர் என்று பெயரிட்டு வளர்த்தார்கள். இந்தக் குழந்தை பிற்காலத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் என்றும் வன்றெண்டர் என்றும் தம்பிரான் தோழர் என்றும் சேரமான் தோழர் என்றும் பெயர்பெற்று விளங்கிற்று.

அக்காலத்தில் திருமுனைப்பாடி நாட்டை அரசாண்டவர் நரசிங்க முனையரையர் என்னும் சிற்றரசர். இவர் சிறந்த சிவபக்தர். சைவ நாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஒருவர். பல்லவ அரசர்களுக்குக் கீழ் சிற்றரசராக இருந்தவர். நரசிங்க முனையரையர், நம்பி ஆரூரர் என்னும் குழந்தையின் அழகைக் கண்டு அதன்மேல் ஆசை கொண்டார். குழந்தையின் தந்தையாராகிய சடையனரின் இசைவு பெற்று, அக்குழந்தையைத் தமது மாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய் அன்போடு வளர்த்து வந்தார். அக்குழந்தை இளமைப் பருவத்திலேயே ஆதி சைவருக்குரிய ஆகம நூல்களையும் அரசர்க்குரிய யானையேற்றம் குதிரையேற்றம் முதலிய கலைகளையும் கற்றுத் தேர்ந்து காளைப் பருவம் அடைந்தது. பதினறு வயதடைந்த நம்பி ஆரூரருக்

குத் திருமணம் செய்ய எண்ணினார்கள். அதன்படி சடங்கவி சிவாசாரியார் என்பவர் மகளை மணம் பேசி நாள் குறித்தார்கள்.

குறித்த நாளிலே திருமணம் நடக்கும் வேளையிலே முதியவர் ஒருவர் கோலூன்றி நடந்து அவ்விடம் வந்து, மணமகனாகிய நம்பிஆரூரர் தமக்கு அடிமை ஆள் என்று வழக்காடினார். வழக்கின் முடிவில், ஆரூரர் முதியவருக்கு அடிமை என்று தீர்ப்பாயிற்று. முதியவர், ஆரூரரை அழைத்துக்கொண்டு திருவெண்ணெய்நல்லூருக்குப் போய் அங்குத் திருவருட்டுறை என்னும் கோயிலில் புகுந்து மறைந்தார். ஆரூரர், கோயிலுள் புகுந்த முதியவரைக் காணாமல் திகைத்துப் பிறகு தம்மை ஆட்கொண்டவர் சிவபெருமானே என்று துணிந்தார். அப்போது அவருக்குக் கடவுளிடம் பக்தி தோன்றிற்று. அவர் திருப்பாடல்களைப் பாடித் துதிப்பாராயினார்.

கடவுள், தம்மை ஆட்கொண்டதை ஆரூரர் தமது தேவாரத்தில் கூறுகிறார். ‘திருவெண்ணெய்நல்லூரும் திருநாவலூரும்’ பதிகத்தில், வெண்ணெய்நல்லூரில் வைத்தென்னை யாளுங் கொண்டார் என்று ஒவ்வொரு பாட்டிலும் கூறுகிறார். அன்றியும்,

> “ தன்மையினா லடியேனைத்
> தாமாட்கொண்ட நாட்சபைமுன்
> வன்மைகள்பேசிட வன்றொண்ட
> னென்பதோர் வாழ்வு தந்தார் ”

என்றும் கூறுகிறார். திருவாவடுதுறைப் பதிகத்தில்,

> “ மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை
> வலியவந் தென்னை ஆண்டு கொண்டான் ”

என்றும் கூறுகிறார்.

" அன்றுவந் தெனையகலிடத் தவர்முன்
ஆளதாக வென்று ஆவணங் காட்டி
நின்று வெண்ணெய் நல்லூர் மிசை
யொளித்த நித்திலத் திரட்டொத்தினை......"*

என்றும்,

" சொற்பதப் பொருள் இருளறுத் தருளும்
தூய சோதியை வெண்ணெய் நல்லூரில்
அற்புதப்பழ ஆவணங் காட்டி யடியனு
வென்னை யாளது கொண்ட, நற்பதத்தை "†

என்றும் கூறுவது காண்க.

நம்பிஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனார், பக்திமேலிட்டுத் திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டு பல திருப்பதிகளுக்குச் சென்று கடவுளை வணங்கினார். பிறகு, திருவாரூருக்குச் சென்று அங்கேயே தங்கியிருந்தார். அப்போது, திருவாரூர் திருக்கோயில் ஆலய வழிபாடு செய்துவந்த உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்த பரவை நாச்சியார் என்பவரைக் கண்டு அவர்மேல் காதல்கொண்டு அவரை மணஞ் செய்து அவருடன் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் கோட்புலி நாயனார் என்னும் அடியார் சுந்தரரைத் தமது ஊராகிய நாட்டியத்தான்குடிக்கு அழைத்துச் சென்று சிறப்புச் செய்தார்.

பின்னர், சுந்தரமூர்த்தி நாயனார், தொண்டை நாட்டில் தல யாத்திரை செய்துகொண்டு திருவொற்றியூருக்கு வந்து அங்கே சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது சங்கிலி நாச்சியார் என்பவரைக் கண்டு காதல்கொண்டு, மகிழமரத் தடியில் " உன்னைப் பிரியமாட்டேன் " என்று வாக்களித்து அவரை மணஞ் செய்தார். சிலகாலம் சங்கிலியாருடன் வாழ்ந்திருந்து, மீண்டும் திருவாரூருக்குப் போகப் புறப்பட்டுச் சென்றார். செல்லும் வழியில், சங்கிலியாருக்குக்

* திருக்கோலக்கா 5. † திருநள்ளாறு 6.

கொடுத்த வாக்கைத் தவறி அவரைப் பிரிந்து சென்றபடி யினால், அவருக்குப் பார்வை மறைந்தது. அப்போது ஒற்றி யூர் இறைவனைப் பாடிய பதிகத்தில்,

"வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நானறியேன் மறுமாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றியூ ரெனும் ஊருறை வானே"

என்று பாடினார். இதில், ஒழுக்க என் கண்ணுக்கு ஒரு மருந்து உரையாய் என்பதில், "கண்படலம் நீங்குவதற்குத் தகுந்த ஒரு மருந்தை எனக்குக் கூறுவாயாக" என்று ஒரு பொருளும், "கண்ணுக்கு இடும் கலிக்க மருந்தைப் பாவில் உரைத்து என் கண்ணுக்கு இடுவாயாக" என்னும் மற்றொரு பொருளும் தரும்படியாகப் பாடியிருப்பது காண்க.

மேலும், பார்வை மறைந்ததை மிகத் துயரத்தோடு பாடினார்.

"மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வ தென்னே கணக்கு வழக்காகில்
ஊன்று கோலெனக் காவதொன் றருளாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே"

என்றும்,

"கழித்தலைப் பட்ட நாயதுபோல ஒருவன்
கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீயரு ளாயின செய்யாய்
ஒற்றியூ ரெனுமூ ருறைவானே"

என்றும்,

"மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானாய்
மைந்தனே மணியே மண வாளா
அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையேல் போகுரு டாஎனத் தரியேன்"

என்றும் பாடியது மனத்தை உருக்குகிறது.

அடியவர் சிலர் வழிகாட்டச் சுந்தரமூர்த்திகள் திரு வெண்பாக்கம் சென்று கடவுளை வணங்கித் தமது பார்வை மறைந்ததைக் கூறி வருந்தினர். அப்போது இறைவன் அவருக்கு ஒரு ஊன்றுகோலைக் கொடுத்தருளினர். அப்போது அவர் பாடிய பாடல்கள் மேலும் மனத்தை யுருக்குவன.

"பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம்என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு காதா ! கோயிலுளாயே ? என்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே."

"ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றானே"

" ஊன்றுவதோர் கோலருளி உளோம்போகீர் என்றானே "

இவ்வாறு அவலச்சுவை ததும்பப் பாடிய இவர், காஞ்சீபுரம் சென்று திருவேகம்பரை வணங்கியபோது இவருக்கு ஒரு கண் பார்வை தெரிந்தது. இதனைத் திருவேகம்பப் பதிகத்தின் பதினொரு பாடலிலும்,

" கால காலனைக் கம்பனெம் மானைகாணக்
கண்ணடியேன் பெற்ற வாறே "

என்று கூறுகிறார்.

பின்னர், திருவாரூர் சென்று ஒரு கண் பார்வையில்லாமல் இருப்பதைக் கூறிப் பதிகம் பாடினர்.

" மீளாவடிமை உமக்கே ஆளாய்ப் பிறரைவேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர், திருவாரூரீர், வாழ்ந்து போதீரே."

" எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே."

" என்றும் முட்டாப் பாடுமடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியின் வீழ்ந்தால் வாழ்ந்து போதீரே"

" சந்தம் பலவும் பாடு மடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால் வாழ்ந்து
போதீரே."

" பாரூ ரறிய என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே."

அப்போது, இறைவன் அருளால் மற்றக்கண் படலம் நீங்கிப் பார்வை தெரிந்தது. அக்காலத்தில், கலிக்காம நாயனார் என்னும் தொண்டருடன் நண்பரானார்.

சேரநாட்டை அரசாண்ட சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனாரைக் காண்பதற்காகத் திருவாரூருக்கு வந்தார். சுந்தரர் அவருடன் நட்புகொண்டு இருவரும் தல யாத்திரை செய்யப் புறப்பட்டுப் பாண்டி நாடு சென்று அந்நாட்டுத் தலங்களை வணங்கினார்கள். பின்னர் பாண்டிய மன்னன் அரண்மனையில் தங்கினார்கள். அங்கே, பாண்டியன் மகளைத் திருமணஞ் செய்து கொண்ட சோழ அரசன் தங்கியிருந்தான். இவர்கள் நால்வரும் திருப்பரங்குன்றம் சென்று கடவுள் வழிபாடு செய்தார்கள். அவ்வமயம் சுந்தரர், " திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் " என்னும் பதிகம் பாடினார். அப்பதிகத்தின் கடைசியிலே, தமிழ்நாட்டுப் பழைய முடியுடை வேந்தர் மூவரும் ஒருங்கிருப்பதைக் குறிப்பிட்டுப் பாடினார். அச்செய்யுள் இது :

" அடிகேள் உமக்காட்செய அஞ்சுதும்
என்றமரர் பெருமானை ஆரூரனஞ்சி
முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்தாறும் ஓர் நான்கும் ஓரொன்றினையும்
படியா யிவைகற்று வல்ல வடியார்
பரங்குன்ற மேய பரமனடிக்கே
குடியாகி வானோர்க்குமோர் கோவு மாகிக்
குலவேந்தராய் விண்முழு தாள்பவரே."

பாண்டி நாட்டிலிருந்து வந்த பிறகு சேரமான் பெருமாள், சுந்தரமூர்த்தியைத் தமது சேர நாட்டுக்கு அழைத்துச் சென்றார். சேர நாட்டில் சிலநாள் தங்கிய பிறகு சுந்தரர் மீண்டும் திருவாரூருக்கு வந்தார். சிலநாட்கள் சென்ற பிறகு, சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டும் சேர நாடு சென்று சேரமான் பெருமாளுடன் தங்கினார். தங்கியிருந்தபோது, இவ்வுலக வாழ்வை விட்டு வெள்ளையானை ஏறித் திருக்கயிலாயஞ் சென்று சிவகதி பெற்றனர். அவ்வமயம் அவர் பாடிய *திருநொடித்தான் மலைப் பதிகத்தில் வெள்ளை யானைமீது ஏறிச் சென்றதைக் கூறுகிறார் :

**" வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து**
**ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே."**

**" விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல்**
**என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே."**

**" இந்திரன்மால் பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்**
**வந்தெதிர்கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து**
**மந்திரமா முனிவர் இவனாரென எம்பெருமான்**
**நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே."**

சுந்தரமூர்த்தி நாயனார் தமது பதினாறு வயது முதல் பதினெட்டு வயது வரையில் இரண்டு ஆண்டுகள் கடவுளிடம் பக்திசெய்து அடியாராக இருந்தார். மிகச் சுருங்கிய காலத்தில் சிவகதி யடைந்த சிவனடியார்களில் இவரும் ஒருவர்.

இவர் பாடியருளிய தேவாரப் பதிகங்கள் தொகுக்கப்பட்டு ஏழாந் திருமுறை என்று வழங்கப்படுகிறது. இவர் முப்பத்தெட்டாயிரம் பதிகங்கள் பாடினார் என்பர்.

---

* திருநொடித்தான் = கயிலாயமலை.

"பின்புசில நாளின்கண் ஆரூரர் நம்பி
பிறங்குதிரு வெண்ணெய்நல் லூர் பித்தா என்னும்
இன்பமுதல் திருப்பதிகம் ஊழிதோறும்
ஈருய்முப் பத்தெண்ணு யிரமதாக
இன்புபுகன் றவர்நொடித்தான்
மலையிற் சேர்ந்தார்"

என்பது திருமுறை கண்ட புராணம்.

இப்போது உள்ள திருப்பதிகங்கள் நூறு மட்டுமே. வெள்ளிப் பாடல் என்னும் காரோணப் பதிகம், பிற்காலத்தில் இடைச்செருகலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனர் வரலாறு பெரிய புராணத்திலே இடையிடையே கூறப்படுகிறது. தடுத்தாட்கொண்ட புராணத்திலும், ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணத்திலும், கழறிற்றறிவார் என்றும் சேரமான் பெருமாள் நாயனர் புராணத்திலும், வெள்ளானைச் சருக்கத்திலும் இவருடைய வரலாறு கூறப்பட்டுள்ளது.

## சேரமான் பெருமாள் நாயனர்

இவர் சேரநாட்டரசர். பெருமாக்கோதையார் என்பது இவருடைய பெயர். கடற்கரையை யடுத்த மகோதை என்னும் கொடுங்கோளூரைத் தலைநகரமாகக் கொண்டு அரசாட்சி செய்தார். இவருக்குக் கழறிற்றறிவார் என்னும் பெயரும் உண்டு. சைவ சமயப் பற்றும் சிவபக்தியும் உடையவர். சைவ சாத்திரங்களை நன்கு கற்றவர். தமிழில் கவிபாடும் புலமை மிகுந்தவர்.

இவர் யானையேறி நகர்வலம் செய்தபோது, ஒரு வண்ணான் உவர்மண்ணைச் சுமந்துகொண்டு எதிரிலே வந்தான். அவன் உடல் முழுவதும் உவர்மண் படிந்து நீறு பூசியது போலக் காணப்பட்டது. அவனைக் கண்ட சேரமான் பெருமாள் அவனைச் சிவனடியார் என்று நினைத்து, யானையி

னின்று இறங்கிவந்து வணங்கினார். வண்ணான் அச்சங் கொண்டு, அரசரை வணங்கி, "அடியேனை யாரெனக் கொண்டது! அடியேன் அடிவண்ணான்" என்று கூறினான். பெருமாளும், "அடியேன் அடிச்சேரன். திருநீற்று வேடத்தை நினைப்பித்தீர்! வருந்தாமல் போம்" என்று விடையிறுத்தார். இதனால், இவருடைய சிவசமயப் பற்று நன்கு விளங்குகிறது.

மதுரைச் சொக்கநாதப் பெருமான் அனுப்பிய திருமுகப் பாசுரத்தின்படி, இவர் தம்மிடம் வந்த பாணபத்திரன் என்னும் இசைவாணருக்குப் பெருநிதி அளித்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் சிவபக்தியினைக் கேள்வியுற்று, அவரைக் காணவேண்டும் என்னும் விருப்பத்தினால் திருவாரூருக்கு வந்தார். வரும் வழியில் சிதம்பரத்தில் தங்கிக் கூத்தப்பெருமானை வணங்கிப் பொன்வண்ணத் தந்தாதி என்னும் நூலை இயற்றி அரங்கேற்றினார். பின்னர்த் திருவாரூரை அடைந்து சுந்தரமூர்த்தி நாயனாரால் வரவேற்கப்பட்டு அங்குத் தங்கி தியாகப்பெருமானை வணங்கினார். அக்காலத்தில், திருவாரூர் மும்மணிக் கோவை என்னும் நூலை இயற்றித் திருக்கோயிலில் சுந்தரமூர்த்தி நாயனார் முன்னிலையில் அரங்கேற்றினார். பிறகு, சுந்தரருடன் வேதாரணியம் சென்று, இறைவனை வணங்கிச் சிவபெருமான்மேல் ஒரு அந்தாதி பாடினார். அந்த அந்தாதி இப்போது கிடைக்கவில்லை. பிறகு, பாண்டி நாட்டில் சுந்தரரோடு தலயாத்திரை செய்து திரும்பி வந்து திருவாரூரில் தங்கினார். சிலநாட்களுக்குப் பிறகு, சுந்தரரை அழைத்துக்கொண்டு தமது ஊருக்குச் சென்றார். சுந்தரர் சிலநாட்கள் கொடுங்கோளூரில் தங்கியிருந்து, மீண்டும் திருவாரூருக்கு வந்தார்.

நெடுநாள் ஆனபிறகு, சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டும் சேரமான் பெருமாளைக் காண்பதற்குக் கொடுங்கோளூர் சென்றார். அங்கிருந்தபோது திருக்கயிலாயத்திலிருந்து வெள்ளையானை வர, சுந்தரர் அதில் ஏறிக்கொண்டு திருக்

கயிலாயஞ் சென்றார். அதனையறிந்த சேரமான் பெருமாள் குதிரை ஏறி, சுந்தரரைத் தொடர்ந்து சென்று கயிலாயம் அடைந்தார். அடைந்து, தாம் இயற்றிய ஆதியுலா என்னும் திருக்கயிலாய ஞான உலாவை அரங்கேற்றினார். அவ்வுலா பின்னர் திருப்பிடவூரிலே வெளியிடப்பட்டது.

இவர் இயற்றிய பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, ஆதியுலா என்னும் திருக்கயிலாய ஞானவுலா ஆகிய மூன்றும் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

சேரமான் பெருமாள் நாயனாரின் விரிவான வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணத்தில், கழறிற்றறிவார் புராணத்தில் (சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில்) காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தமது திருத்தொண்டத் தொகைப் பதிகத்தில், "கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்" என்று இவரைச் சிறப்பித்திருக்கிறார்.

## நரசிங்கமுனையரையர்

இவர் குறுநில மன்னர். திருமுனைப்பாடி என்னும் நாட்டிற்கு அரசர். பல்லவ அரசன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்தவர். இவரைப் பற்றிப் பல்லவர் சாசனங்களில் கூறப்படவில்லை. ஆனால், அவ்வரசர் காலத்தில் இருந்தவர் என்பது நன்கு அறியப்படுகிறார், இவர் பகைவரைப் போரில் வென்றார் என்று கூறப்படுகிறபடியால், தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்குத் துணையாக இருந்து இவர் பகைவர்களை வென்றிருக்கக்கூடும். நரசிங்க முனையரையர் பகைவர்களைப் போரில் வென்று, சிவபக்தியுடையவராக வாழ்ந்திருந்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது.

" இம்முனையர் பெருந்தகையார்
இருந்தரசு புரந்துபோய்த்
தெம்முனைகள் பலகடந்து
தீங்குநெறிப் பாங்ககல
மும்முனைநீள் இலைச்சூல
முதற்படையார் தொண்டுபுரி
அம்முனைவர் அடிஅடைவே
அரும்பெரும்பே றெனஅடைவார் "*

நரசிங்கமுனையரையர் காலத்தில், திருமுனைப்பாடி நாட்டில் ஆதிசைவ குடும்பத்தைச் சேர்ந்த சடையனார்க்கும் அவர் மனைவியார் இசைஞானியார்க்கும் நம்பியாரூரர் மகவாகப் பிறந்தார். அந்தச் சுந்தரக் குழந்தையை நரசிங்கமுனையரையர் கண்டு அன்புகொண்டு பெற்றோரின் இசைவு பெற்று அக்குழந்தையைத் தமது மாளிகையில் வளர்த்து வந்தார்.† நம்பியாரூரர் என்னும் அக்குழந்தை வளர்ந்து சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் பெயருடன் சைவ சமய குரவர் நால்வரில் ஒருவராகத் திகழ்ந்தது.

நரசிங்கமுனையரையர் சைவத் தொண்டு செய்து கொண்டிருந்தார். திருவாதிரையில் சிவபெருமானுக்குச் சிறப்புச் செய்து, தம்மிடம் வருகிற சிவனடியார்க்குத் திருவமுது அளித்து அவர்களுக்குத் தனித்தனியே நூறு பொன் கொடுப்பார். ஒரு திருவாதிரையின்போது, நல்லொழுக்கமில்லாத தூர்த்தனாகிய ஒருவன், காசு பெறும் பொருட்டு, திருநீறணிந்து அங்கு வந்தார். அந்தத் தூர்த்தனைக்கண்ட மற்றவர்கள் இகழ்ந்து ஒதுங்கினார்கள். அவரைக்கண்ட நரசிங்கமுனையரையர், அவரை இகழாமல், அவர் அணிந்திருந்த நீற்றுக்கு மதிப்புக் கொடுத்து, அவருக்கு இருநூறு பொன் கொடுத்து அனுப்பினார்.

*நரசிங்கமுனையரைய நாயனார் புராணம் 2.

†தடுத்தாட்கொண்ட புராணம் - 5.

இவ்வாறு சிவபக்தராகத் திகழ்ந்த இந் நாயனார், சைவ அடியார் அறுபத்துமூவரில் ஒருவராகச் சேர்க்கப்பட்டார். இவரால் வளர்க்கப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார், தமது திருத்தொண்டத்தொகைப் பாசுரத்தில்,

" மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன் "

என்று இவரைப் போற்றினார். அன்றியும் தமது தேவாரத் திருப்பதிகத்தில்,

" நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித்தீசனுக் காட்செயுமூர் அணிநாவலூர்......"*

என்று சிறப்பித்துப் பாடினார்.

### சடையனார், இசைஞானியார்

திருமுனைப்பாடி நாட்டிலேயுள்ள திருநாவலூரில் வாழ்ந்திருந்தவர் ஆதிசைவ குலத்தவராகிய சடையனார். இவருடைய மனைவியார் இசைஞானியார். இவருக்கு மகனாகத் தோன்றியவர் நம்பிஆரூரர் என்னும் சுந்தர மூர்த்தி நாயனார். சைவ சமய குரவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை உலகத்துக்களித்த பெருமை வாய்ந்தவர்கள் இவர்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில், இவர்களைப் போற்றியுள்ளார்.

" என்னவனும் அரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனும் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே "

என்று அவர் பாடியுள்ளார். மேலும் தாம் அருளிய கலைய நல்லூர் தேவாரத்திலும்,

---

* திருவெண்ணெய்நல்லூரும், திருநாவலூரும் 11.

" நண்புடைய நற்சடையன் இசைஞானி
சிறுவன் நாவலூர்க் கோன் "

என்று இவர்களையும் தம்மையும் கூறியுள்ளார்.

**மானக்கஞ்சாற நாயனர்**

கஞ்சாறூரில் பரம்பரைச் சேனபதித் தொழில் புரியும் குடும்பத்தில் மானக்கஞ்சாற நாயனர் பிறந்தார். இவர் சிறந்த சிவபக்தர். சைவ அடியார்களுக்குத் தொண்டு செய்பவர். பிள்ளைப்பேறின்றி இருந்த இவருக்குச் சிவபெருமான் திருவருளால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை வளர்ந்து மணப்பருவம் அடைந்தது.

பெருமங்கலம் என்னும் ஊரிலே ஏயர்குடியிலே பிறந்த கலிக்காமர் என்பவர், சில பெரியோர்களை அனுப்பி, மானக்கஞ்சாறர் மகளைத் தமக்கு மணம் செய்விக்கும்படி கேட்டார். மானக்கஞ்சாறர் அதற்கு உடன்படவே திருமணத்திற்கு நன்னாள் குறிக்கப்பட்டது. அச்சமயத்தில் மாவிரத சைவத்தைச் சேர்ந்த ஒரு முனிவர், மணமகள் இல்லத்திற்கு வந்தார். வந்த முனிவரை மானக்கஞ்சாறர் வரவேற்று வணங்கினர். முனிவர், " உமது இல்லத்தில் என்ன சிறப்பு நடைபெறுகிறது?" என்று கேட்க, அடியார், " அடியேன் மகளுக்குத் திருமணம் நிகழ்கிறது " என்று கூறி, மகளை அழைத்து முனிவரை வணங்கச் செய்தார்.

மணமகளுடைய கரியநீண்டகூந்தலைக் கண்ட மாவிரத முனிவர், " இந்த மயிர் பஞ்சவடிக்குத் தகுந்தது " என்று கூறினர். பஞ்சவடி என்பது மயிரினல் செய்யப்பட்ட பூணூல். மயிரினல் அகலமாகப் பின்னப்பட்ட பூணூலையும் எலும்பினல் செய்யப்பட்ட மணியையும் மாவிரதிகள் அணிவது வழக்கம். மகளின் மயிர் பஞ்சவடிக்கு உதவும் என்று கூறியதைக் கேட்ட மானக்கஞ்சாறர், முன்பின் சிந்திக்கா

மல், தமது உடைவாளை எடுத்துத் தமது மகளின் கூந்தலை அடியோடு அரிந்து அவரிடம் கொடுத்தார். அவள் மணப் பெண் என்பதை அவர் சிறிதும் சிந்திக்கவில்லை.

அடுத்த நாள் மணமகனாகிய ஏயர்கோன் கலிக்காமனார் வந்து நிகழ்ந்ததை அறிந்து, அவரும் சிவனடியார் ஆகையால், மானக்கஞ்சாறரின் செயலுக்கு மகிழ்ந்தார். ஆனாலும், முண்டிதம் ஆன பெண்ணை மணஞ் செய்யலாமா என்று தயங்கினார். அப்பொழுது சிவபெருமானே வந்து அப்பெண்ணை மணஞ் செய்துகொள்ளும்படி கூற, அவர் மணம் செய்துகொண்டார்.

இவ்வாறு மானக்கஞ்சாறர் சிறந்த சிவபக்தராய் விளங்கிப் பின்னர் சிவபதம் அடைந்தார்.*

"மலை மலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்" என்று இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாராட்டியுள்ளார்.

## ஏயர்கோன் கலிக்காமர்

கலிக்காமர் சோழ நாட்டுத் திருமங்கலக்குடி என்னும் ஊரில் ஏயர்குடியில் பிறந்தவர்; ஆகையால், ஏயர்கோன் கலிக்காமர் என்று கூறப்படுகிறார். அரசரிடம் சேனாபதித் தொழில் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறந்த சிவ பக்தர். இவரைப் போலவே, சேனாபதித் தொழில் புரியும் குடும்பத்தைச் சேர்ந்த, மானக்கஞ்சாற நாயனாரின் மகளை இவர் திருமணஞ் செய்துகொண்டு வாழ்ந்தார்.† இவர், திருப்புன்கூர் என்னும் ஊரிலேயுள்ள திருக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்தார்.

அக்காலத்தில், சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரிடத்தில் சிவபெருமானைத் தூது அனுப்பிய செய்தியைக் கலிக்

*இவருடைய வரலாற்றை மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில் விரிவாகக் காணலாம்.

†மானக்கஞ்சாற நாயனார் புராணம் 16, 17, 34, 35, 36.

காமர் கேள்விப்பட்டார்; பெருஞ் சினங் கொண்டார். சிவபெருமானை ஒரு பெண்ணிடம் தூது அனுப்பலாமா? அவனை நேரில் காண்பேனானால் என்ன நிகழுமோ! என்று சினந்து பேசினார். சுந்தரரிடம் அடங்காச் சீற்றங் கொண்டார். இதனை யறிந்த சுந்தரர் சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமான் கலிக்காமருக்கு வயிற்றில் சூலை நோயை உண்டாக்கி, அவர் கனவில் தோன்றி "இந்நோய் சுந்தரனால் அல்லாமல் தீராது" என்று கூறினார். பிறகு, சுந்தரரிடம், "நீ போய் கலிக்காமன் வயிற்று வலியைத் தீர்த்துவிட்டு வா" என்று சொன்னார்.

சுந்தரர் கலிக்காமரிடம் சென்றார். அவர் வருகையை யறிந்த கலிக்காமர், சுந்தரரால் சூலை நோய் நீங்குவதைவிட உயிர் விடுவதே மேல் என்று நினைத்துக் கைவாளினால் தமது வயிற்றைக் கிழித்துக்கொண்டார். சுந்தரர் வந்து நடந்ததை அறிந்து தாமும் உயிர்விடத் துணிந்து அங்கிருந்த வாளை எடுத்தார். அப்போது கலிக்காமர், அவர் கையைப் பிடித்துத் தடுத்தார். சுந்தரர் இவரை வணங்க, இவரும் அவரை வணங்கினார். பின்னர் இருவரும் நண்பர்களாகித் திருப்புன்கூருக்குச் சென்று கடவுளை வணங்கினார்கள். பிறகு, கலிக்காமர் சுந்தரருடன் திருவாரூருக்குச் சென்று அவருடன் சிலகாலம் தங்கியிருந்து, தமது ஊருக்குத் திரும்பினார்.

"ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் இவரைத் திருத்தொண்டத் தொகையில் பாராட்டியுள்ளார். மேலும், "ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்து" அருள் செய்ததையும் திருப் புன்கூர்ப் பதிகத்தில் (3) கூறியுள்ளார்.

## கோட்புலி நாயனார்

சோழ நாட்டு நாட்டியத்தான் குடி இவருடைய ஊர்; இவர், அரசனிடம் சேனாபதி தொழில் செய்தவர். சிறந்த சிவபக்தர். சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில்

இருந்தபோது, அவரிடம் சென்று அவரைத் தமது ஊருக்கு அழைத்தார். அவ்வாறே சுந்தரர் நாட்டியத்தான் குடிக்குச் சென்றபோது, கோட்புலியார் அவரைச் சிறப்பாக வரவேற்ருர். வரவேற்றுத் தமது குமாரத்திகளாகிய சிங்கடியார், வனப்பகையார் என்பவர்களை அழைத்து அவரை வணங்கச் செய்தார். பிறகு,

**அடியேன் பெற்ற மக்களிவர் அடிமையாகக் கொண்டருளிக்**
**கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்கவேண்டும்**

என்று வேண்டினர். சுந்தரர் அதனை மறுத்து, "இவர்கள் எனது மக்களாகக் கடவர்" என்று கூறி, அவர்களைத் தமது குமாரத்திகளாக ஏற்றுக்கொண்டார்.* சுந்தரர், கோட்புலியாரையும் அவரது குமாரத்திகளையும் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிருர்.

**"கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற**
**கொடிறன் கோட்புலி சென்னி**
**நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி**
**நம்பியை நாளும் மறவாச்**
**சேடார் பூங்குழல் சிங்கடியப்பன்**
**திருவாரூரன் உரைத்த**
**பாடீராகிலும் பாடுமின் தொண்டீர்**
**பாடநும் பாவம் பற்றறுமே."†**

**"நாணியூரன் வனப்பகையப்பன் வன்தொண்டன்."‡**

என்றும்,

**"சிலையார் வாணுதலாள் நல்ல சிங்கடியப்பன்"§**

என்றும்,

---

*ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் - 30—42.
†திருநாட்டியத்தான்குடி 10. ‡நாட்டு தொகை 11.
§கற்குடி 10.

" இளங்கிளை யாரூரன் வனப்கை யவள் அப்பன் "*

என்றும்,

" திருநாவலூரன் வனப்பகையப்பன் வன்தொண்டன் "†

என்றும்,

" நறவம் பூம்பொழில் நாவலூரன்
வனப்பகை யப்பன் சடையன்தன்
சிறுவன் வன்றொண்ட னூரன் பாடிய
பாடல் பத்திவை வல்லவர் "‡

என்றும்,

" செறிந்த சோலைகள் சூழ்ந்த நள்ளாற்றெஞ்
சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை
மறந்துநான் மற்றுநினைப்பதே தென்று
வனப்பகை யப்ப னூரன் வன்தொண்டன் "§

" வஞ்சியும்வளர் நாவலூரன் வனப்பகை
யவளப்பன் தொண்டன்"$

என்றும் அவர் பாடியது காண்க.

கோட்புலி நாயனூர் சிறந்த சிவபக்தர் என்று கூறினோம். இவர், சிவபெருமானுக்குத் திருவமுது செய்விக்க நெல்லை விலைக்கு வாங்கிக்கொடுத்தார். ஒரு சமயம் அரசன் இவரைப் பகைவருடன் போர் செய்ய அனுப்பினான். போர்க்களம் போவதற்கு முன்பு இவர் நெற்குவியலை விலைக்கு வாங்கிவைத்து, " ஒருவரும் இதனை எடுக்கக் கூடாது " என்று சுற்றத்தாருக்குத் தனித் தனியே சொல்லிவிட்டுச் சென்றார்.

சில காலத்துக்குப் பிறகு நாட்டில் கருப்பு ஏற்பட்டு மக்கள் உணவுக்கு வருந்தினர்கள். அப்போது,இவருடைய சுற்

---

*குருகாவூர் 10. †நமக்கடிகளாகிய அடிகள் 10.
‡புகலூர் 11. §நள்ளாறு 10. $பனையூர் 10.

றத்தார் பசிபொறுக்க முடியாமல் இவர் வைத்துப்போன நெற் களஞ்சியத்திலிருந்து நெல்லை எடுத்துஉண்டார்கள். போருக்குச் சென்ற கோட்புலியார், பகைவரை வென்று அரசனிடம் சிறப்புப் பெற்று ஊருக்குத் திரும்பிவந்தார். வந்து, தாம் வைத்த நெல் எடுக்கப்பட்டதைக் கண்டு சினங்கொண்டார். அதனை எடுத்து உண்ட தனது சுற்றத்தார் எல்லோரையும் வாளினால் வெட்டி வீழ்த்தினார்.

**" தந்தையார் தாயார் மற்றும் உடன்பிறந்தார் தாரங்கள்**
**பந்தமார் சுற்றத்தார் பதியடியார்........"**

முதலிய எல்லோரையும் வாளினால் துண்டித்தார். கடைசியாக ஒரு சிறு குழந்தையையும் வெட்டத் துணிந்தார். அப்போது, இவருடைய ஏவலாளனாகிய கோட்புலி என்பவன் தடுத்து, " இக் குழந்தை நெல்லை உண்ணவில்லை " என்று கூறினான்.

" இது நெல்லை உண்ணவில்லை, நெல்லையுண்டவள் பாலையுண்டது " என்று கூறி அதனையும் வெட்டி வீழ்த்தினார். அப்போது சிவபெருமான் தோன்றி, " உன்னால் வெட்டுண்டவர் விண்ணுலகம் எய்தட்டும். நீ நம்மிடம் வா " என்று அருளினார். இவ்வரலாற்றைப் பெரியபுராணம், கோட்புலி நாயனார் புராணத்தில் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், இவரை

**" அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன் "**

என்று சிறப்பித்தார்.

**சோமாசிமாறர்**

சோழ நாட்டில் திருவம்பர் என்னும் ஊரில் இருந்தவர்; பிராமணர். இவருடைய இயற் பெயர் மாறன் என்பது. சோமயாகம் செய்தபடியினாலே சோமயாஜி என்னும் காரணப்பெயர் பெற்றார் என்றும், சோமயாஜி என்பது சோமாசி எனத் திரிந்தது என்றும் கூறுவர். சிவபெரு

மானிடத்தும் சைவ அடியாரிடத்தும் மிகுந்த அன்புள்ளவர். திருவாரூரில் இருந்த சுந்தரமூர்த்தி நாயனாரை அடைந்து, அவரிடத்தில் பக்தி செய்து கொண்டிருந்து கடைசியில் சிவபதம் அடைந்தார்.

**" நம்பரான் சோமாசி மாறனுக்கடியேன் "**

என்று சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையில் இவரைப் பாராட்டியுள்ளார்.

## பெருமிழலைக் குறும்பர்

மிழலை நாட்டில் பெருமிழலை என்னும் ஊரில் இருந்தவர். சிறந்த சிவபக்தியும் சைவ அடியார்களைப் போற்றிச் சிறப்புச் செய்யும் அடியார் தொண்டும் செய்து வந்தார். அன்றியும் யோகம் செய்யும் யோகியாகவும் இருந்தார். இவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிவபக்தியை அறிந்து, அவரிடம் பக்திகொண்டு அவரைச் சிந்தித்து வணங்கி வந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவஞ்சைக்களஞ் சென்றிருந்தபோது, அவர் வெள்ளையானை ஏறித் திருக்கயிலாயஞ் செல்லப்போகிறதைப் பெருமிழலைக் குறும்பர், தமது யோக சக்தியால் முன்னமே யுணர்ந்தார். சுந்தரர் இவ்வுலகத்தை விட்டு நீங்குவதற்கு முன்பே, நானும் இவ்வுலகத்தைவிட்டு நீங்குவேன் என்று உறுதி செய்துகொண்டு, தமது யோக சக்தியால் உடலிலிருந்து உயிரைப் பிரித்துக்கொண்டு திருக்கயிலாயம் சென்றார்.

## கழற்சிங்க நாயனார்

இவர் பல்லவ அரச குலத்தில் வந்த பல்லவ மன்னன். கழற்சிங்கன் என்பது இவருடைய சிறப்புப் பெயர். இவரே தெள்ளாறெறிந்த நந்திவர்மன் ஆவர்.*

*கழற்சிங்க நாயனாரை, இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் என்று சிலர் கருதுகின்றனர். அக்கருத்துத் தவ

கழற்சிங்க நாயனார் ஒரு சமயம் மாதேவியோடு திருவாரூர் திருக்கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கினார். அவருடன் சென்ற அரசியார் அங்கிருந்த பூவொன்றைக் கையிலெடுத்து மோந்தார். அதனைக் கண்டு, அங்கிருந்த செருத்துணை நாயனார் சினங்கொண்டு, சிவபெருமானுடைய பூவை மோந்த மூக்கை அரிவேன் என்று கூறி, தம் கையிலிருந்த கத்தியினால் அவர் மூக்கை அரிந்தார். மாதேவியார் கூச்சலிட்டு அலறினார். உடனே கழற்சிங்கர் வந்து "இப்படிச் செய்தவர் யார்" என்று சினந்து கேட்டார். செருத்துணை நாயனார் தாமே இப்படிச் செய்ததாகவும் அதன் காரணத்தையும் கூறினார். அப்போது, கழற்சிங்கர், "மூக்கை அரிந்ததுமட்டும்போதாது; பூவை எடுத்த கையையும் துண்டிக்கவேண்டும்" என்று கூறி வாளை எடுத்துத் தமது மனைவியாரின் கையைத் துண்டித்தார். இக் கதையைப் பெரியபுராணம் கழற்சிங்க நாயனார் புராணத்தில் காண்க.

சுந்தரமூர்த்தி நாயனார், இந் நாயனாரைத் திருத்தொண்டத்தொகைப் பதிகத்தில்,

**"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்**
**காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"**

என்று சிறப்பித்திருக்கிறார்.

## செருத்துணை நாயனார்

சோழ மண்டலத்து மருகல் நாட்டுத் தஞ்சாவூரிலே இருந்த சிவபக்தர் செருத்துணை நாயனார். இவர் திருவாரூர் திருக்கோயிலில் சென்று வன்மீக நாதரை வழிபட்டு அக் கோயிலில் திருத்தொண்டுகள் செய்து கொண்டிருந்தார்.

---

னது என்று தோன்றுகிறது. தெள்ளாறெறிந்த நந்திவர்மனே கழற்சிங்க நாயனார் என்பதை இந்நூலில் வேறு இடத்தில் ஆராயப்பட்டிருப்பதைக் காண்க.

அப்போது ஒருநாள், கழற்சிங்க நாயனார் தமது மாதேவி யாரோடு அக்கோயிலுக்கு வந்து கடவுளை வணங்கினார். அவருடன் வந்த மாதேவியார், கோயிலில் கிடந்த ஒரு பூவை எடுத்து மோந்தார். அதனைக் கண்ட செருத்துணையார், சிவபெருமானுடைய பூவை மோந்ததற்காகக் கோபங் கொண்டு, அரசியாரின் மூக்கைக் கத்தியினால் அரிந்தார். இவ்வாறு, சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தியுடையவராக இருந்து கடைசியில் சிவகதியடைந்தார்.

## விறன்மிண்ட நாயனார்

இவர் மலைநாட்டிலே செங்குன்றூரில் இருந்தவர். சிவபக்தியும் சிவனடியார் பக்தியும் உடையவர். அவர் திருக்கோயில்களுக்குப் போகும்போது முதலில் சிவனடியார்களை வணங்கிப் பிறகு சிவபெருமானை வணங்கும் இயல்புள்ளவர். இவர் பிற்காலத்தில், திருவாரூரில் சென்று அங்குத் தங்கியிருந்தார்.

திருவாரூரில் இருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஒருநாள் கோயிலுக்குச் சென்றபோது, அங்கிருந்த சிவனடியார்களை வணங்காமல் கோயிலுக்குள் சென்றார். அப்போது அவர்களுடன் இருந்த விறன்மிண்டர், "அடியார்களை வணங்காமல் போகிற வன்தொண்டன் அடியார்களுக்கு வேறுபட்டவன்" என்று கூறினார். அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி நாயனார், அவருடைய அடியார் பக்தியை வியந்தார். உடனே, திருத்தொண்டத்தொகை என்னும் பதிகத்தைப் பாடினார். இவர் பாடிய திருத்தொண்டத்தொகை, பிற்காலத்தில் திருத்தொண்டர் புராணம் பாடுவதற்கு முதல் நூலாக இருந்தது.

சுந்தரர், திருத்தொண்டத் தொகையில், "விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்" என்று விறன்மிண்டரைக் கூறினார்.

விறன்மிண்ட நாயனாரைப் பற்றி வேறு சில கதைகள் வழங்கப்படுகின்றன. அக்கதைகள் பெரியபுராணத்தில் கூறப்படவில்லை.

**வரகுண பாண்டியன்**

வரகுணபாண்டியன், நந்திவர்மன் காலத்தில், பாண்டி நாட்டில் புகழ்பெற்ற அரசனாக இருந்ததோடு, சிறந்த சிவ பக்தனாகவும் இருந்தான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வரசனைத் தமது திருத்தொண்டத்தொகையில் கூறாமற் போயினும், வேறு பதிகத்தில் கூறியுள்ளார். வரகுண பாண்டியனுக்கு **மாறன் சடையன்** என்னும் பெயரும் உண்டு. இப்பெயரைச் சுந்தரர், திருவதிகைத் திருவீரட்டானப் பதிகத்தில் (8) **பொடியாடும் திருமேனி நெடுமாறன்** என்று கூறுகிறார். இந்த நெடுமாறன், "நெல்வேலி வென்ற நெடுமாறன்" அல்லன், "பொடியாடும் திருமேனி நெடுமாறன்" ஆவன். வரகுணபாண்டியனாகிய மாறன் (நெடுமாறன்), மிகுந்த சிவபக்தனாய் போருக்குச் செல்லும்போதும் உடம்பு முழுவதும் திருநீறு பூசிப் (பொடியாடிப்) போருக்குச் செல்வான் என்று கூறப்படுவதால், சுந்தரர் கூறிய "பொடியாடுந் திருமேனி நெடுமாறன்" வரகுணபாண்டியனே என்று உறுதியாக நம்பலாம். இவன் பெயர் திருத்தொண்டத் தொகையில் கூறப்படாதபடியால் இவனைச் சிவனடியார்களில் ஒருவனாகப் பெரியபுராணம் கூறவில்லை. ஆனால், இவனுடைய உயர்ந்த சிவபக்தியைத் திருவிளையாடற் புராணங்களும், பட்டினத்துப்பிள்ளையாரும் கூறுகிறார்கள். சிவபக்தனாகிய வரகுணபாண்டியன், நேரில் சிவலோகம் சென்று தரிசிக்கவேண்டுமென்று ஆசைப்பட, அதையறிந்த சிவபெருமான் நந்திதேவரைக் கொண்டு அரசனுக்குச் சிவலோகத்தைக் காட்டியதாகப் புராணக்கதை கூறுகிறது.*

---

*வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய திருவிளையாடல். பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற்புராணம். வர

வரகுணபாண்டியனுடைய சிவபக்தியைப்பற்றி வேறு சில கதைகளும் கூறப்படுகின்றன. கள்ளன் ஒருவனைப் பிடித்துக்கொண்டுவந்து இவர் முன்பு விட்டார்கள்; அக் கள்ளன் உடம்பு முழுவதும் திருநீறு பூசியிருந்தான். அதனைக் கண்ட வரகுணபாண்டியன், அவனைச் சிவனடியார் என்று எண்ணித் தண்டிக்காமல் விட்டுவிட்டார். நரிகள் ஊளையிட்டதைக் கேட்டு, அவை சிவபெருமானை வாழ்த்திய தாக நினைத்து, அவைகளுக்கு உடுத்தும்படி துணிகளை வழங்கினார். கார்காலத்தில் குளத்தில் தவளைகள் அரற்றிய "அரகர" என்னும் ஓசையைக் கேட்டு அத் தவளைகள் சிவபெருமான் பெயரைப் பாடியதாகக் கருதிக் காசையும் பொன்னையும் அக்குளத்திலே தூவினாராம். சிவபெருமான் திருமஞ்சனத்துக்காக எண்ணெய் ஆட்ட எள்ளைக்கொண்டு வந்து காயவைத்திருந்தார்கள். ஒருவன் அந்த எள்ளை எடுத்துத் தின்றான். இந்தப்பாவஞ் செய்தவனைக் கையும் பிடியுமாகப் பிடித்துக்கொண்டுபோய் வரகுணனிடம் விட்டார்கள். இந்தச் சிவபாவத்தை ஏன் செய்தாய் என்று கேட்க, அவன், சிவனுடைய எள்ளைத் தின்றால் சிவகதி கிடைக்கும் என்று கூறினன். அப்படியானல், உன் வாயில் இருக்கும் எள்ளை எனக்கும் கொடு என்று கேட்டாராம்.

சோழநாட்டுத் திருவிடைமருதூரில், இவ்வரசன் இருந்தபோது இறந்தவனுடைய மண்டையோடு தரையில் கிடந்ததைக்கண்டு, அதனைக் கையில் எடுத்து, "இந்தப் புண்ணிய நகரத்தில் உன் தலையோடு இருக்க என்ன புண்ணியம் செய்தனையோ! என் தலையோடும் இவ்வாறு சிவ க்ஷேத்திரத்தில் கிடக்கும்படி அருள்கிடைக்கவேண்டும்" என்று வேண்டினாராம். திருவிடைமருதூர்க் கோயிலில், ஒரு நாய் மலம் கழிக்க அதனைத் தமது கையினால் எடுத்து அப்புறப்படுத்திக்

---

குணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்.

கோயிலைத் தூய்மை செய்தாராம். வேப்பமரத்தில் வேப்பங் காய்கள், சிவலிங்கம் போன்ற உருவத்தோடு இருப்பதைக் கண்டு, அவற்றைச் சிவலிங்கமாகவே எண்ணி, அம்மரங் களுக்குப் பந்தல் அமைத்தாராம். அன்றியும், தமது தேவி யைச் சிவபெருமானுடைய திருக்கோயிலில் ஊழியம் செய்ய அனுப்பினாராம்.

இச்செய்திகளைப் பழைய திருவிளையாடல் புராணம் கூறுகிறது.

"மிஞ்சிடை மருதர் கோயில் பதக்கணம் வரும் வீதிக்கண்
அஞ்சிநாய்க் கட்டங்கண் டெடுத்தவர்க்கு அவனி பாதி
நெஞ்சினுல்கொடுப்பலென்றே நினைத்தனன் எடுப்பக்காணுன்
பஞ்சவன் பகுதி யில்லென்றெடுத்தனன் பரிவட்டத்தால் "

" தேம்படு பழனஞ் சூழ்ந்த திருவிடை மருதினெல்லைப்
பாம்பொடு மதியஞ் சூடும் பரமனுர் உருவம் என்னக்
காம்பவிழ்ந் துதிர்ந்த செய்ய கனியுருக் கண்டாங் கெல்லாம்
வேம்புகட் குயர்விமானஞ் சாத்தினுன் வேந்தர் வேந்தன்."

"பரிந்திடை மருதர் நன்னீ ராடமுன் பரப்பும் எள்ளைக்
கரந்தொரு கள்ளன் தின்னக் கண்டவர் கொடுசெலுங்கால்
அருந்திய தென்னை என்ன அரன்றமர்க் கடிமை யாக
வரும்பிறவியின்கண் என்றுன் மன்னவனயின்றுன் வாங்கி."

"சோதிசேர் மருதர் தேர்போம்வீதியில் தொழுவான் செல்லும்
போதில் முன்கிடந்த பொல்லாப் புன்தலை ஒடுகண்டு
நாத! இத்தலைபோல் என்தன் நாய்த்தலை ஒடும் இந்த
வீதியிற்கிடக்க என்றே மிலைந்தனன் இலங்குதென்னன்."

" கள்ளனைக் கட்டிச் செல்லுங் காலையில் கள்ளன் ஈமத்
தெள்ளிய நீற்றின் வீழ்ந்து சிரித்தரகர என்றெய்த [மிக்க
உள்ளம் வாழ்ந்தெதிர்கொள் வேந்தன்விடும்விடும் உயர்பால்
வெள்ளரைக் கள்ளர் என்றே விளம்புவதெனப் பணிந்தான்."

"தேடருஞ் சிறப்பின் மிக்க திருவிடை மருதினெல்லைக்
காடிடை நரிகள் விட்ட கடுங்குரல் ஓசை கேட்டுப்

பீடுடை இறைவன் தன்னைப் பேசரும் விருப்பத்தோடும்
பாடிய வென்று தென்னன் பல்பெரும் படாம் கொடுத்தான்."

"நேசமார் தேவி தன்னை நின்னுடை யடிமைக்கா மென்று
ஆசைகூர்ந் தளித்தவ் வேந்தன், வாவியில் தவளை பல்கால்
தேசுற ஒலிப்பக் கேட்டுச் சிவனையே பாடிற்றென்று
காசொடு பொன்னும் மின்னக் கலந்து தூவினன் கசிந்து.*

வரகுண பாண்டியனுடைய இந்தச் சிவபக்தியைப் பட்டினத்துப்பிள்ளையார் மிக அழகாகக் கூறுகிறார் :

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையில் கட்டவிழ்ப் பித்தும்,
ஓடும் பன்னரி ஊளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல அளித்தும்,
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்,
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளை நின்னக் கண்டு
பிடித்தலும் அவன் இப்பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்,
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென்று அடுத்தடுத் திரந்தும்,
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன என்று நாய்க்கட்டம் எடுத்தும்,
காம்புகுத்து உதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்,
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று

---

* திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் : வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின திருவிளையாடல்-23—29.

புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும் ''*

இவ்வாறு, வரகுணபாண்டியன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான் என்று புராணங்கள் கூறுகின்றன.

**பாணபத்திரர்**

வரகுணபாண்டியன் அவையில் பேர்போன இசைப் புலவராக இருந்தவர் பாணபத்திரர் என்பவர். இவருடைய வரலாற்றை இந்நூல் இசைக்கலை என்னும் பகுதியில் காண்க. பாணபத்திரரும் சிறந்த சிவபக்தர். இவர்பொருட்டுச் சிவபெருமான் சாதாரி பாடின திருவிளையாடல், திருமுகங்கொடுத்த திருவிளையாடல், பலகையிட்ட திருவிளையாடல்களைச் செய்தருளினார் என்று திருவிளையாடற் புராணங்களினால் அறிகிறோம்.

**மாணிக்கவாசகர்**

பாண்டி நாட்டிலே திருவாதவூரில் மாணிக்கவாசகர் பிறந்தார். அவருக்குப் பிள்ளைப் பருவத்தில் இடப்பட்ட பெயர் வாதவூரர் என்பது. இவர் இளமைப் பருவத்திலேயே பல நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். தமிழ் மொழிக் கல்வியை நன்கு கற்றவர் என்பது இவர் பிற்காலத்தில் இயற்றிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் நூல்களிலிருந்து தெரிகிறது. இவர் தக்க வயதடைந்தபோது பாண்டிய அரசன் இவரைத் தன்னுடைய அமைச்சராக நியமித்தான்; இவருக்குத் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டப் பெயரும் அளித்தான்.

பாண்டியனுக்குக் குதிரைப்படை தேவையாக இருந்தது. குதிரைகள் வாங்கும் பொருட்டுப் பெருந்தொகையான பொருளைத் தென்னவன் பிரமராயரிடம் கொடுத்துத் துறைமுகத்திற்கு அனுப்பினான் பாண்டியன். அப்பொரு

* திருவிடைமருதூர் மும்மணிக் கோவை-28.

ளைக்கொண்டு குதிரைகள் வாங்கச் சென்ற அமைச்சர், பெருந்துறை என்னும் துறைமுகத்திற்குச் சென்ருர். சென்றவர் அங்குக் குருந்த மரத்தடியிலே மாணுக்கர் சூழ வீற்றிருந்த ஒரு ஞானசிரியரைக் கண்டார். கண்டு அவரிடம் ஞானேபதேசம் பெற்ருர். தாம் வந்த காரியத்தை மறந்து பக்தியில் ஈடுபட்டுத் தம்மிடமிருந்த பெரும் பொருளையெல்லாம் சைவத் திருப்பணிக்குச் செலவு செய்தார்.

குதிரைகள் வந்து சேராதபடியினுலே பாண்டியன் திருமுகம் எழுதி அனுப்பினன். அதனைக் கண்ட அமைச்சர் மதுரைக்குச் சென்று, குதிரைகள் வந்து சேரும் தேதியை அரசனுக்குச் சொன்னர். குறித்த நாளில் குதிரைகள் வந்து சேரவில்லை. அரசன், சேவகரை ஏவிப் பொருளை அமைச்சரிடமிருந்து பெற்று வரும்படி கட்டளையிட்டான். சேவகர் சென்று பொருள் தரும்படி வருத்தினர்கள். அமைச்சர் கடவுளை வேண்டினர். அன்று மாலை குதிரைத் திரள் பாண்டி நாட்டிற்கு வந்து சேர்ந்தது. பாண்டியன் மகிழ்ந்து அமைச்சரைத் துன்புறுத்தாமல் விட்டான். ஆனல், வந்த குதிரைகள் அன்று இரவிலேயே நரியைப் போல் ஊளையிட்டுக்கொண்டு ஓடி மறைந்தன. அதனை அறிந்த அரசன், அமைச்சர் மாயம் செய்து ஏமாற்றினர் என்று அவரை, கடும் வெயிலில் நிறுத்தியும் புளியம் வளாரால் அடித்தும் வருத்தினன். அப்போது, வைகை ஆற்றில் வெள்ளம் பெருகிவந்து ஊரை அழிக்கும் நிலையில் இருந்தது. அச்சமயத்தில் அரசன் வாதவூரரை விடுதலை செய்து விட்டான்.

வாதவூரர் திருப்பெருந்துறை முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திருவாசகப் பாக்களை அருளிச்செய்தும் திருக்கோவையாரை இயற்றியும் பக்தி செலுத்தினர். சிதம்பரத்தில் ஈழநாட்டரசன் மகளான ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தார் என்றும் பௌத்தரை வாதில் வென்ருர் என்றும் இவர் வரலாறு கூறுகிறது. இவர் திருவாக்குகள் மாணிக்கம்

போன்றிருந்தபடியால் மாணிக்கவாசகர் என்னும் பெயர் இவருக்கு வழங்கப்பட்டது. பட்டினத்துப் பிள்ளையார், மாணிக்கவாசகரை பெருந்துறைப்பிள்ளை என்று கூறுகிறார். இவர், தமதுமுப்பத்திரண்டாவது வயதில்சிவகதியடைந்தார்.

இவர், அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் இருந்தவர் என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணம் கூறுகிறது.* பரஞ்சோதி முனிவர் ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்குமுன் பிருந்தவர். பழைய திருவிளையாடற் புராணம் (பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றியது), வாதவூரடிகள் காலத்தில் இருந்த பாண்டியன் பெயரைக் கூற வில்லை. புதிய திருவிளையாடல் புராணம், வாதவூரடிகள் அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் இருந்தவர் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணம், சரித்திர ஆராய்ச்சி, கால ஆராய்ச்சிகளுக்கு ஏற்ற நூல் அன்று. பெரும்பற்ற நம்பி இயற்றிய திருவிளையாடல் புராணம், சரித்திர ஆராய்ச்சிக்குச் சிறிது உதவுகிறது. ஆகவே, சரித்திர ஆராய்ச்சிக்கு உதவாததும் தவறுகளையுடையதுமான புதிய (பரஞ்சோதியார்) திருவிளையாடல், மாணிக்கவாசகரை அரிமர்த்தன பாண்டியன் காலத்தவர் என்று கூறுவது தவறுனது.

மாணிக்கவாசகர் தமது திருக்கோவையாரில் வரகுண பாண்டியனைக் கூறுவதால், அவர் அவ்வரசன் காலத்தவர் என்பதே பொருத்தமாகும். இந்நூலில், மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி என்னும் இணைப்பு காண்க.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலே பதினறு சைவ அடியார்கள் இருந்ததைக் கண்டோம். ஆகவே, அக்காலத்தில் சைவ சமயம் உயர்ந்தோங்கி இருந்ததென்பதும், பக்தி இயக்கம் நாட்டில் நன்கு வேரூன்றி யிருந்ததென்பதும் தெரிகின்றன.

---

*வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்.

# 4. கட்டடக் கலை

## கோவில் வகைகள்

தெள்ளா றெறிந்த நந்திவர்மன் காலத்துக் கோயில் கட்டடங்களைப் பற்றிக் கூறுவோம்.

கோயில் கட்டட வகைகளில், கரக்கோயில், கொகுடிக் கோயில், ஆலக்கோயில், பெருங்கோயில் என்பவைகளை இவ் வரசன் காலத்தவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிறார்.

**" கல்லால் நிழற்கீழ் ஒருநாள் கண்டதும்**
**கடம்பூர்கரக் கோயில் முன்கண்டதும் "***

என்று, கடம்பூர்கரக் கோயிலைக் கூறுகிறார்.

திருக்கருப்பறியலூர் சிவன் கோயில் கொகுடிக் கோயில் அமைப்பாக இருந்ததென்று கூறுகிறார். கொகுடிக் கோயில் என்னும் பெயரை அப்பதிகத்தின் பதினொரு செய்யுளிலும் கூறுகிறார்.

திருக்கச்சூரில் உள்ள கோயில் ஆலக்கோயில் என்று கூறுகிறார். ஆலக்கோயில் என்பது ஆனைக் கோயில். அதனை கஜபிருஷ்ட விமானக் கோயில் என்றும் கூறுவர்.†

நன்னிலத்துக் கோயிலும், திருக்கலைய நல்லூர் கோயிலும் பெருங் கோயில் என்று கூறுகிறார்.

---

* திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும். 6.

†சிற்ப நூலில் கூறப்படுகிற யானைக் கோயில் கட்டிட வரலாற்றை, இந்நூலாசிரியர் எழுதி வருகிற "யானைக் கோயில்கள்," என்னும் நூலில் காண்க.

" தண்கமலப் பொய்கை புடைசூழ்ந் தழகார் தலத்தில்
தடங்கொள் பெருங்கோயில்தனில் தக்கவகையாலே"

என்றும்,

" மண்டபமும் கோபுரமும் மாளிகையும் சூளிகையும் "*

என்றும் கூறுகிறார் நன்னிலத்துப் பெருங்கோயிலை.

இக்கோயில்கள் பழைய காலம் முதல் உள்ளன. இக் கட்டிடப் பெயர்களையும் வேறு சில கட்டிடப் பெயர்களை யும் இவருக்கு முன்பிருந்த திருநாவுக்கரசு சுவாமிகளும் தமது தேவாரத்தில் கூறியிருக்கிறார்.

பெருக்கா றுசடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந் திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே.

என்று அவர் பாடியிருப்பது காண்க. இவை கோயில் கட்டிட வகைகள் ஆகும். இவற்றின் விரிவை இந்நூலாசிரி யர் எழுதியுள்ள, " தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் " என்னும் நூலில் காண்க.

சாலாகார விமானம்

சிதம்பரத்துச் சிற்றம்பலத்தை அப்பரும் சம்பந்தரும் பாடியது போலவே, மூன்றாம் நந்திவர்மன், முதலாம் வரகுண பாண்டியன் காலத்தவரான மாணிக்கவாசகரும் சுந்தரரும் பாடியிருக்கிறார்கள். இங்கு இக்கோயில் கட்டிட அமைப்பைப்பற்றிக் கூறவேண்டும். அது வென்னவென்

* திருக்கலயநல்லூர் 10, 3.

ருல் : 1. சிதம்பரம் கோயில், ஆதிகாலத்தில் மரத்தினுல் அமைக்கப்பட்டிருந்தது. 2. அக்கோயில், பௌத்த விகாரையின் அமைப்பைப் போன்றது என்பதே. இதனை விளக்குவோம்.

இக்கோயில் ஆதிகாலத்தில் மரத்தினுல் கட்டப்பட்டிருந்ததை இப்போதுள்ள அமைப்பினுலும் அறியலாம். இப்போதுள்ள சிற்சபையும் கனக சபையும் மரக்கட்டிடங்களே. இவற்றின் கூரை (விமானம்) பொற்றகடு வேயப்பட்டிருக்கிறது. ஊர்த்துவதாண்டவ மூர்த்தி எழுந்தருளியுள்ள நிருத்த சபை, முற்காலத்தில் மரக்கட்டிடமாக இருந்தது. அது, பிற்காலத்தில் கருங்கல் கட்டிடமாகக் (கற்றளியாகக்) கட்டப்பட்டிருக்கிறது. ஆயினும், இக் கருங்கல் கட்டிடம், பழைய மரக்கட்டிட அமைப்பைப் போலவே அமைக்கப்பட்டிருப்பது காணத்தக்கது. மண்டபத்தின் தூண்களும் கூரையும் மரக்கட்டிட அமைப்பைப் போன்றே அமைக்கப்பட்டிருப்பதை இப்போதும் காணலாம்.

இக்கட்டிடங்கள், பௌத்த விகாரையின் அமைப்பைப் போன்று, "சாலாகார" விமான முள்ளனவாக இருக்கின்றன. இந்த அமைப்பு பௌத்தச் சார்பானது. ஏறக்குறைய இதே அமைப்பைக் கொண்டதுதான் மாமல்ல புரத்தில் (மகாபுலிபுரத்தில்) உள்ள "பீமரதம்" என்னும் சாலகார விமானக் கட்டிடம். "பீமரதம்" பௌத்தச் சார்பான கட்டிடம் என்பதை எல்லோரும் அறிவர்.

சிதம்பரக்கோயில் பௌத்தச் சார்புடையது என்பதை, முதலாம் வரகுண பாண்டியன் காலத்தவரான (மூன்றும் நந்திவர்மன் காலத்தவரான) மாணிக்கவாசகர், வரலாற்றினுலும் குறிப்பாக அறியலாம். மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் பௌத்த பிக்குகளுடன் சமயவாதம் செய்து வென்றுர் என்றும், தோல்வியுற்ற பௌத்த பிக்குகள் சிதம்பரத்தை விட்டு இலங்கைக்குப் போய்விட்டார்கள் என்றும்

இவர் வரலாறு கூறுகிறது. இவ்வரலாற்றிலிருந்து, சிதம்பரத்தில் அக்காலத்தில் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதும், அவர்களின் விகாரைகளும் அங்கு இருந்தன என்பதும் தெரிகின்றன. ஆகவே, பௌத்தருடைய கட்டிடக்கலை அமைப்பு இக்கோயிலினும் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை.

சிதம்பரத்திலே அக்காலத்தில் பௌத்தர்களோடு ஜைனர்களும் இருந்தார்கள். இப்போதும் சிதம்பரத்தில் ஒரு ஜைனத்தெரு இருப்பதே இதற்குச் சான்றாகும். ஆனால், சிதம்பரத்தில் அக்காலத்தில் ஜைனர்களைவிட பௌத்தர்களே அதிகமாக ஆதிக்கம் பெற்றிருந்தார்கள் என்பது மாணிக்கவாசகர் வரலாற்றிலிருந்து விளங்குகிறது.

## காட்டுப்பள்ளி

நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட புதிய கோயில்களைப் பார்ப்போம். செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி தாலுகாவில், காட்டுப்பள்ளி என்னும் ஊரில் கட்டப்பட்டது இந்தச் சிவன் கோயில். இக்கோயில், "புழற் கோட்டத்து நாயறு நாட்டுத் திருக்காட்டுப்பள்ளி" என்று சாசனத்தில் கூறப்படுகிறது. இக் கோயிலைக் கட்டியவன் யஜ்ஞபட்டன் என்றும், இக் கோயிலுக்கு நிலபுலங்களை நந்திவர்மன் தானம் செய்தான் என்றும் வேலூர்ப் பாளைய செப்பேட்டுச் சாசனங் கூறுகிறது. இக் கோயில் இப்போது, இடிந்து பழுதடைந்து கிடக்கிறது.

## கிளியனூர்

இவன் காலத்தில் அமைக்கப்பட்ட மற்றொரு கோயில், திசைத்திறல் விஷ்ணுக் கிருகம் என்பது. இதற்கு இப்போது வைகுண்டவாசப் பெருமாள் கோயில் என்று பெயர் கூறப்படுகிறது. இது, தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம்



நின்றருளிய பெருமாள்

(பக்கம் 85)

தாலுகா கிளியனூரில் இருக்கிறது. "ஒய்மா நாட்டுக் கிளிஞலூர் திகைத்திறல் விஷ்ணுக் கிருகம்" என்று சாசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. திகைத்திறலார் என்பவர் இக் கோயிலை அமைத்து நிலபுலங்களைத் தானம் செய்தார் என்று சாசனம் கூறுகிறது.

**படுவூர்**

இவ்வூர், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு தாலுகாவைச் சேர்ந்தது. ஆமூர் கோட்டத்துப் படுவூர்நாட்டுப் படுவூர் என்பது இவ்வூரின் பழைய முகவரி. இவ்வூர் குளத்துமேட்டின்மேல் ஐந்தடி உயரம் உள்ள பெருமாள் உருவம் நின்றுகொண்டிருக்கிறது. கோயில் முழுவதும் அழிந்துவிட்டது. இவ்வூர் மேட்டுத் தெருவில் உள்ள ஒரு கல் எழுத்துச் சாசனம், இந்தப் பெருமாளின் பெயரைக் கூறுகிறது. "விழுப்பெருந்தாய விஷ்ணுக்கிருகத்து நின்றருளிய பெருமாள்" என்று அந்தச் சாசனம் கூறுகிறது. எனவே, விழுப்பெருந்தாயன், என்பவன் நின்றருளிய பெருமாள் கோயிலைக் கட்டினுன் என்பது தெரிகிறது. மேலும், இந்தக் கோயில் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் கட்டப்பட்டதென்று ஷை சாசனத்தினுல் தெரிகிறது. இந்தப் பெருமாள் கோயிலைக் கட்டிய விழுப்பெருந்தாயன் என்பவர், மூன்ரும் நந்திவர்மனின் உத்தியோகஸ்தர்களில் ஒருவர் போலும். இந்தக் கோயில் முழுவதும் மறைந்து விட்டபோதிலும், பெருமாளின் திருவுருவம் இன்றும் காட்சி யளித்துக்கொண்டிருக்கிறது. இவ்வுருவத்தை இந் நூலின் தொடக்கத்தில் காண்க.

இப்பெருமாளுக்குப் பக்கத்தில் முழுவதும் அழிந்து போன மணிகண்டேசுவரர் கோயிலும் மூன்ரும் நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட கோயிலாக இருக்கலாம்.

# 5. இசைக் கலை

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலே இசைக்கலை தமிழ்நாட்டிலே நன்கு பரவியிருந்தது. நாட்டிலே இசைக் கலைக்கு மதிப்பு ஏற்பட்டிருந்தபடியினால், இசைப்புலவர்கள் பலர் தோன்றியிருந்தனர். கோயில்களிலே இசைப்பாடல் கள் பாடப்பட்டன. அக்காலத்திலிருந்த இசைப் புலவர் களின் பட்டியல் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும், மூன்று சிறந்த இசைக்கலைஞர்கள் இருந்தார்கள் என்பது இலக்கியங்களினால் தெரிகிறது. அவ்விசைப் புலவர்கள் யார் என்றால், சுந்தரமூர்த்தி நாயனார், பாணபத்திரர், ஏமநாதர் என்பவர்கள்.

**சுந்தரர்**

சுந்தரமூர்த்தி நாயனார் சிறந்த சிவபக்தராக இருந்த தோடு, உயர்ந்த இயற்றமிழ்ப் புலவராகவும் இசைத்தமிழ் வாணராகவும் விளங்கினார். அவர் பாடிய தேவாரப் பாடல் கள் இசைப்பாடல்களே. இந்தளம், தக்கராகம், நட்ட ராகம், கொல்லி, கொல்லிக்கௌவாணம், பழம்பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கவுசிகம், செந்துருத்தி, பஞ்சமம் முதலிய பண்களில் இவ ருடைய தேவாரப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடவுளே இசையுருவாக இருக்கிறார் என்பதும், அவர் இசையைக் கேட்பதில் விருப்பமுள்ளவர் என்பதும் பெரியோர்கொள்கை. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கூறுகிறார்:

**“ஏழிசையாய் இசைப் பயனாய்”***

என்றும்,

---

*திருவாரூர் 10.

"பண்ணுளீராய்ப் பாட்டுமானீர்
பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்"*

என்றும்,

"பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே"†

என்றும்,

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற்சுவை யொப்பாய்"‡

என்றும் அவர் கூறியிருப்பது காண்க. மேலும்,

"தக்கை தண்ணுமை தாளம் வீணை
தருணிச் சங்கிளைச் சல்லரி
கொக்கரை குடமுழவி னோடிசை
கூடப்பாடி நின்றாடுவீர்"

என்றும்,

"இருந்து நீந்தமிழோடிசை கேட்கும்
இச்சையால் காசு நித்தம் நல்கினீர்
அருந்தண்வீழி கொண்டீர்
அடியேற்கும் அருளிதிரே"§

என்றும்,

"ஏழிசை ஏழ்நரம்பி னோசையை ஆரூர்புக்
கேழுலகாளியை நானென்று கொலெய்துவதே"$

என்றும்,

"விட்டிசைப்பன கொக்கரை கொடுகொட்டித் தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு குடமுழா நீர்மகிழ்வீர்"¶

என்றும் அவர் கூறுவது காண்க.

---

*திருவெண்காடு 4. †திருமழபாடி 5. ‡திருக்குறுகாவூர் 6.
§திருவீழிமிழலை 8. $திருவாரூர் 6. ¶திருமுருகன் பூண்டி 6.

மேலும், அவர் காலத்திலேயே கோயில்களில் இசைப் பாடல் பாடி நடனம் ஆடும் வழக்கமும் இருந்ததை, அவருடைய தேவாரப்பாடல்களில் காணலாம். வெஞ்ச மாகக் கூடல் கோயிலைக் கூறும்போது,

**" பாடல் முழவுங் குழலும் இயம்பப்
பணைத்தோளியர் பாடலோ டாடலரு "**

வெஞ்சமாக் கூடல் என்கிறார்.

**" பண்ணார் இசைகள் அதுகொண்டு
பலரும் ஏத்தும் பழையனூர் "**

என்கிறார்.

**" பண்ணின் தமிழிசை பாடலின் பழவேய் முழவதிரக்
கிண்ணென்று இசைமுரலுந் திருக்கேதாரம் "**

என்றுகூறுகிறார்.

**" பண்ணார்மொழிப் பாவையார் ஆடுந்துறையூர் "**

என்றும் கூறுகிறார்.

இவர்காலத்தில் கோயில்களில் ஆடல் பாடல் நிகழ்த்து வதற்கும் திருத்தொண்டுகள் செய்வதற்கும் உருத்திர கணிகையர் இருந்தார்கள் என்பதைத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றிலிருந்தும் தெரிகிறது. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களுக்குச் சென்று இயற்றமிழோடு இசைத் தமிழையும் கலந்து மனமுருகப் பாடிப் பக்தி செலுத்தினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### பாணபத்திரர், ஏமநாதர்

அக்காலத்தில் இருந்த இன்னொரு இசைப் புலவர் பத்திரர் என்பவர். இசைக்கலையில் வல்லவர்களான பாணர் இனத்தைச் சேர்ந்தவராகையினாலேயே இவரைப் பாணபத்திரர் என்றும் கூறுவர். பாண்டிநாட்டிலே இருந்த இவர், வரகுண பாண்டியன் அவைக்களத்தில் இசைப் புலவராக

இருந்தார். இந்த இசைக்கலைஞர் சொக்கப் பெருமானிடம் பக்தியுடையவர். அக்காலத்திலே, பாண்டிநாட்டிற்கு வடக்கேயுள்ள சோழநாட்டிலே இருந்த பேர் போன இசைப் புலவர் ஏமநாதர் என்பவர். இவருக்கு இசைவல்லான் என்னும் சிறப்புப்பெயரும் உண்டு.* இவரும் பாணர் இனத்தைச் சேர்ந்தவரே.

இசைவல்லான் ஏமநாதன், பாண்டிநாட்டிற்கு வந்து வரகுணபாண்டியனைக் கண்டு இசைபாடி பரிசுபெற்றார். அன்றியும், இசைக்கலையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்றும் பெருமிதத்துடன் பாண்டியனிடம் கூறினார். பாண்டியன், தன்னுடைய இசைப்புலவரான பாணபத்திரரை அழைத்து, ஏமநாதரை இசையில் வெல்லக் கூடுமா என்று கேட்டான். பாணபத்திரர், ஏமநாதரை இசையில் வெல்வேன் என்று கூற, பாண்டியன் இசையரங்கிற்கு நாள் குறித்தான்.

**" சுந்தர அணிஅணிந்து தொகுமுடிச் சுற்றும் சுற்றிச்**
**சுந்தரப் பொட்டும் இட்டுச் சிறந்த குப்பாயம் இட்டுச்**
**சந்தனம் இட்டு வீணை தண்டுயாழ் கையில் வாங்கி**
**வந்த தந்திரி திருத்திப் பாடினார் மயங்க எங்கும்."**

ஏமநாதருடைய சீடர்கள் மதுரை வீதிகளில் சென்று இனிய இசை பாடி, தமது புலமையைக் காட்டினார்கள். அவர்கள் பாடிய இசையைக் கேட்டுப் பாணபத்திரர் பெரிதும் வியந்தார். வியந்து மனத்தில் அச்சங்கொண்டார். " சீடர்களின் இசைப்பாடல் இவ்வளவு சிறந்ததாக இருக்கிறதே. ஏமநாதரின் இசைக் கலை எவ்வளவு சிறந்ததாக இருக்கும். அவரை இசையில் வெல்வது எவ்வாறு "

*பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் இவரை ஏமநாதன் என்று கூறுகிறது. பெரும்பற்றப் புலியூர்நம்பி இயற்றிய பழைய திருவிளையாடற்புராணம் இவரை இசை வல்லான் என்று கூறுகிறது.

என்றுன்னி ஏங்கினர். தாம் நாள்தோறும் இசைபாடி வழிபடும் சொக்கப்பெருமானிடம் சென்று தமக்கு இசைப் போட்டியில் வெற்றி அருளவேண்டும் என்று வேண்டினர்

இசைப் போட்டி நிகழ்வதற்கு முந்திய நாள், ஏமநாதர் தங்கியிருந்த வீதிவழியே விறகு வெட்டி யொருவன் வந்தான். அப்போது மாலை நேரம். வந்த விறகு வெட்டி, விறகுச் சுமையை ஏமநாதர் தங்கியிருந்த வீட்டுத் திண்ணையின்மேல் வைத்துவிட்டுச் சற்று இளைப்பாறினன். சற்று இளைப்பாறிய பின்னர், மெல்ல ஓர் இசை பாடினன்.

**" ஆதாரமாகி நின்றான் அரையி ருட்போதில் மெல்லச்**
**சாதாரி என்னும் கானம் பாடினன் தரணியுய்ய "**

அவன் பாடியது சாதாரிப் பண். அதாவது முல்லைப் பண். இக்காலத்தில் தேவகாந்தாரம் என்று கூறப்படுகிற இராகம். விறகு வெட்டி பாடிய முல்லைப்பண் மிகச் சிறப்பாக இருந்தது. அதைக் கேட்டுக்கொண்டு வீட்டிற்குள்ளிருந்த இசை வல்லானாகிய ஏமநாதரே வியப்படைந்தார். அவர் வெளியே வந்து விறகு வெட்டியைக் கண்டபோது மேலும் வியப்படைந்தார். இவனா இவ்வளவு நன்றாகச் சாதாரி பாடினன்! அவனை நோக்கி " நீ யார்? எங்கு வந்தாய்?" என்று வினவினர்.

" ஐயா! நான் ஏழை. பாணபத்திரரிடம் சிறிது காலம் இசை பயின்றேன். எனக்கு இசை வராது என்று என்னைத் தள்ளி விட்டார். நான் விறகு விற்று வயிறு பிழைக்கிறேன் " என்று கூறினன் விறகு வெட்டி.

" நீ இப்பொழுது பாடினாயே, அந்த இசையை இன்னொரு முறை பாடு " என்றார் ஏமநாதர்.

விறகு வெட்டி பாடினன். உளம் இனிக்கச் செவி இனிக்க இசைத்திறம் அமையப் பாடிய சாதாரிப் பண்ணைக் கேட்ட ஏமநாதர் செயலற்று நின்றார். பிறகு உணர்வு பெற்று வீட்டுக்குள் நுழைந்தார்.

வீட்டுக்குள் சென்ற ஏமநாதர் தமக்குள் எண்ணினார். பாணபத்திரரால் புறக்கணிக்கப்பட்ட சீடன்—விறகு விற்றுப் பிழைப்பவன்—இவ்வாறு உயர்ந்த இசைப்புலமை பெற்றிருந்தால், பாணபத்திரர் இசைப்புலமை எப்படி இருக்கும்! அவரை இசை வாதில் வெல்வது எப்படி முடியும்? என்று எண்ணினார். அன்றிரவு ஏமநாதர், தமது சீடர்களுடனும் பரிவாரங்களுடனும் ஒருவருக்கும் சொல்லாமல் ஊரை விட்டுப் போய்விட்டார்.

அடுத்த நாள் பாண்டியன் அவையில் மக்கள் கூட்டமாகத் திரண்டிருந்தனர், பாணபத்திரருக்கும் ஏமநாதருக்கும் நடைபெறப்போகும் இசை வென்றியைக் காண்பதற்காக. குறித்த நேரத்தில் பாணபத்திரர் வந்து சேர்ந்தார். ஏமநாதர் வரவில்லை. நேரஞ் சென்றது. இன்னும் வரவில்லை. ஆட்கள் அழைத்துவரச் சென்றார்கள். ஏமநாதர் வீட்டில் ஒருவரும் இலர். நகரமெங்கும் தேடினார்கள். ஏமநாதர் காணப்படவில்லை. "நேற்று மாலை ஒரு விறகு வெட்டி வந்து ஏமநாதர் வீட்டுத் திண்ணைமேல் இளைப்பாறினான். அவன் அற்புதமாக ஒரு சாதாரி இராகம் பாடினான். ஏமநாதர் இன்னொருமுறை அந்த இசையைப் பாடும்படி கேட்டார். அவன் மறு முறையும் மிக நன்றாகப் பாடினான். அவன் பாணபத்திரருடைய சீடன் என்று சொல்லிக்கொண்டான்" என்று அத்தெருவிலிருந்தவர் கூறினார்கள்.

பாண்டியன் பாணபத்திரரை நோக்கினான். பாணபத்திரர் வணங்கி, "அரசே! விறகு விற்கும் சீடர் எனக்கு ஒருவரும் இலர். சொக்கப்பெருமானிடம் முறையிட்டு, ஏமநாதரை வெற்றிகொள்ள எனக்கு ஆற்றல் தந்தருளும்படி வேண்டினேன். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது" என்று கூறினார்.

அவையிலிருந்தவர் அனைவரும் வியப்படைந்தார்கள். பாணபத்திரருக்காகச் சொக்கப் பெருமானே விறகு

வெட்டியாக வந்து முல்லைப் பண்பாடி எமநாதரை விரட்டி விட்டார் என்று சொல்லி வியந்தார்கள். பாண்டியன் பாணபத்திரருக்குச் சிறப்புச் செய்தான். பெரும்பொருள் பரிசு அளித்து, அவரை யானைமேல் ஏற்றி நகர்வலம் செய்வித்துப் பாராட்டினான். "நீர் சிறந்த சிவபக்தர். இனி நீர் எமது அவைப் புலவர் அல்லீர். எம்பெருமான் சொக்கநாதருடைய இசைப் புலவர் ஆவீர்." என்று கூறி அனுப்பினான்.

அன்று முதல், பாணபத்திரர் பாண்டியன் சபைக்குச் செல்லாமல், சொக்கப் பெருமான் கோயிலில் சென்று நாள் தோறும் பக்தியோடு சொக்கப் பெருமான் மீது இசை பாடினார். அரசர் அளித்து வந்த ஊதியம் நிறுத்தப்பட்டபடியால், அவர் வறுமை யடைந்தார். நாள் செல்லச் செல்ல வறுமைத் துன்பம் அவரை வாட்டியது. ஆயினும், ஆலயத்தில் நாள் தவறாமல் இசை பாடிக்கொண்டிருந்தார். இவருடைய வறுமைத் துன்பத்தை யறிந்த சிவபெருமான், சிறந்த சிவபக்தரும் சேரநாட்டு மன்னரும் ஆகிய சேரமான் பெருமாளுக்குத் திருமுகம் ஒன்று எழுதிக் கொடுத்துப் பாணபத்திரரைச் சேரமானிடம் அனுப்பினார்.

சொக்கப் பெருமான் அனுப்பிய திருமுகத்தைக் கண்டு* சிவபக்தராகிய சேரமான் பெருமாள் இசைப்புலவருக்குப் பெரும்பொருள் கொடுத்து அனுப்பினார். அப்பெரும் பொருளைக் கொண்டு பாணபத்திரர் வறுமை நீங்கிச் சுகமாக வாழ்ந்து வந்தார். ஆனால், சொக்கநாதர் ஆலயத்தில் யாழ்வாசித்து இசைபாடும் திருப்பணியை விடாமல் செய்து வந்தார்.

ஒரு சமயம் பெருமழை பெய்தது. பூமி குளிர்ந்தது. சில்லென்று காற்றுடன் விடா மழை பெய்தது. பாண

* சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரத்தை இன்னூலின் தொடர்பில் காண்க.

பத்திரர் அப்போதும் சொக்கர் ஆலயத்தில் யாழ்வாசித்துப் பக்தியோடு இசை பாடினர். ஈரத்தில் நின்றிருந்தபடியால் அவர் உடல் சில்லிட்டுச் சிலிர்த்தது. யாழ் நரம்புகள் வீக்கழிந்தன. அப்போது, "பத்திரனுக்குப் பலகை இடுக" என்று ஒரு குரல் கேட்டது. அங்கிருந்தவர் அவ்வாறே பலகை இட்டனர். பத்திரர் பலகைமேல் நின்று இசை பாடினர். பாணபத்திரருடைய மனைவியாரும் இசைக் கலையில் தேர்ந்தவர் என்பதை இசைவாது வென்ற திருவிளையாடலிலிருந்து அறிகிறோம்.

இந்த இசைச் செய்திகளைத் திருவிளையாடற் புராணங்களிலும் பெரிய புராணத்திலும் காணலாம். பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், சாதாரி பாடின திருவிளையாடல், திருமுகங்கொடுத்த திருவிளையாடல், பலகையிட்ட திருவிளையாடல் என்னும் மூன்று அதிகாரங்களிலும், பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் விறகு விற்ற படலம், திருமுகங் கொடுத்த படலம், பலகையிட்டபடலம் என்னும் மூன்று படலங்களிலும் இவ்வரலாறு கூறப்படுகிறது. பெரிய புராணத்தில் கழறிற்றறிவார் புராணம் என்னும் சேரமான் பெருமாள் நாயனர் புராணம் 26 முதல் 39-ஆவது செய்யுள் வரையில், சொக்கர் சேரமானுக்குத் திருமுகம் கொடுத்த வரலாறு கூறப்படுகிறது.

# 6. இலக்கியம்

## I

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் உண்டான இலக்கியங்களைப்பற்றி ஆராய்வோம். அக்காலத்தில் மக்கள் எல்லோரும் கல்வி கற்றிருந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், கற்றவருக்கு மதிப்பும் பெருமையும் இருந்தபடியால், மக்கள் கல்வி கற்பதில் ஆர்வம் உள்ளவராக இருந்தார்கள். அக்காலத்தில் இருந்த சுந்தரமூர்த்தி நாயனார், இயற்றமிழ்ப் புலவராகவும் இசைத் தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். அவர் தமது தேவாரத்தில், அக்காலத்துக் கல்வியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**" காவிரி புடைசூழ் சோணாட்டவர்தாம் பரவிய**
**பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர் "**

என்றும்,

**" கற்பாரும் கேட்பாருமாய் எங்கும் நன்கார்**
**கலைபயில் அந்தணர் வாழும் கலையநல்லூர் "**

என்றும் கூறுவதிலிருந்து அவ்வூர்களின் கல்வி நிலையை உணரலாம்.

கடவுளே கல்வியாகவும் கலைப்பொருளாகவும் புலவராகவும் புலவர்களுக்குத் தலைவராகவும் இருக்கிறார் என்று கூறுகிறார்.

**" கற்ற கல்வியிலும் இனியானைக்**
**காணப் பெறுமவர்க் கெளியானை "***

என்றும்,

**" பல்கலைப் பொருளே ! படுதுயர் களையாய் "†**

என்றும்,

---

*திருநீர் 5. †வட திருமுல்லைவாயில் 10.

" நம்மானே தண்டமிழ் நூற் புலவர்க் கோர்
அம்மானே பரவையுண் மண்டளி அம்மானே "*

என்றும் அவர் பாடுகிறார்.

அவர் காலத்தில் இருந்த புலவர்கள், செல்வரைப் பாடிப் பரிசு பெறாமல் வாழ்க்கையில் துன்பமடைந்தார்கள் போலும். அப்புலவர்களைச் சுந்தரர் தமது திருப்புகலூர்ப் பதிகத்தில் கூறுகிறார்.

" மிடுக்கிலாதானை வீமனே விறல் விசையனே
வில்லுக்கிவன் என்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று
கூறினுங் கொடுப்பாரிலை "

" நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல்
நடுங்கிநிற்கும் இக்கிழவனை
வரைகள்போல் திரள்தோளனே என்று
வாழ்த்தினும் கொடுப்பாரிலை "

" நலமிலாதானை நல்லனே என்று
நரைத்த மாந்தரை இளையனே
குலமிலாதானைக் குலவனே என்று
கூறினுங் கொடுப்பாரிலை "

" கற்றிலாதானைக் கற்று நல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனே என்று
மொழியினும் கொடுப்பாரிலை "

" நோயனைத் தடந்தோளனே என்று
நொய்ய மாந்தரை விழுமிய
தாயன்றோ புலவோர்க்கெலாம் என்று
சாற்றினும் கொடுப்பாரிலை "

---

* திருவாரூர்ப்பரவையுண் மண்டளி 6.

" எள்விழுந்திடம் பார்க்கும் ஆகிலும்
ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ளலே எங்கள் மைந்தனே என்று
வாழ்த்தினும் கொடுப்பாரிலை "

" தையலாருக்கோர் காமனே சால
நலவழகுடை ஐயனே
கையுலாவிய வேலனே என்று
கழறினுங் கொடுப்பாரிலை "

ஆகையினால்,

" பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம் "

என்று கூறுகிறார்.

இறைவனாகிய சொக்கப் பெருமானே புலவராக இருந்து, பாணபத்திரன் பொருட்டுச் சேரமான் பெருமானுக்குத் திருமுகப் பாசுரம் எழுதியதாக அக்காலத்தில் நம்பிக்கை இருந்தது.

நந்திவர்மன் காலத்துச் சாசனம் ஒன்று செய்யுளாகவே அமைந்திருக்கிறது. அந்தச் சாசனம் திருச்சி மாவட்டத்து லால்குடி தாலுகா திருவெள்ளறைக் கிராமத்தில், ஜம்புநாதசுவாமி கோயில் முன்புறத்தில் உள்ள கல்லில் எழுதப்பட்டிருக்கிறது. "ஸ்ரீ தந்திநந்திவர்மரின் 3-வது" ஆண்டில் அது எழுதப்பட்டது. அதாவது தந்திவர்மனின் மகன் நந்திவர்மனுடைய காலத்தில் எழுதப்பட்டது. இச்சாசனத்தின் நடுப்பகுதி, பிற்காலத்தவரால் செதுக்கிவிடப்பட்டதால், எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

படிக்கக்கூடியதாக உள்ள பகுதி, " பிரம்மதேயத்து உறுதியான் விழுப்பேரரையன் சாத்தன் மற்றவன் புகழ் நிற்க. இது பாடித் தந்தோன் பெருங்காவிதி சடையன்

பள்ளி" என்று காணப்படுகிறது. எனவே, இச்சாசனச் செய்யுளைப் பாடிய புலவர் பெயர் பெருங்காவிதி சடையன் பள்ளி என்பது தெரிகிறது.*

இனி, அக்காலத்தில் இருந்த வேறு புலவர்களையும் அவர்கள் இயற்றிய நூல்களைப் பற்றியும் ஆராய்வோம்.

## பாரத வெண்பா

பெருந்தேவனார் என்னும் புலவர், நந்திவர்மன் காலத்தில் இருந்தார். இவர் பாரத வெண்பா என்னும் நூலை இயற்றினார். இவர், நந்திவர்மனால் ஆதரிக்கப்பட்டவர் என்று தெரிகிறது. இந்நூல், பரிபாலகர் புகழைக் கூறும் செய்யுளினால் இதனை அறியலாம். அச் செய்யுள் இது.

**" வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்**
**உண்மையால் பாரா ளுரிமையால் — திண்மையால்**
**தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு**
**யார்வேந்தர் ஏற்பா ரெதிர் "**

இச்செய்யுள் தெள்ளாற்றுப் போர் வென்ற நந்திவர்மனைக் கூறுகிறது. இதன்கீழ், பெருந்தேவனார் எழுதும் வசனம் இது: "எல்லையினிறைந்த எண்டிசை யுலகத்து மலையுமலையும் உள்ளிட்ட மண்மிசை முழுதும் மறையது வளர்க்க அல்லிபீடத் தரிவைக்குத் தன்னழுகமர் தோளை ஆலயமாக்கிய பல்லவர் கோமான் பண்டிதாலயனைப் பரவினேம்; இனி, ஈண்டிய தொல்புகழ் எழுமணிவரைத்தோட் பாண்டவர் நிலைமை யாதாயிற் றோவெனில்."

இதிலிருந்து, தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்குப் பண்டிதராலயன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டென்பது தெரிகிறது. இப் பெயரினால், இவன் பண்டிதர்களை ஆதரித்தான் என்பது தெரிகிறது.

---

*No. 48 S. I. I. Vol. XII.

இந்நூலை இயற்றிய பெருந்தேவனாரின் வரலாறு தெரியவில்லை. இவர் இயற்றிய பாரத வெண்பா, பாண்டவருக்கும் கௌரவருக்கும் நிகழ்ந்த பாரதப்போரைக் கூறுகிறது. பாரதக் கதை முழுவதையும் கூறவில்லை. உத்தியோக பருவம், வீடும பருவம், துரோண பருவம் என்னும் மூன்று பருவங்களை மட்டும் கூறுகிறது. துரோண பருவத்தின் பிற் பகுதிச் செய்யுள்கள் மறைந்துவிட்டன.

பெருந்தேவனாரின் பாரத வெண்பா, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள். இடையிடையே சில விருத்தப் பாக்களும் அகவற்பாக்களும் காணப்பட்ட போதிலும் பெரிதும் வெண்பாவாலான நூலாதலால், இதற்குப் பாரத வெண்பா என்று பெயர் கூறப்பட்டது. இந்நூலின் பாக்கள் இனிய கம்பீரமான நடையுடையன. படித்து இன்புறத்தக்கன. ஆனால், இடையிடையேயுள்ள உரைநடை வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையாக இருக்கிறது. ஆகவே படிக்க இனிமையற்றிருக்கிறது. தேவையில்லாத வடசொற்களைப் புகுத்தித் தூய்மையைக் கெடுத்துவிட்டார் இதன் ஆசிரியர். வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழ்நடையாக இருந்தால் இந்த வசனநடை பெரிதும் அழகுபெற்றுச் செய்யுளுக்கு ஏற்ற வசனமாக அமைந்திருக்கும்.

இந்தப் பாரதம் பாடிய பெருந்தேவனாரைப் பற்றி, அரசாங்கத்துச் சாசன இலாகா அறிக்கையொன்று தவறான செய்தியை வெளியிட்டிருக்கிறது.

"பல்லவ அரசன் (மூன்றும் நந்தி) காலத்தில் பாரத வெண்பா என்னும் தமிழ்ச் செய்யுள் நூலைப் பாடிய பெருந்தேவனார் என்னும் புலவர் வாழ்ந்திருந்தார். எப்படி என்றால், அந்த நூலின் உத்தியோக பர்வத்தின் வாழ்த்துச் செய்யுளில் தன்னை ஆதரித்த பல்லவ அரசனை 'தெள்ளாற்றில் வென்றவன்' என்று குறிப்பிடுகிறார்.

தமிழ் நூல்களாகிய புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு என்பவற்றின் தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுள்கள் இதே பெருந்தேவரினால் பாடப்பட்டன என்று நம்பப் படுகின்றன "* என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இந்த அரசாங்க அறிக்கையை உண்மை என்று கொண்டு, பிரெஞ்சுக்காரரான ழூவோ தூப்ராய் அவர்கள் தாம் எழுதிய பல்லவர்கள் என்னும் நூலில் இதனை மேற்கோள்காட்டியுள்ளார்.†

இந்தச் சாசன அறிக்கை எழுதிய கே. வி. சுப்பிரமணிய ஐயர், தாம் எழுதிய Ancient Dekhan‡ என்னும் நூலிலும், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலிருந்த பாரத வெண்பா பாடிய பெருந்தேவனாரே, அகநானூறு புறநானூறு முதலிய தொகை நூல்களைத் தொகுத்து அவற்றிற்குக் கடவுள் வாழ்த்துப் பாடினார் என்று எழுதுகிறார்.

பாரத வெண்பா பாடிய பெருந்தேவனார் சங்கத் தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடினார் என்று கூறுவது ஒப்புக்கொள்ளத்தக்கது அல்ல. இவர், கடவுள் வாழ்த்துப் பாக்களைப் பாடியதாக யாதொரு சான்றும் கிடையாது. இவருக்கு முன்பு சில பெருந்தேவனார்கள் இருந்தார்கள். அப்பெருந் தேவனார்களில் இருவர் பாரதத்தைத் தமிழில் பாடினார்கள். அவர்களில் ஒருவர் சங்கத் தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்த பாரத வெண்பா பாடிய பெருந்தேவனார், சங்கத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடினார் என்றால், அவர் காலத்தில் தான் அந்தத் தொகை நூல்கள் தொகுக்கப்பட்

*Epi. Rep. G. O. Nos. 922, 923. 19th Aug. 1899 p. 6.
†P. 80. The Pallavas by G. J. Dubreuil. 1917.
‡Ancient Dekhan, 1917 p. 94, 95.

டிருக்கவேண்டும் அல்லவா? அப்படியானல் அதற்குச் சான்று என்ன? முன்னமே தொகுக்கப்பட்ட தொகை நூல்களுக்கு இவர் பிற்காலத்தில் கடவுள் வாழ்த்துப் பாடினர் என்ருல், தொகுக்கப்பட்ட காலத்திலேயே கடவுள் வாழ்த்துப் பாடியதாக வரலாறு கூறுகிறது. ஆகவே, அரசாங்கத்துச் சாசன இலாகா அறிக்கை தவருனது.

அகநானூறு, புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனர் என்பவர்; அரசாங்க அறிக்கை கூறுகிற படி பாரத வெண்பா பாடிய பெருந்தேவனர் அல்லர்.

சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம், பாண்டியர் வழியில் வந்த ஒரு அரசனைக் கூறும்போது, "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" செங்கோல் நடத்தினன் என்று கூறுகிறது. அந்த மகாபாரதம் மறைந்து போயிற்று. அதற்குப் பிறகு மற்ெருரு பெருந்தேவனர் என்பவர் மகாபாரதத்தைத் தமிழில் இயற்றினர். அது பெரிதும் அகவற்பாவினலானது. அப்பாரதமும் இப்போது முழுவதும் கிடைக்கவில்லை. சில செய்யுள்கள்மட்டும், தொல்காப்பிய உரையில் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அந்தப் பாரதம் பாடிய பெருந்தேவனர் காலத்தில்தான், அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை முதலிய எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்டு, அவரால் கடவுள் வாழ்த்துச் செய்யுள்கள் பாடப்பட்டன. அது நிகழ்ந்தது கி. பி. 5 அல்லது 6–ஆம் நூற்ருண்டிலாகும். அதாவது, சங்கத் தொகை நூல்களைக் கூறுகிற அப்பர் சுவாமிகளுக்கு முற்பட்ட காலமாகும். எனவே, கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டிலிருந்த பாரத வெண்பா பாடிய பெருந்தேவனர் சங்கத்தொகை நூல்களைத் தொகுத்தவரும் அல்லர்; அவற்றிற்குக் கடவுள் வாழ்த்துப் பாடினவரும் அல்லர்.

VBIIPL D547 N58



மேலும், 1907-ஆம் ஆண்டுச் சாசன அறிக்கையிலும் இதே தவறு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையைத் தமிழ்ப்படுத்திக் கீழே தருகிறேன்.* "தமிழில் பாரத வெண்பா பாடிய பெருந்தேவனார் கடைசி மதுரைக் கல்லூரியில் (தமிழில் கடைச் சங்கம் என்பர்) ஒரு அங்கத்தினராக இருந்தார் என்று பரம்பரைச் செய்தி கூறப்படுகிறது. இச்செய்தியில் ஏதேனும் உண்மை இருக்குமானால், சின்னமனூர் பெரிய செப்பேடு கூறுகிற தமிழ் மகாபாரதம் அவர் எழுதியதாக இருக்கவேண்டும். ஆனால், பெருந்தேவனார், தம்மைப் போற்றிய அரசன் தெள்ளாற்றுப் போர் வென்ற பல்லவ அரசன் என்று கூறுகிறார். (Annual Report for 1899—99, Para 16.) இந்தப் பல்லவ அரசன் தெள்ளாறெறிந்த நந்திப் போத்தரசன் என்றால்,—இவனுடைய சாசனங்கள் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன—பெருந் தேவனார் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவராதல் வேண்டும். சின்னமனூர் செப்பேடு கூறுகிற பாரத மொழி பெயர்ப்பு, பாரத வெண்பாவில் உள்ள பாரதமாகுமானால், இச்செயல், பாண்டிய அரச பரம்பரையில், கடந்துபோன முதல் பாண்டியர்கள் மேல் ஏன் ஏற்றிக் கூறப்படவேண்டும் என்பதற்குக் காரணம் தெரியவில்லை. பாரதம் பாடியது, ஏதோ ஒரு அரசன் அல்லது அரசர்கள் காலத்தில் நிகழ்ந்திருக்கக் கூடும். அந்த அரசர் பெயரைச் சாசனம் எழுதியவர் சாசனத்தில் குறிப்பிட விருப்பமில்லாதவராக இருந்தார் போலும் என்றால், இவ்வாறு கருதுவதற்குச் சான்றுகள் கிடையா. இந்தச் சாசனத்தில் மகாபாரத மொழிபெயர்ப்பு என்று குறிக்கப்படுவது கடைச்சங்க (மூன்றாம் சங்கம்) காலத்தில் செய்யப்பட்ட பாரத மொழிபெயர்ப்பு என்று தற்காலிகமாக

*PP. 65-66. Mad. Epi. Rep. 1907, G. O. No. 503. 27th June 1907.

ARCH... LIBRARY 108183

ஒப்புக்கொள்ளலாம். அது, பெருந்தேவனாருக்கு முன்பு செய்யப்பட்டிருக்கவேண்டும். மதுரையில் சங்கம் வைத்தது என்பது மதுரையில் நிறுவப்பட்ட மூன்று சங்கங்களில் கடைசியானது. அரிகேசரி மாறவர்மனுக்குக் கூறப்பட்ட காலம் சரியானதாக இருக்குமானால், கடைச்சங்கம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிக்கு முன்னர் தோன்றியிருக்கவேண்டும்.''

இந்த அரசாங்க அறிக்கையில் எழுதப்பட்டிருக்கிற தவறான கருத்துக்களைத் தமிழறிந்தவர் நன்கு அறிந்து கொள்ளக் கூடும். பாரத வெண்பா பாடிய பெருந்தேவனார் கடைச் சங்கத்தில் இருந்தவர் என்று பரம்பரைச் செய்தி கூறுவதாக இவ்வறிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது. இது தவறான செய்தி. அவ்வாறு பரம்பரைச் செய்தி கிடையாது. பாரதம் பாடிய பெருந்தேவனார் கடைச் சங்கத்தில் இருந்தார் என்பது பரம்பரைச் செய்தி. இதை நன்கு தெரிந்து கொள்ளாமல், இந்த அரசாங்க அறிக்கையை எழுதியவர் பாரதம் பாடியவரையும், பாரதவெண்பா பாடியவரையும் குழப்பி மழுப்புகிறார். இவ்வாறு எழுதுவது செம்மையாகத் தெரிந்து கொள்ளாததனால் ஏற்பட்ட மயக்கமாகும். இந்த மயக்கத்தின் காரணமாக, தெள்ளாறெறிந்த பல்லவன் காலத்தில் எழுதப்பட்ட பாரதத்தைப் பாண்டியன்மேல் ஏற்றிக் கூறப்பட்டதாகக் கருதுகிறார். அதன் பிறகு, இரண்டு பெருந்தேவர்களும் வெவ்வேறு காலத்தவர் என்று சரியான முடிவுக்கு வருகிறார். அதுவும் உறுதியற்ற முடிவு என்று கூறுகிறார். பிறகு கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கடைச் சங்கம் தோன்றியது என்று தவறான முடிபு கூறுகிறார். இதைச் சான்று காட்டி மறுக்க முடியுமாயினும், இது இடம் அன்று. ஆகவே இதைப் பற்றிப் பேசாமல் விடுகிறோம். பாரதம் பாடியவரும், பாரத வெண்பா பாடியவரும் வெவ்வேறு காலத்தில் இருந்த வெவ்

வேறு பெருந்தேவனார்கள் என்பதை மட்டும் அழுத்தமாகக் கூறுகிறோம்.

**நந்திக்கலம்பகம்**

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் மேல் பாடப்பட்ட நூல் நந்திக்கலம்பகம். கலம்பகம் என்பது, சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் உண்டான பிரபந்த நூல்களில் ஒன்று; பலவகையான பாக்களினாலே அகப்பொருள் துறைகள் அமையப் பாடப்படுவது. அந்தாதித் தொடையாக வந்து, இறுதிச் செய்யுளின் கடைசிச் சொல்லும் முதற்பாட்டின் முதற் சொல்லும் ஒன்றாக அமைந்து மண்டலமாக முடியவேண்டும். இந்த முறைப்படி நந்திக் கலம்பகம் அமைந்திருக்கிறது. ஆனால், 78-ஆம் பாட்டுக்கும் 79-ஆம் பாட்டுக்கும் அந்தாதித்தொடை அமையவில்லை. இதனால், இச்செய்யுள்களுக் கிடையே ஒன்று அல்லது பல செய்யுள்கள் இருந்து மறைந்துவிட்டன என்று தோன்றுகிறது.

அரசர்மீது பாடப்படுகிற கலம்பகம் தொண்ணூறு செய்யுள்களைக் கொண்டிருக்கவேண்டும் என்பது பிற்காலத்து இலக்கணச் சட்டம். இதன்படி நந்திக் கலம்பகம், தொண்ணூறு செய்யுளைக் கொண்டிருந்ததா என்பது தெரியவில்லை. இப்போது இந்நூலில் காணப்படுகிற செய்யுட்கள் எண்பத்தெட்டுதான். மேலே கூறியபடி, ஓரிடத்தில் அந்தாதித் தொடையற்றிருக்கிறபடியால், சில செய்யுள்கள் பிற்காலத்தில் மறைந்திருக்க வேண்டும். சில பிரதிகளில், இருபத்திரண்டு செய்யுட்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. எழுபத்தாறும் செய்யுளின் பின்னிரண்டடிகள் மறைந்துவிட்டன. நான்கு பாயிரச் செய்யுட்கள் உள்ளன. எனவே, நந்திக் கலம்பகம் ஆதியில் எத்தனைச் செய்யுள்களைக் கொண்டிருந்தது என்பது இப்போது தெரியவில்லை.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பாரத வெண்பாவைப் பாடிய பெருந்தேவனாரே இந்நூலையும் பாடியிருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இந்நூலை இயற்றியவர் இவ்வரசனுடைய தம்பியார் என்றும், அவர் இவ்வரசனைப் பகைத்து இவர்மீது வசை பாடுவதற்காக இந்நூலை இயற்றினார் என்றும், இந்நூலைப் பாடக் கேட்ட நந்திவர்மன் உயிர் நீத்தான் என்றும் ஒரு கதை வழங்குகிறது. அண்மைக் காலத்து நூலாகிய சோமேசர் முதுமொழி வெண்பா, "நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்று கூறுகிறது. இக்கதை கற்பனைக் கதை என்று தோன்றுகிறது. இக்கதைக்குக் காரணம் கீழ்க்கண்ட செய்யுளாக இருக்கக் கூடும் :

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே"

என்பது அச் செய்யுள்.

இச் செய்யுளை, நந்திக் கலம்பகச் செய்யுள் எனக் கொண்டு, நந்திவர்மன் உயிரோடிருந்தபோது பாடப்பட்ட வசைப் பாடல் என்று கருதி, மேற்படி கதையைக் கட்டிவிட்டார்கள் போலும். இச் செய்யுள், நந்திவர்மன் இறந்து அவன் உடம்பு எரிக்கப்பட்டபோது, யாரோ ஒரு புலவர் இயற்றிய தனிப்பாடல் என்று தோன்றுகிறது. இத் தனிப் பாடல், பிற்காலத்திலே நந்திக் கலம்பக நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டது. இச் செய்யுளே இக்கற்பனைக் கதைக்குக் காரணமாயிற்று என்று கருதலாம்.

கலம்பக நூல்களில், காலத்தால் முற்பட்டது இந்த நந்திக் கலம்பகம் எனத் தெரிகிறது.

சொல்லும் பொருளும் நயம்பட அமைந்துள்ள இந்த நந்திக் கலம்பகம், வெறும் இலக்கிய நூல் மட்டும் அன்று ; நந்தி வர்மன் வரலாற்றை ஆராய்வதற்கும் உதவியாக இருக்கிறது. ஆகவே, இந்நூல் முழுவதையும் பின் இணைப்பில் சேர்ந்துள்ளேன்.

## நந்திக்கோவை

தெள்ளாறெறிந்த நந்திவர்மன்மேல் சில கோவைப் பிரபந்தங்கள் பாடப்பட்டன என்பது, நந்திக் கலம்பகச் செய்யுள் ஒன்றினால் தெரிகிறது. அச் செய்யுள் :

**" இந்தப் புவியில் இரவலருண் டென்பதெல்லாம்**
**அந்தக் குமுதமே அல்லவோ—நந்தி**
**தடங்கைப் பூ பாலன்மேல் தண்கோவை பாடி**
**அடங்கப்பூ பால ரானர் "**

இந்த உலகத்திலே இரவலர் என்று கூறப்படுவது குமுதம் என்னும் அல்லிப் பூ அல்லாமல் வேறு இரவலர் இலர். (இரவு+அலர்=இரவலர்=இரவில் பூக்கும் குமுதம். இரவலர்=யாசிப்பவர்) ஏனென்றால் நந்திவர்மன்மீது இரவலர்கள் கோவைப் பிரபந்தம் பாடிப் பரிசில் பெற்றுப் பூபாலராக (மன்னர்களாக) ஆய்விட்டார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து. இதனால், வறுமை யடைந்த புலவர்கள் சிலர், இவ்வரசன்மீது கோவைப் பிரபந்தங்கள் பாடினார்கள் என்பது தெரிகிறது. அக்கோவை நூல்கள் இப்போது கிடைத்தில.

## சுந்தரர் தேவாரம்

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்த சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரப் பதிகங்களைப் பாடினார்.

அவர் பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங்கள் என்று கூறுவர்.

"பின்புசில நாளின்கண் ஆரூர் நம்பி
பிறங்குதிரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தா என்னும்
இன்பமுதல் திருப்பதிகம் ஊழிதோறும்
ஈறாய் முப்பத்தெண்ணாயிரமதாக
முன்புபுகன் றவர்நொடித்தான் மலையிற் சேர்ந்தார்
முறைகளெலாந் திருத்தில்லை மூதூர் தன்னில்
அன்றவர்கை இலச்சினையால் வைத்தார் மன்ன!
ஆராய்ந்து தருகஎன அருளிச் செய்தார்."*

பின்னர், இராசராசன் என்னும் அபயகுல சேகர மன்னன் காலத்தில் இப்பதிக ஏடுகளைச் சோதித்துப் பார்த்த போது, நூறு பதிகங்கள் தவிர மற்றைய பதிகங்கள் எல்லாம் மண் தின்றுபோயின. ஆகவே, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகங்களில் பெரும்பாலும் மறைந்து விட்டன. எஞ்சியுள்ள நூறு தேவாரப் பதிகங்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இடைக்காலத்தில் வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் காரோணப் பதிகம் ஒன்றை இயற்றி இடைச் செருகலாக இதனுடன் சேர்த்து விட்டார். அப்பதிகத்தைப் பின் இணைப்பில் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம் அக்காலத்து இயற்றமிழாகவும் இசைத்தமிழாகவும் விளங்குகிறது.

## திருமுகப்பாசுரம்

மதுரையில் கோயில் கொண்டருளிய சொக்கலிங்கப் பெருமானுக்குத் திரு ஆலவாய் உடையார் என்னும் பெயரும் உண்டு. இவர் தமது அடியாராகிய பாணபத்திரன் பொருட்டுச் சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஒரு

---

*திருமுறை கண்ட புராணம் 16.

திருமுகப் பாசுரம் எழுதியனுப்பினர் என்று புராணங்கள் கூறுகின்றன.

"அதிர் கழல் உதியர் வேந்தற்கு
அருள்செய்த பெருமையாலே
எதிரில் செல்வத்துக் கேற்ற
இருநிதி கொடுக்க என்று
மதிமலிபுரிசை என்னும்
வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத்
திருமுகம் கொடுத்தார் காண." †

'விதமுறு தனங்கள் மிக்க வேண்டுப அளிப்பன் தாழாது
அதர்வுற விரைவிற் சென்றிவ் ஓலையை அளித்தி என்று
மதிமலி புரிசை என்றோர் வரைதரு திருமுகத்தை
முதர்தரு கனவிற்காணக் கொடுத்தனன் முக்கட் சொக்கன் "*

" மறைக்குரை செய்த வாக்கான்
மதிமலிபுரிசை என்னும்
சிறப்பியல் சீர்சால் செய்யுட்
பாசுரம் செப்பித் தீட்டிப்
பிறைச்சடைப் பெருமான் நல்கி
மறைந்தனன், பெரும்பாண் செல்வன்
உறக்கம்நீத்து ஆடிப் பாடி
உவகைமா கடலில் ஆழ்ந்தான் "‡

இது, சொக்கப் பெருமானே பாடியதோ அல்லது அக் கோயிலில் இருந்த புலவர் ஒருவர் பாடியதோ, உண்மை எதுவாக இருந்தபோதிலும், திருவாலவாய் உடையார்

*கழறிற்றறிவார் நாயனுர் புராணம் 28.

†திருமுகங்கொடுத்த திருவிளையாடல் 8, திருவிளையாடற் புராணம், பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றியது.

‡திருமுகங்கொடுத்த படலம் 10, பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்.

பெயரினால் ஒரு திருமுகப் பாசுரம் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது.

**பொன்வண்ணத் தந்தாதி**

பொன்வண்ணத் தந்தாதி என்னும் இந்நூலை இயற்றியவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பரும் சைவ நாயன்மார்களில் ஒருவரும் ஆகிய, கழறிற்றறிவார் என்னும் சிறப்புப் பெயரையுடைய சேரமான் பெருமாள் நாயனார். இவர், இந்த அந்தாதியைத் தில்லைச் சிற்றம்பலத்தில் அரங்கேற்றினார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

**"ஆரா ஆசை ஆனந்தக் கடலுள்**
**திளைத்தே அமர்ந் தருளால்**
**சீரார் வண்ணப் பொன்வண்ணத் திருவந்**
**தாதி திருப்படிக் கீழ்ப்**
**பாராதரிக்க எடுத்தேத்திப் பணிந்தார்**
**பருவ மழை பொழியும்**
**காரால்நிகர்த்த அரியகொடைக் கையார்**
**கழறிற் றறிவார் தாம்"***

இந்நூல், பொன்வண்ணத் தந்தாதி என்று பெயர் பெற்றதன் காரணம், பொன்வண்ணம் என்னும் சொல்லை முதலில் கொண்டு தொடங்குவதனால்தான். நூலின்முதல் சொல்லே அந்நூலின் பெயராக அமைவதும் உண்டு. வாக்குண்டாம், வெற்றிவேற்கை, கொன்றைவேந்தன், ஆத்திசூடி என்னும் நூலின் பெயர்கள், அந்நூல்களின் முதற் சொல்லினாலே அமைந்ததுபோல இந்நூலும் இதன் முதற் சொல்லினாலே பெயர்பெற்றது.

பொன்வண்ணத் தந்தாதி, நூறு கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டு அந்தாதித் தொடையாக இயன்றது.

---

*கழறிற்றறிவார் புராணம் - 56.

முதற் செய்யுளின் அந்தமும் அடுத்த செய்யுளின் ஆதியும் ஒன்ருகத் தொடங்குவதே அந்தாதி எனப்படும். அதாவது, முதற் செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாவது அசையாவது சீராவது அடுத்த செய்யுளின் முதற் சொல்லாக அமையப் பாடுவது. கடைசிச் செய்யுளின் ஈற்றுச் சொல் முதற் செய்யுளின் தொடக்கமாகவும் அமையவேண்டும். பொன் வண்ணம் என்று தொடங்குகிற இந்நூல், செய்யுள்தோறும் அந்தாதியாக அமைந்து ஈற்றுச் செய்யுளின் இறுதிச் சொல் பொன்வண்ணமே என்று முடிந்து, அந்தாதியின் இலக்கணத்தைக் கொண்டிருக்கிறது.

இந்த அந்தாதி, பதினோராந் திருமுறையில் தொகுக்கப் பட்டிருக்கிறது.

## திருவாரூர் மும்மணிக் கோவை

இந்நூலை இயற்றியவரும் கழறிற்றறிவாராகிய சேரமான்பெருமாள் நாயனுரே. இக்கோவையைத் திருவாரூர் திருக்கோவிலில் சுந்தரமூர்த்தி நாயனுர் முன்னிலையில் அரங்கேற்றினுர் என்று பெரிய புராணம் கூறுகிறது.

**"தேவர் முனிவர் வந்திறைஞ்சுந்**
**தெய்வப் பெருமாள்கழல் வணங்கி**
**மூவர் தமக்கு முதலாகு**
**மவரைத் திருமும்மணிக் கோவை**
**நாவ லூரர் தம்முன்பு**
**நன்மை விளங்கக் கேட்பித்தார்**
**தாவில் பெருமைச் சேரலனுர்,**
**தம்பி ரானுர் தாங்கொண்டார்"***

மும்மணிக் கோவை என்பது அகவல், வெண்பா, கலித்துறை என்னும் செய்யுட்கள் விரவி வகைக்குப் பத்துச்

*கழறிற்றறிவார் நாயனுர் புராணம் - 69.

செய்யுளாக முப்பது செய்யுட்களால் அமைக்கப்படும் நூல். இந்த இலக்கணப்படியே இக் கோவையும் அமைந்திருக்கிறது.

இந்நூலும், பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது.

## ஆதி உலா

ஆதி உலாவுக்குக் கயிலாய ஞான உலா என்னும் பெயரும் உண்டு. இதை இயற்றியவரும் கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனாரே. தமிழில் உள்ள உலா நூல்களிலே இதுவே முதன் முதலாக ஏற்பட்டது என்பதை இதற்கு உள்ள ஆதி உலா என்னும் பெயரினாலேயே அறியலாம்.

இந்த உலாவைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. சேரமான்பெருமாள் நாயனார் இந்த உலாவைப் பாடி, சுந்தரமூர்த்தி நாயனாரோடு திருக்கயிலாயம் சென்று அங்கே அரங்கேற்றினாராம். பிறகு, திருக்கயிலாயத்திலிருந்து இவ்வுலாவை மாசாத்தர் என்பவர் தமிழ்நாட்டிலுள்ள திருப்பிடவூரில் கொண்டுவந்து வெளியிட்டாராம். இதைப் பெரிய புராணம் கூறுகிறது.

"பெருகுவேதமும் முனிவரும் துதிப்பரும்
பெருமையாய் ! உனை அன்பால்
திருஉலாப்புறம் பாடினேன் திருச்செவி
சாத்திடப் பெற வேண்டும்
மருவு பாசத்தை அகற்றிட வன்றொண்டர்
கூட்டம் வைத்தாய் என்ன
அருளும்ஈசரும் சொல்லுக என்றனர்
அன்பரும் கேட்பித்தார்"

"சேரர்காவலர் விண்ணப்பஞ் செய்தது
திருவுலாப்புறம் அன்று
சாரல்வெள்ளியங் கயிலையில் கேட்டமா
சாத்தனார் தரித்திந்தப்
பாரில்வேதியர் திருப்பிடவூர் தனில்
வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நாரவேலைசூழ் உலகினில் விளங்கிட
நாட்டினர் நலத்தாலே"*

## திருமறைக்காட்டந்தாதி

இந்த அந்தாதியைப் பாடியவர் சேரமான்பெருமாள் நாயனார். சேரமான்பெருமாள், சுந்தரமூர்த்தி நாயனாருடன் தல யாத்திரை செய்துகொண்டு திருமறைக்காட்டுக்குச் சென்றபோது இவ்வந்தாதியைப் பாடினார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

"நிறைந்த மறைகள் அர்ச்சித்த
நீடு மறைக்காட் டருமணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து
போற்றியாழைப் பழித்து என்னும்
அறைந்த பதிகத் தமிழ்மாலை
நம்பி சாத்த அருட்சேரர்
சிறந்த அந்தாதியிற் சிறப்பித்
தனவே யோதித்தொழுதெழுந்தார்"†

இந்த அந்தாதியைப்பற்றி இப்போது ஒன்றும் தெரியவில்லை. இந்நூல் முழுவதும் மறைந்துவிட்டது போலும். பதினோராந் திருமுறையைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி காலத்திலேயே இது மறைந்துவிட்டது போலும்.

---

*வெள்ளானைச் சருக்கம் 47, 52.

†கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 87.

II

அக்காலத்து இலக்கியங்களைப் பற்றிக் கூறினோம். இனி, அவ்விலக்கியங்களின் நடைப்போக்கை அறிய அவற்றிலிருந்து சில செய்யுட்களைக் காட்டுவோம்.

**பாரத வெண்பா**

பாரதப் போர் நிகழப்போவது உறுதியாய்விட்டது. போர்க்களத்தில் பாண்டவரைக் கொல்லக்கூடாது என்று வரம்கேட்கும்படி குந்திதேவியைக் கண்ணன் கன்னனிடம் அனுப்புகிறான். தேர்ப்பாகனால் வளர்க்கப்பெற்ற ஒரு அனைதைப் பிள்ளை என்று தன்னைப்பற்றி எண்ணிக்கொண் டிருக்கும் கன்னராசனிடம் குந்திதேவி சென்று, கன்னன், தான் பெற்ற மகன் என்று கூறுகிறாள். தன் பிறப்பை அறிந்த கன்னன் சொல்லுகிறான். அப்பகுதியின் வசன நடையையும் செய்யுள் நடையையும் கீழே காண்க:—

"பாண்டவர்க்கு முன்னோன்றலாய்ப் பாண்டு புத்திர னென்னும்படி ஆண்டகையாயது அறிந்திலேன்; என் பால் அருவினை நின்று அகற்றுகையால் நீயும் முன்னமே அறிவித்திலை; முடிவிற்காலத் தறிவித்தனை; இதற்கு என்ன வண்ணஞ் செய்வேனென்று இருநிலத்துமிசை மயங்கி வீழ்ந்து, பின்னும் யாது சொன்னான் கன்னன்:

**இன்னா னெனவறியா வென்னை முடிகவித்து**
**மன்னர் வணங்க வரசியற்றிப்—பின்னையுந்**
**தன்னெச்சி லுண்ணாத் தகைமையான் றானுண்டா**
**னென்னெச்சி லென்றோ டினிது.**

அன்றியும்,

கொன்னவிலுந் தேர்ப்பாக னென்று குலம்பேசி
யென்னைப் பலரு மிகழ்ந்துரைப்ப—பின்னையுந்தா
னென்னெச்சி லென்னோடு முண்டானை யெங்ஙனே
யுன்னச் சிறப்பே னுரை.

தேர்ப்பாகன் மகனென்று என்னை மன்னர் பலரும் இகழ்ந்துரைப்ப, மற்று அவரை முனிந்து என்னுடன் இன்னடிசில் உண்டு என்னை மன்னர் வணங்க முடிகவித்த ராசராசனை எங்ஙனே நான் விடுவேன் என்று பின்னுஞ் சொல்லுவான் கன்னன் :

மருவார்வன் டாரான் மணிமுடியான் செய்த
வருடா னறியாதா ரில்லை—தெருளா
வழிகொடா வாறே யடுகளிற்றூற் காகிற்
பழிகடாஞ் சாலப் பல.

என்று பின்னுஞ் சொல்லுவான் கன்னன் :

மதமா மழகளிற்றான் மற்றெனக்குச் செய்த
வுதவி யுலகறியு மன்றே—யுதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தி னல்லோர்கள்
குன்றுவதோ செய்ந்நன்றி கூறு.

என்றிவ்வகை சொல்லிப் பின்னுஞ் சொல்லுவான் கன்னன் :

பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டின்மணிக் கென்புகுந்த தென்னும—என்மணியைக்
கோக்கோ பொறுக்கவோ வென்றானுக் கென்னுயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு.

இராசராசன் தேவி லக்ஷணையும் நானும் ஒரு தனி மண்டபத்து இருந்து சூதாடி நிற்ப, இராசராசன் துரியோதனன் மிருகவேட்டை போய்க் கதுமென வந்தது கண்டு மற்று அவளும் போகவென்று எழுந்திருப்ப, போகாமல் தடுக்கவென்று அவள் பூந்துகிலைப் பற்றி யான் பிடித்திட,

மேகலாபரணம் அற்று நவரத்தினங்கள் நாற்றிசையும் சிந்திவிட்ட வெல்லைக்கண், அடல் வேந்தனும் வந்து என்னை அருகு அணைந்து மற்று இதற்குக் காரணம் என் என்றது கருணையுடன் அகமலர்ந்து நகையரும்பி யானும் கோப்பேனோ பொறுக்குவேனோ வென்ற வேந்தனுக்கு என் நல்லுயிரை யுத்தமண்டலத்துத் துறப்பே னென்று பின்னுஞ் சொல்லுவான் கன்னன் :

*உந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர் நீர்*
*இன்றென்மே லாசையிலை யுமக்கு—அன்று*
*வடுவஞ்சிப் போவிட்டீர் மாண்டேனே லின்று*
*நடவென்பீ ராரை நயந்து.*

உம்முடைய புத்திரர்க்கு நல்லீராய் ஒரு காரணத்தினாற் போந்தீரல்லது, மற்று எனக்கு நல்லீராகில் முன்னமே வந்து என்பால் மருவீரோ என்னுமது நிற்க, அன்று குழவிக் காலத்தே வடுவஞ்சிப் பேராற்றிடை யொழுக்கிய ஞான்று புத்திரனென்று உணராது மித்திர பாவத்தை நோக்கினீர் ; அன்று மற்று அந்த ஆற்றிடையின் மாண்டவனன்றோ யான் ? சன்ம சங்கற்பத்தால் வாழ்வேந்தன் திருதராஷ்டிரன் சூதன் எடுத்து இனிதுடன் வளர்க்க, வண்மையுடன் ராசராசன் துரியோதனனும் தேர்ழுைகக் கொண்டு அங்கவள நாட்டுக்கு அபிஷேகம் பண்ணிப் பரராஷ்டிரத்து க்ஷத்திரியரும் வணங்கப் பண்ணி என்னையும் இவ்வகை பிரகாசிப்பித்தானில்லையாகில், நீரும் வந்து அழைப்பீர் ஆரை என்று எடுத்துரைத்துப் பின்னுஞ் சொல்லுவான் கன்னன் :

*நன்றாக மன்ன னெனக்கிந்த நாடறியக்*
*குன்றாத நன்மை பலகொடுத்தா—னென்றாலு*
*மீண்டவன் செய்த வுதவியினை யான்மறந்தாற்*
*றீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து.*

இராசராசன் துரியோதனன் என்னை இன்னானென்று அறியாதே இன்னடிசில் உடனூட்டி, மன்னர் இகழாது நிற்க அங்கராசன் என்று அபிஷேகம் பண்ணி அங்கதேசம் எனக்கு அளித்துத் தன் பிராதாக்கள் தொண்ணூற்றொன்பதின்மரும் சர்வ க்ஷத்திரியரும் தொழுது இறைஞ்சிக் கீழிருப்பதற்குத் தொலைவிலாத அசனமளித்து, ஏகாந்தத்துடன் இரு சரீரமும் ஒரு சரீரமாய் இனிதிருந்தோனுக்கு, எப்படியாயினும் பழி பாவம் விளையாமல் காத்து இராச்சியம் பண்ணிக் கொடுத்துப் பின்பு வந்து பாண்டவரைப் பிராதாக்களெனக் காண்பேன்; அதுவன்றி, துரியோதனுக்கு ஆபத்து விளைந்த விடத்து மற்று அவனால் முன்னம் செய்யப்பட்ட உபகாரத்துக்கு யானும் சிறிது பிரதியுபகாரமாக அவனுக்குப் போர்விளைந்த யுத்த மண்டலத்து நிகழ்ப்பட்ட கசதுரங்க பதாதிகளோடும் சர்வாயுதங்களோடு மவன்மேல் வரப்பட்ட வினைகளையும் விநாசஞ் செய்து, என் சர்வ சக்தி யெல்லாம் வஞ்சியாமற் காத்துக் கொண்டு, இரண முகத்திலுள்ள சத்துரு பக்ஷத்தாரும் பரராஷ்டிரத்துச் சர்வக்ஷத்திரியரும் காணப் போர் மலைந்து, யுத்த பூமிவிட்டு நீங்காது துரியோதனன் கண்டு களிகூரச் சர்வாயுதங்களாற் சலிப்புண்டு குருதிப்புனற் குளித்து, யானைக் கோடுகளாற் குத்துண்டு, வீரசுவர்க்கம் பெறுவதன்றி, மற்று என்னாற் பேசத்தக்கதில்லை யென்று அநேகஞ் சொல்லிக் குந்திதேவியை நோக்கி நமஸ்கரித்து, உனக்கு வேண்டுவன வேண்டி என்பக்கல் வாங்கிக் கொண்டு ஈண்டன் எழுந்தருள்வாயாக என்று கன்னன் சொல்லக் கேட்டுப் பொறியற்ற கருவிபோல அறிவற்று மயங்கிக் கண்ணீர் மல்கி யாது சொன்னாள் குந்திதேவி :

**உம்பரிக லேறுபோ லுற்றெழுந்த வஞ்ஞான்று**
**தம்பியரைக் கொல்கை தவிரென்றாள்—நம்பி**
**யியலாரும் வேலங்க நீயுடன் றன்னைக்**
**குயிலாரு மென்மொழியாள் கூர்ந்து.**

நீ உற்றெழுந்த சமர பூமியில் வெற்றி கொள்ளுமிடத்து மற்று உன் பிரதாக்கள் ஐவரையும் இரட்சித்துக் கொள்வாயாக வென்று குந்திதேவி கூறக்கேட்டு, யாது சொன்னான் கன்னன்:

**பார்த்தனையான் கோற லவன்கைப் படுதலெனும்**
**வார்த்தை யுரைசெய்தேன் மனமகிழ—வேற்கும்**
**பொருவெஞ் சமர்தன்னிற் போந்தெதிர்ந்தான் மற்றங்**
**கொருவருந்தா மில்லை யெதிர்.**

என்றிவ்வகை அருச்சனனை யான் கொல்லல், மற்று அவன் கையில் யான் படுதல்—இரண்டில் ஒன்று ஆமென்று பரராஷ்டிரத்து க்ஷத்திரியர் பலருங் கேட்கச் சொன்னேன்; இது தவிராது; யானும் அவனுமொழியத் தீங்கு ஒருவர்க்குஞ் செய்யேனென்று சொல்ல, பொறியற்ற பாவைபோல் அறிவற்று அகங் குழைந்து யாது வேண்டிக் கொண்டாள் குந்திதேவி :

**வெஞ்சரங்கோத் தெய்து விறலழிக்கு நன்மகனே**
**பஞ்சவரிற் பார்த்த னுடன்மலைந்தா—லஞ்சுதலை**
**நாக மிருகாற் றொடாதொழிக வென்றுரைத்தாள்**
**ஆக முறத்தழுவி யாங்கு.**

அன்றியும்,

**வம்பவிழ்தார் மன்னா ! மணிநெடுந்தேர் மேலேறி**
**யும்பியரைக் கொண்டுநீ நில்லாயே—லம்பொன்று**
**இருகாற் றொடாயாக வேண்டுவனா னென்றாள்**
**செருகாற் றடங்கண்ணா டேர்ந்து.**

அன்றியும்,

**என்மக்க ளைவர்க்கு மூத்தாய் ! எழிலுறையு**
**மின்னெக்கும் பைம்பூண் விறல்வீரா !—வன்மைக்கண்**
**வெந்திறன்மா நாக மிரண்டாவ தெய்யாதி ;**
**இந்தவரம் வேண்டுவனா னின்று.**

அசுவசேனனென்னும் மகா நாகம் யுத்த பூமியில் அருச்சுனன்மேல் இரண்டாவது எச்சிற் கணையாகத் தொடா தொழிவாயாக என்று வேண்டிக்கொள்ளக் கேட்டு வியாகுல மெய்திப் பின்னும் யாது சொன்னான் கன்னன்.''

**நந்திக் கலம்பகம்**

நந்திக்கலம்பகம் செய்யுளிலக்கியம் மட்டும் அல்லாமல் சரித்திர ஆராய்ச்சிக்குரிய குறிப்புகள் அதில் காணப்படுகிற படியால், அந்நூல் முழுவதையும் இந்நூலின் பின்னிணைப் பாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனை அங்குக் காண்க.

**சுந்தரர் தேவாரம்**

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத்தி லிருந்து சில பாடல்கள், மாதிரிக்காகத் தரப்படுகின்றன.

மத்தயானை ஏறிமன்னர் சூழ வருவீர்காள்
செத்தபோதில் ஆருமில்லைச் சிந்தையுள் வைம்மின்கள்
வைத்தஉள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர்கோயில் எதிர்கொள் பாடிஎன்ப தடைவோமே. 1

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையுமென் றிருந்தேன்
என்னையும் ஒருவனுளன் என்று கருதி
இறைஇறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சிலாச்
சிராமத் துறை யடிகள்
பின்னையே யடியார்க் கருள்செய்வதாகில்
இவரலா தில்லையோ பிரானார். 2

நீளநினைந் தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளனகண் மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான்! குண்டையூர்சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே. 3

தம்மையேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்விலுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே. 4

குற்றொருவரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்ணமே
மற்றொரு வரைப் பற்றிலேன்
மறவாதெழு மட நெஞ்சமே
புற்றரா வுடைப்பெற்ற மேறி
புறம்புயந் தொழப் போதுமே. 5

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளா நீரிருந்தீர்
வாழ்விப்பனென ஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவே திருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணியாரூர் புகப்பெய்த அருநிதியம் அதனில்
தோற்றமிகு முக்கூறில் ஒருகூறு வேண்டும்
தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும்
கடலைக் காரோணம் மேவி இருந்தீரே. 6

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறிய ஒண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து
அணிஆரூரானை மறக்கலும் ஆமே? 7

உழக்கேஉண்டு படைத்தீட்டி வைத்திழப்பார்களும் சிலர்கள்
வழக்கே எனில் பிழைக்கேம் என்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கே பறிநிறைப்பாரொடு தவமாவது செய்மின்
கிழக்கே சலமிடுவார் தொழுகேதாரம் என்னீரே. 8

இலேயால் அன்பால் ஏத்து மவர்க்கு
நிலேயா வாழ்வை நீத்தார் இடமாம்
தலேயால் தாழுந் தவத்தோர்க் கென்றும்
தொலேயாச் செல்வச் சோற்றுத் துறையே. 9

ஒன்றலா உயிர்வாழ்க்கையை நினேந்திட்டு
உடல்தளர்ந்து அருமாநிதி இயற்றி
என்றும் வாழலாம் எமக்கெனப் பேசும்
இதுவும் பொய்யெனவே நினே உளமே
குன்று நிலாவிய புயமுடையானேக்
கூத்தனேக் குலாவிக் குவலயத் தோர்
சென்றெலாம் பயில் திருத்தினே நகருள்
சிவக்கொழுந்தினேச் சென்றடை மனனே. 10

ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனுகி
மாழைஒண்கண் பரவையைத் தந்தாண்டானே மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனேயே. 11

வில்லேக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினுல் எறிந்திட்டும் மோதியும் கூறை கொள்ளும் இடம்
முல்லேத்தாது மீணங்கமழ் முருகன் பூண்டி மாநகர் வாய்
எல்லேகாப்பது ஒன்றில்லேயாகில் நீர் எத்துக்கிங்கிருந்தீர்
[எம்பிரானீரே. 12

பொன்னுர் மேனியனே புலித்தோலே அரைக்கசைத்து
மின்னுர் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னேயல்லால் இனியாரை நினேக்கேனே. 13

அகத்தடிமை செய்யும் அந்தணுளன்
அரிசிற் புனல்கொண்டு வந்தாட்டுகின்ருன்
மிகத்தளர் வெய்திக் குடத்தைநும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
வருமென்றெரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. 14

## திருமுகப் பாசுரம்

திருவாலவாயுடையார் சேரமான் பெருமாள் நாயனுருக்கு அருளிச்செய்த திருமுகப் பாசுரம்.

*நேரிசை யாசிரியப்பா*

" மதிமலி புரிசை மாடக் கூடற்
பதியிசை நிலவும் பானிற வரிச்சிறை
யன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவனியான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
*குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்வல்ல பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

## பொன்வண்ணத் தந்தாதி

பொன்வண்ணத் தந்தாதியிலிருந்து சில செய்யுட்களைக் காட்டுவாம்.

---

*ஒருமையி னுரிமையின் எனவும் பாடம் உண்டு.

'பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண
மாகிய வீசனுக்கே.'' 1

பல்உயிர் பாகம் உடல்தலை
தோல்பகலோன்மறல் பெண்
வில்லியோர் வேதியன் வேழம்
நிரையே பறித்துதைத்துப்
புல்லியுஞ் சுட்டும் அறுத்தும்
உரித்துக் கொண்டான் புகழே
சொல்லியும் பாடியும் மேத்தக்
கெடும் நங்கள் சூழ்துயரே. 2

சொல்லாதன கொழு நாவல்ல
சோதியுட் சோதிதன் பேர்
செல்லாச் செவிமரந் தேறித்
தொழாத கை மண்டிணிந்த
கல்லாம் நினையா மனம்வணங்
காத்தலையும் பொறையாம்
அல்லா வவயவந் தானும்
மனிதர்க் கசேதனமே. 3

'தனக்குன்றம் மாவையஞ் சங்கரன்
தன்னருளன்றிப் பெற்ருல்
மனக்கென்று நஞ்சிற் கடையா
நினைவன், மதுவிரியும்
புனக்கொன்றை யானருளாற்புழு
வாகிப் பிறந்திடினும்
எனக் கென்றும் வானவர்பொன்னுலகோ
டொக்க வெண்ணுவனே. 4

கூறுமி னீசனைச் செம்மின்குற்
றேவல் குளிர்மின் கண்கள்
தேறுமின் சித்தந் தெளிமின்
சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை யறுமின்
அவல மிவை நெறியா
ஏறுமின் வானத் திருமின்
விருந்தா விமைய வர்க்கே. 5

ஆவன யாரே யழிக்கவல்லார்
அமையா வுலகில்
போவன யாரே பொதியகிற்பார்
புரமூன் றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத்
திருந்தடி கைதொழுது
தீவினை யேனிழந்தேன் கலை
யோடு செறிவளையே. 6

மாயனன் மாமணி கண்டன்
வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம்
பெறுவது சொல்லுடைத்தே
காய்சின வானை வளருங்
கனக மலையருகே
போயின காக்கையு மன்றே
படைத்தது பொன்வண்ணமே. 7

## திருவாரூர் மும்மணிக் கோவை

சேரமான் பெருமாள் நாயனர் அருளிச் செய்த திருவாரூர் மும்மணிக் கோவையிலிருந்து முதல் மூன்று செய்யுள்களை மாதிரிக்காகக் காட்டுகிறோம்.

நேரிசை ஆசிரியப்பா

(இடையில் ஐஞ்சீரடி பெற்று வந்தது.)

விரிகடல் பருகி யளறுபட் டன்ன
கருநிற மேகம் கன்முக டேறி
நுண்டுளி பொழிய நோக்கிய ஒண்டொடி
பொலங்குழை மின்னப் புருவ வில்லிட்(டு)
இலங்கெழிற் செவ்வாய்க் கோபம்* ஊர்தரக்
கைத்தலம் என்னும் காந்தள் மலர
முத்திலங் கெயிறெனும் முல்லை யரும்பக்
குழலும் சுணங்கும் கொன்றை காட்ட
எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப
உள்நிறை உயிர்ப்பெனும் ஊதை யூர்தரக்
கண்ணெனப் பெயரிய கனம்† மழை பொழிதலின்
ஒண்ணிறத் தஞ்சனக் கொழுஞ்சே றலம்பி எஞ்சா
மணியும் பொன்னும் மாசறு வயிரமும்
அணிகிளர் அகிலும் ஆரமும்‡ உரிஞ்சிக்
கொங்கை என்னும் குவட்டிடை இழிதரப்
பொங்குபுனல்§ காட்டி யோனே கங்கை
வருவிசை தவிர்த்த வார்சடைக் கடவுள்
அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
எல்லை இரும்பலி சொரியும்
கல்லோ சென்ற காதலர் மனமே.

இச்செய்யுள், பருவம்கூறு பருவரல் என்னும் துறையின் பாற்படும்.

---

*கோபம் - இந்திரகோபம் என்னும் பூச்சி. †கனம் - மேகம். ‡ஆரம் - சந்தனம். §பொங்குபுனல் - வெள்ளம்.

வெண்பா

மனமாலுருதே மற்றென் செய்யும் வாய்ந்த
கனமால் விடையுடையோன் கண்டத்து—இனமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் *சோர்ந்தனசங் கூர்ந்தனபீர்†
கான்றன நீர் ஏந்திழையாள் கண்.

இச்செய்யுள், கார்கண்டிரங்கல் என்னும் துறை; தோழிக்கூற்று.

கலித்துறை

கண்ணார் நுதல்எந்தை காமரு கண்டமென இருண்ட
‡விண்ணார் உருமொடு மேலதுகீழது §கொண்டல்விண்ட
மண்ணார் மலைமேல் இமையிலாலுற§ மானனைய
பெண்ணா மிவள்இனி என்னுக்கழியும் பிரிந்துறைவே.

ஆதியுலா

திருக்கயிலாய ஞானஉலா என்னும் ஆதியுலாவையும் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றினார். அதன் ஒரு பகுதியை மாதிரிக்காகக் காட்டுவோம்.

கலிவெண்பா

" திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்கு
அருமாலுற அழலாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்—முறைமையால்
ஆழாதே ஆழ்ந்தான் அகலாது அகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான்—சூழொளிநூல்

*சோர்ந்தனசங்கு - வளைகழன்றது. †ஊர்ந்தனபீர் - பசலை பூத்தது.

‡விண் - மேகம். உருமு - இடி. §கொண்டல் - கீழ்க்காற்று.

§ஆலுற - ஆட.

ஓதாதுணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகாது அணுகியான்—ஆதி
அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே—பரனாய
தேவரறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவியவாறே விதித் தமைத்தான்—ஓவாதே
எவ்வுருவில் யாரொருவர் உள்குவா ருள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்—எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய எம்பெருமான்—ஆனாத
சீரார் சிவலோகந் தன்னாட் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயி லுள்ளிருப்ப—ஆராய்ந்து
செங்கணமரர் புறங்கடைச் சென்றீண்டி
எம்பெருமான் எங்கட்கு அருளென்ன—அங்கொருநாள்.''

## திருவாசகம்

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்திலிருந்து சில செய்யுள்களைக் காட்டுகிறோம்.

'' நமச்சிவாய வாஅழ்க ! நாதன்தாள் வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க !
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க !
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !''*

---

* சிவபுராணம்.

"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்"*

"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப் புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"†

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம்—உந்தீபற!
ஒருங்குடன் வெந்தவாறு—உந்தீபற!"‡

"பாரோர் விண்ணோர் பரவித்தும்
பரனே! பரஞ்சோதி!
வாராய்; வாரா உலகந்தந்து
வந்து ஆட்கொள்வானே!
பேராயிரமும் பரவித் திரிந்து
எம்பெருமான் எனஏத்த,
ஆரா அமுதே! ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே!"§

"வாள்உலாம் எரியும் அஞ்சேன்
வரை புரண்டிடினும் அஞ்சேன்
தோளுலாம் நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்

---

*திருவெம்பாவை 14. †திருக்கோத்தும்பி 3.
‡திருவுந்தியார் 1. §ஆசைப்பத்து 7.

தாள தாமரைகள் ஏத்தி
 தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
 அம்ம! நாம் அஞ்சுமாறே"*

"கற்றறியேன் கலைஞானம்
 கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்
 வாக்கியலால் வார்கழல்வந்து
உற்றிருமாந்து இருந்தேன்
 எம்பெருமானே! அடியேற்குப்
பொன்தவிசு நாய்க்குஇடும்
 ஆறன்றே நின்பொன் அருளே"†

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும்? காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை?
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானன் சாழலோ!"‡

"உற்றாரை யான் வேண்டேன்,
 ஊர்வேண்டேன்; பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்;
 கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந் துறையும்
 கூத்தாஉன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக்
 கசிந்துருக வேண்டுவனே"§

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் அன்பமைத்து
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து"§

---

*அச்சப்பத்து 6. †திருவசநவு 5. ‡திருச்சாழல் 1.
§திருப்புலம்பல் 3. §திருவெண்பா 11.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா ஆர்பெறுவார் அச்சோவே !"*

திருக்கோவையார்

கீழ்க்கண்ட செய்யுள்கள் மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையாரிலிருந்து எடுக்கப்பட்டவை.

"திருவளர் தாமரை சீர்வளர்
காவிகளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்
கொண்டோங்கு தெய்வ
மருவளர் மாலையோர் வல்லியினொல்கி
யனநடை வாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே"†

"தெங்கம்பழம் கமுகின்குலை சாடிக்கதலி செற்றுக்
கொங்கம் பழனத்தொளிர் குளிர்நாட்டினை நீயுமைகூர்
பங்கம்பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந்திரிதரு சீறூர்ச் சிறுமிஎன்றே மொழியே"‡

"மாவை வந்தாண்டமென் னோக்கிதன்
பங்கர் வண்டில்லை மல்லற்
கோவை வந்தாண்ட செவ்வாய்க்
கருங்கண்ணி குறிப்பறியேன்
பூவைதந்தாள் பொன்னம் பந்துதந்தாள்
என்னைப் புல்லிக்கொண்டு
பாவைதந்தாள் பைங்கிளி யளித்தாள்
இன்றென் பைந்தொடியே"§

*அச்சோப்பதிகம் 1. †திருக்கோவையார் 1.
‡திருக்கோவையார் 100. ‡ ,, 200.

" இருந்துதி என்வயிற் கொண்டவன்யான்
எப்பொழுதும் உன்னும்
அருந்திசை முகன் மாற்கரியோன்
தில்லைவாழ்த்து நர்போல்
இருந்துதி வண்டனவா லெரிமுன்
வலஞ்செய்தி டப்பால்
அருந்துதி காணு மளவுஞ்
சிலம்பன் அருந்தழையே "*

" காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணர்ஒக்கல்
சீரணி சிந்தாமணி யணிதில்லைச் சிவன் அடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தம் சங்கநிதி விதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன் மற்றியாவர்க்கும் ஊதியமே "†

* திருக்கோவையார், 300.
† " 400.

# 7. தேவார ஆராய்ச்சி

## சொல்லோவியம்

ஓவியப் புலவன் பலவித நிறங்களைக்கொண்டு பலவிதக் காட்சிகளையும் கருத்துக்களையும் படம் எழுதிக் காட்டுகிறான். சிற்பக் கலைஞன், சுதை மரம் உலோகம் முதலிய பொருள்களைக் கொண்டு உருவக் காட்சிகளைச் சிற்பக் கலையில் அமைத்துக் காட்டுகிறான். நாவன்மை படைத்த காவியப் புலவன், தான் கண்ட காட்சிகளையும் கருதிய எண்ணங்களையும் சொற்களில் அமைத்துச் செய்யுளாகவும் வசனமாகவும் தருகிறான். ஓவியப் புலவனும் சிற்பக் கலைஞனும் அமைத்துக் காட்டிய ஓவியங்களையும் சிற்ப உருவங்களையும் கண்களால் கண்டு மகிழ்கிறோம். ஆனால், காவியப் புலவன் அமைத்துக் கொடுத்த சொல்லோவியங்களைப் படித்து அல்லது பிறர் படிக்கக் கேட்டு, மனக் கண்ணில் கண்டு மகிழ்கிறோம்.

சிறந்த செந்தமிழ்ப் புலவராகிய சுந்தரமூர்த்தி நாயனார், தமது தேவாரப் பதிகங்களில் சொல்லோவியங்களை அமைத்துக் காட்டுகிறார். அவற்றில் சில இயற்கைக் காட்சிகளாக மிளிர்கின்றன; சில இயற்கையும் செயற்கையும் அமைந்த காட்சிகளாக விளங்குகின்றன. அச் சொல் ஓவியக் காட்சிகளிற் சிலவற்றைக் காண்போம்.

கானாட்டு முள்ளூர் இயற்கை வளம் நிறைந்த அழகான ஊர். கொள்ளிடம் என்னும் ஆறு பாய்வதனால்தான் அது நீர்வளமும் நிலவளமும் செழித்திருக்கிறது. சில இடங்களில் தாழைப்புதர் வளர்ந்து தாழம்பூவின் மணம் கமகம வென்று கமழ்கிறது. அருகில் உள்ள கழனிகளில் கருங்குவளை மலர்ந்து கண்ணுக்கினிய காட்சி யளிக்கிறது. தாமரைக் குளத்திலே செந்தாமரையும் வெண்டாமரையும் பசுமையான இலைகளுக்கிடையே வெண்மையாகவும்

செம்மையாகவும் மலர்ந்திருக்கின்றன. அன்னப்பறவைகள் தாமரை மலர்களின் மேலே ஏறி விளையாடுகின்றன. வயல்களில் நெற்பயிர் கரும்புபோலச் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. இன்னொருபுறம் பாக்கு மரங்கள் அடர்ந்த கமுகந் தோப்புகளும் தென்னந் தோப்புகளும் காணப்படுகின்றன. அத்தோப்புகளில் கமுகம்பாளையும் தென்னம்பாளையும் வெடித்து மலர்ந்த பூக்களில் காளைவண்டுகள் தேன் குடித்து ரீங்காரம் செய்து பாடுகின்றன. மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. தெளிந்து பாயும் குளிர்ந்த ஆற்று நீரிலே இளமங்கையர் சிலர் நீரைக்குடைந்து ஆடிக் களிக்கிறார்கள்.

அதோ பாருங்கள்! பச்சைப் பசேலென்றிருக்கும் நெல் வயல்கள். அதற்கப்பால், செழிப்பாக வளர்ந்துள்ள கரும்புச் சோலைகள். கரும்புச்சோலைகளுக்கப்பால் வானுற உயர்ந்து வளர்ந்து பச்சைப் பசேலென்றிருக்கும் மூங்கிற் காடு. இந்தக் கண்ணுக்கினிய இயற்கைக் காட்சியைக் கண்டு களியுங்கள்.

ஆற்றங்கரையை நோக்குங்கள். நீர்ப்பறவைகளான நாரைகளும் கொக்குகளும் நீரில் ஓடி ஆடுகின்றன. கெண்டை மீன்களும் கயல்மீன்களும் துள்ளி விளையாடுகின்றன. ஆற்றங்கரை ஓரத்தில் பூத்துள்ள குவளை மலர்களில் மொய்க்கும் வண்டுகள் ரீங்கார ஓசை செய்து பண் பாடுகின்றன.

"முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறும் முருகுவிரிபொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளரும் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே"

"அரும்புயர்ந்த அரவிந்தத் தனிமலர்கள் ஏறி
அன்னங்கள் விளையாடும் அகன்றுறையின் அருகே
கரும்புயர்ந்த பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே"

" பாளைபடு பைங்கமுகின் சூழல் இளந்தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயிலாலும் வளர் சோலைக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே "

" குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியும் துறைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடும் கொள்ளிடத்தின் கரை
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக் [மேல்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே "

" தழைதழுவு தண்ணிறத்த செந்நெலதன் அயலே
தடந்தாள மென்கரும்பின் தாழ்கிடங்கின் அருகே
கழைதழுவித் தேன்தொடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே "

" தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக் கெண்டை மிளிர்ந்துகயல் துள்ளிவிளையாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே "

சீபர்ப்பதம் என்பது ஸ்ரீபர்வதம் என்னும் மலை. அங்குள்ள குறிஞ்சி நிலத்துத் தினைப்புனக் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டுகிறார் சுந்தரர். தினைப்புனத்தில், தினைப் பயிர் விளைந்து கதிர் முற்றியிருக்கின்றன. கிளிகள் கூட்டமாக வந்து தினைக்கதிரைக் கொத்தித் தின்கின்றன. குறச் சிறுமி பரண்மேல் இருந்து கிளிகளை ஓட்டிக் காவல் காக்கிறாள். தட்டையை ஒலித்துக் கிளிகளைத் துரத்துகிறாள்.

" மன்னிப் புனங்காவல் மடமொழியாள் புனங்காக்கக்
கன்னிக் கிளிவந்து கவைக்கோலிக் கதிர்கொய்ய
என்னைக்கிளிமதியா தென்று எடுத்துக் கவண்ஒலிப்பத்
தென்னற்கிளி திரிந்தேறிய சீபர்ப்பத மலையே "

" மையார் தடங்கண்ணாள் மடமொழியாள் புனங்காக்கச்
செவ்வே திரிந்தாயோ எனப்போகாவிட விளிந்து
கைபாவிய கவணால் மணிஎறிய விரிந்தோடிச்
செவ்வாயினகிளி பாடிடுஞ் சீபர்ப்பத மலையே "

தினைப்புனங் காக்கும் குறப்பெண் ஒருத்தி கிளிகளிடத்தில் அன்புள்ளவள். "பாவம்! கிளிகளும் கொஞ்சம் தினையைத் தின்னட்டுமே" என்று சிறிது கருணை காட்டுகிருள். கிளிகளோ, இவள் நம்மைத் துரத்தவில்லை. இவள் வயலிலேயே தினை தின்போம் என்று கருதிக் கூட்டங் கூட்டமாக வந்து தினையைக் கொத்தித் தின்றன. அப்போது அவள் அவற்றைத் துரத்துகிருள். இதனைச் சுந்தரர் சொல்லோவியம் தீட்டுகிருர்.

" அப்போது வந்துண்டீர்களுக் கழையாது முன்னிருந்தேன்
எப்போதும் வந்துண்டால் எமைஎமர்கள் சுழியாரோ
இப்போதுமக் கிதுவே தொழிலென் ருேடியக் கிளியைச்
செப்பேந் திளமுலையாள் எறி சீபர்ப்பத மலையே "

மகோதைப் பட்டினம் என்னும் கொடுங்கோளூர் மலையாள நாட்டுக் கடற்கரையில் இருக்கிறது. மகோதையை அடுத்த அஞ்சைக்களத்தப்பன் கோயிலுக்குச் சென்ற சுந்தரர் கடற்கரைக்குச் சென்று கடற் காட்சியையும் அருகில் உள்ள தோட்டங்களின் காட்சியையும் கண்டார். கண்டு, அக்காட்சியைச் சொல் ஓவியமாகத் தீட்டுகிருர்.

" மலைக்கு நிகர் ஒப்பன வன் திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அலைக்குங் கடலங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே "

" மழைக்கு நிகர்ஒப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அழைக்குங் கடலங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே "

" உரவத்தொடு சங்கமோடிப்பி முத்தங்கொணர்ந்
தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அரவக் கடலங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே "

" நோக்கு நிதியம் பல எத்தனையும் கலத்தில்
புகப்பெய்து கொண்டேற நுந்தி
ஆர்க்குங் கடலங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே "

" வடிக்கின்ற போல்சில வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டடிக்குங் கடலங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்தப்பனே "

அடர்ந்த பனந்தோப்புகளும் தென்னந் தோப்புகளும் தூரப்பார்வைக்கு வெகு அழகான காட்சியாகும். இயற்கைக் காட்சியில் மனத்தைச் செலுத்துவோருக்கு இக் காட்சிகள் கண்ணுக்கினிய தோற்றம் அளிப்பன. சுந்தரர் இக்காட்சிகளைக் கானாட்டு முள்ளூரிலும், கடற்கரையை யடுத்த திருமறைக் காட்டிலும் கண்டு மகிழ்ந்தார். மகிழ்ந்து சொல்லோவியம் வரைந்து காட்டுகிறார்.

" கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்குமலி சோலைக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே "

" தெங்கங்களும் நெடும்பெண்ணையும் பழம்வீழ் மணற்படப்
சங்கங்களும் இலங்கிப்பியும் வலம்புரிகளும் இடறி [பைச்
வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும் மறைக்காடே"

சுந்தரர் நம்மை இன்னொரு தோப்புக்கு அழைத்துக் கொண்டு போகிறார். அத்தோப்பு வெஞ்சமாக்கூடல் என்னும் ஊரில் இருக்கிறது. அங்கு ஒருபுறம் கமுகம் தோப்பு. பாக்கு மரங்கள் வரிசை வரிசையாக உயர்ந்து வளர்ந்து குலைகளைத் தாங்கியுள்ளன. அதற்கருகில் அடர்ந்து உயர்ந்த தென்னந்தோப்பு. அதற்குப் பக்கத்தில் பெரிய பலாத்தோப்பு. இயற்கைக் காட்சியில் திளைக்கும் மன முடையவர் இவற்றைக் கண்டு மகிழுங்கள்.

" நிரையார் கமுகும் நெடுந்தாள் தெங்கும்
குறுந்தாள் பலவும் விரவிக் குளிரும்
விரையார் பொழில்சூழ் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே."

என்று படம் வரைந்து காட்டுகிறார்.

இதோ குரங்குகளின் காட்சியைக் காணுங்கள். வாழைத்தோப்பில் வாழைப்பழம் குரங்குக்குக் கிடைத்தது. ஒருவரும் இல்லாத அமைதியான இடத்தில் தின்ன விரும்பி, தாழைப் புதரின்கீழ் சென்று அமர்ந்து தின்கின்றது. இக் காட்சியைத் திருமறைக் காட்டில் கண்டார்.

" தாழைப்பொழில் ஊடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக் குரங்குண்ணும் மறைக்காடே "

திருவாஞ்சியம் என்னும் ஊர். அங்குக் குரங்குகள் கூடி வாழைப்பழத்தையும் பலாச் சுளைகளையும் கொண்டு வந்து பங்கு போட்டுக்கொண்டன. பிறகு, அவை என் கூறு சிறிது என் கூறு சிறிது என்று சண்டை செய்து வாழை மட்டையினால் அடித்துக் கொண்டனவாம்.

" வாழையின் கனிதானும் மதுவிம்மு
வருக்கையின் சுளையும்
கூழைவானரம் தம்மில் கூறிதுசிறிது
எனக் குழறித்
தாழைவாழையந் தண்டால் செருச்செய்து
தருக்கு வாஞ்சியம் "

நீர்வளத்தின் மிகுதியினாலே வாளைமீன், மலங்கு மீன், கயல் மீன், வரால் மீன், சேல் மீன் முதலிய மீன்களைக் கூறுகிறார். அந்நீர் நிலைக்கு அருகில் உள்ள கமுது முதலிய தோப்புகளையும் கூறுகிறார்.

" வாளைபாய மலங்கு இளங்கயல் வரிவரால் உகளும் கழனிப்
பாளைஒண் கமுகம் புடைசூழ் திருப்பனையூர் "

சேற்றில் நடந்து சென்ற எருமைகள் நீரிலே சென்று படிய, நீரில் இருந்த சேல் மீன்களும் வாளை மீன்களும் அஞ்சிப் பாய்ந்தோடின.

**" செங்கண் மேதிகள் சேடெறிந்து**
**தடம்படிதலில் சேலினத்தொடு**
**பைங்கண் வாளைகள் பாய்பழனத் திருப்பனையூர் "**

எருமைகள் குளத்தில் சென்று வீழ்ந்து நீரில் படிந்தன. அதனால், கயல் மீன்கள் கூட்டமாக ஓடித் தாமரை மலர்களின்கீழ் ஒளிந்தன. அதனால், பூக்கள் அசைய, அவற்றில் மொய்த்திருந்த வண்டுகள் பறந்து சுழன்றன. இதனைக் கூறுகிறார்.

**" கருமேதி புனல் மண்டக் கயல்மண்டக்**
**கமலம் களிவண்டின் கணம்இரியும்**
**கலையநல்லூர் காணே "**

தாமரைக் குளத்தில் வாளைமீன் துள்ளிக் குதித்தது. தாமரைப் பூவின்மேல் நண்டு படுத்து ஓய்வு கொண்டது. இவ்வியற்கைக் காட்சியைக் கூறுகிறார்.

**" துள்ளிவெள்ளி வாளைபாய அயல்தோன்றும்**
**தாமரைப் பூக்கள்மேல்**
**புள்ளி நள்ளிகள் பள்ளிகொள்ளும்**
**புறம்பியந் தொழப் போதுமினே "**

தாமரைப் பூவில் நண்டு படுத்து உறங்க, அந்தப் பூவில் மொய்க்கும் வண்டுகள் பாடுவது, இசை பாடித் தூங்கவைப்பது போல இருந்தது.

**" பொள்ளலங் கழனிப் புதுவிரை மலரில்**
**பொறிவண்டு இசைபாட**
**அந்நலங் கமலத் தவிசின் மேலுறங்கும்**
**அலவன்வந் துலவிட அண்ணல்**
**செந்நெலங் கழனிசூழ் திருமுல்லை வாயில் "**

புன்னை மரத்தில் மலர்கள் அரும்பிப் பூத்து மலர்ந்து கொத்துக் கொத்தாய் இருக்கின்றன. அரும்புகள் முத்துப் போல் திரண்டு வெண்மையாக இருக்கின்றன. பூத்த மலருக்குள் மகரந்தம், பொன் பூத்ததுபோலக் காட்சியளிக்கிறது. பழைய பூக்களின் நடுவில் உள்ள கரு, பவளம் போலச் சிவந்து காணப்படுகிறது. புன்னை மலரை ஊன்றிப் பார்த்தவருக்கு இந்த இயற்கையும் உவமையும் நன்கு புலப்படும். இதனைச் சுந்தரர் கூறுகிறார்.

" கரும்புன்னை வெண்முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில் சூழ் கலைய நல்லூர்காணே "

காவி, குவளை, தாமரை, கழுநீர் முதலிய பூத்துள்ள குளத்தில் அன்னப்பறவைகள் விளையாடும் இயற்கைக் காட்சியைக் காட்டுகிறார் :

" காவியும் குவளையும் கமலம் செங்கழுநீரும்
மேவிய குருகாவூர் "

" ஒப்புடை ஒளிநீலம் ஓங்கியமலர்ப் பொய்கை
அப்படி அழகாய அணிநடை மடஅன்னம்
மெய்ப்படு குருகாவூர் "

## திருக்குறளும் நாலடியாரும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில், திருக்குறள் கருத்துக்களையும் நாலடியார் கருத்துக்களையும், இடையிடையே கூறுகிறார். திருநெல்வாயில் திருவரத்துறை தேவாரத்தில் இதனை நன்கு காணலாம். அவற்றைக் காண்போம்.

" நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தாரென்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்ற தறிந்து அடியேன் தொடர்ந்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே "* [தேன்

* திருநெல்வாயில் அறத்துறை 1.

இச்செய்யுள்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்னும் திருக்குறளை நினைவுறுத்துகிறது. அன்றியும்,

"புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லான்"

என்னும் நாலடியார் செய்யுளையும் நினைவுறுத்துகிறது.

"வறிதே நிலையாத விம்மண் ணுலகில்
நரனாக வகுத்தனை நானநிலையேன்
பொறிவாயிலி வைந்தனையும் அவியப்
பொருதுன் அடியே புகுஞ்சூழல் சொல்லே"*

இச்செய்யுள்,

"நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்னும் திருக்குறளையும்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்னும் திருக்குறளையும், "பொறிவாயி லைந்தவித்தான்" என்னும் திருக்குறள் சொற்றொடரையும் நினைவுறுத்துகிறது. மேலும்,

"துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்"

என்னும் நாலடியாரையும் நினைவுறுத்துகிறது.

---

* திருநெல்வாயில் அறத்துறை 2.

" மற்றே லொரு பற்றில னெம்பெருமான்
வண்டார் குழலாள் மங்கை பங்கினனே
அற்றார் பிறவிக்கடல் நீந்தியேறி யடியேன்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே "*

இச்செய்யுள்,

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் "

என்னும் திருக்குறளை நினைவுறுத்துகிறது.

" ஓடுபுனற் கரையா மிளமை யுறங்கி
விழித்தா லொக்கு மிப்பிறவி
வாடியிருந்து வருந்தல் செய்யா தடியேன்
உய்யப்போவதோர் சூழல் சொல்லே "†

இச்செய்யுள்,

" உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

என்னும் குறளை நினைவுறுத்துகிறது.

" மகரக் குழையாய் மணக் கோலமதே
பிணக் கோலமதாம் பிறவி யிதுதான்
அகரமுதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே "‡

இச்செய்யுள்,

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு "

என்னும் திருக்குறளைக் கூறுவது காண்க.

---

* திருநெல்வாயில் அறத்துறை 3. † திருநெல்வாயில் அறத்துறை 4. ‡ திருநெல்வாயில் அறத்துறை 7.

## பழமொழிகளும் உவமைகளும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரப் பதிகங்களில் பழமொழிகளையும் உவமைகளும் கூறுகிறார். அவைகளை இங்கு ஆராய்வோம்.

"ஆதன் பொருளானேன் அறிவில்லேன் அருளாளா"*

இது, திருநாவுக்கரசர் திருவாரூர்ப் பழமொழிப் பதிகத்தில் (5) கூறிய "ஏதன் போர்க் காதனாய் அகப்பட்டேனே" என்னும் பழமொழியை நினைவூட்டுகிறது.

"பிண்டஞ் சுமந் தும்மொடுங்கூட மாட்டோம்
பெரியாரோடு நட்பினி தென்றிருந்தும்
அண்டங் கடந்தப் புறத்து மிருந்தீர்
அடிகேளுமக் காட்செய வஞ்சுதுமே"†

இதில், "பெரியாரொடு நட்பு இனிது" என்னும் பழமொழி வந்துள்ளது.

"வாணுர் நுதலார் வலைப்பட்டு அடியேன்
பலவின் கனியீயந்து போல்வதன் முன்
ஆணொடு பெண்ணுமுரு வாகி நின்றாய்
அடியேனுய்யப் போவதோர் சூழல்சொல்லே"

"பலாப்பழத்தை ஈ மொய்ப்பதுபோல்" என்னும் பழமொழி இதில் கூறப்படுகிறது.

"குறைக்கும் பயிர்க்கோர் புயலே ஒத்தியால்
அடியார் தமக்கோர் குடியே யொத்தியால்"‡

"வாடிய பயிருக்கு மழை பெய்தாற் போல" என்னும் உவமை கூறப்பட்டது.

---

*வெண்ணெய்நல்லூர் 4. †கோத்திட்டையுங் கோவலூரும் 2. ‡திருவஞ்சைக்களம் 4.

" எவ்விழுந் திடம்பார்க்கு மாகிலும்
ஈக்கும் ஈகில ஞகிலும்
வள்ளலே எங்கள் மைந்தனே யென்று
வாழ்த்தினுங் கொடுப்பாரிலை "

" எச்சிற் கையாலும் ஈ ஓட்டமாட்டான் " என்னும் பழமொழி இதில் வந்துளது.

" பஞ்சியிடப் புட்டில் கீறுமோ பணியீரருள்
முஞ்சியிடைச் சங்கமார்க்குஞ்சீர் முதுகுன்றரே "*

"பஞ்சியிடப் புட்டில் கீறுமோ?" என்னும் பழமொழி.

" வற்கென் றிருத்திகண்டாய் மனமென்னொடு
சூளறும் வைகலும்
பொற்குன்றஞ் சேர்ந்ததோர் காக்கை
பொன்னுமதுவே புகல் "†

சுந்தரமூர்த்தி நாயனாரின் நண்பரான சேரமான் பெருமாள் நாயனார், தமது பொன்வண்ணத் தந்தாதியில்,

" காய்சினவாளை வளரும் கநகமலை யருகே
போயின காக்கையுமன்றே படைத்தது பொன்வண்ணமே "

என்று இக்கருத்தையே கூறியது ஈண்டுக் கருதத்தக்கது.

இதில், பொன்மலையைச் சேர்ந்த காக்கையும் பொன்னிறமாகும் என்னும் பழமொழி கூறப்பட்டது.

" பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பனுகிலும் திருவடிப் பிழையேன் "‡

" பிழுக்கை வாரியும் பால்கொள்வர் " என்னும் பழமொழி.

" சுழித்தலைப் பட்டநீரது போலச் சுழல்கின்றேன்
சுழல்கின்றதென் னுள்ளம் "§

---

* திருமுதுகுன்றம் 1. † திருப்புனவாயில் 4.
‡ திருவொற்றியூர் 1. § திருவொற்றியூர் 5.

" நீர்ச்சுழியில் அகப்பட்ட துரும்புபோல " என்னும் உவமை.

" அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே
அத்தா என்னிடர் யார்க்கெடுத் துரைக்கேன் "*

" உள்ளங்கை நெல்லிக்கனிபோல" என்னும் உவமை.

" மகத்திற் புக்கதோர் சனியெனக் காணுய்
மைந்தனே மணியே மணவாளா "†

சூரியனை இராகு தொடர்ந்தது போல என்பது பொருள். சங்கிலியாரை விட்டுப் பிரிவதில்லை என்று சூளுரைத்துப் பின் அதனை மறந்து திருவாரூர் சென்ற போது, சுந்தரருக்குக் கண் பார்வை மறைந்தது. கண் பார்வையை மறைத்தபடியினுலே " மகத்திற் புக்கதோர் சனிஎனக் காணுய் " என்று உவமை கூறுகிருர்.

*திருவொற்றியூர் 3.
† ,, 8.

# 8. நந்திவர்மன் காலத்துச் சாசனங்கள்

## 2-ஆம் ஆண்டு

வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர் தாலுகா, பள்ளி கொண்டை கிராமத்து நாகநாதேசுவரர் கோவில் முன் மண்டபத்துத் தூணில் உள்ள சாசனம்.

நந்தி போத்தரையரின் இரண்டாம் ஆண்டில் எழுதப் பட்ட இச்சாசனம், வித்தூரை ஆண்ட, அமனி கங்கரையர் மகன் செல்வ வாணரையன் என்பவர் முகமண்டபத்தைக் கட்டியதைக் கூறுகிறது. இப்போதைய பள்ளிகொண்டை கிராமத்தின் பழைய பெயர் வித்தூர் என்பது இச்சாசனத் தினால் தெரிகிறது.

### சாசன வாசகம்*

1. ஸ்ரீ நந்திப் போ
2. த்தரயர்க்கு யா
3. ண்டு இரண்டாவது
4. அமனி கங்கரையர்
5. மகன் செல்வவா
6. ணரயன் வித்தூ
7. ராண்டு செய்வித்
8. தமுக மண்டக
9. ம்.

## 3-ஆம் ஆண்டு

புதுக்கோட்டை குன்னண்டார் கோவில் கிராமத்துப் பர்வதகிரீஸ்வரர் கோவிலின் தென்கோடியில் உள்ள சாசனம்.

நந்திவர்மனின் 3-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இச் சாசனம், மீபுழை நாட்டு வடுவூர் கணவதிமான் என்பவர் 200 பேருக்குத் திருவாதிரையில் உணவு கொடுக்க நெல் தானம் செய்ததைக் கூறுகிறது.

---

*S. I. I. Vol. XII. No. 45. (A. R. No. 475 of 1925)

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ || கோநந்திப் போத்த
2. ரையர்க்கு யாண்டு 3-ஆவது மீ
3. புழை நாட்டு வடுவூர்க் கணவதிமா
4. ன்ஞயின பகைச்சந்திர விசைஅ
5. ரையன் றிருவாதிரை நான்றுஅ
6. ட்டழிய வைத்த அரிசி உா இரு
7. நூற்றுநாழி நூற்துவர்க்கு ||.

3-ஆம் ஆண்டு

தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகா, கிளியனூர் வைகுண்டவாசப் பெருமாள் கோயிலின் தென் புறச் சுவரில் உள்ள சாசனம் :

திகைத்திறல் கிராமத்தார், ஒய்மாநாட்டுக் கிளிஞெலூரில் திகைத்திறல் விஷ்ணுக்கிருகம் என்னும் கோயிலைக் கட்டி, விளக்குக்காக 300 ஆடும், திருவமுதுக்காக் இரண்டு நிலமும் தானம் செய்ததைக் கூறுகிறது.

சாசன வாசகம்†

1. ஸ்வஸ்தி ஸ்ரீ || கோவிசைய நந்திவிக்கிரம பற்மக்கி யாண்டு மூன்ருவது ஒ
2. ய்மாஞட்டு கிளிஞெலூர் திகைத்திறல் விஷ்ணுக்கிருகம் எடு
3. ப்பித்த திகைத் திறலார் திருவிளக்குக்கு வைத்த ஆடு முந்நூறும் இவரே திருவமு
4. துக்கு வைத்த ஸ்ரீ கோயிலின் கீழை செறுவிரண்டும் இறையிலி. இத்தன்மம் ரக்ஷித்தார் ஸ்ரீ பாதம் என் றலைய் மேலது.

---

*S. I. I. Vol. XII. No. 46. (A. R No. 347 of 1914)
†S. I.I Vol XII. No 47. (A. R. No. 158 of 1919)

## 4-ஆம் ஆண்டு

திருச்சி மாவட்டம், லால்குடி, சப்தரிஷீசுவரர் கோவில் வடபுறச் சுவரில் உள்ள சாசனம். நந்திப் போத்தரை யரின் 4-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. லால்குடியின் பழைய பெயர் திருத்தவத்துறை என்பதும் சப்தரிஷீசு வரரின் பழைய பெயர் திருத்தவத்துறை மகாதேவர் என் பதும் இச்சாசனத்திலிருந்து அறியப்படுகின்றன.

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ. யாண்டு 4-வதின் எதிராமாண்டு இடை யாற்று நாட்டுத் திருத்தவத்துறை மஹாதேவர்க்கு தேள்ளாறெறிந்த நந்திப்போத்தரை
2. யர் குடுத்த பழங்காசு ௬0. இவ்வறுபது காசும் இஞ் ஞாட்டு நல்லிமங்கலத்துச் சபையோம் இவ் வறுபது காசும்திருத்தவத்துறை மகாதேவர்
3. ரிடை கொண்டு நாராய நாழியால் நிசதி நாழிநெய் ஒரு நொந்தா விளக்கு சந்திராதித்தவல் இரவும் பகலும் எரியக் கொண்டு சென்று அளப்போ மானே
4. ம் நல்லிமங்கலத்து சபையோம் திருத்தவத்துறை மஹா தேவர்க்கு அளவோமாயில் முட்டில் முட்டி ரட்டியும் மூலைப்பட்ட பன்மஹேஸ்வரரே
5. சபையாகவும் தனித்ததாகவும் நிலைக்கள முள்ளிட்ட தான் வேண்டுகோவினுக்கு புக்களவு இருநூற் றுப் பதினாறு காணம் தண்டமிட ஒ
6. ட்டினோம் நல்லிமங்கலத்து சபையோம். இது பன் மஹேஸ்வரர் நாற்பத்தெண்ணாயிரவரு மிரக்ஷை.

---

*Epi. Ind. Vol. XX. p. 52.

## 4-ஆம் ஆண்டு

தென்ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர் வீரட்டானேசுவரர் கோயிலில் உள்ளசாசனம்.

### சாசனம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய நந்தி விக்கிர
2. ம மருமற்கு யாண்டு நாலாவது திருக்
3. கோவலூர் திருவீரட்டாநத்து மா
4. தேவர்க்கு நந்தா விளக்கினு
5. க்கு அதிஅரையமங்கலத்து
6. திருநிலேகிழ * * * * * * *கன்ன * *
7. த்த பொன் * * * * * ம * ம * *
8. பதிநறு கழஞ்சு இப்பொ
9. ன்னுக்கு நிசதம் உரிய் நெ
10. ய் பொலியூட்டாக அட்ட வைத்தது
11. காத்தார் கய்யுழுது குடுத்து
12. இப்பொன் பன்மாயேஸ்வரரக்ஷை

## 5-ஆம் ஆண்டு

தென்ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலூகா, மணலூர்பேட்டை, காக்கா நாச்சியார் மண்டபத்தில் உள்ள சாசனம் ஒன்று, விஜயநந்தி விக்கிரவர்மரின் 5-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.† இதில், மகாதேவடிகள் என்பவர் கோவில் பூசைக்கும் விளக்குக்கும் நிலம் தானம் செய்ததைக் கூறு கிறது. மகாதேவடிகள், வாணகோவடிகள் சித்தவடவனர் என்னும் சிற்றரசரின் மகள் என்றும், வயிர மேகனரின் தங்கை என்றும் கூறப்படுகிருர்.

---

*No. 929. S. I. I. Vol. VII. A. R. No. 300 of 1902.

†Ep. Col. 469. of 1937-38.

### 6-ம் ஆண்டு

வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுகா, வெண்குன்றம். இவ்வூர் மலைமேல் உள்ள தவளகிரீசுவரர் கோவிலுக்கு அருகில் உள்ள பாறையில் எழுதப்பட்டுள்ளது.

சாசனம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ. நந்திப் போத்தரையர்க்கு யாண்டா
2. றுவது வெண்குன்றக் கோட்டத்து வெண்குன்றத்து
3. சபையோம் எம்மூர் மலைமேற் படாரரை நொ
4. க்கத்தெல்லா நெல்லும் ஐப்பசியும் பொன்னும்
5. நெய்யும் எப்பேர்ப்பட்டதும் நெல்வாயிலிலிருந்து
6. வாழும் தொசியார்க்கு விற்று விலையாவரணம் செய்துகு
7. டுத்தோம் வெண்குன்றத்து சபையோமிதன்றென்னே
8. ம் உண்டிகையும் பட்டிகையும் காட்டாமேய் நிலைக்காத்
9. து முன்பு நிற்க வெய்மெய் வெருபிரங்
10. காணமிட வொட்டிக் குடுத்தோம் இத்தர்ம்ம
11. த்தை இலக்கித்தானடி என்றலைமேலன.

### 6-ம் ஆண்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுகா, திருவெள்ளறைக் கிராமத்து ஜம்புநாதசுவாமி கோயிலுக்கு முன்புள்ள கல்லில் எழுதப்பட்டுள்ள சாசனம்.

பாரத்வாஜ கோத்திர பிரஃமாக்ஷத்ர குலத்து ஸ்ரீ தந்தி நந்திவர்மரின் 6-ஆவது ஆண்டில் எழுதப்பட்ட இது, செல்விக்கோமான் மல்லவான் என்பவரைக் கூறுகிறது. இச்

*No. 80, S. I. I. Vol. VII. A. R. 73 of 1900.

சாசனம் செய்யுளால் ஆனது. இதனைப் பாடியவர் பெருங்காவிதி சடையன்பள்ளி என்பவர். இந்தச் சாசனத்தின் நடுப்பாதியைப் பிற்காலத்தவர் செதுக்கிவிட்டபடியால், இதன் மத்திய பகுதியின் எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ. பாரத்வ..........லக ப்ரங்மாக்ஷத்ர குலோத்பவ
2. ல்லவ மஹாராஜ.........ரமேஸ்வரநாகிய ஸ்ரீ நந்திந
3. ந்திவர்மற்குய.........ருவது திருவெள்ளறைப
4. ரிடையார் பிரம.........ல்லவ மாமறைத் தொன்றி
5. வனிவேந்தன்.........ள்மாற்பிடுகிளங்கோவேளா
6. ன் சாத்தன் செ.........தன் மாமன் பரசிராமன்
7. திருமருமான் பெருவெ......செல்லிக்கோமான்மல்ல
8. வாங்தோண்மறவ.........தகுடி ராடி சூடி மாமணி
9. வெளாளரையர்தங்......லை நிரவயனந்தந்தி மங்கை
10. க்கான் உறுதியான் புகழ்வளர்க மண்ணி மேலெய்.
11. பிரம தேயத்து உறுதியான் விழுப்பேரரையன்சா
12. த்தன் மற்றவன் புகழ்நிற்க. இது பாடித்தந்தோன்
13. பெருங்காவிதி சடையன் பள்ளி.

### 6-ம் ஆண்டு

### மூன்றம் நந்திவர்மனின் வேலூர்ப்பாளையச் செப்பேடு

நந்திவர்மனின் 6-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இச்சாசனம், சோழ மகாராஜன் குமாராங்குசன் விரும்பியபடியஞ்ஞுபட்டன் என்பவர் ஸ்ரீ காட்டுப்பள்ளியில் கட்டிய சிவன்கோயில் பூசைக்காகவும் அன்னசத்திரத்துக்காகவும் ஸ்ரீ காட்டுப்பள்ளியைத் தானம் செய்ததைக் கூறுகிறது.

---

*S. I. I. Vol. XII. No. 48, A. R. No. 88 of 1910 and 529 of 1905.

விஜய நந்தி வர்மனுடைய வேலூர்ப் பாளையத்துச் செப்பேட்டுச் சாசனம்.*

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அரக்கோணத்துக்கு வடமேற்கே 7 மைலுக்கப்பால் உள்ளது வேலூர்ப் பாளையம் என்னும் கிராமம். இந்தக் கிராமத்தில், 1911-ஆம் ஆண்டில், விஜயநந்திவர்மனுடைய செப்பேட்டுச் சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. பிறகு, இச்சாசனம் சென்னை அரசாங்கத்தினால் விலைக்கு வாங்கப்பட்டுச் சென்னைக் காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. வேலூர்ப்பாளையத்திலிருந்து கிடைத்தபடியால் இது, வேலூர்பாளையத்துச் செப்பேட்டுச் சாசனம் என்று பெயர் பெற்றது.

இந்தச் சாசனம் ஐந்து செப்பேடுகளைக் கொண்டது. இச் செப்பேடுகளின் முதல் பக்கமும் கடைசி பக்கமும் தவிர, மற்ற எட்டுப் பக்கங்களிலும் எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச் செப்பேடுகள் ஏறக்குறைய $8\frac{3}{4}$ அங்குலம் நீளமும் $3\frac{1}{2}$ அங்குலம் அகலமும் உள்ளவை. ஐந்து செப்பேடுகளும் ஒரு வளையத்தில் கோக்கப்பட்டுள்ளன. வளையத்தில் வட்டமாயமைந்த இவ்வரசனுடைய முத்திரை இருக்கிறது. இவ்வரசனுடைய ஆணைக்கு அடையாளமாகிய நந்தி (எருது) படுத்திருப்பது போன்ற உருவம் இதில் செதுக்கப்பட்டுள்ளது. அரச சின்னமாகிய சாமரைகளும் மங்கலத்தைக் குறிக்கிற சுவஸ்திகம், குத்து விளக்குகளின் உருவங்களும் இதில் பொறிக்கப்பட்டுள்ளன. முத்திரையின் ஓரத்தில், பல்லவக் கிரந்த எழுத்துக்கள் தேய்ந்து அழிந்து காணப்படுகின்றன.

திருக்காட்டுப்பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட சிவன் கோயிலுக்கு அக்கிராமத்தைத் தானம் வழங்கிய செய்தியை இந்தச் சாசனம் கூறுகிறது. பப்ப பட்டாரகன் என்னும் சிறப்புப் பெயர்பெற்ற யஜ்ஞபட்டன், திருக்காட்

*S. I. I. Vol. II, p. 501—517.

டுப்பள்ளிக் கோயிலைக் கட்டினான். விஜயநந்திவர்மனுடைய ஆறாவது ஆண்டிலே, சோழ மகாராசன் குமாராங்குசன் விண்ணப்பத்தினால், அக்ரதந்த குடும்பத்தைச் சேர்ந்த இறையூர் உடையான் நம்பி என்னும் அமைச்சன் ஆணத்திப்படி, கச்சிப்பேட்டுப் பேராயன் என்னும் தச்சன் இச் செப்பேடுகளை எழுதினான்.

இச்சாசனம் வடமொழியிலும் தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது. வடமொழியில் அரசனுடைய மெய்க்கீர்த்தியை எழுதியவர் மாகேசுவரன் மனோதீரன் என்பவர்.

இந்தக் கோயில் இருக்கிற திருக்காட்டுப்பள்ளி என்னும் கிராமம், செங்கற்பட்டு மாவட்டத்துப் பொன்னேரி தாலுகாவில் இருக்கிறது. புழற்கோட்டத்து நாயறுநாட்டுக் காட்டுப்பள்ளி என்று சாசனத்தில் கூறப்படுகிறது.

### வடமொழி சாசனம்

இந்தச் சாசனத்தில் உள்ள வடமொழிச் சுலோகங்களின் தமிழாக்கம் வருமாறு :

"ஸ்வஸ்தி ஸ்ரீ. நமஸ்ஸிவாய. எங்கும் நிறைந்ததும், அறிஞரால் என்றும் உள்ளது எங்கும் இருப்பது குற்ற மற்றது என்று புகழப்படுவதும், ஆழ்ந்த பக்தியினாலே அடையப்பெறுவதும், வாக்கு மனங்களுக்கு எட்டாததும், நன்மையாகிய மங்கலத்தைத் தருவதும், அழிவற்றதும், பெரியவர்களான முனிவர்கள் புலன்களின் வேகத்தை அடக்கித் தவம் இருந்து அடைய முயற்சி செய்யப்படுவதும் ஆகிய ஒளிமயமான பரம்பொருள் நிலைபெற்ற இன்பத்தை அளிக்கக்கடவது.

சர்வாணி (பார்வதி)யின் மார்பில் திகழும் சந்தனக் குழம்புபட்டு அழகாக விளங்குகிற ஸ்ரீகண்டனுடைய திருக்கைகள், தேவர்களின் பகைவர்களுடைய மனைவிமார் அணிந்த நகைகளைக் களைந்தவை. (தேவரின் பகைவரைக் கொன்றவை.) வடவைத் தீயின் ஒளிபோல விளங்கும்

ஆயுதங்களை ஏந்தியவை ; தலையில் மாணிக்கம் உள்ள நாகங்களைக் கடகங்களாகப் பூண்டவை. அத்தகைய திருக்கைகள் எப்போதும் உலகத்தைக் காக்கக்கடவது.

தாமரை போன்ற கொப்பூழையுடையவரின் (திருமாலின்) நாபித்தாமரையில் இருந்து நான்முகன் தோன்றினான். அவனிடமிருந்து ஆங்கீரசன் தோன்றினான். அவனிடமிருந்து தேவகுரு பிருகஸ்பதி தோன்றினான். அவனிடமிருந்து சம்யூ தோன்றினான். அவனிடமிருந்து சம்யவன் (பாரத்துவாஜன்) தோன்றினான். அவனிடமிருந்து துரோணன் தோன்றினான். அவனிடமிருந்து, காமனை எரித்த சிவ சத்தாக உள்ள துரௌணி (அசுவத்தாமன்) தோன்றினான். அம்முறையே, அவனிடமிருந்து மிக்க புகழையுடையவனும் உலக முழுவதுக்கும் அதிபதியும் ஆகிய பல்லவன் தோன்றினான்.

அவனிடமிருந்து பல்லவ அரசர் பரம்பரை உண்டாயிற்று. பூமியைத் தாங்குவதனாலே களைத்துப்போன ஆதிசேஷனுடைய களைப்பைப் பல்லவ அரசர் தங்களுடைய தோள்வலியினாலே போக்கி, காத்தல் தொழிலினாலே குடிஜனங்களின் சிறு துன்பத்தையும் களைந்து உலகத்தைக் காப்பாற்றினார்கள்.

இந்தப் பரம்பரையிலே, அசோகவர்மன் முதலான மன்னர்கள் தெய்வமான பின் (இறந்த பிறகு) பல்லவகுல சூளாமணியான, இந்திரையின் (இலக்குமியின்) கணவன் (திருமால்) போன்று காளபர்த்ரி தோன்றினான்.

இவனுடைய மகனான சூதபல்லவனுக்குப் புகழ்பெற்ற வீரகூர்ச்சன் தோன்றினான். இவன், நாகர்குல அரசனுடைய மகளை மணந்துகொண்டு நாக மன்னனுடைய அரசு உரிமைகளையும் பெற்றான்.

இவனுக்கு, இக்குலத்துக்கு ஓர் சந்திரன்போல ஸ்கந்த சிஷ்யன் பிறந்தான். இவன் சத்தியசேனனிடமிருந்து இரு

பிறப்பாளரின் (பிராமணரின்) கடிகையைக் கைப் பற்றினன்.

இவனிடமிருந்து குமாரவிஷ்ணு தோன்றி, காஞ்சீ நக ரத்தைக் கைப்பற்றிப் போர்களில் வெற்றியடைந்தான். பிறகு, கடல் போன்ற சேனைகளையுடைய சோழர்களுக்கு வடவாமுகாக்கினி போன்று புத்தவர்மன் தோன்றினன்.

இவனுக்குப் பிறகு விஷ்ணுகோபன் முதலிய அனேக அரசர்கள் அரசாண்டு கழிந்த பிறகு, நந்திவர்மன் (I) பிறந்து பினகபாணியின் (சிவபெருமானின்) அருளினலே திருஷ்டி விஷம் உடைய ஆற்றல் மிக்க பாம்பை ஆட்டிவைத்தான்.

அதன் பிறகு, பகைவர் இறுமாப்பை அழித்த சிம்ம வர்மன் தோன்றினன். இவனுக்கு, உலகம் முழுவதும் வெற்றிப் புகழ்படைத்த வீரனகிய சிம்மவிஷ்ணு பிறந்தான். இவன், நெல் வயல்களையும் அழகான கமுகஞ்சோலைகளையும் அணிகலனக அணிந்த கவீரனுடைய மகளால் (காவிரி ஆற்றினல்) அழகுபெற்ற சோழர்களின் சோழநாட்டைக் கைப்பற்றினன்.

இவன் மகனகிய மகேந்திரனுக்கு, உபேந்திரன் (திரு மால்) போன்று புகழ்பெற்றவனும், பல பகைவர்களை வென்று வாதாபி நகரின் நடுவில் நின்ற அவர்களுடைய வெற்றிக் கம்பத்தை எடுத்துக் கொண்டவனுமாகிய நரசிம்மவர்மன் (I) பிறந்தான்.

இவனுக்குப் பரமேசுவரன் (I) பிறந்தான். இவன் பகைவர்களுடைய இறுமாப்பை அழித்து, சளுக்கிய அரசனுடைய சேனையாகிய இருளை ஓட்டும் சூரியனைப் போன்று விளங்கினன்.

இவனுடைய மகன் நரசிங்கவர்மன் (II). மகேந்திர னுக்கு ஒப்பான இவன், இருபிறப்பாளருக்குக் கடிகையை யமைத்து, சந்திரசேகரனுக்கு (சிவபெருமானுக்கு)க் கயிலாயமலைக்கு ஒத்ததாகக் கற்றளியை அமைத்தான்.

இவன் மகன், அரசர்களால் வணங்கப்பட்ட பரமேசுவரன் (II) என்பவன். கலியாகிய இருளைப் போக்கிய இவன் மனு முறைப்படி அரசாண்டான்.

இவனுக்குப் பிறகு பழைய மன்னர்களின் நற்குணங்கள் யாவும் பொருந்திய நந்திவர்மன் (II) தோன்றி, நான்கு கடற்பரப்பையும் ஆடையாக வுடுத்த பூமியையும் (பல்லவ) அரசகுடும்பத்தின் வளமையையும் கைக்கொண்டான்.

சேனை சமுத்திரத்தை உடையவனும், பல நற்குணங்களாகிய இரத்தினங்களுக்கு உறைவிடமான கடல் போன்றவனும் ஆகிய இவனுக்கு, உயர்ந்த மலையிலிருந்து ரேவா (நருமதை) என்னும் ஆறு தோன்றியதுபோல, பெரிய அரச குடும்பத்தில் பிறந்த ரேவா என்பவள் அரசியாக வாய்ந்தாள்.

இவ்வரசிக்கு இவ்வுலகத்திலே மகனாகப் பிறந்தவன், புகழ்வாய்ந்த தந்திவர்மன் என்னும் அரசன். இவன் உலகத்தால் (மக்களால்) விரும்பப்பெற்று, மூன்று உலகத்தையும் காப்பதே தன் நோக்கமாகக்கொண்டு, வீரம் கொடை தியாகம் என்னும் தூயகுணங்கள் ஒன்றையொன்று சேர்ந்திருக்க விரும்பி நெடுநாள் தேடிக் கடைசியில் ஒன்று சேர்ந்ததுபோல, இம்முக்குணங்களும் தன்னிடம் ஒருங்கே யமையப்பெற்று, தாமரைக்கண்ணனைப்போல (திருமாலைப் போல) விளங்கினான்.

வீரர்களுக்குத் தலைவனாய் உலகத்தை யாளும் ஆற்றல் படைத்த இந்தப் பல்லவ மகாராஜானுக்கு, முப்புரங்களை வென்ற வீரனுக்கு (சிவபெருமானுக்)குக் கௌரி மனைவியாக வாய்ந்ததுபோல, கடம்பகுல சூளாமணியான புகழ் வாய்ந்த அரசனுடைய மகளான அக்களநிம்மதி என்பவள் மனைவியாக வாய்ந்தாள்.

ஒளியை (சூரியனை) வைகறைப் பொழுது தந்தது போலவும், வியக்கத்தக்க சத்தியை (வேலை) யுடைய குமரனை அம்பிகை தந்தது போலவும், வெற்றி மிக்க சயந்

தனைச் சசி தந்ததுபோலவும், புகழ்பெற்ற நந்திவர்மனை (iii) இவள் (அக்கள நிம்மதி) தந்தாள்.

இவன் (நந்திவர்மன் iii), தன் தோள் வலியினாலும், ஆற்றலினாலும், தன் வாளினாலும் கொன்ற யானைகளின் மருப்புகளிலிருந்து வெளிப்பட்ட முத்துக்கள் நகைப்பது போலக் காணப்பட்ட போர்க்களத்திலே, தன் பகைவர்களைக் கொன்று, மற்றவர்களால் கைப்பற்ற முடியாத அரசாட்சியைக் கைப்பற்றினான்.

இந்த அரசனால் இந்த உலகம் சிறப்படைந்து விளங்கியதுபோல அவ்வளவு சிறப்பை, பூஞ்சோலைகள் இளவேனிலினாலும், உயர்குடிப் பிறந்தவர் நல்லொழுக்கத்தினாலும், மங்கையர் கற்பினாலும், செல்வந்தர் கொடையினாலும், கற்றறிந்தவர் அடக்கத்தினாலும், தாமரைகள் சூரியனாலும், கார்காலத்திற்குப் பின்னர் விளங்கும் அகன்ற வானம் சந்திரனாலும் அடையவில்லை.

கல்வியினாலும் அடக்கத்தினாலும் நிலைபெற்ற நற்குணங்களினாலும் விளங்கும் பப்ப பட்டாரகன் என்னும் சிறப்புப் பெயரையுடைய யஜ்ஞபட்டன் என்பவன், வேத சாஸ்திர சாங்கியங்களைக் கற்றதினாலும், சிவபெருமானிடத்து இடையறாத பக்தியினாலும் பேர்போனவன். உயரமான கயிலாய மலைபோல ஒரு கோயிலைச் சிவபெருமானுக்கு ஸ்ரீகாட்டுப் பள்ளி என்னும் ஊரில் கட்டினான்.

இவனுடைய (யஜ்ஞபட்டனுடைய) தந்தை, சொல்லின் செல்வி (கலைமகள்)யின் கணவனைப் (பிரமனைப்)போல தூய்மையான அறிவையுடைய சிவதாசன் என்னும் பெயரையுடையவன். இவனுடைய தாயார், நல்ல பெருங் குணங்களைப் பெற்றதனால் நிலமகளைப் போன்ற திரோணமணி என்பவள்.

இவனுடைய பாட்டன் யஜ்ஞன் என்பவன்; கலாநிதியைப்போல (சந்திரனைப்போல) கலைகளின் உறைவிடமாகவும், சுத்தமான நடத்தையுடையவனாகவும், இருபிறப்

பாளரில் சிறந்தவனாகவும், அறியாமை என்னும் இருளை ஓட்டுகிறவனாகவும், திக்கெங்கும் புகழ்பெற்றவனாகவும் இருந்தான்.

அந்தக் கடவுளாகிய சர்வனுக்கு (சிவனுக்கு)ப் பூசை வணக்கம் முதலிய ஊழியம் செய்வதற்குத் திருக்காட்டுப் பள்ளிக் கிராமத்தை அரசன் தானமாக வழங்கினான்.

தனது வீரத்தினால் விளங்கப்பட்டவனும் தனது ஈகையினால் ராதேயனுக்கு (கர்ணனுக்கு)ச் சமானமானவனும் நல்ல ஒழுக்கமுடையவனும் வீரமிக்க சோழகுலத்துக்குச் சூளாமணி போன்றவனும் ஆன குமாராங்குசன் என்னும் பெயருள்ளவன் இந்தத் தானத்தைச் செய்யக் கேட்டுக் கொண்ட விஞ்ஞாபதியாவன்.

இதற்கு ஆஜ்ஞாபதியாக இருந்தவன், அரசனுடைய அமைச்சனான, அக்ரதந்த மரபு என்னும் வேனிற்கால வானத்திலே வெண்ணிலா போன்று விளங்கும் நம்மன் என்னும் பெயருள்ளவன்.

மனம் வாக்கு காயங்களினாலே மற்றவரின் நன்மைக்காக உழைக்கிற மாகேசுவர மனோதிரன் என்பவன் இந்த மெய்க்கீர்த்தியைக் கூறினான்."

## தமிழ் சாசனம்

இவ்வாறு எழுதப்பட்ட வடமொழி சாசனத்திற்குப் பிறகு, கீழ்க்கண்ட தமிழ்சாசனம் எழுதப்பட்டுள்ளது :—

" புழற்கோட்டத்து நாயறு நாட்டுத் திருக்காட்டுப் பள்ளிப் பஞ்சவரம் ஆஇரக்காடி. இது கோவிசைய நந்திவர்ம்மற்கு யாண்டு ஆறுவது சோழ மஹாராஜர் விண்ணப் பத்தால் இரையூர் உடையான் நம்பனுணத்தியாகத் திருக் காட்டுப்பள்ளிச் சன்னக்குறி யஜ்ஞபட்ட ரெடுப்பித்த யஜ்ஞேஸ்வரத்து மஹாதேவர்க்கு நாட்டு நீங்கலாய் உட்புரவாய தேவர் தானமாகப் பெற்றதற்குப் பெற்ற பரிஹாரம் நாடாட்சியும் ஊராட்சியும் புரவு பொன்னும் திருமுக்காண

மும் வட்டியும் நாழியும் புதாழியும் தட்டு காயமும் ஈழம் பூட்சியும் இடைப்பூட்சியும் மன்றுபாடும் தரகும் தறிக் கூறையும் கூலமும் நல்லாவும் நல்லெருதும் நல்லாடும் நாடு காவலும் ஊடுபோக்கும் கல்லாணக் காணமும் குசக்காண மும் பாறைக்காணம் பட்டின சேரியும் மற்று மிவ்வூரொல்லை உள்ளகப்பட்டது கோத்தொட்டுண்ணப் பால தெல்லாம் எவ்வகைப்பட்டதும் கோக்கொள்ளப் பெருதே இவ்யஜ் ஞேஸ்வரத்து மஹாதேவரேய் கொள்ளப்பெற்றதற்குப் பெற்ற வியவஸ்தை சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும் தமனகமும் இருவேலியும் செங்கழுநீரும் உள்ளியும் நடப்பெறுவதாகவும். காவுதெங்கிடப் பெறு வதாகவும். துரவு கிணறிழித்தப் பெறுவதாகவும் பெருஞ் செக்கிடப் பெறுவதாகவும் இவ்வூ ரெல்லை உள்ளிட்ட தெங்கும் பனையும் இவர்கள் மனமின்றி ஈழவ ரேறப்பெரு தாராகவும் இவ்வகைப்பட்ட வியவஸ்தையிஞேடு யஞ்ஜேஸ் வரத்து மஹாதேவர்க்குத் தேவதானமாய் ஸர்வ பரிஹார மாக பரடத்தி சென்றது.''

மீண்டும் வடமொழிச் சுலோகம் எழுதப்பட்டுள்ளது. அதன் கருத்து வருமாறு :—

" ஓ! எதிர் காலத்தில் உலகத்தை ஆளப்போகிறவர் களே! அரசர்களுக்குக் கொடி போன்ற நந்திவர்மன், அரனுடைய மலரடிகளகிய சூளாமணியால் விளங்கப் பெற்ற தன் தலையை வணங்கி, தாமரை போன்ற கைகளைக் குவித்து இந்த நல்ல செயலை (இந்த அறத்தை) எப்போதும் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிருன்.

இந்தத் தருமமாகிய பாலம், எல்லா அரசர்களுக்கும் பொதுவானது. ஆகையினலே, இந்த அறத்தை எல்லாக் காலத்திலும் காத்தருளும்படி இப்போதுள்ள அரசர்களையும் எதிர் காலத்தில் வரப்போகிற அரசர்களையும் இந்த இராமன் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிருன்.

தச்சர் குலமென்னும் ஆகாயத்துக்கு வெண்ணிலா போன்று விளங்கும், வேலைத்தரத்தில் எங்கும் புகழ்பெற்ற சிற்ருயன் மகன் பேராயன் இந்த எடுகளை எழுதினன்."

" கச்சிப்பேட் டைம்மனைச் சேரிக் காஷ்ட காரிமகன் பேராயன் எழுத்து."

## 10-ஆம் ஆண்டு

தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலுகா, திருவதி, வீரட்டானேசுவரர் கோவில் வாயிலின் வலது பக்கத்தில் உள்ள சாசனம்.

### சாசனம்*

1. ஸ்வஸ்ஸ்ரீ ஸ்ரீ
2. திருவீரட்டான
3. த்து மஹாதே
4. வர்க்குத் தெள்
5. ளாற்றெறிந்த
6. நந்திப் போ
7. த்தரையர் தி
8. ருவிளக்கினு
9. க்குக் குடுத்த
10. பொன் நிறை
11. நூற்றுக்க
12. ழஞ்சு இதன்
13. பலிசையால்
14. யாண்டுப
15. த்தாவதுமு
16. தலாக நாள .....
17. வாய் நாழி
18. நெய் அள
19. ந்து குடுத்து
20. இரண்டு நந்
21. தாவிளக்கு எரிப்
22. பிப்பே ஞனேன்
23. இத்திரு வீரட்டான
24. த்துக் குடும்பி
25. ருள் காளிஸ்ஸருமனே
26. ன் இவ்விளக்கு
27. .....நகரத்து பல்மா†

## 11-ஆம் ஆண்டு

தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலூகா, கீழூர் வீரட்டானேசுவரர் கோயிலில் உள்ளசாசனம்.

*No. 309. S. I. I. Vol. VIII. A. R. No. 36 of 1903.

†இதன் கீழே இரண்டு வரி எழுத்து அழிந்துவிட்டன.

சாசனம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய நந்திவிக்கிரம பரும
2. ற்கு யாண்டு பதினொன்றாவது மலாட்டுக் கு
3. றுக்கைக் கூற்றத்துத் திருக்கோவலூர்த் தி
4. ருவீரட்டானத்து மாதேவர்க்கு நந்தாவிள
5. க்கிரவும் பகலும் மிரண்டு விளக்கெரிப்பத
6. ற்கு விடேல் விடுகு இளங்கோ அதியரைய ஞயி
7. ............விக்ரமபூதி மகள் விடே
8. ............யின சாத்தன் மறவன் றேவி பூதி
9. ............விடேல் விடுகு கல்லால் நி
10. ............ன்னிறை நாற்பத்தெண் க
11. ............சை கழஞ்சின் வாய்த் திங்
12. ............ட்டுவதாக திருக் கோவலூர்
13. ............த்தார் கைய்வழி வைத்தது

## 13-ஆம் ஆண்டு

வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகா, காவேரிப்பாக்கம் முத்தீசுவரர் கோவில் கோபுரவாயிலின் உள்ளில் உள்ளது.

நந்திவர்மனின் 13-ஆம் ஆண்டு இடப்பட்ட இச் சாசனம், அய்யக்கி பங்கள அடிகளின் மருமகள் கோயிலில் விளக்கெரிப்பதற்காக 5 கழஞ்சு பொன் தானம் கொடுத்ததைக் கூறுகிறது. இடையிடையே எழுத்துக்கள் காணப் படவில்லை. கடைசியில் சுவர் மறைத்துள்ளது.

சாசனம்†

1. ஸ்வதிஸ்ரீ | நந்திவர்மருக்கு யாண்டு பதின்மூன்றாவது எம்மூர் அய்யக்கி பங்கள அடிகள் மருமகள் பக்கல் அஞ்கழஞ்.........

---

*No. 924. S. I. I. Vol. VII A.R. No. 295 of 1902.

†S. I.I. Vol. XII. No. 50. (A. R. No. 406 of 1905.)

2. ழஞ்சு பொன் வைத்து பதின்.........ல் இவ்வெண்ணை உள்ளிட்டன்றி எம்மூரவர் நிசதி ஆழாக்கும் குடு.........
3. ......காலமும் முட்டாமல் அட்டுவிப்பார்களாகவும் ஸ்ரீ......

## 14-ஆம் ஆண்டு

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, களத்தூர், முன் குடுமீசுவரர் முகமண்டபத்துத் தரையில் உள்ள கல்லில் எழுதப்பட்ட சாசனம்.

நந்திவர்ம மகாராசனின் 14-ஆம் ஆண்டு எழுதப்பட்ட இச்சாசனம், களத்தூர் பெருமக்கள் ஷை ஊர் ஏரியின் வருவாயிலிருந்து மூன்றில் ஒரு பகுதியைக் கோயிலுக்குத் தானம் செய்ததைக் கூறுகிறது.

### சாசனம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ | நந்திவர்ம
2. மஹாராஜற்குப்
3. பதிஞாலாவது களத்
4. தூர்க் கோட்டத்து கள
5. த்தூர் பெருமக்கள் [பங்]
6. [கா ஞ] [ட்டெடயில்]...
7. ...த்தாங் ஏரிப்பாத்
8. து கோயிலாக பரமே
9. ஸ்வரன் முன்பாக பெ
10. ருமக்களும் கடவமூன்
11. றில் ஒன்றும் பரமே
12. ஸ்வரன் சுக்ருதம். ||

## 15-ஆம் ஆண்டு

தென் ஆர்க்காடு மாவட்டம், செஞ்சி தாலுகா, தளவானூர் "குகைக் கோயிலில்" தூணில் உள்ள சாசனம்.

விஜயநந்தி விக்ரமவர்மனின் 15-ஆம் ஆண்டு இடப்பட்ட இச்சாசனம், வெண்பேட்டில் இருந்த இக்கோயில் ஊழியர் ஒருவர், மோடன் என்பவரிடம் ஒரு கழஞ்சு பொன் தானம் செய்ததைக் கூறுகிறது.

---

*S. I. I. Vol. XII. No. 51 (A. R. No. 349 of 1911.)

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய
2. நந்திவிக்கிரமப்
3. பருமருக்கு யாண்டு பதி
4. னைந்தாவது வெண்
5. பேட்டு வாழும் தளிஉடைய்
6. காளய இ.. ...மகன்தே
7. ............
8. ............
9. மூலங்கூர்ப் புரைசர்
10. மோட்ன்னிடைக் க
11. முஞ்சுப் பொன் முதல்
12. ல் கொண்டு இப்பொ†

## 16-ஆம் ஆண்டு

தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலூகா, கீழூர், வீரட்டானேசுவரர் கோவிலில் உள்ள சாசனம்.

சாசனம்‡

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய நந்திவிக்
2. கிரம பருமற்கு யாண்டு பதினாறுவது
3. மலாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத்தி
4. ருக்கோவலூர்த் தி.........னத்
5. து மாதேவர்க்............
6. இரவும் பகலு...........
7. தற்கு தென்னவனி............
8. மறவம் பூதி வைத்த......விடேல்
9. விடுகு திப்பொக்குச் செம்பொன்
10. இருபத்து நாற்கழஞ்சு......
11. இதன்பலிசை கழஞ்சிற் பேர்த்திது...
12. உரிய்நெய் அட்டுவதாக திருக்கோவ
13. லூர் நகரத்தார் கைய்வழி வைய்த்த
14. து.

---

*S. I. I. Vol. XII, No. 52, A. R. 49 of 1905.

†இதன் பிறகு சாசன எழுத்து புலப்படாமல் அழிந்திருக்கிறது.

‡No. 925. S. I. I. Vol. VII. A. R. No. 296 of 1902.

## 17-ஆம் ஆண்டு

செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீ பெரும்பூதூர் தாலூகா, மாங்காடு கிராமம், வள்ளீஸ்வரர் கோயில் தரையில் உள்ள கல் எழுத்துச் சாசனம்:

"கோவிசைய நந்தி விக்ரம பருமரின்" 17-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இச்சாசனம், இக்கோயிலுக்குக் குன்றத்தூர் செழியவாணியர் திருவாதிரையிலும் தலையுவாவிலும் (அமாவாசையிலும்) பூசைக்காகத் தானம் செய்ததைக் கூறுகிறது.

### சாசன வாசகம்*

1. ஸ்ரீ கோவிசைய நந்தி விக்கிரம பருமருக்கு யாண்டு பதினேழாவது புலி
2. யூர்க் குடிக்கோட்டத்துக் குன்றத்தூர்ச் செழிய வாணியர்களோ
3. ம் திருவாதிரையுந் தலையுவாவும் திங்கள் நிலவியுங் காட்டு வோ
4. மாஞேம் திருவெள்ளி கீழுடைய சபையோம்.

## 18-ஆம் ஆண்டு

காஞ்சீபுரத்து உலகளந்த பெருமாள் கோயிலின் தென் புறத்தின் தரையில் உள்ள கல் சாசனம். கடைசியில் சில பகுதிகள் இக்கல்லின் பின்புறத்தில் இருக்கவேண்டும். கல், தரையில் புதைக்கப்பட்டிருப்பதால் பின் பகுதி எழுத்துப் படிக்காமல் விடப்பட்டது.

இதில், விடேல் விடுகு குதிரைச்சேரி என்னும் கடைத் தெருவில் வாணிகஞ் செய்வது பற்றிக் கூறப்படுகிறது.

---

*S. I. I. Vol. XII. No. 53, (352 of 1908)

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ தெள்ளாற் றெறிந்த நந்
2. திப் போத்தரையர்க்கு யாண்டு ப
3. தினெட்டாவது அநுத்தரப் பல்ல
4. வரையன் விண்ணப்பத்தாற் கா
5. டு பட்டி தமிழப் பேரரைய ஞ
6. ணத்தியாக விடேல் விடுகு குதிரை
7. ச் சேரியார்க்குக் கருப்பூரந் தலையா
8. கச் செருப்புக் கடையாக எல்லா
9. வியாபாரமுங் கடை ஏறிவாணிக
10. ஞ் செய்யப் பெறுவாராகப் ப
11. ணித்தோம் பூமி உள்ள அளவு
12. இதற்கு சர்வ [பரிஹாரம]ாகக் கு
13. டுத்தோம் இப்பரிசு முற்றுவித்
14. தான் சாத்தப் போசன் வெண்ண...

## 18-ஆம் ஆண்டு

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு தாலூகா, படுர் கிராமத்து மேட்டுத் தெருவில் உள்ள ஒரு கல்சாசனம்.

இந்தச் சாசனத்தின் முதல் இரண்டு வரியில் எழுத்துக்கள் மறைந்துவிட்டன. ஆனல் முதல் வரியின் கடைசியில் " நந் " என்னும் எழுத்து காணப்படுகிறது. எனவே இது நந்தி வர்மனைக் குறிக்கிறது என்பதை யறியலாம். இந்தச் சாசன எழுத்துக்கள் நந்திகாலத்து எழுத்தைப்போல இருக்கின்றதும் ஒரு சான்ருகும். படுவூர் விழுப்பெருந் தாய விஷ்ணு கிருஹத்து நின்றருளுகின்ற பெருமானடிகளுக்கு விளக்கெரிக்க 96 ஆடுகளைத் தானம் செய்ததைக் கூறுகிறது.

---

*J. S.I.A. Vol. I, p. 160—185. M.C.C. Mag. Vol. VIII, p. 102.

சாசன வாசகம்*

1. .........நந்
2. ......ற்கு யாண்டு பதி
3. னெட்டாவது ஆமூர் கோட்
4. டத்துக் கோட்ட மன்ருடி
5. கள் படுவூர் விழுப்பெ
6. ருந்தாய விஷ்ணு கிருஹத்து
7. கி ன் ற ரு ளு கி ன் ற பெருமா
8. னடிகளுக்கு வைய்த்த நந்
9. தாவிளக்கொன்றுக்கு வை
10. த்த ஆடு சாவா மூவாப் பேரா
11. டு தொண்ணூறு இதன் மம் ரக்ஷி
12. ப்பார் அடிபொடி என் தலைமேல
13. து.

## 18-ஆம் ஆண்டு

தஞ்சை மாவட்டத்துக் கோவிலடி என்னும் ஊரில் உள்ள, சடையார் கோயில் என்னும் இடிந்துபோன கோயிலின் வாயில் நிலையில் உள்ள சாசனம்.

சாசன வாசகம்†

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. தெள்ளாற் றெ
3. றிந்த நந்தி
4. ப் போத்தரைய
5. ர்க்கு யாண்டு
6. கஅ ஆவது தி
7. ருக் கடை முடி
8. மஹா தேவர்க்
9. கு இரண்டு நொ
10. கழஞ்சு இப்பொ
11. ன் கொண்டு பலி
12. சை ஊட்டிஞ
13. ல் நாழ் வாஞ
14. ழி நெய் முட்டா
15. மை அரிச்சிப்
16. பார் கை விலே[ய்]
17. கொடுத்து திருவி
18. ளக்கெரிப்போ

*S. I. I. Vol. XII No. 54, A. R. No. 8 of 1934—35.
†J. S. I. A. Vol. I, p. 160—185.

| | |
|---|---|
| 10. ந்தா விளக்கினு | 22. மானேம் அன் |
| 11. க்கு குடுத்தபொ | 23. பில் சபையோ |
| 12. ன் அறுபதின் | 24. ம் இது பன்மாஹே |
| | 25. ஸ்வர ரக்ஷை |

செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை தாலூகா திருவெற்றியூர் கோயிலிலுள்ள சாசனம் ஒன்று, தெள்ளாறெறிந்த நந்தி போத்தரையரின் 18-ஆம் ஆண்டு, 298-ஆம் நாள் எழுதப்பட்டது.* இச்சாசனம், நந்திவர்மன், கோயிலில் விளக்கு எரிப்பதற்காக 105 பொன் தானம் செய்ததையும், நந்தியம்பாக்கம் கிராமத்தார் அதைப் பெற்றுக் கொண்டதையும் கூறுகிறது. இது சிதைந்துபோன சாசனம். நாயறு நாட்டு நந்தியம்பாக்கம் என்பது நந்திவர்மனுடைய பெயரால் ஏற்பட்ட கிராமம் என்று தோன்றுகிறது.*

நந்திவர்மனின் 18-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இன்னொரு சாசனம், தென் ஆர்க்காடு மாவட்டத்து திருக்கோயிலூர் தாலுகா மணலூர் பேட்டையில், காக்கா நாச்சியார் மண்டபம் என்னும் இடிந்துபோன மண்டபத்தில் இருக்கிறது.† திருவுழுதீசுவரத்து மகாதேவருக்குத் தேவமாரன் என்பவர் விளக்குக்காகப் பொன் தானம் செய்ததைக் கூறுகிறது.

## 18-ஆம் ஆண்டு

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலூகா, திருச்சென்னம்பூண்டி, சடையார் கோவிலில் வாயிலின் வலது புறச் சுவரில் உள்ளது.

---

*Epi. Col. 162 of 1937—38.

†Ep. Col. 467 of 1937—38.

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. தெள்ளாற் றெ
3. றிந்த நந்தி
4. ப்போத்தரைய
5. ர்க்கு யாண்டு
6. க௯-ஆவது தி
7. ருக்கடைமுடி
8. மஹா தேவர்க்
9. கு இரண்டு நொ
10. ந்தா விளக்கினு
11. க்கு குடுத்த பொ
12. ன் அறுபதின்
13. கழஞ்சு இப்பொ
14. ன் கொண்டு பலி
15. சை ஊட்டினு
16. ல் நாழ்வாய் நா
17. ழி நெய் முட்டா
18. மை அரிசிப்
19. பார் கையிலேய்
20. குடுத்து திருவி
21. ளக் கெரிப் போ
22. மானேம் அன்
23. பில் சபையோ
24. ம் இது பன்மாஹே
25. ஸ்வர ரக்ஷை.

## 19-ம் ஆண்டு

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலூகா, திருக்கோடிக்காவல், திருக்கோடீசுவரர் கோயில் தெற்குப்புறச் சுவர் சாசனம்.

நந்திப் போத்தரையரின் 19-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இச்சாசனம், திருக்கோடிக்கா சிறுநங்கை ஈஸ்வரத்துக் கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்காக ஆழி சிறியன் என்பவர் 100 கலம் நெல் தானம் செய்ததைக் கூறுகிறது. திருக்கோடீசுவரர் என்பதன் பழைய பெயர் திருக்கோடிக்கா சிறு நங்கை யீசுவரம் என்பது தெரிகிறது. இச்சாசனம், பழைய சாசனத்தைப்படி எடுத்துப் பிற்காலத்தில் எழுதப்பட்டது.

---

*No. 503, S. I. I. Vol. VII, A. R. No. 283 of 1901.

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ. இதுவும்
2. மொரு பழங் கற்படி யா
3. ண்டு நந்திப் போத்தரை
4. யற்கு பத்தொன்ப
5. தாவது திருக்கோடிக்கா
6. வில் சிறுநங்கை ஈஸ்வரத்
7. து மஹாதேவர்க்கு திருவிளக்கி
8. னுக்கு ஆழிசிறியன் குடுத்த நெல்
9. லு நூற்றுக் கலம் இன்னெல்லின்ப
10. லிசையால் நாள்வாய் உழக்கு நெய்
11. கொந்தா விளக்கெரிப் போமானோம் இத்
12. தளி அர்ச்சிப்போம் ஆத்திரையன் நா
13. ராயணன் ஏறனும் இவன் றம்பிமாரும்
14. இன்னல்வோம் இது பழங்கற்
15. படி. இந்த ஸ்ரீ விமானத்திலே
16. ஏற வெட்டின மையில் முன்
17. னிவாஜகம் வெட்டிக்கிட
18. ந்த தனிக் கல்லால் உபை
19. யோக மில்லாமையால்
20. அது தவிர்ந்தது இது
21. நந்தில் பன்மாயேஸ்வரார் க
22. டைக் கூட்ட பெற்றார்.

## 19-ஆம் ஆண்டு

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கில், 14 கல் தூரத்தில் உள்ள திருவெள்ளறைக் கிராமத்துப் புண்டரீகாக்ஷ சுவாமி குகைக் கோயிலின் மேற்குப்புறத்துத் தூணில் உள்ளது இந்தச் சாசனம். வெயில் மழையினால் தாக்குண்டு காலப்

*S. I. I. Vol. XII. No. 55, A. R. No. 27 of 1930-31.

போக்கில் இச்சாசன எழுத்துக்கள் பெரிதும் மறைந்து விட்டன. சில எழுத்துக்கள் மட்டும் காணப்படுகின்றன.

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ நந்திவர்ம்மற்கு யா...
2. சஙக பல்லவகுல திலக...
3. நந்தி வர்ம்மற்கு............
4. தித்த குல கேதன......
5. [வி] சய நல்லூழான...
6. [ய] ரையனால் நி.........†

தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகா, பெருமாண்டூர், ரிஷபநாத ஸ்வாமிகோயில் என்னும் ஜைனக் கோயிலின் மேற்குப்புறச் சுவரில் உள்ளது.

சாசனம்‡

1. கோவிசைய நந்தி விக்கிரமவர்மற்கு யாண்டு பத்தொன்பதாவது பெரு
2. ம் பள்ளிஇல் வைத்த பொலியூட்டு நெல்முத லிரு நூற்று.§

## 21-ஆம் ஆண்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுகா, சென்னிவாய்க்கால், சிவன் கோயிலின் இடிந்த கோபுரத்துக்கு அருகில் உள்ள நடுகல் சாசனம்.

நந்திவர்மனின் 21-ஆம் ஆண்டு இடப்பட்டுள்ள இச் சாசனம், இங்கிருந்த மடத்தைச் சுட்டு அழித்தபோது, இம் மடத்தைச் சேர்ந்த சத்திமுற்றத்தேவன் எதிர்த்தபோது

*J. S. I. A. Vol. I, p. 160—185.

†மற்றப் பகுதிகள் மறைந்து விட்டன.

‡No. 847. S. I. I. Vol. VII, A. R. No. 220 of 1902.

§இந்தச் சாசனம் முழுதும் எழுதப்படவில்லை.

அவன் கொல்லப்பட்டதைக் கூறுகிறது. இச்சாசனக் கல்லில், ஒரு ஆள் நெஞ்சில் அம்பு தைக்கப்பட்டிருப்பது போல ஒரு உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இச்சாஸனத்தில் பராந்தகபுரத்து அறிஞ்சிகை ஈஸ்வரம் கூறப்படுகிற படியால், நந்திவர்மனுக்குப் பின் ஒரு நூற்றாண்டு கழித்து வாழ்ந்திருந்த அறிஞ்சயன், அவன் தந்தை முதலாம் பராந்தச்சோழன் காலத்தில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. எழுத்தும் 10-ஆம் நூற்றாண்டு எழுத்தாகத் தோன்றுகிறது. எனவே, இச்சாஸனம் பழைய சாசனத்தைப் பார்த்துப் பிற்காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீதெள்
2. ளாற்றெறிந்து
3. ராஜ்யமுங்கொ
4. ண்ட நந்திப்
5. போத்தரையர்க்
6. கு யாண்டு இரு
7. பத்தொன்றாவது
8. பராந்தக புரத்
9. து அறிந்தி
10. கை ஈஸ்வரகிரு
11. ஹம் சாசன
12. த்தாலுடையோ
13. ரும்...............
14. ......தளி
15. யிலாதாகி நின்ற பட்ட
ரேன்மாவலியகி
16. யஸ்தாந மாள்வான் செ
(வணற்குணடு) கொ
17. ண்டு வந்து மடமுஞ்
சுட்டுக் காத்த ஸிகுர
18. வரையு மெறிந்து இவர்
ஸிஷ்யன் ஒரு பிரா
19. மணன் சத்திமுற்றத்
தேவன் றுண்டுப
20. ட்டான் வல்லுவனுட்
டான்.

விஜயநந்தி விக்கிரமவர்மனின் 21-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இன்னொரு சாசனம், சித்தூர் மாவட்டம் சந்திரகிரி தாலுகா, அவிலால கிராமத்துக் கபிலேசுவரர் கோவிலில் இருக்கிறது.† இவ்வூர் ஏரியைச் செம்மையாக வைத்திருப்

*S. I. I. Vol. XII, No. 56. A. R. No. 144 of 128-29.
†Ep. Col. 188 of 1937—38.

பதற்காகக் கல்லாணக்காணம், விதநாழி என்னும் வரிப் பணத்தை விக்கிரமாதித்த மகாபலிவாணராயர் விட்டுக் கொடுத்ததை இச்சாசனம் கூறுகிறது. இவர் மனைவியார் அதிப்பிரசாதி என்னும் விஜ்ஜியக்கனார் என்பவர் வேண்டு கோளின்படி இந்த வரிப்பணம் கொடுக்கப்பட்டது. விக்கிரமாதித்த மகாபலிவாணராயர், நந்திவர்மனின் கீழடங்கிய சிற்றரசர்.

## 22-ம் ஆண்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா திருப்பலாத்துறை (திருப்பிராய்த்துறை), ஆதி மூலேஸ்வரர் கோயில் மண்டபத்து வடபுறச் சுவரில் உள்ள சாசனம்.

இக்கோயிலுக்கு இரண்டு விளக்கெரிப்பதற்காக 60 கழஞ்சு பொன் தானம் செய்யப்பட்டதை இச்சாசனம் கூறுகிறது.

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. தெள்ளாற்றெறி
3. ந்த நந்திப்
4. போத்தரையர்
5. யாண்டு இருபத்
6. திரண்டாவது தி
7. ருப்பாற்றுரை ம
8. ஹாதேவபடாரர்
9. க்கு இரண்டு ந
10. ந்தா விளக்கெரி
11. ப்பதற்கு குடுத்
12. த பொன் அறு
13. பதின் கழஞ்சு இ
14. ப் பொன் கொண்டி
15. ரண்டு நந்தாவிள
16. க்கும் முட்டாமை
17. எரிப்போ
18. மானோம் திருப்ப
19. ாற்றுறை ஸபை
20. யோம் இதுப
21. ............

*S. I. I. Vol. XII No. 57, A. R. No. 180 of 1907.

செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, கூரம், சிவன் கோயிலின் தூண் ஒன்றில் உள்ளது.

சாசன வாசகம்*

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்வஸ்திஸ்ரீ ‖ நந்தி | 14. | த்து............ |
| 2. | வர்ம்மமஹாராஜ | 15. | ............... |
| 3. | ந்கெழுத்து ஊற் | 16. | மஹாதேவ |
| 4. | றுக்காட்டுக் கோட் | 17. | ......அர்ச்சனுபோக |
| 5. | டத்துக் கூரத் | 18. | ......க்காளன் அர்ச்சி |
| 6. | து சபையார் | 19. | த்துண் பானுகக் கா |
| 7. | காண்க தம்மூ | 20. | .........குப்பணித்...... |
| 8. | ரக்கள நிம்மடி | 21. | .........தலுட்டாங் கண் |
| 9. | ப்போற்றிபடி | 22. | டருள திருக்கோயி |
| 10. | ஆயின ஆறுப | 23. | லிற் படாரர் திருவடி |
| 11. | ட்டி நிலமும்மு | 24. | க்கீழை சிலாலேகை |
| 12. | ன்பெற்றுரைமாற்றி | 25. | செய்து குடுக்க இற் |
| 13. | யாண்டு இருப | 26. | நீக்கி......... |

## 22-ம் ஆண்டு

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா, திருவைகாவூர், வில்வநாதேசுவரர் கோயில் முன் மண்டபத்துத் தென்புறச் சுவரில் உள்ள சாசனம்.

திருவைகாவூர் ஈசுவரருக்கு வண்ணக்கவிளகம் என்னும் 1½ வேலி நிலம் தானம் செய்யப்பட்டதை இச்சாசனம் கூறுகிறது. இது பழைய சாசனத்தின் படியாகும். இதில், திருவைகாவூருக்குத் திருபுவன மாதேவி சதுர்வேதிமங்கலம் என்னும் பெயரைக் கூறுகிற படியால், இப்பெயர் ஏற்பட்ட பிற்காலத்தில் இச்சாசனம், பழைய சாசனத்தைப் பார்த்துப் படி எடுக்கப்பட்டதுபோலும்.

*No. 40. S. I. I. Vol. VII. A. R. No. 38 of 1900.

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ நந்திவர்ம மராஜற்கு யாண்டு இருபத்திரண்டாவது திருவைய்காவு
2. டைய மஹாதேவற்கு திருநொந்தா விளக்கும் அமுது படிக்கும் உபையம்வை
3. ய்க்க சந்திப்பெலியார் திரிபுவனமாதேவிச் சருப்பேதிமங்கலத்
4. து ஸபையார் பக்கல் பொன் குடுத்துப் பொலிசூலிக்குச் செல
5. வாக காசுகொள்ளா ஊற்கீழ் இறையிலியாக மணலிடில் வேலி
6. யாகக் கொண்டுவிட்ட வண்ணக்கவிளாகம் நிலம் 1½ இன்னிலம் ஒன்ற
7. ரையும் இறக்காதான் திருவடி இரண்டு மெந்தலை மேலின இது இறக்குவாந்தங்க
8. ளம்மைக்குத் தாநேய் மிஞனன் ॥ இது கல்வெட்டுப்படி.

தஞ்சை மாவட்டம், கும்கோணம் தாலுகா, திருவிடைமருதூர், மகாலிங்க சுவாமி கோயிலின் வடக்குப் புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

“காடுபட்டிகள் நந்திபோத்தரையர்” திருவிடைமருதூர் கோயிலுக்குத் தானம் செய்த செய்தியை இச்சாசனம் கூறுகிறது. இந்தக் காடுவெட்டி நந்திபோத்தரையரை மூன்றும் நந்திவர்மன் என்று கூறுகிறார்கள். ஆனால் இரண்டாம் நந்திவர்மனுக்குப் பொருந்தும். இந்தப் பழைய சாசனம், பிற்காலத்திலே பரகேசரிவர்மனுடைய 4-ஆம் ஆண்டில் படியெடுத்து எழுதப்பட்டது. பரகேசரிவர்மன் என்பவர் உத்தமச்சோழராக இருக்கக்கூடும்.

*S. I. I. Vol. XII No. 58, A. R. No. 48 of 1914.

## சாசன வாசகம்*

1. ஸ்வஸ்ஸ்ரீ கோப்பரகேசரி வன்மற்கு யாண்டு ச-ஆவது நாள் நூாஉ௰ஞ ஞல் திருவிடைமருதில் தேவர் நாடகசாலேயே இத்தேவர் ஸ்ரீகார்யம் திருத்தக் கடவ திரைமூர் சபையோரும் திரு விடை மருதில் நகரத்தாரும் திருக்கோயி லுடையார்களும் தேவ
2. ர் கணக்கு மருதன் பிரமகுட்டனும் ஸ்ரீகார்ய மாய்கின்ற பூசலான் குடையாரும் இருந்து தேவற்கு வைய்த்த பொலியூட்டிஞல் வைத்த விளக்கு ஆராய்ந்த இடத்து இந்த ஸ்ரீ கோயில் கற்றளி எடுப்பதற்கு முன் பொலியூட்டுக்குப் பிரமாணமாய் உள்ள கற்கள்
3. எல்லாம் அடிமனேக்கீழே இட்ட கல்லின்படி எடுத்துக்கொண்டு இட்டமையில் முன் படி எடுத்த படி மாற்றின பரிசெய் திருக்கற்றளி மேலே கன்மேல் வெட்டிக் கொள்க வென்று ஏவக் கன்மேல் வெட்டினபடி காடு பட்டிகள் நந்திப்போத்தரை
4. யர் குமார மார்த்தாண்டனேன்னும்† விளக்கினுக்கு வைச்ச போன் கூ௰. இப்போன் அறுபதின் கழஞ்சும் கோண்ட திரைமூர் சவையார் அட்டக்கடவதான நேய் உரி இனல் விளக்கு க-உம்.‡

---

*S. I. I. Vol. III, No. 124, No. 199 of 1907.

†குமார மார்த்தான்டன் என்னும் பெயர் 199 of 1907 சென்னே எபிகிராபி அறிக்கையில் காணப்படுகிறது. இப்பெயர் பல்லவமல்லன் ஆன இரண்டாம் நந்திவர்மனுக்கு உண்டு. ஆனல், மூன்றும் நந்தியைத் தான் இச்சாசனம் குறிக்கிறது என்று சாசன இலாகாதார் கூறுகிருர்கள்.

‡See S. I. I. Vol. XII No. 59 p. 24.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுக்கா, லால்குடி சப்தரிஷீசுவரர் கோவில் வடபுறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டு எழுத்தாகக் காணப்படுகிற இச்சாசனம், பழைய சாசனத்தின் படி என்று தெரிகிறது. லால்குடியின் பழைய பெயர் திருத்துவத்துறை என்பது இச்சாசனத்தினால் தெரிகிறது. இதில், திருத்துவத்துறை சிவபெருமானுக்கு இரவும் பகலும் விளக்கெரிப்பதற்காக "தெள்ளாறெறிந்து வென்ற நந்திப்போத்தரையர்" 60 பொற்காசு தானம் செய்ததைக் கூறுகிறது.

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ | யாண்டு எதிராமாண்டு இடையாற்று நாட்டுத் திருத்துவத்துறை மஹாதேவர்க்கு தெள்ளாறெறிந்து வென்ற நந்திப்போத்தரை
2. யர் குடுத்த பழங்காசு கூo-து | இவ்வறுபது காசும் இஞ்ஞாட்டு நல்லிமங்கலத்து சபையோம் இவ்வறுபது காசும் திருத்துவத்துறை மஹாதேவர்
3. இடைகொண்டு நாராய நாழியால் நிசதி நாழி நெய் ஒரு நொந்தாவிளக்கு சந்திராதித்தவல் இரவும் பகலும் எரியக்கொண்டு சென்று அளப்போமானோம்
4. ம் நல்லி மங்கலத்து சபையோம் திருத்துவத்துறை மஹாதேவர்க்கு அளவேமாயில் முட்டில்முட்டிரட்டியும் மூலப்பட்ட பன்மகேஸ்வரரே
5. சபையாகவும் தனித்தாகவும் நிலைக்களமுள்ளிட்டதான் வேண்டுகோவினுக் புக்கவுள இருநூற்றுப்பதிறைறு காணம் தண்டமிட வெ


---

*Epi. Indi. Vol. XX, (A. R. No. 120 of 1928—29.)

6. ட்டினேம் நல்லிமங்கலத்து சபையோம். இது பன் பன்மகேஸ்வரர் நாற்பத் தொண்ணுயிரவரும் இரக்ஷை.

### சயாம் தேசத்துச் சாசனம்

சயாம் தேசத்து தகோபா யாவட்டத்தில் காவு பஃரஹ் நாராய் (நாராயண குன்று) என்னும் இடத்தில் ஒரு தமிழ் எழுத்துச் சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. அச்சாசனத் தில் சில எழுத்துக்கள் மறைந்து விட்டன. அது அவனி நாரணன் (தெள்ளாறெறிந்த நந்திவர்மன்) காலத்துச் சாசனம் என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகிறார் கள். அந்தச் சாசனத்தின் வாசகம் இது :



சயாம் தேசத்துச் சாசனம். இதன் வாசகத்தை அடுத்த பக்கத்தில் காண்க.

1. .........ரவர்மன்கு.........
2. (ம)ாக தாகநங்கூரடை......
3. ...தொட்டகுளம் பேர் ஸ்ரீ அ......
4. காரணம் மணிக் கிராமத்தார்......
5. கும் சேனு முகத்தார்க்கும்
6. ...முதார்க்கும் அடைக்கலம்.*

## பாண்டியன் வரகுணமகாராசனுடைய சாசனம்

கீழ்க்கண்ட சாசனம் சோழநாட்டில் உள்ளது. வரகுண மகாராசன், சோழநாட்டை வென்று அரசாண்ட காலத்தில் இது எழுதப்பட்டது. அக்காலத்தில் சோழ நாட்டில் வழங்கிய வட்டெழுத்தினால் எழுதப்படாமல் சோழ நாட்டிலும் தொண்டைநாட்டிலும் வழங்கிவந்த பல்லவ எழுத்தினால் இச்சாசனம் எழுதப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி என்னும் ஊரில் உள்ள சப்தரிஷீசுவரர் கோயிலில் இந்தச் சாசனம் இருக்கிறது. மாறஞ்சடையனை வரகுணமகாராசன் இக்கோயிலுக்கு 120 பழம்பொற்காசு, கோயிலில் விளக்கு எரிப்பதற்காக வைத்த செய்தியை இச்சாசனம் கூறுகிறது. லால்குடியின் பழைய பெயர் திருவத்துறை என்பதும் சப்தரிஷீசுவரரின் பழைய பெயர் திருத்துறை மகாதேவர் என்பதும் இச்சாசனத்தினால் தெரிகின்றன:

---

*இச்சாசனத்தைப்பற்றிய கட்டுரைகளைக் கீழ்க்கண்ட கட்டுரைகளில் காண்க :

Note on a Tamil Inscription in Siam. By E. Hultzsch. pp. 337-339. The Takopa Tamil Inscription. pp. 689-690. J. R. A. S. 1913. Supplementary note on a Tamil Inscription in Siam by E. Hultzsch pp. 397-398. J. R. A. S. 1914. J. O. R. Madras Vol. VI, p. 300.

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாஞ்சடையர்க்கு யாண்டு ச வதின் எதிர் ௬ ஆமாண்டு தனுநாயற்று செவ் வாக்கிழமை பெற்ற சதயம்த்து நாள் இ
2. டையாற்று நாட்டு திருத்தவத்துறை மஹா தேவர்க்கு இரவும் பகலும் சந்திராதித்தவல் இரண்டு நொ(ந்தா திருவிளக்கு)
3. எரிப்பதாக கோமாறஞ் சடையனுகின பாண்டிய குலபதி வரகுணமஹாராயர் அண்டநாட்டு வேளான் கையில்க் குடுத்த பழங்
4. காசு கஉ0 நூற்றிருபது காசுங் முதல் கெடாமை பொலியூட்டினுல் நிசதிநா............
5. அளப்போமாணேம் இப்படி ஒட்டி இக்காசு கொண்டோம் இடையாற்று நாட்டு இளம் பெருங் காயிருக்கை சபையோ
6. ம் இஞ்ஞெய் நிசதி இருநாழியும் முட்டில் முட்டி ரட்டியும் மூலப்பட்ட பன்மஹேஸ்வரரே சபை யாகவும் தனித்தாகவும் நி............
7. ள்ளிட்ட தான் வேண்டு கோவினுக்கு புக்கவுள அஞ்ஞாற்று காணம் தண்டமிட ஒட்டிக் குடுத் தோம் திருத்தவத்துறை மஹாதேவர்க்கு.

## 4–ஆம் ஆண்டு

தஞ்சை மாவட்டம், தஞ்சை தாலுகா, தில்லஸ்தானத்து இருதயாலேசுவரர் கோவில் சாசனம்.

---

*Epi. Ind. Vol. XX. pp. 52, 53.

சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமா
2. றஞ்சடையற்கு யா
3. ண்டு [௪] மாண்டு திரு
4. நெத் தாநந்து ம
5. ஹா தேவற்கு வாகு
6. ண மஹாராஜ திருவி
7. ளக்கினுக்கு நம்பி
8. ராட்டியார் கைவழி
9. கொண்ட காசு உா-ம்
10. கோன் பரா[ன்] தக
11. ஞர் கை வழிகொண்
12. ட காசு ா-ம் வெண்
13. ப நாட்டு வெளாள
14. ன் வழி குடு[த்]த காசு
15. ாஉ௦ மாக இதனால்
16. திசநி நாநா
17. ழி னெய் நாராச நாழி
18. யால் ஸ்ரீ கோயிலு
19. க் கெய் கு[ண]ந்து
20. அட்டு வொமா ஹேம் ப
21. ஊயூர் இரண்
23. டு செரி சபை
23. யோம்.

## 10-ஆம் ஆண்டு

தஞ்சை மாவட்டம், தஞ்சை தாலுகா, செந்தலை, சுந்த ரேசுவரர் கோவில் மண்டபத்துத் தூணில் உள்ள சாசனம்.

சாசன வாசகம்†

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறஞ்ச
2. டையற்கு யாண்டு க௦ ஆ
3. வது விடேல்விடுகு முத் தரை
4. யந் அடியான் இட்டாவற் காத்தா
5. ன் நியமமாகாளத்து பிடாரி
6. யாற் கொரு திருவிளக்கிநுக்
7. கும் ஒரு திருவமுர்துக்கு மு
8. தலாக இப்பிடாரியார் உள்
9. ளூர்களில் கல்லிக்குடுத்த
10. நிலம் அரை காணிக்கடன்
11. ஐஙூ௦ இது பன்மாஹெஸ்வ
12. ர ரக்ஷை.

*No. 608. S. I. I. Vol. V. A. R. No. 51 of 1895.

†No. 446, S. I. I. Vol. VI. A. R. No. 10 of 1899.

## அம்பர் சமுத்திரத்துச் சாசனம்

திருநெல்வேலி மாவட்டத்து அம்பா சமுத்திரம் தாலுகாவில் அம்பா சமுத்திரம் என்னும் ஊர் இருக்கிறது. இதன் பழைய பெயர் இளங் கோக்குடி அல்லது இளங் கோயிக்குடி என்பது. இங்கு இப்போது, எரிச்ச உடையார் கோயில் என்று வழங்கப்படுகிற சிவன் கோவில் இருக் கிறது. இக்கோயிலுக்குப் பழைய பெயர் திருப்போத் துடையார் கோயில் என்பது. இக் கோயிலில் வரகுண பாண்டியனுடைய சாசனம் ஒன்று வட்டெழுத்தில் எழுதப் பட்டிருக்கிறது. அச்சாசனத்தின் வாசகம் இது :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ படாரானுக் கிரஹத்தினு
2. ற் முள்ளி நாட்டிளங் கோக் குடி தி
3. ருப்போத்துடையார் ஸ்ரீகோயில் படார(ர்)க்கு முதல்
4. கெடாமை பொலி கொண்டு நான்கு காலமுந் திருவமு
5. து செலுத்துவதாக வரகுண மஹாராஜர் தொண்டை நாட்டுப்
6. பெண்ணைக்கரை அரைசூர் வீற்றிருந்து இளங் கோக் கு
7. டிச் சவையார் கைய்யிற் குடுத்த காசு இருநூற்று தொ
8. ண்ணூறு இவற்றுற் காசின் வாயிரு கலமாக ஆண்டு
9. வரை சவையா ரளக்கும் பொலி நெல் ஐந்நூற் நூற் றெண்பதை
10. ங் கலம் இவை கொண்டு படாரர் பணிமக்களும் இளங்
11. கோக் குடிச் சவையாரும் உடனின்று வரகுண
12. மஹாராஜர்க்கு ராஜ்யவர்ஷம் நான்காவதுக்கு எதிர்

13. பன்னிரண்டாம் யாண்டு துலாஞாயிறு முதலாக நிகதி
14. யாக நான்கு கலமுந் திருவமுது செலுத்தும் ப
15. டி ஒரு பொழுதைக்கு வேண்டுவன அரிசி செந்நெற்
16. றீட்டல் நானாழி கும்மாயத்துக்கு பயற்று
17. ப் பருப்புரி நிவேதிக்க பசுவின் னறு நெய்யு
18. முக்குப் பசுவின்றேய் தயிருரிக் கருவாழை
19. ப் பழனான்கு சர்க்கரை ஒரு பலம் கறி அமிர்
20. து காய்க்கறி ஒன்று புளிங்கறி இரண்டு புழு
21. க்குக் கறி ஒன்று பொரிக்கறி ஒன்று எற்றிக் கறி
22. ஐஞ்சினுக்குங் கறி பதின் பலம்
23. கறி துமிக்கவும் பொரிக்கவும் பசுவினறு நெ
24. ய் ஆழாக்கு கூட்டுக்கு பசுவின்தோய் தயி
25. ருரிக் காயம் இரு செவிட்டு இலை அமிர்து
26. வெள்ளிலை ஈரடுக்கு அடைக்காய் பத்து
27. நூறு ஒரு செவிட்டு ஆக நிகதி நான்கு
28. பொழுதைக்கு வேண்டுவன அரிசி செ
29. ந் நெற் றீட்டல் பதினறு நாழி

## இரண்டாம் பக்கம்

30. ஆக ஓராட்டைக்கு அரிசி செந்நெ
31. ற்றீட்டல் அறுபத்து நாற்
32. கலம் இவை கலவரிசிக்கு முக்கல
33. நெல்லாக நூற்றுத் தொண்ணூற்றிரு கல
34. ம் பயற்றுப் பருப்பிரு
35. நாழி இவை நாழிப் பருப்பு
36. க்கு முந்நாழி நெல்லாக ஓராட்
37. டைக்கு நெல் இருபத்து நாற் கலம்
38. பசுவின்னறு நெய் நாழியுரி இ
39. வை நாழி நெய்க்கு முப்பதினாழி நெ
40. ல்லாக ஓராட்டைக்கு நெல் நூற்றெண்ப

41. தின் கலம் பசுவின் றேய் தயி
42. ர் நானுழி இவை நாழித் தயிர்க்கு
43. மூந்நாழி நெல்லாக ஓராட்டைக்கு நெ
44. ல் நாற்பத்தெண்கலம் கருவாழைப்ப
45. மும் பதினறு இவை இரண்டுக்கு
46. நாழி நெல்லாக ஓராட்டைக்கு நெல்
47. முப்பத்திருகலம் சர்க்கரை நாற்(ற)ப
48. லம் இது ஒருபலத்துக்கு நாழி
49. ய்யுரி நெல்லாக ஓராட்டைக்கு நெல்
50. இருபத்து நாற்கலம் கறி நாற்ப
51. தின் பலம் இவை பன்பல
52. த்துக்கு நாழி நெல்லாக ஓராட்
53. டைக்கு நெல் பதினறு கலம் காயம்
54. ஆழக்கே முச்செவிட்டு இது
55. உழக்கு காயத்துக் கறுநா

மூன்றும் பக்கம்

56. ழி நெல்லாக ஓராட்டை
57. க்கு நெல் பத்தொன்ப
58. தின் கலனே முக்குறுணி
59. இலையமுது வெள்
60. ளிலை இரண்டு பற்று
61. இவை ஒருபற்றுக் கி
62. ரு நாழி நெல்லாக ஓரா
63. ட்டைக்கு நெல் பதி
64. னறு கலம் அடைக்கா
65. ய் நாற்பது இவை இ
66. ருபதடைக்காய்க்கு மூந்
67. நாழி யுரி நெல்லாக
68. ஓராட்டைக்கு நெல்வி
69. ருபத்தெண்கலம் நூறு
70. நாற்செவிட்டு இது
71. நாழிக்கிரு நாழியாக
72. ஓராட்டைக்கு நெல்
73. பன்னிருகுறுணி எல்
74. லாம் எற்றி ஓராட்
75. டைக்கு வேண நெல் ஐந்
76. நூற்றெண்பதின் கலம்
77. இப்பரிசு நியதி
78. ப் படி முட்டாமை
79. நெடுங்கால முஞ்செ
80. லுத்துவதாக வைத்தா
81. ர் ஸ்ரீ வரணகுண மகா
ராஜர்.

## நந்திபோத்தரையர் மகாதேவியார் மாறம்பாவையாரின் சாசனங்கள்

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுக்கா, திருச்சென்னம் பூண்டி, சடையார் கோவிலில் ஒரு தூணில் உள்ள சாசனம்.

### சாசன வாசகம்*

1. ..................த்தி......
2. முடி மஹா தேவர்க்கு மாசிமக
3. ந்திருவிழா வெடுப்பதற்கு ச
4. ந்திராதித்தவற் பல்லவதிலக
5. குலத்து நந்திப் போத்தரை
6. யர் மஹாதேவியாரான அடிகள்
7. கண்டன் மாறம் பாவையார் வை
8. த்த பொன் பதினேழு கழஞ்செ
9. கால் இப்பொன்னில் முதல் விழா
10. எடுக்கு நான்று எழுகழஞ்சு பொ
11. ன்றை லோராண்டில் கழஞ்சின் வா
12. ய் கலவரிசியாக எழுகல வரிசியா
13. ல் திருமேனியாட நெய் பால் தயிர்
14. ஐஞ்ஞாழிச் செதும் இளநீர் இருபது
15. அகநாழிகை பரிபார மடங்கத் திரு
16. வமிர்தரிசி முக்குறுணியும் திருவ
17. மிர்துந் திருவிளக்கும் நெய்நா
18. ழி தயிர் இருநாழி அமிர்து கறி
19. சற்கரை வாழைப்பழம் அடைக்கா
20. யிருபதும் இப்படி யாராதிப்பிக்கவும்
21. மிக்க வரிசி கொண்டு பிராமணருமடி

---

*No. 523 S. I. I. Vol. VII. (A. R. No. 301-A. of 1901.)

22. கள் மாரு முண்டு திருவிழாவெடுத்து
23. மிக்க பொன்னில் இருகழஞ்சு பொன்
24. ஞாற் பலிசை யாண்டுவரை அரை
25. க்கழஞ்சினல் நிசதி நறும்பூ நூறு
26. வடமோரிலேச் சாந்தும் எழுநாளிடு
27. விதாக நின்ற பொன்னில் கழஞ்சே காலால்
28. பலிசை ஓராண்டில் பன்னிரு நாழியுரிய்
29. நெய்யால் பிராம்மணரும் அடிகள் மாரும்
30. உண்பதாக நிறை எழுகழஞ்சு பொன்
31. இதன்குறை எழுத்து கிழைக்கால்
32. எழுத்தின் குறை
33. பலிசை யாண்டு
34. வரைகழஞ்சின்
35. வாய் கால்ப்ப
36. லிசையாக வந்
37. த பொன்கழஞ்செ
38. முக்கால் இப்பொ
39. ன் கொண்டு தீர்த்
40. தமாடினல் திரு
41. நமனத்துக்கு
42. வேண்டுமவி
43. கொண்டு நூ
44. ற்றெட்டுக் கலே
45. சத்தால் திருந
46. மனஞ் செய்வ்வ
47. தாக இப்பொன்
48. கொண்டாரை இ
49. லக்ஷணம் செய்
50. து எய்யினாட்டு
51. தேவதானம் சிறி
52. கண்டபுரத்து அ
53. றுகை வாணிகர் கை
54. வ்வழி வைத்தது
55. இது பன்மா
56. ஹேஸ்வர ரிரக்ஷை


## மாறன் பாவையார்

### சாசன வாசகம்*

1. க்கு பல்லவ திலகு
2. லத்து நந்திப் போத்
3. தரையர் மஹாதேவி
4. யாரான அடிகள் கண்


*No. 525. S. I. I. Vol. VII. A. R. No. 303 of 1901.

5. டன் மாறம் பாவையா
6. ர் வைத்த பொன் அறு
7. கழஞ்சே காலால் பூ
8. வில் கழஞ்சின் வா
9. ய்யரைக்கால்ப் பொ
10. ன்னுக வந்த பலி
11. சை பூவில் முக்காலே ஐஞ்
12. சுமா இப்பொன் கொண்டு ஐ
13. ப்பிகை விஷ-வும் சித் திரை
14. விஷ-வும் திருமேனி யாட
15. நெய் பால் தயிர் ஐஞ் ஞாழி
16. ச் செய்தும் பரிபாரமடங்க
17. திருவமிர் தரிசி பதக்கு நா
18. ழி இவ்வெவ்வை இளநீர்
19. வாழைப் பழஞ் சற்கரை இ
20. ருபது செய்தும் நறும்பூச்
21. சாந்து குங்கிலிய முங்கொ
22. ண்டாராதிக்கவும் இங் நாளா
23. ல் பிராமணர் ஐம்பதின் மரு
24. ம் திருக்கோயில் பணி செய்
25. யும் மாணிகள் ஐவ்வரும்
26. அடிகள் மாரும் பணி செய்
27. மக்களும் உண்பதாக வைத்
28. தேன் எய்யிநுட்டுத் தேவ
29. தானம் சிரிகண்ட புர
30. த்து அறுவை வாணி
31. கர் இப்படி அறுதிங்
32. கள் வார மராய்வதாக
33. வைத்தேன் கண்டன் மா
34. றம் பாவையேன் இது ப
35. ல்மாஹேஸ்வர ரிர
36. க்ஷை.



வேலூர் பாளையச் செப்பேட்டு எழுத்து. பக்கம் 155 காண்க.

' புழற்கோட்டத்து ' என்பது முதல் ' நாடாட்சியும் ' என்பது வரையிலும் உள்ள எழுத்து.



வாகுணபாண்டியனின் அம்பாசமுத்திரத்துச் சாசனம். வட்டெழுத்து. 178-ஆம் பக்கம் காண்க. 2-ஆம் வரி "முள்ளிநாட்டிளங்கோ" என்பது முதல், 8-ஆம் வரி "கலமாக" என்பது வரையில் உள்ள வாசகம்.

# 9. பின்னிணைப்பு

## வெள்ளிப் பாட்டு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில், இடைச்செருக வாகத் திருக்காரோணப்பதிகம் ஒன்று உண்டு. அதற்கு வெள்ளிப்பாட்டு என்பது பெயர். வெள்ளியம்பலத் தம்பி ரான் சுவாமிகள் இயற்றியதாகலின் இதற்கு இப்பெயர் அமைந்தது. இவர் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தவர். ஆதிகுமரகுருபர சுவாமிகளிடம் தமிழ்க்கல்வி பயின்றவர். இவரே இன்னொரு வெள்ளிப்பாட்டைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் இடைச்செருகலாக நுழைத்திருக் கிறார். சுந்தரர் தேவாரத்தில் இவர் நுழைத்த வெள்ளிப் பாட்டைக் கீழே தருகிறோம். இதில் 4-ஆம் பாட்டில் எலும்புங்கிலும்பும் என்னும் சொல் பயின்றிருப்பது காண்க.

பொன்னு மிதழி விரை மத்தம்<br>
    பொங்கு கங்கை புரிசடைமேல்<br>
முன்னு வரவ மதியமுஞ்<br>
    சென்னி வைத்தல் மூர்க்கன்றே<br>
துன்னு மயூரஞ் சோலைதொறு<br>
    மாடத் தூரத் துணைவண்டு<br>
தென்ன வென்னுந் தென்னாகைத்<br>
    திருக்காரோணத் திருப் பீரே. 1

வரைக்கைவேழ முரித்துமா<br>
    ணடமாட்டானல் மனைதோறும்<br>
இரக்கை யொழியீர் பழியறியீ<br>
    லேற்றைவிற்று நெற்கொள்ளீர்<br>
முரைக்கைப் பவழக் கால் காட்ட<br>
    மூரிச் சங்கத்தொடு முத்தந்<br>
திரைக் கைகாட்டுந் தென்னாகைத்<br>
    திருக்கா ரோணத் திருப்பீரே. 2

புல்லும் பெறுமேவிடை புணரச்
சடைமே லொருபெண் புகவைத்தீ
ரில்லந்தோறும் பலியென்று
லிரக்க விடுவா ரிடுவாரே
முல்லைமுறுவல் கொடி யெடுப்பக்
கொன்றை முகமோதிரங் காட்டச்
செல்லும் புறவிற் றென்னாகைத்
திருக்காரோணத் திருப்பீரே. 3

மாண்டா ரெலும்புங் கிலும்பு மெல்லா
மாலையாக மகிழ்ந்தருளிப்
பூண்டார் பொறியாடர வாமை
புரமூன் றெரித்தீர் பொருளாகத்
தூண்டா விளக்கு மணிமாட
வீதிதோறுஞ் சுடருய்க்கச்
சேண்டார் புரிசைத் தென்னாகைத்
திருக்கா ரோணத் திருப்பீரே. 4

ஒருவர்க் கொருவ ரரிதாகி
லுடை வெண்டலை கொண்டூரி
னிருவர்க் கொருவரிரந் துண்டா
லெளிதே சொல்லீ ரெத்தனையும்
பருவற்கனகங் கற்பூரம்
பகர்ந்த முகந்து பப்பரவாத்
தெருவிற் சிந்துந் தென்னாகைத்
திருக்கா ரோணத் திருப்பீரே. 5

தோடையுடுத்த காதுடையீர்
தோலையுடுத்துச் சோம்பாதே
யாடையுடுத்துக் கண்டக்கா
லழகிதன்றே யரிதென்று
ஓடையுடுத்த குமுதமுளங்
கைமறிப்பப் புறங்கை யனஞ்
சேடை யுடுத்துந் தென்னாகைத்
திருக்கா ரோணத்திருப்பீரே. 6

கடுநஞ்சுண்டி ராகவே
கண்டங் கறுத்த திக்காலம்
விடு நஞ்சுண்டு நாகத்தை
வீட்டிலாட்ட வேண்டா நீர்
கொடுமஞ் சுகடோய் நெடுமாடங்
குலாவு மணிமாளிகைக் குழா
மிடுமிஞ்சிகை சூழ் தென்னுகைத்
திருக்கா ரோணத் திருப்பீரே. 7

பள்ளம்பாறு நறும்புனலைச்
சூடிப் பெண்ணோர் பாகமா
வெள்ளை நீறே பூசுவீர்
மேயும் விடையும் பாயுமே
தொள்ளை யான்ற காத்தானைச்
சுமந்து வங்கஞ் சுங்கமிடத்
தெள்ளும் வேலைத் தென்னுகைத்
திருக்கா ரோணத் திருப்பீரே. 8

மத்தங் கவரு மலர்க் கொன்றை
மாலை மேன் மாலானை
உய்த்தங் கவருமுறை செய்தா
லுமக் கேயன்றே பழியுரையீர்
முத்தங்கவரு நகையினையார்
மூரித்தானை முடிமன்னர்
சித்தங் கவருந் தென்னுகைத்
திருக்கா ரோணத் திருப்பீரே. 9

மறையன் றாலின்கீழ் நால்வர்க்
களித்தீர் களித்தார் மதின்மூன்று
மிறையி லெரித்தீரே மூலகு
முடையீ ரிரந்துணி னினிதேதான்
திறைகொண்டமரர் சிறந்திறைஞ்சித்
திருக்கோபுரத்து நெருக்க மலர்ச்
சிறைவண் டறையுந் தென்னுகைத்
திருக்கா ரோணத் திருப்பீரே. 10

தேரார் வீதித் தென்னுகைத்
திருக்கா ரோணத் திறையானைச்
சீரார் மாடத் திருநாவ
லூர்க்கோன் சிறந்த வன்றொண்ட
னூராவன் போடுரைசெய்த
அஞ்சோடஞ்சு மறிவார்கள்
வாரார் முலையா ளுமை கணவன்
மதிக்கவிருப்பார் வானகத்தே. 11

---

## மாணிக்க வாசகர் காலம்

மாணிக்கவாசகர் காலத்தைப் பலபேர் ஆராய்ந்து பலவித கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரையில் உள்ள காலத்தை அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகப் பெருமான் வாழ்ந்திருந்தார் என்பதை இப்போது பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்கிறார்கள். எமது ஆராய்ச்சியில் கண்ட முடிபும் அதுவே. அதாவது, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலே, பாண்டிய நாட்டை வரகுண பாண்டியனும், பல்லவ இராச்சியத்தைத் தெள்ளாறெறிந்த நந்திவர்மனும் அரசாண்ட காலத்திலே, சுந்தரமூர்த்திநாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் வாழ்ந்திருந்த காலத்திலேயே, மாணிக்கவாசகரும் உயிர் வாழ்ந்திருந்தார் என்பது எமது ஆராய்ச்சியிற் கண்ட முடிபு. இதனைச் சான்று காட்டி விளக்குவோம்.

மாணிக்கவாசக சுவாமிகள், தாம் அருளிய திருக்கோவையாரில், இரண்டு இடங்களில் வரகுண பாண்டியனைக் குறிப்பிடுகிறார். அவையாவன :—

" மன்னவன் தெம்முனைமேல் செல்லுமாயினும் மாலரியேறு
அன்னவன்தேர் புறத்தல்கல் செல்லாது வரகுணனும்

தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான் மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூலவன் நாளும் மற்றோர்தெய்வம் உன்னலனே"

" புயல் ஓங்கலர் சடை ஏற்றவன் சிற்றம்பலம் புகழும்
அய லோங்கிருங் களியானை வரகுணன் வெற்பின் வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டு மன் கோபமுங் காட்டிவரும்
செயலோங் கெயிலெரி செய்த பிரான்றோர் திருமுகமே"*

இந்தச் செய்யுள்களிலே வரகுண பாண்டியனை மாணிக்கவாசகர் குறிப்பிடுவது காண்க. குறிப்பிடுவது மட்டுமல்லாமல், அப்பாண்டியனைத் தமது காலத்திலிருந்தவன் என்னும் கருத்துப்பட நிகழ்காலத்தில் கூறுகிறார். "வரகுணனும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்" என்று கூறியதிலிருந்து இதனை அறியலாம்.

இந்த வரகுண பாண்டியனிடத்திலே, மாணிக்கவாசகர் தென்னவன் பிரமராயன் என்னும் சிறப்புப் பெயருடன், அமைச்சராக இருந்தார் என்று அவர் வரலாறு கூறுகிறது. வரகுண பாண்டியனும், மாணிக்கவாசகரைப் போலவே, மிகுந்த சிவபக்தன் என்பது எல்லோரும் அறிந்ததே. பட்டினத்துப்பிள்ளையார், தாம் அருளிய திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் வரகுண மகாராசனின் சிறந்த சிவத்தொண்டுகளைப் புகழ்ந்து பாராட்டுகிறார். திருவிளையாடற் புராணங்களும் வரகுண பாண்டியனுடைய சிவ பக்தியைப் புகழ்கின்றன.

வரகுண பாண்டியனின் சிவத்தொண்டுகள் பலவற்றிலும், திருவெண்ணீற்றின்மேல் அவனுக்கிருந்த பக்தி பெரிதும் போற்றப்படுகிறது. சேவகர், கள்ளன் ஒருவனைப் பிடித்துக் கொண்டுபோய் வரகுண பாண்டியனிடம் விட்டபோது, அக் கள்ளன் திருநீறு அணிந்திருந்ததைக் கண்டு வரகுண பாண்டியன் அவனை விடுவித்தாராம்.

*திருக்கோவையார் 306, 327.

" வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையில் கட்டவிழ்ப் பித்தும் "

என்று பட்டினத்துப் பிள்ளையார் வரகுணரின் திருநீற்றுப் பக்தியைப் புகழ்கிறார். வரகுண பாண்டியன், திருவெண்ணீற்றைப் பக்தியோடு அணிவது மட்டுமல்லாமல்! போருக்குச் செல்லும்போதும், உடம்பு முழுவதும் வெண்ணீறு அணிந்து கொண்டு செல்வது வழக்கம். ஒரு சமயம் அவன் அவ்வாறு நீறணிந்து போர்க்களம் சென்ற போது, பகைவருடைய அம்பு இவ்வரசன் காலில் தைத்து ஊடுருவியது. அப்போது, வரகுணன், " நீறு அணியாத இடத்தில் அம்பு தைத்தது அமையும் " என்று கூறினனும், இதனை, நம்பியாண்டார் நம்பியார் தமது கோயில் திருப் பண்ணியர் விருத்தத்தில் கூறுகிறார்.

" பொடியேர்தரு மேனிய னாகிப் பூசல்புக வடிக்கே
கடிசேர்கணை குளிப்பக் கண்டுகோயில் கருவி இல்லா
அடியே பட அமையுங்கனை என்ற வரகுணன் தன்
முடியே தருகழல் அம்பலத்தாடி தன் மொய்கழலே "*

வரகுண பாண்டியனின் திருநீற்றுப் பக்தியை அவனுடைய பொடியேர் தருமேனியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது தேவாரத்தில் சிறப்பித்துக் கூறுகிறார். திருவதிகை வீரட்டானப் பதிகத்தில், 8-ஆம் செய்யுளில், சுந்தர மூர்த்தி சுவாமிகள் இவ்வரசனை இவ்வாறு புகழ்கிறார்.

" பொன்னனை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னனைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர் வானந்தி "

இதில் " பொடியாடு திருமேனி நெடுமாறன் " என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் கூறுவது, வரகுண பாண்டியனையே யாகும். என்னை? வரகுணபாண்டியனுக்கு மாறன்சடையன்

---

*கோ. தி. வி. 62.

என்னும் பெயரும் சாசனங்களில் கூறப்படுகிறது. மாறன் என்னும் பெயரைத்தான் சுந்தரர் நெடுமாறன் என்று கூறுகிறார். இந்த நெடுமாறன், சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் கூறுகிற நெடுமாறனாக இருக்கலாகாதோ எனின், இல்லை. இந்த நெடுமாறன் அந்த நெடுமாறன் ஆகான். அந்த நெடுமாறன், "நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன்." இந்த நெடுமாறனே, "பொடியாடு திருமேனி நெடுமாறன்." எனவே, இவன் வேறு, அவன் வேறு என்பது திட்டமாகத் தெரிகிறது. "இந்தப் பொடியாடு திருமேனி நெடுமாறனை"த் தான், நம்பியாண்டார் நம்பி தமது கோயில் திருப் பண்ணியர் விருத்தத்தில் "பொடியேர் தருமேனியனாகிய வரகுணன்" என்று கூறினார்.

எனவே, திருக்கோவையாரில் மாணிக்க வாசகர் கூறுகிற வரகுண பாண்டியனும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரப்பதிகத்தில் கூறுகிற நெடுமாறனும் (நெடுமாறன்—மாறன், சடையன்—வரகுண பாண்டியன்) ஒருவனே என்பது தெரிகிறது. சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனருடன் பாண்டி நாட்டில் தலயாத்திரை செய்தபோது, பாண்டியன் அரண்மனையில் தங்கினர் என்று கூறப்படுகிறது. அந்தப் பாண்டியன் வரகுண பாண்டியனாகத்தான் இருக்கவேண்டும். அப்போது, அப்பாண்டியனின் மருகனாகிய சோழ அரசனும் பாண்டியன் அரண்மனையில் தங்கியிருந்தான். (சோழ அரசன் அக்காலத்தில் பல்லவ அரசனுக்குக் கீழடங்கி யிருந்தான்.) சேர சோழ பாண்டிய அரசர் மூவரும் ஒருங்குசேர்ந்திருந்ததைச் சுந்தரர் தமது தேவாரத்தில் பாடுகிறார் :

"அடிகேளுமக் காட்செய வஞ்சுதுமென்
றமரர் பெருமானை யாரூ ரனஞ்சி
முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்தாறு மோர்நான்கு மோரொன் றினையும்"*

*திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் 11.

எனவே, தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்த வரகுண பாண்டியன் காலத்திலே மாணிக்கவாசர் இருந்தார் என்பதும், அக்காலத்திலேயே சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இருந்தார் என்பதும் தெரிகின்றன.

மாணிக்கவாசகர், சிவபக்தனான வரகுணபாண்டியனைத் திருக்கோவையாரில் கூறியது போலவே, அவருக்குப் பிற்காலத்தவரான பட்டினத்துப்பிள்ளையாரும், வரகுண பாண்டியனின் பக்திச் செயல்களைத் தமது திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் கூறுகிறார். அவை:

1. நீறு பூசிய கள்ளனை விடுதலை செய்தது. 2. நரிகளுக்கு ஆடை அளித்தது. 3. தவளைகளுக்குக் காசு அளித்தது. 4. எச்சில் எள்ளை உண்டது. 5. மருதூரில் கிடந்த தலையோட்டைப் போற்றியது. 6. கோயிலில் நாய்க்கட்டம் எடுத்தது. 7. வேம்புகளுக்கு விதானம் அளித்தது. 8. தேவியைச் சிவபெருமானுக்குப் பணிவிடை செய்ய அளித்தது என்பன.*

பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் (பழைய திருவிளையாடற் புராணத்தில்), வரகுணபாண்டியனுக்குச் சிவலோகங் காட்டிய திருவிளையாடலில், மேற்படி எட்டுச் செயல்களையும் வரகுணபாண்டியன் பக்தியினால் செய்தான் என்று கூறப்படுகிறது.†

ஆனால், புதிய திருவிளையாடற் புராணமாகிய பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் அந்த எட்டு பக்திச் செயல்களும் கூறப்படாமல் மறைக்கப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் கூறுகிற வரகுணபாண்டியனும், பட்டினத்துப் பிள்ளையார் கூறுகிற வரகுணபாண்டியனும்,

---

* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, செய்யுள் 28, அடி 34—55.

† வரகுணனுக்கு சி. கா. படலம் 23 - 29.

பெரும்பற்றப்புலியூர் நம்பி தமது (பழைய) திருவிளையாடற் புராணத்தில் கூறுகிற வரகுணபாண்டியனும், நம்பியாண்டார் நம்பி கூறுகிற வரகுணபாண்டியனும் ஒரே பாண்டியன் என்பதில் ஐயம் இல்லை. என்னை? வரகுணபாண்டியன் என்னும் பெயரையுடைய பாண்டியர்களில் ஒருவன் மட்டும் மிகுந்த சிவபக்தியுடையவனாக இருந்தான் ஆகலின். இந்த வரகுணபாண்டியன், பல்லவ அரசர்களான தந்திவர்மன் காலத்திலும் அவன் மகனான நந்திவர்மன் காலத்திலும் இருந்தவன். இவனே முதலாம் வரகுணபாண்டியன்.

இந்த வரகுணபாண்டியன், பல்லவருக்குரிய சோழநாட்டைத் தந்திவர்மன் காலத்தில் வென்று அரசாண்டான் என்று முன்னரே கூறினோம். அவன் சோழநாட்டை வென்று அரசாண்டபடியினால்தான் சோழநாட்டிலிருக்கும் திருவிடைமருதூர், சிதம்பரம் முதலிய இடங்களில் நெடுநாள் தங்கிச் சிவபெருமானை வழிபட்டான். மேலும் அவன் சோழநாட்டிலிருந்த இடவை என்னும் ஊரை வென்றான் என்று முன்னரே கூறினோம். அந்த இடவை என்னும் ஊரை, வரகுணன் காலத்தவரும் அவ்வரசனுக்கு அமைச்சராக இருந்தவரும் ஆன மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் கூறுகிறார். இந்த இடவையை அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய அடியார்கள் தமது தேவாரத்தில் கூறவில்லை. மாணிக்கவாசகர், வரகுணபாண்டியன் இடவையை வென்று அங்குத் தங்கிய காலத்தில் தாமும் தங்கியிருந்தார் போலும். ஆகவே, அவ்வூர் சிவபெருமானைத் தமது திருவாசகத்தில் குறிப்பிட்டார் எனக் கருதலாம். அவர் இடவையைக் கூறும் செய்யுள் இது:

“மால்அயன் வானவர்கோனும் வந்து
வணங்கஅவர்க்கு அருள்செய்த ஈசன்
ஞாலம் அதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலம் திகழும்

கோலமணி அணிமாட நீடு
குலாவும் இடவை மடநல்லாட்கு
சீலம்மிகக் கருணை அளிக்கும்
திறம்அறிவார் எம்பிரா னவரே.*

வரகுணபாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர் மாணிக்கவாசகர். வரகுணபாண்டியனின் இசைப்புலவராக இருந்தவர் பாணபத்திரர். பாணபத்திரர் பொருட்டுச் சிவபெருமான், சேரமான்பெருமாள் நாயனருக்குத் திருமுகப் பாசுரம் அளித்தார் என்று வரலாறு கூறுகிறது. சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் நண்பர்களாக இருந்து இருவரும் பாண்டிநாடு சென்றனர் என்றும் அங்குப் பாண்டியனும், அவன் மருகனை சோழனும் அவர்களை வரவேற்றூர்கள் என்றும் சேரசோழ பாண்டியர் மூவரும் ஒருங்கிருந்ததைச் சுந்தரர் தமது தேவாரத்தில் பாடினர் என்றும் பெரியபுராணம் கூறுகிறது.

" கோத்திட்டை என்றெடுத்துக் கோயில்திருப் பதிகஇசை
மூர்த்தியார் தமைவணங்கி முக்கோக்களுடன் முன்பே
ஏத்தியவண் தமிழ்மாலை இன்னிசைபாடிப் பரவிச்
சாத்தினர் சங்கரனர் தங்குதிருப் பரங்குன்றில்."

" முறைபுரியும் முதல்வேந்தர்
மூவர்களும் கேட்டிறைஞ்சி
மறைமுந்நூல் மணிமார்பின்
வன்றெண்டர் தமைப்பணிந்தார்."†

இதற்கேற்பவே, சுந்தரர் " திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் " பதிகத்தின் கடைசிச் செய்யுளில் " முடியாலுலகாண்ட மூவர் முன்னே மொழிந்த "தாகக் கூறுகிறார்.

---

* திருவார்த்தை 2. †கழறிற்றறிவார் புராணம் 103, 104.

சிவபெருமான் சேரமான் பெருமாள் நாயனருக்குத் திருமுகம் அனுப்பியது வரகுணபாண்டியன் காலத்தில். சேரமான் பெருமாளும் சுந்தரரும் நண்பர்களானது வரகுணபாண்டியன் காலமான பிறகு. அதாவது சுந்தரர் 17 வயதுள்ள வாலிபராக இருந்தபோது. வயதால் மூத்தவராகிய சேரமான் பெருமாள் சுந்தரருடன் நண்பரானுர். சுந்தரருடன் சேரமான் பெருமாள் மதுரைக்குச் சென்ற போது அவர்களை வரவேற்ற பாண்டியன், வரகுணபாண்டியனின் மகனுன ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன் என்பது தெரிகிறது.

இதனுல், சுந்தரமூர்த்தி நாயனுர் காலத்திலே மாணிக்கவாசகர் இருந்தார் என்பது தெரிகிறது. மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்திக்கு வயதினுல் மூத்தவர்.

அப்படியானுல், சுந்தரர் மாணிக்கவாசகரை ஏன் திருத்தொண்டத்தொகையில் கூறவில்லை ? இந்தக் கேள்விக்கு விடை என்ன ?

சுந்தரமூர்த்தி, திடீரென்று ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை யொட்டித் திருத்தொண்டத்தொகை பாடினுர். எதிர்பாராதபடி திடீரென்று பாடும்படி நேரிட்டபடியால், அச்சமயம் அவர் நினைவுக்கு வந்த சிவனடியார்களை மட்டும் குறிப்பிட்டார். அவர் காலத்து அடியார்கள் எல்லோரையும் கூற அவர் கருதியிருந்தால், மாணிக்கவாசகரை மட்டும் அல்லாமல், மற்றும் விட்டுப்போன ஏனைய சைவ அடியார்களையும் கூறியிருப்பார். மாணிக்கவாசகரை மட்டும் விடவில்லையே. அக்காலத்தில் சிறந்த சிவனடியாராகிய வரகுணபாண்டியனையும் கூருமல் விட்டுவிட்டார். திருவாரூரில், கடவுளை வணங்கச் சென்றபோது அங்கிருந்த விறன்மிண்ட நாயனுர், "அடியார்களை வணங்காமற் போகிற வன்ருெண்டன் (சுந்தரர்) அடியார்களுக்குப் புறம்பானவன்" என்று கூற, அதைக் கேட்ட சுந்தரர், தமது அடியார் பக்தியைத் தெரிவிப்பதற்காகத் திருத்தொண்டத் தொகையைத் திடீ

றென்று பாடினாரேயல்லாமல், திருத்தொண்டர் பட்டியலைத் தொகுக்கவேண்டும் என்னும் கருத்தோடு பாடவில்லை. எனவே, அச்சமயம் அவர் நினைவுக்கு வந்த அடியார்களை மட்டும் பாடி முடித்தார்.

மாணிக்கவாசகர், தமது போற்றித் திரு அகவலில், "கலையார் அரிகேசரியாய் போற்றி" என்று கூறுகிறார். இதில் கூறப்படும் அரிகேசரி என்பது ஒரு பாண்டிய அரசன் பெயர் என்று தவறாகக் கருதிக்கொண்டு சிலர், பாண்டியன் அரிகேசரி காலத்தில் மாணிக்கவாசகர் இருந்தார் என்று ஆராய்ச்சி செய்ய முற்படுகின்றனர். அவர் கூறிய அரிகேசரியார் என்பது அரிகேசரி என்னும் அரசனை யன்று; அரிகேசரி என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானைக் குறிக்கிறது. கலைகள் பொருந்திய அரிகேசரி என்னும் ஊரில் உள்ள சிவபெருமானுக்கு வணக்கம் என்பது அதன் பொருள். இதன் பொருளை அறியாமல் சிலர், அரிகேசரி பாண்டியன், வரகுணபாண்டியன் என்னும் இரண்டு அரசர் காலத்தில் மாணிக்கவாசகர் இருந்தார் என்று கூறுகின்றனர்.

ஓர் ஆய்வாளர், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தை மட்டும் துணையாகக்கொண்டு ஆராய்கிறார். பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணம், அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் மாணிக்கவாசகர் இருந்தார் என்று கூறுவதை ஆதாரமாகக்கொண்டு அவர் ஆராய்கிறார். பரஞ்சோதியார் திருவிளையாடலுக்கு முற்பட்ட, பழைய திருவிளையாடற்புராணம் ஒன்று இருப்பதை அவர் தெரியாமலே யிருக்கிறார். பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய பழைய திருவிளையாடற் புராணம் ஆராய்ச்சிக்குச் சிறிது உதவு கிறது. புதிய திருவிளையாடற் புராணமாகிய பரஞ்சோதி யார் புராணம் ஆராய்ச்சிக்கு உதவாதது; சரித்திரத்துக்கு மாறுபட்ட பல கருத்துக்களை மனம்போனபடி கூறுகிறது. ஆகவே, பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தை

ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையோடிருக்கவேண்டும்.

மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சிக்கு ஒரே ஒரு அகச்சான்று மட்டும் உண்டு. அதுதான், வரகுணபாண்டியனைச் சுட்டுகிற சான்று. அந்தச் சான்றைக்கொண்டு ஆராய்ந்தால், நாம் மேலே காட்டியபடி, பல்லவ அரசர்களான தந்திவர்மன் அவன் மகனான தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்னும் அரசர்கள் காலத்தில் இருந்த பாண்டியன் வரகுண மகாராசனைத்தான் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார் என்பது ஏற்படுகிறது. இந்த வரகுண மகாராசன் முதலாம் வரகுணபாண்டியன் ஆவான். ஆகவே, அவ்வரசனைக் குறிப்பிடுகிற மாணிக்கவாசகர், அவ்வரசன் காலத்தில், கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவராவார். அக்காலத்திலேயே, சில ஆண்டுகளுக்குப் பின்னர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இருந்தார்.

"குடமுழ நந்திசேனை வாசகனாகக் கொண்டார்" என்றும், "நரியைக் குதிரை செய்வானும் நரகரைத்தேவு செய்வானும்" என்றும் திருநாவுக்கரசர் கூறியுள்ளதைச் சான்று காட்டி மாணிக்கவாசகர் காலத்தைச் சிலர் ஆராய்கின்றனர். இது தவறு. இவற்றை எல்லாம் இங்கு ஆராய முற்பட்டால் இடம் விரியும் என அஞ்சி ஆராயாமல் விடுகிறோம்.

மாணிக்கவாசகர் காலத்தை ஆராய்ந்தவர்கள், கி. பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. எட்டாம் நூற்றாண்டு வரையில் ஒவ்வோர் காலத்தைக் காட்டியுள்ளார்கள். சிலர் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு என்றும் கூறினார்கள். அவைகளையெல்லாம் ஆராய விரும்புவோர் கீழ்க்கண்ட கட்டுரைகளையும் நூல்களையும் படிப்பார்களாக:

பண்டித வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் எழுதிய கட்டுரை: The Indian Review April, 1901. T. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கட்டுரை: The

Malabar Quarterly Review, Vol. III, p. 203. பண்டித வேதாசலம் பிள்ளை அவர்கள்: The Christian College Magazine 1904. ஷை பண்டித வேதாசலம் பிள்ளை அவர்களே (மறைமலை அடிகள்) ஷை கருத்தைத் தழுவி, "மாணிக்கவாசகர் காலமும் ஆராய்ச்சியும்" என்னும் நூலை எழுதியிருக்கிறார். இதில் கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இருந்தார் என்று கூறுகிறார். கே. ஜி. சேஷ அய்யர்: The Christian College Magazine, September 1901. டாக்டர் போப் ஐயர் அவர்கள், தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருவாசக நூலின் முகவுரையில், மாணிக்கவாசகர் கி. பி. 7-ஆம் 8-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கூறுகிறார். சென்னை நீதிமன்றத்து நீதிபதியாயிருந்த திரு. இன்னஸ், மாணிக்கவாசகர் சங்கரரைப் பின்பற்றியவர் என்றும், ஆகவே அவர் 9-ஆம் நூற்றாண்டினர் என்றும் கூறுகிறார். Mr. Innes: The Indian Magazine and Review, Dec. 1900. The Imperial and Asiatic Quarterly Review, April 1902. Prof. Julien Vinson: Malabar Quarterly Review Vol. VII, p. 112, Rev. Mr. Goudie: The Christian College Magazine, August 1902. Mr. Nelson: Madura Manual Vol. I, p. 53. கி. பி. 819-இல் மாணிக்கவாசகர் இருந்தார் என்கிறார். கோபிநாத ராயர், கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்ததாகக் கூறுகிறார்: The Christian College Magazine, June 1905. சி.வி.நாராயண அய்யர் கூன்பாண்டியன் காலம் என்கிறார். O. E. H. S. S. I. Chapter XII. சீனிவாசபிள்ளை அவர்கள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்: "தமிழ் இலக்கிய வரலாறு." திரு. வி. வெங்கையா அவர்கள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர். Ambasamudram Inscription of Varaguna Pandya, Epi. Ind Vol. IX, p. 89.

## சுந்தரர் கால ஆராய்ச்சி

நாராயண அய்யர் தாம் எழுதிய தென் இந்திய சைவ சமயத்தின் தோற்றமும் வரலாறும் என்னும் ஆங்கில நூலிலே,* சுந்தரர் கி. பி. 710 முதல் 735 வரையில் வாழ்ந்திருந்தார் என்று கூறுகிறார். இவர் கூற்று ஏற்கத் தக்கதன்று. ஏனென்றால், சுந்தரர் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்பது சரித்திர ஆசிரியர்கள் கண்ட முடிபு. அந்த முடிபுக்கு மாறாக இவர் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவர் என்று கூறுவது கொள்ளத் தக்கதன்று.

மு. இராகவையங்கார் அவர்கள், இரண்டாம் நரசிம்ம வர்மனான இராஜ சிம்மன் காலத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் இருந்ததாகக் கூறுகிறார். அன்றியும், திருமங்கை யாழ்வாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்றும் கூறுகிறார். மேலும், "காடவர்கோன் கழற்சிங்கன்" என்னும் அரசனைச் சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் கூறியது இராஜசிம்ம பல்லவனையே என்னும் கூறுகிறார்.†

இவர் கருத்தும் ஏற்கத்தக்கதன்று. இவர் கூறுகிற இரண்டாம் நரசிம்மவர்மனான இராஜசிம்மன் கி. பி. 680 முதல் 700 வரையில் அரசாண்டவன். ஆகவே, கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்த இவ்வரசனும் 9-ஆம் நூற்றாண்டிலிருந்த சுந்தரரும் ஒரு காலத்தில் இருந்திருக்க முடியாது. சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் கூறுகிற "காடவர்கோன் கழற்சிங்கன்" என்பவன் இராஜசிம்ம பல்லவன் அல்லன். வேறு ஒரு பல்லவ அரசன். திருமங்கையாழ்வார் காலத்தில் சுந்தரர் இருந்தார் என்று கூறுவதும் தவறு.

*Origin and early History of Saivism in South India, C. V. Narayana Ayyar.

†ஆழ்வார்கள் காலநிலை. 1929. பக்கம் 135, 136.

சுந்தரர், திருமங்கையாழ்வாருக்குப் பிறகு (குறைந்தது 25 ஆண்டுக்குப் பின்னர்) இருந்தவர். இக்காரணங்களினாலே இராகவையங்கார் கருத்து ஏற்கத் தக்கதன்று.

கோபாலன் அவர்கள் தாம் எழுதிய காஞ்சிப் பல்லவ சரித்திரம் என்னும் ஆங்கில நூலிலே,* சுந்தரர் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலே இருந்தவர் என்று கூறுகிறார். ஆனால், இந் நூற்றாண்டின் முற்பகுதியிலா பிற்பகுதியிலா என்பதைக் கூறவில்லை.

ஸ்ரீநிவாச பிள்ளை அவர்கள், தமது தமிழ் வரலாறு (இரண்டாம் பாகம்) என்னும் நூலிலே சுந்தரர் காலத்தை ஆராய்ந்து கி. பி. 804 முதல் 825 வரையில் வாழ்ந்திருந்தார் என்று கூறுகிறார். இது சுந்தரர் காலமாகிய கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்கு உட்படுகிறது. ஆனால் அகச்சான்று கொண்டு ஆராயப்படவில்லை.

சுந்தரர் காலத்தை அகச்சான்று கொண்டு ஆராய்ந்து பார்ப்போம்.

சுந்தரர், தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில், தமது காலத்தில் இருந்த கழற்சிங்கர் என்னும் அரசரைக் குறிப்பிடுகிறார்.

**“ கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்**
**காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் ”**

என்பது அவர் வாக்கு. காடவர் (பல்லவர்) குலத்து கழற் சிங்கன் என்னும் அரசன், பேரரசன் என்றும் அவன் தமது காலத்தில் வாழ்ந்தவன் என்றும் அவன் சிறந்த சிவபக்தன் என்றும் இதில் கூறுகிறார். உலகெலாம் காக்கின்ற பெருமான் என்று நிகழ்காலத்திலே கூறுவது கவனிக்கத் தக்கது. இதனால், கழற்சிங்கன் என்னும் அரசன் காலத்தில் சுந்தரர் வாழ்ந்திருந்தார் என்பது ஐயமின்றித் தெரிகிறது.

---

*History of the Pallavas of Kanchi ; R. Gopalan p. 160.

கழற்சிங்கன் என்னும் அரசன் யார்? அவன் எந்தக் காலத்தில் அரசாண்டான்?

சுந்தரர் கூறிய காடவர்கோன் கழற் சிங்கனைச் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் (கழற்சிங்கநாயனார் புராணத்தில்) சற்று விளக்கமாகக் கூறுகிறார்.

"படிமிசை நிகழ்ந்த தொல்லைப்
பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றுஞ் செற்ற
கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன்
றறிவினிற் குறியா நீர்மைக்
கொடி நெடுந்தானை மன்னர்
கோக்கழற் சிங்கர் என்பார்."

"காடவர் குரிசி லாராங்
கழற் பெருஞ்சிங்கர் தாம்
ஆடக மேரு வில்லார்
அருளினால் அமரிற் சென்று
கூடலர் முனைகள் சாய
வடபுலங் கவர்ந்து கொண்டு
நாடற நெறியில் வைக
நன்னெறி வளர்க்கு நாளில்."

மேலும், முரசுடைத்தானை மன்னர்* என்றும், சிங்கர் என்றும்,† உலது நிகழ்ந்த பல்லவர் கோச்சிங்கர்‡ என்றும் சேக்கிழார் கூறுகிறார்.

இதனால், கழற்சிங்க நாயனாருக்குச் சிங்கர், பெருஞ் சிங்கர், கழற்சிங்கர் என்னும் பெயர்கள் உண்டு என்பதும் அவர் பல அரசர்களைப் போரில் வென்றவர் என்பதும் வட புலங்களையும் வென்றவர் என்பதும் சிவபெருமானிடத்தில்

*செய்யுள் 4. †செய்யுள் 13. ‡செருத்துணை நாயனார் புராணம் 4.

மிகுந்த பக்தியுடையவர் என்பதும் தெரிகின்றன. பல்லவ அரசர்களில் இவ்விதச் சிறப்புகளைக் கொண்டவன் யார் என்று பார்த்தால், மூன்றாம் நந்திவர்மனே இத்தகைய சிறப்புகளைக் கொண்டிருந்தான் என்பது தெரிகிறது. மூன்றாம் நந்திவர்மனுக்குத் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் பெயர் உண்டென்பதை அறிவோம்.

இவனைப் பாடிய நந்திக் கலம்பகம் இவனை, துறைகழல் வீரநந்தி என்றும், அறைகழல் முடித்த அவனிநாரணன் என்றும் கூறுகிறது.* மேலும், பல்லவர் கோளரி என்றும் கூறுகிறது.† கோளரி=சிங்கம். காலில் வீரக்கழலை அணிந்த சிங்கன் என்பது இவற்றின் கருத்தாகும். அவனிநாரணன் என்னும் சிறப்புப் பெயரும் இவனுக்கு உண்டு என்பதை நந்திக் கலம்பகம் கூறுகிறது. சுந்தரர் "கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்" என்று கூறியது "அவனி நாரணன் என்னும் பெயரின் பொருளாகும்.

கழற்சிங்கன் என்றால், காலில் வீரக்கழலை யணிந்து சிங்கம்போலப் போரை வென்றவன் என்பது பொருள். இது தெள்ளாறெறிந்த நந்திவர்மனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்று.

போர் வீரர்கள் தமது காலில் வீரக் கழல்களை அணிவது வழக்கம் என்பதைப் பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. நந்திவர்மன் பல போர்களை வென்றவன். முக்கியமாகத் தெள்ளாற்றுப் போர் புகழ்வாய்ந்தது. இதனாலே அவன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று புகழப்பட்டான். மேலும் பழையாறு, வெள்ளாறு, நல்லாறு, குறுகோடு முதலிய வேறு பல இடங்களிலும் போர் செய்து வென்றான் என்று நந்திக் கலம்பகம் கூறுகிறது. இத்தனைப் போர்களை வென்ற வீரன், காலில் கழல் அணிந்து சிங்கன் என்னும் சிறப்புப் பெயர் பெற்று கழற்சிங்கன் என்று

*செய்யுள் 28, 66. †செய்யுள் 59.

அழைக்கப்பெற்றதில் வியப்பு இல்லை. கழற்சிங்கன் என்னும் சிறப்புப் பெயரையே சுந்தரரும் சேக்கிழாரும் தமது நூல்களில் கூறினர்கள்.

கழற்சிங்கனுகிய நந்திவர்மன், வடபுலங்களையும் கவர்ந்து கொண்டான் என்று சேக்கிழார் கூறுவதைப் போலவே, நந்திக் கலம்பகம் குறுகோடு என்னும் கோட்டையை வென்றான் என்று கூறுகிறது. குறுகோடு என்பது பல்லாரி மாவட்டம் பல்லாரி தாலுகாவில் உள்ளது.

> **" .........மண்ணுலகம் காவல்பூண்ட**
> **உரிமையால் பல்லவர்க்குத் திரைகொடா**
> **மன்னவரை மறுக்கஞ் செய்யும்**
> **பெருமையால் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்**
> **பெருமானைப் பெற்றா மன்றே."**

என்று சுந்தரர் தமது கோயில் பதிகத்தில் கூறுகிற பல்லவ மன்னன், கழற்சிங்கனுகிய மூன்றும் நந்திவர்மனே என்று கொள்ளத்தகும். இதனால், இவ்வரசன் பல அரசரை வென்று பேரரசனாக விளங்கினான் என்பது தெரிகிறது.

சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில், இவ்வரசனைச் சிவபக்தன் என்று கூறுகிறார். சேக்கிழாரும் தமது பெரிய புராணத்தில் (கழற்சிங்க நாயனார் புராணம்) இவனைச் சிறந்த சிவபக்தன் என்று கூறுகிறார். இதற்கேற்பவே, இவனைப் பாடிய நந்திக் கலம்பகமும் "சிவனை முழுவதும் மறவாத சிந்தையான் " என்று கூறுகிறது. . வேலூர் பாளையத்துச் செப்பேட்டுச் சாசனம்,' இவன் சிறந்த சிவ பக்தன் என்பதைக் கூறுகிறது.*

எனவே, சுந்தரர் காலத்திலிருந்த கழற்சிங்கன் என்னும் அரசன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்பது தெரிகிறது. இவ்வரசன் ஏறக்குறைய கி. மு. 830 முதல் 854

*S. I. I. Vol. II, Part V, page 509, line 64-65.

வரையில் அரசாண்டான் என்பது அறிவோம். ஆகவே, சுந்தரமூர்த்தி நாயனார் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் இருந்தவர் என்பது தெளிவாகிறது.

மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாறு, நள்ளாறு முதலிய ஊர்களில் போர் வென்றான் என்று நந்திக் கலம்பகம் கூறுகிறது. அவ்வரசன் காலத்திலிருந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் தெள்ளாறு, நள்ளாறு என்னும் ஊர்களில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தமது பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

"நள்ளாறு தெள்ளாறரத் துறைவா ! எங்கள் நம்பனே !
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் தோலை
[விரும்பினாய்"*

என்பது அச்செய்யுள்.

---

## நந்திக் கலம்பகம்

நந்திக் கலம்பகம், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் மேல் பாடப்பட்டது. இக்கலம்பகத்தில், நந்திவர்மனைப் பற்றிய சரித்திரக் குறிப்புகள் காணப்படுவதால், இந்நூல் முழுதும் இங்குத் தரப்படுகிறது.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

தரவு

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்சுடராய் ஒளியென்னும் ஓருருவம் மூன்றுருவம்
மைவடிவோ வனைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேநின் திருமேனி.

† அருவரையி னகங்குழைய வனலம்பு தெரிந்தவுணர்
பொருமதில்க ளவைமூன்றும் பொன்றுவித்த புனிதற்கும்

---

* திருப்புக்கொளியூர் அவிநாசி 9.

† இச்செய்யுள், பிற்காலத்தில் இடைச்செருகலாகச் சேர்க்கப் பட்டதென்று தோன்றுகிறது.

குருமணிசே ரணிமுறுவல் குலக்கங்கை நதிபாயத்
திருமுடியைக் கொடுத்தாற்கும் செம்பாகந் திறம்பிற்றே.

இலகொளிய மூவிலைவே லிறைவாநின் னியற்கயிலைக்
குலகிரியு மருமறையுங் குளிர்விசும்பும் வறிதாக
அலைகதிர்வேல் படைநந்தி யவனிநா ராயணனிவ்
உலகுடையான் திருமுடியு முள்ளமுமே யுவந்தனையே.

அராகம்

செழுமலர் துதைதரு தெரிகணை மதனனது
எழிலுடல் பொடிபட வெரிதரு நுதலினை.

அருவரை யடியெழ முடுகிய அவுணனது
ஒருபது முடியிற ஒருவிரல் நிறுவினை.

தாழிசை

ஏசிகையில் கொன்றையும் வெள்ளெருக்கும் விராய்த்தொடுத்த
வாசிகையி னூடேவெண் மதிக்கொழுந்தைச் சொருகினையே.

பாய்புலியி னுரியசைத்த பலபுள்ளிப் படிவமெலாம்
ஆயிரவாய்க் கருங்கச்சை யழலுமிழ வசைத்தனையே.

சோர்மதத்த வார்குருதி சோனைநீர் எனத்துளிப்ப
வேர்மதத்த கரியுரிவை யேகாசம் இட்டனையே.

திசைநடுங்கத் தோன்றிற்று நீயுண்ட திறனஞ்சம்
உயிர்நடுங்கத் தோன்றிற்று நீயுதைத்த வெங்கூற்றம்.

அம்போதரங்கம்

அனைத்துலகில் பிறப்புநீ
அனைத்துலகில் இறப்புநீ
அனைத்துலகில் துன்பமுநீ
அனைத்துலகில் இன்பமுநீ.

வானோர்க்குத் தாதையுநீ
வந்தோர்க்குத் தந்தையுநீ
ஏனோர்க்குத் தலைவனுநீ
எவ்வுயிர்க்கும் இறைவனுநீ.

ஊழிநீ, உலகும்நீ
உருவும்நீ, அருவும்நீ
ஆழிநீ, அமுதமும்நீ
அறமும்நீ, மறமும்நீ.

எனவாங்கு

சுரிதகம்

ஒருபெருங் கடவுணிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை யளவுந் தென்பொதி யளவும்
விடையுடன் மங்கல விசயமும் நடப்ப
ஒருபெருந் தனிக்குடை நீழல்
அரசுவீற் றிருக்க வருளுக எனவே. 1

குறிப்பு:—இந்தக் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் நந்திவர்மனுடைய சிறப்புப் பெயராகிய அவனிநாரணன் என்னும் பெயர் கூறப்படுகிறது. மாமல்லபுரம், மயிலாப்பூர் என்னும் அவனுடைய நகரங்களும் கூறப்படுகின்றன. விடை (எருது)க் கொடியும், முத்திரையும் குறிக்கப்படுகின்றன.

நேரிசை வெண்பா

எனதே கலைவளையும் என்னதே மன்னர்
சினவேறு செந்தனிக்கோல் நந்தி—இனவேழங்
கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றுடும்
பூமறுகிற் போகாப் பொழுது. 2

கட்டளைக் கலித்துறை

பொழுதுகண் டாயதிர் கின்றது போககம் பொய்யற்கென்றும்
தொழுதுகொண் டேனென்று சொல்லுகண் டாய்தொல்லை நூல்வரம்பு
முழுதுகண் டானந்தி மல்லையங் கானல் முதல்வனுக்குப்
பழுதுகண் டாயிதைப் போய்ப்பகர் வாய்சிறைப் பைங்குருகே. 3

குறிப்பு:—நந்திவர்மன் பழைய நூல்களை யெல்லாம் கற்றவன் என்று இதில் கூறப்படுவது காண்க.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

குருகுதிர்முன் பனிக்கொதுங்கிக் கூசுங் கங்குல்
குளிர்திவலை தோய்ந்தெழுந்த நறுந்தண் வாடை
யருகுபனி சிதறவரா அஞ்சு வானை
யஞ்சலஞ்சல் என்றுரைத்தா லழிவ துண்டோ?
திருகுசினக் கடக்களிற்றுச் செங்கோல் நந்தி
தென்னவர்கோன் தன்குறும்பிற் சென்று சூழ்ந்த
கருகைவினைப் பகைஞருடல் துண்ட மாகத்
துயிலுணர்ந்த வல்லாண்மைத் தொண்டர் வேந்தே. 4

குறிப்பு:—இதில், நந்திவர்மனுடைய பகைவனை பாண்டியனை யும் அவனைச் சார்ந்திருந்த அரசர்களையும் நந்தி வென்ற செய்தி கூறப்படுகிறது.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

தொண்டை வேந்தன் சோனுடன் தொன்னீ ரலங்கல் முந்நீருங்
கொண்ட வேந்தர் கோனந்தி கொற்ற வாயில் முற்றத்தே
விண்ட வேந்தர் தந்நாடும் வீரத் திருவும் எங்கோனைக்
கண்ட வேந்தர் கொண்மின்க ளென்னுங் கன்னிக் கடுவாயே.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**கடுவா யிரட்ட** வளைவிம்ம மன்னர்
கழல்சூட வங்கண் மறுகே
யடுவார் மருப்பி னயிரா வதத்தின்
அடுபோர் செய் **நந்தி** வருமே
கொடுவார் புனைந்து நகுவாட் படைக்கண்
மடவா ரிடைக்குண் மனமே
வடுவா யிருக்கு மகளேயி முன்றின்
மணிபூசல் ஆடல் மறவே. 6

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மறமத கரிதிசை நிறுவின
மணிநகை யவர்மனம் நகுவன
விறலர சர்கண்மன நெகிழ்வன
விரைமலர் களிமுலை பொருவன
திறலுடை யனதொடை புகழ்வன
திகழொளி யனபுகழ் ததைவன
நறுமலர் அணியணி முடியன
**நயபர** னிணதிருப் புயமதே. 7

இதில், நயபரன் என்பது நந்திவர்மனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்றாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

கலி விருத்தம்

புயங்களிற் பூவைமார் பொங்கு கொங்கையின்
நயங்கொளத் தருபுகழ் **நந்தி கச்சி** சூழ்
வயங்களிற் கடிமலர் துழாவிக் காமுகர்
பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே. 8

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வாடை நோக வீசு மாலம்
மாரன் வாளி தூவுமால்
ஆட லோத மார்க்கு மாலென்
ஆவி காக்க வல்லனே

ஏடு லாவு மாலை சேரி
ராசன் **மல்லை நந்தி**தோள்
கூடினால லர்வ ராது
கொங்கு விம்மு கோதையே. 9

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கோதை சோரிற் சோர்கொங்கை
விம்மில் விம்மு குறுமுறுவல்
சோதி வெளுக்கில் வெளுமருங்குல்
துவளி னீயுந் துவள்கண்டாய்
காது **நெடுவேற் படை நந்தி**
**கண்டன் கச்சி வளநாட்டு**
மாத ரிவரோ டுறுகின்றாய்
வாழி மற்றென் மடநெஞ்சே. 10

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நெஞ்சாகுல முற்றிங னேமெலிய
நிலவின் கதிர் நீளெரி யாய்விரியத்
துஞ்சாநய னத்தொடு சோருமிவட்
கருள்ாதொழி கின்றது தொண்டைகொலோ
**செஞ்சாலி வயல்படர் காவிரிசூழ்**
**திருநாடுடை நந்தி** சினக்கலியின்
வெஞ்சாயல் மறைத்த தனிக்குடையான்
**விடைமண்பொறி யோலை விடேல் விடுகே.** 11

கட்டளைக் கலித்துறை

விடுதிர்கொல் லோவள நாடுடை வீரா சற்குமுன்னின்
றிடுதிர்கொல் லோபண்டி றக்குந் திறையெரி கானத்தும்மை
யடுதிர்கொல் லோதிற னந்தியெங் கோனயி ராவதத்திற்
படுதிர்கொல் லோபடை மன்னீரென் னுமுங்கன் பாவனையே. 12

வஞ்சி விருத்தம்

வணைவார்குழல் வேணியும் வாடைகணீர்
நணைவார்துகி லும்மிவை நாளுமிரா
விணைவார்கழல் நந்திவி டேல்விடுகின்
கணைவார்முர சொத்தது காரதிர்வே. 13

தரவு கொச்சகக் கலிப்பா

அதிர்குரல மணிநெடுந்தேர் அவனிநா ரணன் களிற்றின்
கதிரொளிய வெண்மருப்புக் கனவயிரஞ் செறிந்ததால்
மதுரைகொலோ அடுபுலிக்கோன் நகரிகொலோ மாளிகைசரய்ந்
தெதிரெதிரே கெடநின்ற தெவ்வூர்கொ லறியோமால். 14

நேரிசை வெண்பா

ஓம மறைவாண ரொண்பொற் கழல்வேந்தர்
தாம முடிக்கணிந்த தாளிப்புல்—கோமறுகில்
பாவடிக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோ னந்திதன்
சேவடிக்கீழ்க் காணலாஞ் சென்று. 15

கட்டளைக் கலித்துறை

சென்றஞ்சி மேற்செங்கண் வேழஞ் சிவப்பச் சிலர்திகைப்ப
வன்றுஞ் சினத்தா ரினமறுத் தார்போலு மஃதஃதே
குன்றஞ்செய் தோள்நந்தி நாட்டங்குறி குறுக்கோட்டையின்மேல்
சென்றஞ்சப் பட்டதெல் லாம்படு மாற்றலர் திண்பதியே. 16

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புதிதொறு புயல்பொழி தருமணி
பணைதரு பருமணி பகராநெல்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு
திழிதரு காவிரி வளநாடா
நிதிதரு கவிகையு நிலமக
ளுரிமையு மிவையிவை யுடைநந்தி !
மதியிலி யரசர்நின் மலரடி
பணிகிலர் வானக மாள்வாரே. 17

கலி விருத்தம்

கூட்குலாங் கடற்படை யவனி நாரணன்
தோட்குலா மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாட்குலாங் கண்ணினல் விளைந்த மம்மர்நோய்
மீட்கலா மடல்கையில் விரவு மாகிலே. 18

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வீரவாத மன்னரெலாம் விண்ணேற வெள்ளாற்று
வெகுண்டோன் தொண்டைக்
கீரவாந் பரிசெல்லா மிரந்தேற்றும் பாவைமீ
ரெல்லீர் வாடை
வாரவாதை யுற்றிருந்து வருந்துவார் பலரென்றும்
வாழி வாழி
பாரவாதை நந்திசெங்கோ லிதுவாகி லதுபார்க்கும்
பரிசுநன்றே. 19

ஷ்டி வேறு

நன்றுங்கொடி தாபவிர் கின்றதிரா
நவின்றது மாருத சாலமெனக்
கென்றின்னில வென்னு மிளம்பிறையும்
எரியேசொரி கின்றதியாது செய்கோ
வன்றிந்தில மேழுமளந்த பிரான்
அடல்உக்ரம கோபன் அடங்கலர்போல்
இன்றென்னுயி ரன்னவள் கொங்கையைவிட்
டெங்ஙன் றுயில் கின்றன னேழையனே. 20

வஞ்சித் துறை

ஏழை மார்துணை
வாழி நந்தி தண்
நீழல் வெண்குடை
ஊழி நிற்கவே. 21

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நிற்க மன்னவர் நிரந்த வெண்குடை
மிடைந்த நீள்கடை நெடுந்தகை
விற்கொ ணன்னுதன் மடந்தை மார்மிக
முயங்குதோள் **அவனி நாரணன்**
நற்கொள் வார்மதிற் கச்சி **நந்தி**
நலங்கொ ளன்னவ னலங்கன்மே
லொற்க மென்மக ளுரைசெய் தோவுல
களிப்ப னித்திற னுரைத்திடே. 22

இணைக்குற ளாசிரியப்பா

உரைவரம் பிகந்த வுயர்புகழ்ப் **பல்லவன்**
**அரசர் கோமான் அடுபோர் நந்தி**
**மாவேள் ளாற்று மேவலர்க் கடந்த**
**செருவேல்** உயர்வு பாடினன் சொல்லோ
நெருநற் றுணியரைச் சுற்றிப்
பரடு திறப்பத் தன்றற் பல்கடை
திரிந்த பாண னறுந்தார் பெற்றுக்
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கல னணிந்து
விளங்கொளி யானன னிப்போ
திளங்களி யானை யெருத்தமிசை யன்னே. 23

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அன்ன மடமயிலை யாளி
மதயானை **நந்தி** வறியோர்
சொன்ன பொருணல்கு வள்ள
ஞுகுநீர **தொண்டை வளநாட்டு**
அன்னநடையாளை யல்குல்
பெரியாளை யங்கை யகல்வான்
மின்னை மெலிவாளை நூலி
னிடையாளை நேர்வ மயிலே. 24

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மயில்கண்டால் மயிலுக்கே வருந்தி யாங்கே
மான்கண்டால் மானுக்கே வாடி மாதர்
குயில்கண்டால் குயிலுக்கே குழைதி யாகில்
கொடுஞ்சுரம்போக் கொழிநெஞ்சே **கூடாமன்னர்**
**எயில்கொண்டான் மல்லையங்கோன்நந்தி** வேந்தன்
இகல்கொண்டா **னிருங்கடம்பூர்** விசும்புக் கேற்றி
அயில்கொண்டான் **காவிரிநாட்** டன்னப் பேடை
யநிசயிக்கு நடையாரை யகல லுற்றேன். 25

கலி விருத்தம்

நூற்க டற்புல வன்னுரை வெண்டிரை
**நாற்க டற்கொரு நாயகன் நந்தி**தன்
கோற்க டைப்புரு வந்துடிக் குந்துணை
வேற்க டற்படை வேந்தர்தம் வீரமே. 26

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வீரதிரனல் விறலவிர் கஞ்சுகன்
**வெறியலூர்ச்** செருவென்றோன்
ஆர்வ மாவள நின்றவ ரன்பன்மற்று
அவன்பெருங் கடைநின்ற
சேரசோழருந் தென்னரும் வடபுலத்
தரசருந் திரைதந்த
வீரமாமத கரியிவை பரியிவை
யிரவலர் கவர்வாரே. 27

அடி வேறு

கவரிச் செந்நெற் காடணி சோலைக்
**காவிரி வளநாடன்**
குமரிக் கொண்கன் கங்கை மணாளன்
**குரைகழல் விறல்நந்தி**

**அமரில் தென்னாற் றஞ்சிய நெஞ்சத்**
**நரசர்கள் நிரன்போகும்**
இவரிக் கானத்தேகிய வாறென்
எழிநகை யிவளோடே. 28

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட வாடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட வாடாமோ ஊசல்
அம்மென் மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி **குவலயமார்த் தாண்டன்**
காடவர்க்கு முன்றோன்றல் கைவேலைப் பாடிக்
**காஞ்சீபுரம்பாடி** யாடாமோ ஊசல். 29

கலி விருத்தம்

ஊசல் மறந்தாலும் ஒண்கழல் அம்மானை
வீசல் மறந்தாலும் மெல்லிய லென்பேதை
பூசல் இலங்கிலைவேல் **போர்க்கழல் நந்திதன்**
பாசிலை யந்தொண்டை யல்லது பாடாளே. 30

நேரிசை வெண்பா

பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்
பீடியன் மாகளிற்றார் பிச்சத்தார்—கூடார்
படையாறு சாயப் **பழையாறு** வென்றான்
கடையாறு போந்தார் கலந்து. 31

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கலங்கொள் அலங்கல் வேல்நந்தி
கச்சி நாட்டோன் அவன் கழல்
புலங்கொ ளொளிய நல்லோர்க்கும்
புகல்கின் றோர்க்கும் பொன்னா

நலங்கொண் முறுவல் முகஞ்சாய்த்து
நாணுநின் று மெல்லவே
விலங்கல் வைத்த மின்னேக்கின்
மேலு முண்டோ வினையேற்கே. 32

கட்டளைக் கலித்துறை

வினையின் சிலம்பன் பரிவும் இவடன் மெலிவு மென்பூந்
தினையும் விளைந்தது வாழிதன் மீறுதெள் ளாற்று நள்ளார்
முனையுமன்றேக முனிந்தபி ரான்முனை யிற்பெருந்தேன்
வனையும் வடவேங் கடத்தார்தண் சாரலின் வார்புனமே. 33

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புனத்துநின்ற வேங்கைமேல்
புகைந்தெ ழுந்த வானையின்
சினத்தை யன்றொ ழித்தகைச்
சிலைக்கை வீரர் தீரமோ
மனத்து ணின்ற வெஞ்சினம்
மலைத்தல் கண்ட திர்ந்தமான்
வனத்த கன்ற திர்ந்ததோ
**நந்தி மல்லை** யார்ப்பதே. 34

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆர்க்கின்ற கடலோத மார்க்கு மாறு
மசைகின்ற விளந்தென்ற லசையு மாறுங்
கூர்க்கின்ற விளமதியங் கூர்க்கு மாறுங்
காணலாங் **குருக் கோட்டை** குறுகா மன்னர்
போர்க்கின்ற புகர்முகத்துக் குளித்த வாளி
பூதலத்தில் வடிம்பலம்பப் பூண்ட வில்லோன்
பார்கொன்று செந்தனிக் கோல் பைந்தார் நந்தி
**பல்லவர்கோன்** றன்னருள்யாம் படைத்த ஞான்றே. 35

### கலிவிருத்தம்

ஞான்ற வெள்ளருவி யிருவி யெங்கள் பொற்
றேன்றல் வந்திடிற் சொல்லுமின் ஒண்சுடர்
போன்ற மன்னவன் னந்திதன் பூதரத்
தீன்ற வேங்கை யிருங்கணிச் சூழ்ச்சியே. 36

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சூழி வன்மத யானையின்
பிடர்படு கவடிகை சுவட்டின்கீழ்
வாழி யிந்நில மன்னர்வந்
தனுதினம் இறைஞ்சிய வடுக்கண்டோம்
ஆழி மன்னவ வன்னைய
ராய்ச்சிய ரடுங்கயிற் றடியிட்ட
பாழி மன்னெடுந் தோள்வடுக்
கண்டிலம் பல்லவ பகர்வாயே. 37

### ஷை வேறு

பகரங்கொள் நெடுந்திவலை பனிவிசும்பில்
பறித்தெறியப் பண்டு முந்நீர்
மகரங் கொள் நெடுங்கூல வரைதிரித்த
மாலென்பர் மன்னர் யானை
சிகரங்கள் போன்மடியத் **தெள்ளாற்றுக்**
கண் சிவந்தான் தென்னன் **தொண்டி**
நகரங்கைப் படுத்த பிரான் நந்திநர
பதிபணிகோ னங்கள் கோவே. 38

### ஷை வேறு

நங்கள்கோத் **தொண்டை வேந்தன்**
நாமவேல் மன்னர்க் கெல்லாம்
தங்கள் கோனங்க நாடன்
சந்திர குலப்ர காசன்

திங்கள் போற் குடையி னீழல்
செய்ய கோல் செலுத்து மென்பர்
எங்கள்கோல் வளைகள் நில்லா
விபரித மிருந்த வாறே. 39

கட்டளைக் கலித்துறை

ஆறு விறலடு போர்வன்மை யாலம ராடியப்பாற்
பாரூர் களிற்றுயர் **பல்லவர் கோனந்தி மல்லை**யன்றிக்
கூறு ளிவளிளங் கொங்கை யவன்வளர் தொண்டையல்லா
லூறு திவடிரு மேனியு னாமென்கொ லுறுவதே. 40

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நாணு நித்திரு மடவார் முன்புநின்
நன்பொற் கழலிணை தொழுதாரிற்
பூணு கத்தொளிர் பொலனுகச் செய்த
புதுமென் தொண்டைய தருளாயே
வாணு ளைச்சுளி களியா னைப்படை
வயவே லவையலர் குலகாலா
கோணு மைக்கொரு குறையுண் டோவுரை
**கோங்கா** நின்னது செங்கோலே. 41

ஷை வேறு

செங்கோல் வளைக்கை யிவளுந் துவண்டு
செறிமாமை வாட வெழிலார்
அங்கோல் வளைக்கை யிளையா ரிழப்ப
அரசாள்வ தென்ன வகையோ
தங்கோல் வளைத்த திகழ் **சேரர் சோழர்**
தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
வெங்கோ னிமிர்த்த வரையுஞ் சிவந்த
விறல் நந்தி மேன்மொழி வையே. 42

கலிநிலைத் துறை

மொழியார் தொண்டைப் பன்மலர் முற்றுந் தெருவந்து
விழியா ளென்றும் மேனி வெளுத்துற மெலிவாளே
யொழியா வண்கைத் தண்ணருள் நந்தி தனூர்மட்டோ
வழியாந் தமரக் கடல்வட் டத்தொரு வண்கோவே. 43

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஒருகோமகன் நந்தி **யுறந்தையர் கோன்**
உயர்நீள்வல யத்துயர் வாளைவளை
குருகோடு வயற்படர் காவிரியின்
குலவும்புயல் கண்டு **புகார்மணலிற்**
பெருகோடு நெடுங்கழி சூழ்**மயிலைப்**
பெருமானது பேரணி நீண்முடிமேற்
றருகோதை நினைந்தயர் வேன்மெலியத்
தழல்வீசுவ தோகுளிர் மாமதியே. 44

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மதிய மெரிசொரியு மாலையம் மாலை
மறந்தும் புலராது கங்குலெலாங் கங்குல்
கதிர்செ யணிவண்டு காந்தாரம் பாடக்
களிவண்டு புகுந்துலவுங் காலமாங் காலம்
பதியின் வளர்ந்த நறுந் தொண்டையங்கோன் நந்தி
பல்லவற்கு நேராத பாவையர்தம் பாவை
விதியின் விளைவுகண் டியாமிருப்ப தல்லால்
வினைமற்று முண்டோநம் மெல்லோதி மாட்டே. 45

தரவு கொச்சகக் கலிப்பா

மாட்டாதே யித்தனைநாள் மால்**நந்தி** வான்வரைத் தோள்
பாட்டாதே மல்லையர்கோன் பரியானைப் பருச்சுவடு
காட்டாதே கைதைப் பொழிலுலவுங் காவிரிநீர்
ஆட்டாதே வைத்தென்னை யாயிரமுஞ் செய்தீரே. 46

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

செய்ய வாய்மிகக் கரியகண் வனமுலை
செறிந்திறு மருங்குற் கொம்
பைய சாலவு மவிரிழை யல்குல
மதுமலர்க் குழலென்றால்
வெய்ய வெப்பவி யாதகுஞ் சரநந்தி
வீரவ னிவனைப் போய்
நைய நாமிவ னகரிகை தொழுதில
நம்முயி ரளவன்றே. 47

கட்டளைக் கலித்துறை

அளவுகண் டாற்குடங் கைத்துணை போலு மரசர்புகும்
வளவுகண் டான்நந்தி மானே தயன்வையந் தன்னின்மகிழ்
தளவுகண் டாலன்ன வெண்ணகை யாற்றமி யேனதுள்ளங்
களவுகண் டார்முகத் துக்கண்க ளாய கயற்குலமே. 48

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

குலமரபு மொவ்வாது பயின்று வந்த
குடித்தொழிலுங் கொள்படையின் குறையுங் கொற்றச்
சிலவளவுஞ் சிந்தியாத் தெவ்வர் தேயத்
தெள்ளாற்றிற் செருவென்ற செங்கோல் நந்தி
புலவரசை புறங்கண்ட புகழ்சேர் கோவே!
பூவலயந் தனிற்கரியாய் நின்ற மன்னா!
சொலவரிய திருநாம முனக்கே யல்லாற்
சொல்லொருவர்க் கிசையுமோ தொண்டைக்கோவே. 49

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கோவே மாலை மாலையர்க்கோ கோவே வேண்டு நிலவோகண்
கோவே மாலை மாலையது கொண்டார் குறுகு மாறறியேன்
கோவே மாலை நீண்முடியார் கொற்ற நந்தி கச்சியுளார்
கோவே மாலை யுள்ளுமெங்கள் கோவே கம்ப ரானரே. 50

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆகிடுக மாமை யணிகெடுக மேனி
யலரிடுக வாரு மயலோர்
போகிடுக சங்கு புறகிடுக சேரி
பொருபுணரி சங்கு வளைமென்
ஞ்கிடறு கானல் வளமயிலை யாளி
நயபானும் எங்க ளளவே
யேகொடி யனுக விவையியையும் வஞ்சி
யினியுலகில் வாழ்வ துளதோ. 51

நேரிசை வெண்பா

உளமே கொடிமருங் குண்டில்லை யென்னி
விளமுலைக ளெவ்வா றிருக்கும்—கிளரொளிய
தெள்ளிலைவேற் கண்ணினு டெள்ளாற்றிவ் வென்றகோன்
றன்மயிலை யன்னு டனக்கு. 52

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தனக்குரிய வென்கொங்கை தான் பயந்த
மழுகளிற்றுக் காக்கித் தன்பால்
எனக்குரிய வரையார்பம் எங்கையர்க்கே
யாக்கினன் இகல்வேல் மன்னர்
சினக்கரியும் பாய்மாவுந் தெள்ளாற்றில்
சிந்துவித்த செங்கோல் நந்தி
மனக்கினியா னவனிட்ட வழக்கன்றே
வழக்கிந்த வையத் தார்க்கே. 53

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தார்வட் டக்கிளி மருவுஞ் சொற்பகர்
தளரிடை தையல் வஞ்சிக்கின்று
ஏர்வட் டத்தனி மதிவெள் ளிக்குடை
கொடிதென் றலது பழுதன்றே

போர்வட் டச்சிலை யுடைவாள் பற்றிய
பொருகடன் மல்லைப் புரவலனே
பார்வட் டத்தனி மதயா னைப்படை
யுடையாய் பல்லவ ரடலேறே. 54

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**அடலேறு வலந்துயர்** வைத்தபிரான்
**அடலுக்ரம கோபன்** அடங்கலர்தா
மடலேறிட வாகை புனைந்தபிரான்
வடவேங்கட நாடுடை மன்னர்பிரான்
பெடையேறு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது போருள் நீண்முடிமேல்
மிடலேறிய கோதை நினைந்தயர்வாள்
மெய்யத்தழல் வீசுமி மாமதியே 55

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மலர்ச்சூழ லமர்ந்தினிய வண்டார்க்குங் காலம்
வரிக்குயில்கள் மாவிளந் தளிர்கோதுங் காலம்
சிலர்க்கெல்லாஞ் செழுந்தென்ற லமுதளிக்குங் காலம்
தீவினையேற் கத்தென்றல் தீவீசுங் காலம்
பலர்க்கெல்லாம் கோனந்தி பன்மாடக் கச்சிப்
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடுங் காலம்
மலர்க்கெல்லா மைங்கணைவே ளலர்தூற்றுங் கால
மகன்றுபோ னவர்நம்மை யயர்த்துவிட்ட காலம். 56

கலி விருத்தம்

காலவினை வாணர்பயில் **காவிரிநாடா**
ஞாலமொரு கோலினி னடாவுபுகழ் நந்தி
நீலமயில் கோதையிவ ளின்னருள்பெ றாளேல்
கோலவளை கோடலிது மன்னர்புக ழன்றே. 57

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புரவல னந்தி யெங்கள் பொன்னிநன் னாட்டு மன்னன்
மரமயில் போற்று சாயல் வாணுதற் சேடி காணுங்
குரவலர் பொழிலிற் கோலக் கோட்டிடை யில்லை யாகி
விரவலர் மலர்க ளெங்கு மில்லையோ நல்கு வேனே. 58

ஷி வேறு

நல்கு நந்தியிந் நானிலங் காவலன்
மாரவே ணனிர் முத்தம்
மல்கு வெண்குடைப் பல்லவர்கோளரி
மல்லலந் திண்டோண் மேல்
மெல்கு தொண்டையுந் தந்தருள் கிலன்
விடைமணியொடும் விடியாத
அல்லி னேடும்வெண் டிங்களி னெடு
முளன்உய்வகை யறியேனே. 59

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அறம்பெருகுந் தனிச்செங்கோல் மாயன் தொண்டை
யங்கனிபோற் சிவந்துதிரு முகத்துப் பூத்து
மறிந்துளதே பவளவாய் மருங்கி லாடும்
வல்லியிடை மணிமுறுவன் முத்துச் சால
நெறிந்துளதே கருங்குழலங் குவளை கண்கள்
நெடியவேய் தொடியதோ ணேர்ந்து வெம்மை
செறிந்துளவே முலைசிலையே புருவ மாகி
யவர்நம்மைச் சிந்தைநோய் திருத்தி னரே. 60

இணைக்குற ளாசிரியப்பா

திருவின் செம்மையும் நிலமக ளுரிமையும்
பொதுவின்றி யாண்ட பொலம்பூட் பல்லவ !
தோள்துணை யாக மாவெவ் வாற்று
மேவலர்க் கடந்த வண்ணல்! நந்திநின்

திருவரு நெடுங்கண் சிவக்கு மாகில்
செருநர் சேரும் பதிசிவக் கும்மே.
திறங்கிளர் புருவந் துடிக்கின் நின்கழல்
இறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக் கும்மே
மையில் வாளுறை கழிக்கு மாகி
னடங்கார் பெண்டிர்
பூண்முலை முத்தப் பூண்கழிக் கும்மே
**கடுவாய் போல்வலை** யதிர நின்னொடு
மருவா மன்னர் மனந்துடிக் கும்மே
மாமத யானை பண்ணின்
உதிர மன்னுநின் னெதிர்மலைந் தோர்க்கே. 61

நேரிசை வெண்பா

ஓராதே யென்மகளைச் சொன்னீரே தொண்டைமேல்
பேரரசை வைக்கும் பிராயமோ—நேராதார்
ஆள்வலியாற் கொண்ட வகன்ஞால மத்தனையும்
தோள்வலியாற் கொண்ட துயக்கு. 62

கட்டளைக் கலித்துறை

துயக்குவித் தான்றுயில் வாங்குவித் தான்றுயில் வித்திவளை
வயக்குவித் தானுள்ளம் வஞ்சனை யான்மலர்க் காவகத்து
முயக்குவித் தான்றுகில் வாங்குவித் தான்முன நின்றிவளை
மயக்குவித் தான்நந்தி **மானோதய** னென்று வட்டிப்பனே. 63

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வட்டன்றே நீரிதனை மிகவுங் காண்மின்
மற்றைக்கை கொட்டினேன் மாவின் வித்தொன்
றிட்டன்றே பழம் பழுப்பித் துண்ணக் காண்மின்
இவையல்ல சம்பிரத மிகவில் தெள்ளாற்
றட்டன்றே பொன்றும்வகை முனிந்த நந்தி
**அவனிநாராயணன்**பா ராளுங் கோமான்
குட்டன்றே மழைநீரைக் குடங்கைக் கொண்டு
குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின்றேனே. 64

கட்டளைக் கலித்துறை

குடக்குடை வேந்தன்தென் னாடுடை மன்னன் குணக்கொடு
வடக்குடை யான்நந்தி மானோ தயனிந்த வையமெல்லாம்
படக்குடை யேந்திய பல்லவன் றன்னொடும் பாரறியத்
துடக்குடை யாரையல் லாற்சுடு மோவிச் சுடர்ப்பிறையே. 65

கலி விருத்தம்

பிறைதவழ் செஞ்சடைப் பிறங்க ரணன்
**அறைகழல் முடித்தவன் அவனி நாரணன்**
நறைகெழு தொண்டையோன் தொண்டை கண்டபி
னிறைகெழு சங்குயி ரிவளுக் கீந்ததே. 66

ஷை வேறு

ஈகின்றது புனமுந்தினை யாமும்பதி புகுநாள்
ஆகின்றது பருவம்மினி யாகும்வகை யறியேன்
வாழ்கின்றதோர் புகழ்நந்திதன் வடவேங்கட மலைவாய்த்
தேய்கின்றதொ ருருவத்தொடு திரிவாரது திறமே. 67

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியச் சந்த விருத்தம்

திறையிடுமி னன்றி மதில்விடுமி னுங்கள்
செருவொழிய வெங்கண் முரச
மறைவிடுமி னிந்த வவனிதனி லெங்கு
மவனுடைய தொண்டை யரசே
நிறைவிடுமின் நந்தி கழல்புகுமி னுங்க
ணெடுமுடிகள் வந்து நிகழத்
துறைவிடுமி னன்றி யுறைபதிய கன்று
தொழுமினல துய்ந்த லரிதே. 68

கலி விருத்தம்

அரிபயி னெடு நாட்டத் தஞ்சன முழுதாட்டிப்
புரிகுழல் மடமானைப் போதர விட்டாரார்?

நரபதி யெனுநந்தி நன்மயி லாபுரியில்
உருவுடை யிவடாயர்க் குலகொடு பகையுண்டோ! 69

தரவு கொச்சகக் கலிப்பா

பகையின்றிப் பார்காக்கும் பல்லவர்கோன் செங்கோலி
னகையும்வாண் மையும்பாடி நன்றாடு மதங்கிக்குத்
தகையுநுண் ணிடையதிரத் தனபார மவற்றோடு
மிகையொடுங்கா முன்னிக்கூத் தினைவிலக்க வேண்டாவோ. 70

கலி நிலைத் துறை

வேண்டா ரெண்ணும் வேந்தர் பிராற்கே மெய்யன்பு
பூண்டா ணங்கா யன்றிவ ளென்றாற் பொல்லாதோ
மூண்டார் தெள்ளாற்றுள்வே மூழ்க முனிவாறி
மீண்டான்நந்திக் கென்மகள்தோற்கும் வெண்சங்கே. 71

வெண்டுறை

வெண்சங் குறங்கும் வியன்மாதர் முற்றத்து விடியவேவான்
வண்சங் கொலிப்ப மடவார்கள் விளையாடு மல்லைவேந்தன்
தண்செங்கோல் நந்தி தனிக்குடைக்கீழ் வாழாரிற்
கண்சிம் புளியாரோ யாமோ கடவோமே. 72

கலி விருத்தம்

கடற்கூதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாரை
மடற்கூறு தோறு மலிமல்லை கங்குல்
அடற்கூடு சாவே யமையா தவர்வை
திடற்கூறு வேனுக் கேதாவி யுண்டோ. 73

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உண்டிரையிற் செங்கழுநீ ரிலஞ்சி மாடே
ஒண்பொழிலிற் சண்பகத்தார் தடவி யோடித்
தண்டலையிற் பூங்கமுகம் பாளை தாவித்
தமிழ்த்தென்றல் புகுந்துலவுந் தஞ்சோணாடா

விண்டொடுதிண் கிரியளவும் வீரஞ் செல்லும்
விடேல்விடுகு நீகடவும் வீதி தோறுந்
திண்டறுகண் மாத்தொழுத பாவை மார்க்குச்
செங்கோல னல்லையோ நீசெப் பட்டே. 74

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பட்ட வேந்தர்தம் பூணொடும்
பாவைமார் நாணொடுந் தெள்ளாற்றில்
வட்ட வெஞ்சிலை நாணிடக்
கழித்தவன் மல்லையின் மயிலன்னாள்
விட்ட கூந்தலும் விழியுநன்
முறுவலு நுதன்மிசை யிடுகோல
மிட்ட பொட்டினொ டிளமுலைப்
போகமு மெழுதவு மாகாதே. 75

வேறு

*ஆகாது போக மயில்விளைத் தகன்ற லவன்கை
போகாத சங்கு மருளாள ரென்ற போதுவண்டோ
... ... ... ...
... ... ... ... 76

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அம்பொன்று வில்லொடிதல் நாணறுதல்
நான்கிழவ னசைந்தே னென்றோ
வம்பொன்று குழலாளை மணம்பேசி
வரவிடுத்தார் மன்னர் தூதா
செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றில்
நந்திபதஞ் சேரார் ஆனைக்
கொம்பன்றோ நங்குடிவில் குறுங்காலும்
நெடுவளையுங் குனிந்து பாரே. 77

*இச்செய்யுளின் பிற்பாதி மறைந்துவிட்டது.

ஷை வேறு

பாவையர் பரிந்து தாங்கும் பனிமலர் செறிந்த செந்திற்
கோவையேய் **நந்தி** காக்குங் குளிர்பொழிற் **கச்சி** யன்னாள்
பூவையும் பந்துந்தந்து புல்லினு ளென்னை யென்னே
மாலியல் கானம் போந்த தறிகிலேன் மதியி லேனே.*

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

†நீண்டதாங் கங்குல் எங்கும்
நிறைந்ததாம் வாடை பொங்கி
மூண்டதாம் மதியி னோடே
முயங்குதார் வழங்கு தெள்ளாற்று
ஈண்டினர் பரியுந் தேரும்
இருகைவென் றொருகை வேழந்
தூண்டினன் நந்தி யிந்தத்
தொண்டைநா டுடைய கோவே. 79

வெண்டுறை

கோவக்கொடி யன்னவர் நீள்செறுவிற்
குறுதேன்வழி கொண்ட லருங்குவளை
காலைப்பொழு தின்னெழு கன்னியர்தங்
கண்ணின் படிகாட்டிடு கச்சியின்வாய்
மாலத்தெள் ளாறெறிந்த மானோ
தயன்குடைக்கீழ்
ஞாலத்தோ டொத்ததே நான்பெற்ற
நறுங்கொம்பே. 80

---

*இங்கு அந்தாதித்தொடை இல்லை. சிலசெய்யுள்கள் மறைந்திருக்கவேண்டும்.

†இப்பாட்டிற்கு அந்தாதித்தொடை இல்லை. ஆகவே, இப்பாட்டிற்குமுன் இருந்த செய்யுள் அல்லது செய்யுட்கள் மறைந்து விட்டன போலும்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கொம்புயர் வாமை நாகமெதிர் வந்த
நந்தி குலவீர ராக மழியத்
தம்பிய ரெண்ண மெல்லாம் பழுதாக
வென்ற தலைமான வீரதுவசன்
செம்பியர் தென்னர் சேர ரெதிர்வந்து
மாயச் செருவென்ற பாரி முடிமேல்
வம்புயர் தொண்டை காணு மடமாதர்
தங்கை வளைகொண்ட தென்ன வலமே. 81

குறள்வெண் செந்துறை

வலம்வரு திகிரியு மிடம்வரு பணிலமு
மழைதவழ் கொடிபோலக்
குலமயில் பாவையு மெறிகடல் வடிவமு
மிவையிவை கொண்டாயே. 82

கலி விருத்தம்

கொண்ட லூறும்பொழில் வண்டின மாமணி
வண்ட லிடுங்கடன் மல்லைகா வலனே
பண்டை மராமர மெய்தபல் லவனே
தொண்டை யொற்றுவ ளிவடோள் வளையே. 83

நேரிசை வெண்பா

தோளான் மெலியாமே யாழ்கடலாற் சோராமே
வாளா பெறலாமே வாயற்றீர்—கேளாதார்
குஞ்சரங்கள் சாயக் குருக்கோட்டை யத்தனையும்
அஞ்சரங்க ளார்த்தா னருள். 84

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருளான தெங்கையர்க்கே யன்றுயென்
றியம்பிடுமெங் கன்னி செஞ்சொற்
றெருளாமே னல்கு நந்தி தெள்ளாற்றிற்
பொருதபோர் தன்னிலந்நா

விருளான மதகரியும் பாய்மாவும்
மிரதமுங்கொண் டெதிர்ந்தார் தம்முன்
மருளாமே நன்கடம்பூர் வானேற
வளைந்துவென்ற மன்ன ரேறே. 85

ஷை வேறு

ஏறு பாயவிளைவித்த தெல்லாம் வார்க்குங் குமக் கொங்கை
வீறு பாயக் கொடுக்கின்ற விடலை யார்கோ வென்கின்றீர்
மாறு பாயப் படைமன்னர் யாவுந் தேருந் தெள்ளாற்றில்
ஆறு பாயச் சிவந்ததோ ளிணைகா விரிநா டாள்வானே. 86

கலி விருத்தம்

ஆயர் வாய்க்குழல் காற்றுறு கின்றிலள்
ஏயு மாங்குயிற் கென்னைகொ லாவதே
தேய மார்புகழ்த் தேசபண் டாரிதன்
பாயன் மேல்வரல் பார்த்துநின் றுளுக்கே. 87

கட்டளைக் கலித்துறை

துளவுகண் டாய்பெறு கின்றிலஞ் சென்றினிச் சொல்லவல்ல
வளவுகண் டாய்வந்த தாதிகண் டாயடல் வேழமுண்ட
விளவுகண் டாலன்ன மேனிகண் டாய்விறன் மாரன்செய்த
களவுகண் டாய்நந்தி மல்லையங் கானல் கழிக்கம்புளே. 88

---

இவையல்லாமல், சில பிரதிகளில் அதிகமாகச் செய்யுட்கள் காணப்படுகின்றன. அவற்றில் நமது ஆராய்ச்சிக்கு வேண்டிய சிலவற்றை மட்டும் கீழே தருகிறேன்.

நேரிசை வெண்பா

இந்தப்புவியி லிரவலகுண் டென்பதெல்லாம்
அந்தக் குமுதமே யல்லவோ—நந்தி
தடங்கைப்பூ பாலன்மேற் றண்கோவை பாடி
அடங்கப்பூ பாலரா னார்.

இதனால் நந்திவர்மன்மீது கோவைப் பிரபந்தமும் பாடப் பட்டிருந்ததாகக் கருதலாம்.

கட்டளைக் கலித்துறை

திருத்தேர் புகழ்நந்தி **தேசபண்டாரி**
தெள்ளாறை வெற்பில்
மருத்தேர் குழலிக்குக் கார்முந்து
மாகின் மகுடரத்னப்
பரித்தேரும் பாகுமங் கென்பட்டவோ
வென்று பங்கயக்கை
நெரித்தே வயிற்றில்வைத் தேகிற்பளே
வஞ்சி நெஞ்சுலர்ந்தே. ௨

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவனை முழுது மறவாத சிந்தையான்
செயமு னுறவு தவிராத நந்தியூர்.
குவளை மலரின் மதுவாரும் வண்டுகாள் !
குமிழி சுழியில் விளையாடு தும்பியே !
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே
யவரு மவதி சொனநாளும் வந்ததே
கவலைபெரிது பழிகாரர் வந்திலார்
கணவருறவு கதையாய் முடிந்ததே. ௩

கட்டளைக் கலித்துறை

வாரூரு மென்முலை வார்த்தைகண் டூரு மதிமுகத்தில்
வேரூரு மேனி வியன்றளி ரூரும் விசய னுக்குத்
தேரூரு மானந்தி **தேசபண் டாரி**தெள் ளாறைவெற்பில்.
காரூர் குழலிக்குக் காதள வூருங் கடைக்கண்களே. ௪

## கோக்கருநந்தடக்கன்*

கோக்கருநந்தடக்கன் என்னும் அரசன், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலும், வரகுணபாண்டியன் மகனான ஸ்ரீமாறன் காலத்திலும் இருந்தவன். இவன், சேர நாட்டின் தென்பகுதியை (திருவாங்கூர் நாட்டை) அரசாண்டான். பாண்டியன் ஸ்ரீமாறன், திருவாங்கூரை வென்றபடியினாலே, கோக்கருநந்தடக்கன் பாண்டியனுக்குக் கீழடங்கி யிருந்தான். ஸ்ரீமாறனுடைய சிறப்புப் பெயராகிய ஸ்ரீவல்லபன் என்னும் பெயரைக் கோக்கருநந்தடக்கனும் சூட்டிக்கொண்டான். பேரரசன் பெயரை, அவனுக்குக் கீழடங்கிய சிற்றரசர் சூட்டிக்கொள்வது அக்காலத்து மரபு.

கோக்கருநந்தடக்கன் கி. பி. 857-ல் அரசனானான். பாண்டியன் ஸ்ரீமாறனுடைய மகனான விக்கிரமாதித்திய வரகுண பாண்டியன் (இரண்டாம் வரகுணன்) காலத்திலும், கோக்கருநந்தடக்கன் இருந்தான்.

கீழ்க்கண்ட இரண்டு சாசனங்கள், இவனது இரண்டாம் ஆண்டில், கி. பி. 859-இல் எழுதப்பட்டவை. திருவாங்கூரைச் சேர்ந்த திருவிடைக் கோடு என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலில் இச்சாசனங்கள் உள்ளன. இவை வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

### I

சாசன வாசகம்†

1. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கருந்நந்தடக்க[ற்]கு
2. ச் செல்லா நின்ற யாண்டு இரண்டு இத

*இதை, 183-ஆம் பக்கத்தில் உள்ள சாசனங்களுக்குப் பின்னால் சேர்த்து வாசிக்கவும்.

†T. A. S. Vol. I. p. 14.

3. னெதிர் பன்னிரண்டு இவ்வாண்டு திருடைக்கோ
4. ட்டு மாதேவர்க்கு திருநொந்தாவிளக்கு
5. நியதிப்படி எரிவதாக செழிய
6. ந்த...உழக்கு நெய் அட்டுவதாக ஊ
7. ரும் இண்...க[ளு]ம் உள்ளிருக்க சடை....
8. இவன் பணிக்கைய்யில் விட்டபசு
9. சாகாமூவாப் பேருருவாக அட்டின பசு
10. இருப்பத்தஞ்சு முக்குளத்து யா.........
11. ன் புல்ல முருகனும்

## II

### சாசன வாசகம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கருநந்தடக்கர்க்கு செ
2. ல்லாநின்ற யாண்டு இரண்டு இ
3. தனெதிர் [இ] ருபது இவ்வாண்டு பிர
4. ட்டாசி திங்கள் திருவிடைக் கோட்
5. டு மாதேவற்கு திருநந்தாவி
6. ளக்கு நியதிப்படி யுழக்கு
7. நெயெரி............

## III

### கோக்கருநந்தடக்கன் செப்பேட்டுச் சாசனம்

கருநந்தடக்கன், தனது ஒன்பதாவது ஆண்டில் விஷ்ணு படாரருக்கு (திருமாலுக்கு) ஒரு கோயில் அமைத்து அதற்கு வேண்டிய நில புலங்களைத் தானம் செய்தான். அந்தத் தானம் எழுதப்பட்ட செப்பேடு இது. இது, கலியுகம் பிறந்த 1449087-ஆம் நாள் எழுதப்பட்டது. அதாவது கலியுக ஆண்டு 3967-இல் (கி. பி. 866 ஜூலை

*T. A. S. Vol. I. p. 15.

மாதத்தில்) எழுதப்பட்டது. திருவனந்தபுரத்து ஹூசூர் ஆபீஸில் இந்தச் செப்பேடுகள், இருந்தபடியால் இதற்கு ஹூசூர்ஆபீஸ்செப்பேடுகள் என்று பெயர் கூறப்பட்டது.

இந்தச் சாசனத்தின் சிறப்பு என்னவென்றால், அக்காலத்தில் சேரநாட்டில் வழங்கி வந்த் வட்டெழுத்தில் எழுதப்படாமல், அக்காலத்துப் பல்லவ அரசர் தொண்டமண்டலத்தில் எழுதி வந்த பல்லவத் தமிழ் எழுத்தினால் எழுதப்பட்டிருப்பதுதான்.

சாசன வாசகம்*

(முதல் ஏடு, முன்பக்கம்)

1. ஸ்வஸ்திஸ்ரீ கலியுகக் கோட்டு நாள் பதினான்கு நூறாயிரத்து நாற்பத்து ஒன்பதியிரத்து எண்ப
2 த்து எழு சென்ற நாள் ஸ்வஸ்திஸ்ரீ கோக்கருநந்தடக் கனுக்கு யாண்டு ஒன்பது நாள் பதினைஞ்சு இ
3. ந்நாளால் முடாலநாட்டுப் பசுங்குளத்துப்படு நிலத்தில் முன்சிறைச் சவையாருடைய உழக்குடி
4. விளை என்னு நிலம் இவைகளுக்கு அடிக்கடி நிலங் குடுத்து மாறிக்கொண்டு இந்நிலம் பிடி சூ
5. ழ்ந்து ஸ்ரீகோயில் எடுத்து விஷ்ணுபட்டாரகரை பிரதிஷ்டைசெய்து பார்த்திவ சேகரபுரம் எ
6. ன்று பேர் இட்டு காந்தளூர் மத்யார்த்தியால் தொண் ணூற்று ஐவர் சட்டர்க்கு சாலையுஞ் செய்தா
7. ன் ஸ்ரீ கோக்கருநந்தட்டன் அகநாழிகைச் சென்ன டைக்கு அட்டின பூமி பொழி சூழ்நாட்டு குராத்

(முதல் ஏடு, பின்பக்கம்)

8. தூரில் இடைக்குராத்தூர் வயலுங்கரையும் உண் ணிலம் ஒழிவின்றி மேற்பாதி மீதாட்சி உள்ளட

*T. A. S. Vol. I. p. 5—9.

9. ங்க அட்டிக்குடுத்தான் செங்கழு நாட்டு ஐம்மாக் கொல்லை மேற்கொல்லை வயலுள் வெஞ்சைக் குளத்தின்
10. கீழ் வெஞ்சைப்பொறை தடி ஒன்றும் சாயறைக்கலம் • பாடு தடி மூன்றும் நெடுமட்குளத்தின் கீழ்
11. நரியறை தடி ஒன்றும் கொற்றனறை தடி ஒன்றும் குளவறை தடி ஒன்றும் நீரறை தடி ஒன்
12. று மாயிலறை தடி ஒன்றும் தலைவிலைச் செய் தடி இரண்டும் எருமை யறையுந்துடவர் இரண்டே
13. ற்றித் தடி மூன்றும் பகைதொங்கன் தடி ஒன்றும் எற்றித்தடி பதினேஞ்சு விதைமடைப்பள்ளிநா
14. ழியால் ஆயிரத்து இருநூற்று நாழியுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க [உரு ?] அட்டிக்குடுத்தன வள்ளு.........

(இரண்டாம் ஏடு, முன்பக்கம்)

1. பணி குத்துக்காற்படாது செய்விப்பது அகழாழிகைப் பணி செய்வார் படாரரை ஆட்டப் பொழுதிற் பந்திருகுடநீராக முப்ப
2. த்தறு குடநீர் குடுப்பது பூஇடுவான் குறைந்த பூ இண்டையுமாலையுங் கட்டிக் குறைவறக் குடுப்பது நொந்தா விளக்கினுக்காக மெ
3. துகின் மேற்பாற் கீழூரில் நெடுமண்ணெண்ணுந் தோட்டம் தென்னாட்டுக் கோனையின சடையந் தனிச்செய்கெ சந்ததி சந்த
4. தி யேய்கீழ்ப்பாதி அனுபவிப்பதாகக் காராண்மை யாகவு மேற்பாதி நந்தா விளக்கினுக்குமாக அட்டிக் குடுத்தான்
5. விழாப்புறமாக எழுநா டிருவிழாச்செய்து பங்குனி வியாகம் ஆறுடுவதாகவும் சட்டப்பெருமக்களும் பணிமக்க

6. ளும் எழு நாளும் படி இரட்டி ஆணியம் பெறுவதாகவு மற்றும் விழா வினுக்கு வேண்டுவதுக்குமாக அட்டின பூ

7. மி மெதுகின் மேற்பாதி கீழூர் பெருங்குளத்தின் கீழ் ஆதனறை இளவாதனறை தலைத்துட்வை மஞ் சாடி யரைப

8. னையறை - செத்தறைதடி இரண்டேற்றித்தடி எழு விதை எண்ணூற்று நாற்பதினுழி இவை தென்னாட்டுக் கோனுயினச

9. டையந்தனிச்செய்கை சந்தறி சந்ததியேய் போகத்துக் கும் பொலிக்கும் ஆயுவிக்கதிரேற்றி உடன் வாரம் நாற்கல

(இரண்டாம் ஏடு, பின்புறம்)

10. னேய் எண்குறுணி நெல்லுக்கொண்டு கீழ்பாதி காராண்மையாக உழுது ஆலிலே வாரம் ஊட்டு வதாக மேற்பாதி திருவிழாப்பு

11. றமாக அட்டிக்குடுத்தன பணிமக்களுக்கு விருத்திக் காக அட்டின பூமி தெங்கநாட்டு விளப்பில் தலைவிளப்

12. பில் பதினுழிக் காலால் எண்கல வித்துப்பாடும் இத ஞேடுசெல்லுங்கரையுங் காராண்மை மீதாட்சி உ

13. ள்ளடங்க அட்டிக்குடுத்தன இந்நாட்டேய் இள வேணுட்டுநல்லூர் பதினுழிக் காலால் எண்கலவித்து

14. ப் பாடும் இதனேடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக்குடுத்த

15. ன இந்நாட்டேய் இடை நீர்க்கால் பனையூரும் பியலாறும் பதினுழிக்காலால் எண்கல வித்துப்பா

16. டும் இதனேடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன செங்கழு நாட்டு

17. ப் பாறையில் சயவஞ் சரணுயின சாத்தஞ் சடையன் கீழ்ப்பாதி சாலாபோக மருசாதியிஞல் உழுதா

(மூன்றும் ஏடு, முன்பக்கம்)

1. ல் காஞ்சிரங்குளத்தின் கீழ் கீழப்பொறை தடி ஒன்று விதைகலம் செங்கழுனுட்டுக் குன்றத்தாருடைய குமார சுவாமி
2. பட்டன் முடாலநாட்டுக் கீழ்குளத்து வயலுள் தான் பிரமதேயம் பெற்றுடைய நிலத்தில் அட்டினபூமி கடலங்குளத்தா
3. லும் இலஞ்சக் குளத்தாலும் நீர் பெறுவன எருவிச் செய் தடி ஏழு விதைபதினுழிக் காலால் இருகலம் ஓமாயனுட்
4. டுச் சிறுமண்ணூர் இளையான் கண்டன் தாங்கள் கீழ்ப்பாதி உழுதூட்டுவதாக அட்டினபூமி சிறும
5. ண்ணூர் பொன்னறைக் கலம் பாட்டு வயலுள் பொன்னறை தடி என்று விதைகலனேய் தூணி ஏற்றிப் ப
6. ணிமக்களுக்கு விருத்திக்காக அட்டி முதலாயின பூமி முப்பத் தெண்கலனேயிரு குறுணி. இதனுள் சாந்தி செய்வானு
7. க்கு விருத்திக்காக அடுத்த பூமி மீனச்சிச் சிறுகுண் டூர்ரா குளத்தின்கீழ் குருந்தறை பரனியறைபலா வனறைக் கலம்பா

(மூன்றும் ஏடு, பின்பக்கம்)

8. டு புளியறைக்கலம் பாடு............யறைக்கலம் பாடு ஊற்றுத்தடி ஆபினியறை ஏற்றிதடிபத்து விதை .........(பப்பத்)...........
9. (ட்டு) க்க சிஈ.........பன்னிரு குறுணியும் சிறுகோல் கீழ்ப்பொறை விதைகலமும் ஏற்றி ஐங்கலனேய் பந்திரு கு

10. றுணிப்பாடும் குடுத்தன அகநாழிப்பணி நாலுக்குமாக ஈயானஞ்சுவானுக்குங் குமரங்கண்டனுக்கும் உருத்திர............

11. ............எண்கல விதைப்பாடும் இதனோடு செல்லுங் கரையும் அட்டிக்குடுத்தது பஞ்சகவ்ய

12. ந் தெளிப்பானுக்கு தேதிகீழ் குளத்து எருவிச்செய் தடிஏழு விதைஇருகலமும் அடுத்தன பூஇடுவான் ஒரு

13. வனுக்கு விருத்தி அருமுனை ஆதனூர் வயலுள் படைப் பறைமருணறை மாத்தூர் வயலுள் பராயறையிற் கிழக்கி

14. ன் கூறும் ஏற்றி விதைஇருகலமும் அடுத்தன தட்டழி மத்தளி கரடிகை தாளம் காளகம் ஏற்றி எட்டுப் பணி

(நாலாம் ஏடு, முன்பக்கம்)

1. மாயநாட்டாரும் செங்கழு நாட்டாரு முடாலநாட்டா ரும் படைப்பா நாட்டாரும் வள்ளுவநாட்டாரும் அறமருசாதி காக்கும் பரிசின

2. ற் காப்பது இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார் உடைய கலம் நாற்பத்

3. தைந்து தயித்திரியச் சரணத்தார் உடைய கல முப்பத் தாறு தலவகார சரணத்தார் உடைய

4. கலம் பதினாறு இனிவருங்கல மூன்று சரணத்தார்க் கும் ஒப்பது பிரவேசகஞ் செய்யு

5. ம் பரிசு வையாகரண மீமாயப் புரோஹிதப் புன் பாய் புவிஸ்ரம் இலன் த்ரைராஜ்ய வ்யவஹார

6. ரத்துக்கு வேண்டும் ஒத்துடையான் இது ஸத்யம் என்று ஐவர்சட்டரைக் கொண்டு பஞ்சக்க

7. ஞ் செய்தான் புகவு பெறுவான் வாரம் ஓதும் பரிசு சூத்திரத்திலுஞ் சூத்திராரணத்தி

(நாலாம் ஏடு, பின்பக்கம்)

8. லுஞ் தருச்சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு கிரம வாரம் அடுத்தோதுவது சாகையிலுங்

9. கற்பத்திலுங் கணத்திலுந் துருச்சொல்லி ஒன்பது புக
வினில் இரண்டு வாரம் அடுத்தோதுவது நா
10. லு பாதத்திலுந் துருச்சொல்லி ஒன்பது புகவினில்
அகத்தாஹத்தில் இரண்டு வாரம் அடுத்தோது
11. வது முக்கால்வட்டத்து வைத்து ஒரு சட்டனை ஒரு
சட்டன் பிழைக்கப் பேசுவானாயில் பெருமக்க
12. ளுக்கு அஞ்சு காணம் பொன் றண்டம் இட்டுச் சாலை
உண்பது. குட்டுவானாயில் ஒரு காசு தண்டம்
இட்டு சாலை
13. உண்பது குட்டுண்டானும் அஞ்சு காணம் பொன்
றண்டம் இட்டு சாலை உண்பது படைக்கலத்தால்
புண்செ
14. ய்தான் அறத்துக்குப் புறத்தனவது சட்டர் படைக்
கலம் பிடித்துக் குட்டத்துக்கு செல்லப் பெறார்
சட்ட

(ஐந்தாம் ஏடு, முன்பக்கம்)

1. ......பிலகப்பட்ட எச்சூது முக்கால் வட்டத்திலிருந்து
பொரப் பெறார் பொருவார் அற்றைக்கலம்
இழப்பது சட்டர்வெள்
2. ளாட்டிகளை மடத்தில் வைத்துக்கொள்ளப் பெறார்
சாலா போகமுந் தேவதானமும் சத்திமுகம்
இன்றி விலக்கப்பெறார் வில
3. க்குவார் மெய்வேற்றுவகை ஐங்கழைந்து பொன்
தண்டம் இட்டன்றிச் சாலையுண்ணப் பெறார்.
சாலாபோகத்திலுந் தேவ
4. தானத்திலுங் குடியை வலியக் கொண்ட முதல்
ஒன்றுக்குப் பத்தாகக் குடுப்பது. சவைக் கடமை
கடவார்பக்க
5. ல் மூன்று சரணத்திலு மூவர் சென்று புக்கது பா
டாவது பாடுப்போகில் ஐம்பத்துநாலு காணம்
பொன் த
6. ண்டமும்பட்டு கடமையுங் குடுப்பது தேவர் சொன்ன
டையும் பதினைழிச் சாலையும் எவ்வழக்கு சொல்
லியும் வி

7. லக்கப் பெருர். விலக்குவார் நியதி கழஞ்சு பொன் தண்டம் இட்டன்றிச் சாலை உண்ணப் பெருர் பணிமக்கள் சட்டரை
8. ப் பிழைக்கப் பேசுவார் ஒருகாசு தண்டப்படுவது. இப்பரிசு தெங்கநாட்டு வெண்ணீர் வெள்ளாளன் தெங்க நாடு கிழவ

(ஐந்தாம் ஏடு, பின்பக்கம்)

9. ..............................
10. ..............................
11. ..............................
12. ..............................*
13. ஞயின சாத்த முருகன் ஆணத்தியாக ஓமாயனுட்டுப் பாகோட்டுப் பாப்பிகை கோட்டு திரையன் ஓமாயனுடு கிழவ
14. ஞயின சிங்கக்குன்றப் போழன் எழுத்து ஸ்வஸ்திஸ்ரீ

---

*இந்தச் சாசனத்தின் இடையிலே 9 முதல் 12-ஆவது வரி வரையில் வடமொழிச் செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. அதன் கருத்து இது :—

ஸ்வஸ்தி ஸ்ரீ தன்னுடைய புகழினுலும் அருளினுலும் ஓங்கி, நந்தனையும் யாதவ குலத்தையும் உயர்த்தி, உலகத்தைத் துன்பம் அடையாமல் காத்து, வல்லமையுள்ள பகைவரைத்தன் வளரும் ஒளியினுல் அழித்து, தன் குருவினிடம் வணக்க முள்ளவனுய் பிராமணர்களால் விசுவாசிக்கப்படுகிற ஸ்ரீவல்லபன் நமக்கு நன்மையை அளிப்பானுக. (இக் கவி, கண்ணபிரானையும் ஸ்ரீவல்லபன் என்னும் பெயரையுடைய கருநந்தடக்கனையும் சிலேடையாகக் கூறுகிறது.)

ஸ்வஸ்திஸ்ரீ யசோதைக்குப் பிறந்து அவளால் வளர்க்கப்பட்டு, நந்தனையும் யாதவகுலத்தையும் மேன்மைப்படுத்தி, துன்பம் அணுகாதபடி பசுக்களைக் காத்து, தன்னிடம் அன்புமிக்க புள்ளரசனின் (கருடனின்) அன்பை வளரச்செய்து, பலிச்சக்கரவர்த்தியை அழித்துப் புகழெய்திய அந்த ஸ்ரீவல்லவன் (திருமகள் கணவன்) நமக்கு மேன்மையை அளிப்பானுக. (இதில் ஸ்ரீவல்லவன் என்பது கண்ணபிரானையும் கருநந்தடக்கனையும் சிலேடையாகக் குறிக்கிறது.)

# பொருளகராதி

(சுருக்கம்)

அவனி நாராயணன் 14, 15, 19, 174, 203, 206
அபயகிரி விகாரை 35, 44
அரைசூர் 6, 34
ஆதியுலா 40, 62, 110, 124
இலங்கை (இலங்கைத் தீவு) 33, 35, 36, 42, 43, 44, 45, 47, 83
இசைவல்லான் 89, 90
உக்ரம கோபன் 14, 15
உதயன் 43, 44
ஏமநாதர் 86, 88, 89, 90, 91
ஏயர்கோன் கலிக்காமர் 13, 60, 66
கடுவாய்ப் பறை 15, 16
கழறிற்றறிவார் 40, 60
கஸ்ஸபன் 35, 43, 44, 45
கழற்சிங்கன் (கழற்சிங்க நாயனார்) 14, 16, 17, 18, 20, 71, 72, 73, 201, 202, 203, 204
கலிக்காமர் (கலிக்காம நாயனார்) 58, 65, 66, 67
குட்டகன் 45, 47
குவலய மார்த்தாண்டன் 14, 15
குறுகோடு (குறுகோட்டை) 4, 5, 17, 19, 20, 25, 203, 204, 207
குமாராங்குசன் 10, 27, 29, 150, 155
கோட்புலி நாயனார் (கோட்புலி, கோட்புலியார்) 12, 13, 55, 67, 68, 69, 70.
கோவிசய நந்தி விக்கிரம பர்மன் 144, 146, 158, 160, 161, 167
சயாம் தேசத்துச் சாசனம் 174
சாசன இலாகா அறிக்கை 98, 100
சாத்தன் பழியிலி 10, 25
சிலாமேகன் 42
சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம் 29, 36, 38, 47, 48, 100
சுந்தரர் (சுந்தரமூர்த்திகள்) 19, 39, 42, 51, 52, 55, 57, 58, 59, 62, 67, 68, 71, 73, 74, 82, 95, 117, 133, 142, 192, 194, 195, 196, 200, 201, 204.

க. 16

சுந்தரமூர்த்திநாயனார் 13, 14, 17, 18, 40,41, 55, 58, 59, 60,61, 63, 64, 66, 71, 72, 73, 86, 105, 106, 109, 130, 141,205
சுந்தரமூர்த்தி சுவாமிகள் 11, 39, 49, 51, 53, 64, 70, 71, 73, 74, 81, 86, 88, 94, 106, 108, 110, 111, 137, 140, 186, 189, 191, 192, 193, 195, 196
சூலவம்சம் 35, 42, 44, 47, 48
செருத்துணை நாயனார் 72
சேனன் 35, 37, 42, 43, 44, 45, 47
சேரமான் பெருமாள் 39, 40, 41, 42, 92
சேரமான் பெருமாள் நாயனார் 106, 108, 109, 110, 111, 141, 189, 192, 195, 196
சோமாசிமாற நாயனார் 70
சோழ மகாராசன் 29
தந்திவர்மன் 1, 2, 31, 33, 96, 148, 194, 198, 204
திகைத்திறல் விஷ்ணுக்கிருகம் 84, 85
திருக்கயிலாய ஞான உலா 40, 62, 110, 124
திருக்காட்டுப்பள்ளி 149, 150, 155
திருக்குறள் 137, 138, 139
திருக்கோவையார் 78, 80, 128, 192, 193
திருமங்கையாழ்வார் 16, 52, 200, 201
திருமுகப் பாசுரம் 40, 92, 96, 106, 107, 120
திருவாசகம் 78, 125
திருவாரூர் மும்மணிக் கோவை 40, 61, 62, 109, 122
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 77, 193
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 190, 193
திருவிளையாடற் புராணம் 32, 37, 41, 93
தூபாராம விகாரை 35, 44
தெள்ளாறு 6, 17, 34
தெள்ளாறெறிந்த நந்திவர்மன் 1, 6, 9, 14, 15, 16, 17, 18, 19, 22, 25, 27, 34, 37, 38, 39, 41, 42, 49, 52, 62, 71, 80, 81, 85, 86, 94, 99, 103, 105, 174, 189, 193, 198, 203, 204, 205

தெள்ளாற்றெறிந்த நந்திபோத்தரையர் 162, 163, 164, 165, 168, 169, 173
தேசபண்டாரி 14, 15
நந்தி 1, 6, 11, 52
நந்திக்கலம்பகம் 4, 5, 7, 8, 14, 15, 16, 17, 18, 19, 21, 25, 103, 104, 105, 117, 203, 204, 205
நந்திபோத்தரையர் 143, 144, 145, 147, 157, 165, 166, 171, 181, 182
நந்திவர்மன் 1, 4, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 19, 20, 25, 27, 33, 34, 49, 52, 74, 84, 85, 96, 97, 104, 143, 154, 155, 158, 159, 167, 170, 171, 194
நம்பி ஆரூரர் 53, 54, 55, 63, 64
நம்பியாண்டார் நம்பி 111, 191, 192
நயபரன், 14, 15
நரசிங்க முனையரையர் 10, 11, 53, 62, 63
நள்ளாறு 6, 17, 34
நாலடியார் 25, 137, 138
நிருபதுங்க வர்மன் 7, 37, 38
பண்டிதராலயன் 97
பண்டித வத்சலன் 14
பட்டினத்துப் பிள்ளையார் 74, 76, 78, 190, 193
பரஞ்சோதி முனிவர் 93, 107, 193, 197
பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் 74, 86, 89
பரசக்கர கோலாகலன் 29
பரதுர்க்க மர்த்தனன் 20, 21
பல்லவர் கோனரி 14, 17,
பழையாறு 6, 8, 17
பாணபத்திரன் 40, 41, 61, 78, 86, 88, 89, 90, 91, 92, 93, 96, 106, 195
பாரத வெண்பா 14, 97, 98, 100, 101, 102, 104, 112
பாரதம் பாடிய பெருந்தேவனார் 99, 100
புலத்தி நகரம் 43, 44

பெரியபுராணம் 11, 13, 14, 20, 41, 60, 62, 70, 72, 74, 93, 108, 109, 110, 195, 202, 204
பெருங்காவிதி சடையன் பள்ளி 96, 97, 148
பெருந்தேவனூர் 97, 98, 99, 100, 101, 102, 103, 104
பெருமாக் கோதையார் 40, 60
பெரும்பற்றப்புலியூர் நம்பி 32, 41, 74, 80, 89, 93, 107, 193, 194, 197
பொன்வண்ணத் தந்தாதி 40, 61, 62, 108, 120, 141
மாணிக்கவாசகர் 33, 53, 78, 80, 82, 83, 84, 189, 190, 192, 193, 194, 196, 197, 198, 199
மாயா பாண்டியன் 37, 45, 47, 48
மாறஞ் சடையன் 29, 31, 39, 74, 175, 176, 177
மாறன் பாவை 7, 34, 181, 182
மானக்கஞ்சாறர் 13, 65, 66
மானோதயன் 14, 15
முத்தரையர் 10, 26, 21, 25, 27
மூன்றும் நந்திவர்மன் 1, 2, 31, 32, 53, 82, 83, 85, 203, 205
வரகுணன் 7, 31, 37, 75
வரகுண மகாராசன் 31, 36, 39, 41, 44, 45, 175, 176, 177, 178
வரகுண பாண்டியன் 2, 3, 5, 7, 29, 31, 32, 33, 34, 36, 37, 41, 42, 47, 74, 77, 78, 80, 82, 83, 86, 88, 89, 185, 189, 190, 191, 193, 194, 195, 196, 197, 198
வாதவூரர் 33, 78, 79, 80
விடேல் விடுகு 10, 11, 14, 15, 27
விழுப்பெருந்தாய விஷ்ணுக்கிருகம் 85, 162
விறன்மிண்ட நாயனூர் 73, 74
வெள்ளாறு 8, 34
வேலூர்ப்பாளையச் செப்பேட்டுச் சாசனம் 1, 10, 18, 29, 84, 148, 184, 204
ஸ்ரீசங்கபோதி 45
ஸ்ரீமாறன் 3, 7, 29, 34, 36, 37, 38, 39, 42, 45, 47,
ஸ்ரீவல்லபன் 29

# இவ்வாராய்ச்சியில் எடுத்தாளப்பட்ட நூல்கள்

1. ஆழ்வார்கள் கால நிலை—மு. இராகவையங்கார்
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்—சேக்கிழார்
3. கழற்சிங்க நாயனார் புராணம்—சேக்கிழார்
4. கோட்புலி நாயனார் புராணம்—சேக்கிழார்
5. கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்—நம்பியாண்டார் நம்பி
6. செருத்துணை நாயனார் புராணம்—சேக்கிழார்
7. சேரமான் பெருமாள் நாயனார் புராணம், (கழறிற்றறிவார் நாயனார் புராணம்)—சேக்கிழார்
8. சோமாசி மாற நாயனார் புராணம்—சேக்கிழார்
9. தடுத்தாட்கொண்ட புராணம்—சேக்கிழார்
10. தமிழ் வரலாறு (2-ஆம் பாகம்) ஸ்ரீநிவாச பிள்ளை
11. திருக்கயிலாய ஞான உலா, (ஆதி உலா) சேரமான் பெருமாள் நாயனார்
12. திருக்குறள்—திருவள்ளுவ நாயனார்
13. திருக்கோவையார்—மாணிக்கவாசக சுவாமிகள்
14. திருமுகப்பாசுரம்—திருவாலவாயுடையார்
15. திருவாசகம்—மாணிக்கவாசக சுவாமிகள்
16. திருவாரூர் மும்மணிக்கோவை—சேரமான் பெருமாள் நாயனார்
17. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (பழைய திருவிளையாடற் புராணம்)—பெரும்பற்றப் புலியூர் நம்பி
18. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை—பட்டினத்துப் பிள்ளையார்
19. திருவிளையாடற் புராணம்—பரஞ்சோதியார்
20. தேவாரம்—சுந்தரமூர்த்தி சுவாமிகள்
21. நந்திக் கலம்பகம்——

22. நரசிங்க முனையரையர் புராணம்—சேக்கிழார்
23. நாலடியார்—சமண முனிவர்
24. பாண்டியர் வரலாறு—T. V. சதாசிவ பண்டாரத்தார்
25. பாரத வெண்பா—பெருந்தேவனார்
26. பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்—சேக்கிழார்
27. பெரிய திருமொழி—திருமங்கை யாழ்வார்
28. பொன் வண்ணத் தந்தாதி—சேரமான் பெருமாள் நாயனார்
29. மாமல்லன் நரசிம்மவர்மன்—மயிலை. சீனி. வேங்கடசாமி
30. விறன்மிண்ட நாயனார் புராணம்—சேக்கிழார்

V2,1PL'D547
N52

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 108183
EGMORE, MADRAS

# Bibliography


1. Administration and Social life under the Pallavas—
   C. Minakshi (1938)
2. Ambasamudram Inscription of Varaguna Pandya—
   Epi. Ind. Vol. IX. Page 89
3. Ancient Dekhan—K. V. Subramanya Aiyar
4. Bulletin of Archaeological Survey of Ceylon
5. Cula Vamsa—W. Geiger's Translation
6. History of the Tamil Language and Literature
   S. Vaiyapuri Pillai
7. History of the Pallavas of Kanchi—R. Gopal
8. Narathamalai Inscriptions—J. S. I. A. Vol
9. Note on a Tamil Inscription in Siam—J. R. A
10. Origin and Early History of Saivism in South
    C. V. Narayana Ayyar
11. Second Inscription at Tiruvidaikkodu of Kokaru
    nandakkan—T. A. S. Vol. I. p. 15
12. South Indias Inscription—Vols. II, VII, VIII, XII.
13. Supplementary note on a Tamil Inscription in Siam—
    J. R. A. S. 1914
14. The Husur Office Plates—T. A. S. Vol. I. page 1-14
15. Tiruvidaikkodu Inscription of Kokarunandakkan—
    T. A. S. Vol. I. p. 14
16. The Pallavas—G. J. Dubrueil
17. The Takopa Tamil Inscription—J. R. A. S. 1913
18. Three Tamil Insriptions of Lalgudi—Epi. Indi Vol. XX
19. Velurpalayam Plates of Vijaya Nandi Varman III
    S. I. I. Vol. II

## Abbreviations

A. S. L. W. P.—Administration and Social life under the Pallavas
E. C.—Epigraphia Carnatica
Ep. Col.—Ebigraphy Collection
Epi. Ind—Epigraphia Indica
E. Z.—Epigraphia Zeylanica
Ind. Anti.—Indian Antiquary
J. O. R.—Journal of Oriental Research, Madras
J. R. A. S.—Journal of Royal Asiatic Socicty
J. S. I. A.—Journal of South Inian Association
M. Ep. Col. / Madras Epi. Col. } Madras Epigraphy Collections
O. E. H. S. S. I.—Origin and Early History of Saivism in South India
S. I. I.—South Indian Inscription
T. A. S.—Travancore Archaeological Series.